முன்னுரை

அப்போஸ்தலர் யோவான் தேவவசனத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் பத்மு என்னும் தீவிலே சிறைவைக்கப்பட்டிருந்தார். அப்பொழுது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரிசித்தார். தான்கண்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகளையும் எழுதுமாறு கர்த்தர் யோவானுக்குச் சொன்னார். அதன் பிரகாரமாக இந்த வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்டிருக்கிறது.

வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தை பரிசுத்த வேதாகமத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டுமா என்று ஒரு சிலர் கேள்வி எழுப்புகிறார்கள். இவர்கள் தெளிந்த சிந்தனையில்லாதவர்கள். இந்தப் புஸ்தகத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் பரிசுத்த ஆவியானவராலே ஏவப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது. தேவனுடைய சபையார் எல்லோரும் இந்தப் புஸ்தகத்தை அங்கீகரித்திருக்கிறார்கள். இந்தப் புஸ்தகத்தில் விசுவாசிகளுக்கு நன்மையான ஆலோசனைகள் பல உள்ளன. ஆறுதலான பல செய்திகள் உள்ளன.

இயேசுகிறிஸ்து தாமே எருசலேமின் அழிவை முன்னறிவித்தார். எருசலேம் அழிகிற காலத்தில்தான், இயேசுகிறிஸ்து அப்போஸ்தலராகிய யோவானிடம் இந்தப் புஸ்தகத்தை எழுதும் ஊழியத்தை ஒப்புக்கொடுத்தார். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகத்தில் இப்பொழுது நடைபெறுகிற சம்பவங்களும், இவைகளுக்குப் பின்பு நடைபெறப்போகிற சம்பவங்களும் எழுதப்பட்டிருக்கிறது.

கி.பி. 96 ஆம் ஆண்டில் அப்போஸ்தலர் யோவான் பத்மு தீவிலிருந்து இந்த நிருபத்தை எழுதினார் (வெளி 1:9).

மையக்கருத்து

இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாடு. சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு, தேவன் இயேசு கிறிஸ்துவிற்கு ஒப்புவித்ததை அவர் வெளிப்படுத்திக் காண்பித்தார். (வெளி 1:1). "சம்பவிக்க வேண்டியவைகள்" என்பது யோவானுடைய நாளிலிருந்து புதிய வானம், புதிய பூமி உண்டாகும் நிகழ்ச்சி வரையிலும் சம்பவிக்கும் காரியங்களாகும்.

இந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாக தொடர்ந்து நடைபெறும். இந்த முக்கிய நிகழ்ச்சிகளுக்கு இடையில் வேறுசில இணை நிகழ்ச்சிகளும் கோர்க்கப்பட்டுள்ளன. இவை முக்கிய நிகழ்ச்சிகளோடு நடைபெறும் துணை நிகழ்ச்சிகளாகும்.

வெளிப்படுத்தின விசேஷத்தை மூன்று முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கலாம். (வெளி 1:19) ஒவ்வொரு பிரிவிலும் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

1. "நீ கண்டவைகள்" ஏழு பொன்குத்துவிளக்குகளின் மத்தியிலே காணப்பட்ட இயேசு கிறிஸ்துவின் தரிசனம். (வெளி 1:12-20) இந்தத் தரிசனமும் இந்தப் புஸ்தகத்தின் முன்னுரையும் சேர்ந்து முதலாவது பிரிவாகும்.

2. "இருக்கிறவைகள்" ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் எழுதப்பட்டிருக்கும் ஏழு நிருபங்கள். இந்தப் புஸ்தகம் முழுவதும் அவர்களுக்கு எழுதப்பட்டிருக்கிறது. *(வெளி 2:1-3:22).* இந்தச் சபைகளுக்குக் கூறப்பட்டிருக்கும் செய்திகள் சபைக் காலத்திலுள்ள எல்லாச் சபைகளுக்கும் பொருந்தும். சபை எடுத்துக் கொள்ளப் படும் காலம் வரையிலும் இந்தச் செய்திகளை எல்லாச் சபைகளுக்கும் கூறலாம். வருங்கால உபத்திரவக்காலம், அந்திக்கிறிஸ்துவின் வருகை ஆகியவற்றிற்கு முன்பு வரையிலும் ஏழு சபைகளுக்கும் கூறப்பட்டிருக்கும் செய்திகளை எல்லாச் சபைகளுக்கும் கூறலாம். இக்காலத்தின் கடைசி ஏழு வருஷங்களில் அந்திக்கிறிஸ்து பூமியில் இருப்பான். *(தானி 9:27 ; 2தெச 2:7-12; வெளி 6:1-19:21).*

3. "இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகள்" சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு நடைபெறும் நிகழ்ச்சிகள். *(வெளி 4:1-22:5)* பரலோகத்தில் காணும் காட்சிகள் *(வெளி 4-5),* ஏழு முத்திரைகளும் அவற்றோடு தொடர்புடைய வாக்கியங்களும் *(வெளி 14:1-19:21),* ஆயிரம் வருஷ அரசாட்சி *(வெளி 20),* புதிய வானமும், புதிய பூமியும் *(வெளி 21:1-22:5),* முடிவில் நடைபெறப் போகும் நிகழ்ச்சிகள் *(வெளி 22: 6-21)* ஆகியவை இந்தப் பிரிவில் அடங்கும்.

வெளி 4:1 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் காரியங்கள் சபை காலத்திற்குப்பின்பு நடைபெறும். அதாவது வெளி 4-22 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு நிறைவேறும். தற்பொழுது நடைபெறும் காரியங்களோ, அல்லது வரலாற்று நிகழ்ச்சிகளோ வெளி 4-22 ஆகிய அதிகாரங்களில் கூறப்படவில்லை.

பொருளடக்கம்

1. தலைப்பும் ஆசிரியரும் *(1:1)*

2. யோவான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான் *(1:2)*

3. பாக்கியவான்கள் *(1:3)*

4. ஏழு சபைகளுக்கும் வாழ்த்துக்கள் *(1:4-6)*

5. வெளிப்படுத்தின விசேஷத்தின் மையக்கருத்து *(1:7)*

6. ஆதியும் அந்தமுமாக இருக்கிற இயேசு கிறிஸ்து *(1:8)*

7. தீர்க்கதரிசி - யோவான் *(1:9-10)*

8. யோவான் காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதவேண்டும் என்னும் கட்டளை *(1:11)*

I. கண்ட காரியங்கள்

1. கிறிஸ்துவின் தரிசனம்

(1) கிறிஸ்துவின் எட்டு குணங்கள் *(1:12-16)*

(2) தரிசனத்தினால் யோவான்மீது ஏற்பட்ட விளைவு *(1:17-18)*

(3) வியாக்கியானத்தின் திறவுகோல் *(1:19)*

(4) அடையாளங்களின் வியாக்கியானம் *(1:20)*

II. இருக்கிறவைகள் - சபை எடுத்துக் கொள்ளப்படும் வரையிலும் சபைகளைக் குறித்த காரியங்கள்

1. எபேசு சபைக்கு எழுதின நிருபம் (2:1-7)

2. சிமிர்னா சபைக்கு எழுதின நிருபம் (2:8-11)

3. பெர்கமு சபைக்கு எழுதின நிருபம் (2:12-17)

4. தியத்தீரா சபைக்கு எழுதின நிருபம் (2:18-29)

5. சர்தை சபைக்கு எழுதின நிருபம் (3:1-6)

6. பிலதெல்பியா சபைக்கு எழுதின நிருபம் (3:7-13)

7. லவோதிக்கேயா சபைக்கு எழுதின நிருபம் (3:14-22)

III. இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகள் - சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு

1. பரலோகத்தின் தேவாலயம் - எடுத்துக் கொள்ளப்பட்ட விசுவாசிகள் தேவனோடு இருக்கிறார்கள்

(1) பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசல் (4:1)

(2) பரலோகத்தில் ஒரு சிங்காசனம் (4:2-3)

(3) இருபத்தினான்கு மூப்பர்கள் (4:4)

(4) ஏழு ஆவிகள் (4:5)

(5) கண்ணாடிக் கடல் (4:6-8)

(6) பரலோகத்தில் ஆராதனை (4:9-11)

(7) பரலோகத்தில் ஒரு புஸ்தகம் (5:1-4)

(8) பரலோகத்தின் ஆட்டுக்குட்டி (5:5-7)

(9) ஜீவன்களும் மூப்பர்களும் ஆட்டுக்குட்டியானவரை ஆராதிக்கிறார்கள் (5:8-10)

(10) தேவனையும் ஆட்டுக் குட்டியானவரையும் எல்லோரும் ஆராதிக்கிறார்கள் (5:11-14)

2. தானியேலின் எழுபதாவது வாரமும் உபத்திரவக்காலமும்

(1) முதலாம் முத்திரை - அந்திக்கிறிஸ்து புறப்பட்டான் (6:1-2)

(2) இரண்டாம் முத்திரை - அந்திக்கிறிஸ்து புறப்பட்டதினால் ஏற்பட்ட யுத்தம் (6:3-4)

(3) மூன்றாம் முத்திரை - முதலாவது முத்திரைகளினால் ஏற்பட்ட பஞ்சம் (6:5-6)

(4) நான்காம் முத்திரை - முதல் மூன்று முத்திரைகளினால் ஏற்பட்ட மரணமும் பாதாளமும் (6:7-8)

(5) ஐந்தாம் முத்திரை - தானியேலின் எழுபதாவது வாரத்தின் உபத்திரவக் காலத்தில் இரத்தச்சாட்சியாக மரித்தவர்கள் (6:9-11)

(6) ஆறாம் முத்திரை - தேவனுடைய கோபாக்கினை ஆரம்பமாகிறது (6:12-17)

மீட்கப்பட்டவர்கள்

1. முத்திரைப்போடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர் (7:1-8)

2. மகா உபத்திரவக்காலம் (7:9-17)

(7) ஏழாம் முத்திரை - பரலோகத்தில் அமைதல் உண்டாயிற்று (8:1-6)

(8) முதலாம் எக்காளம் - பரலோகத்திலிருந்து இரத்தம் கலந்த கல்மழையும் அக்கினியும் உண்டாகி பூமியிலே கொட்டப் பட்டது (8:7)

(9) இரண்டாம் எக்காளம் - பரலோகத்திலிருந்து அக்கினியால் எரிகிற பெரிய மலை போன்றதொன்று சமுத்திரத்திலே போடப்பட்டது (8:8-9)

(10) மூன்றாம் எக்காளம் - பெரிய நட்சத்திரம் தண்ணீரை எட்டியைப்போல கசப்பாக்கிற்று (8:10-11)

(11) நான்காம் எக்காளம் - கிரகங்களில் மூன்றில் ஒரு பங்கு இருளடைந்தது (8:12)

மனுக்குலத்தின்மீது மூன்று ஐயோக்கள் (8:13)

(12) ஐந்தாம் எக்காளம் - பாதாளத்தின் திறவுகோல் கொடுக்கப்பட்டது

(அ) பாதாளக்குழியை திறந்தான் - புகை எழும்பிற்று (9:1-3)

(ஆ) தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரை சேதப்படுத்த அவர்களுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது (9:4-6)

(இ) பிசாசுகளின் விளக்கம் (9:7-10)

(ஈ) பிசாசுகளின் இராஜா (9:7-10)

மேலும் இரண்டு ஐயோக்கள் (9:11-12)

(13) ஆறாம் எக்காளம்

(அ) கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்கள் அவிழ்த்து விடப்படுகிறார்கள் (9:13-15)

(ஆ) அவர்களுடைய தொகை - இருபது கோடி (9:16-19)

(இ) மனுஷரின் கடின இருதயம் (9:20-21)

1. பலமுள்ள தூதன்

(1) அவனுடைய வர்ணனையும் அவன் கையிலிருந்த திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகமும் (10:1-2)

(2) அவனுடைய ஆர்ப்பரிப்பும் ஏழு இடிகளின் சத்தமும் (10:3-4)

(3) அவனுடைய ஆணையும் ஏழாம் எக்காளமும் (10:5-7)

(4) சிறு புஸ்தகம் புசிக்கப்பட்டதும் அதனால் ஏற்பட்ட விளைவுகளும் (10:8-10)

(5) சிறிய புஸ்தகத்தில் உள்ள காரியங்கள் (10:11-12)

2. தேவனுடைய ஆலயத்தையும் எருசலேமையும் அந்திக்கிறிஸ்து கைப்பற்றுகிறான் (11:1-2)

3. இரண்டு சாட்சிகள்

(1) அவர்களுடைய தீர்க்கதரிசனத்தின் காலம் (11:3)

(2) அவர்களுடைய அடையாளம் (11:4)

(3) அவர்களுடைய அதிகாரம் ((11:5-6)

(4) அவர்களுடைய மரணம் (11:7-8)

(5) அவர்களுடைய மரணத்தின் நிமித்தம் உண்டாகும் சந்தோஷம் (11:9-10)

(6) மரணத்தின்மீது அவர்களுடைய வெற்றி (11:11-12)

4. பூமி அதிர்ச்சி (11:13)

5. மூன்றாம் ஆபத்து சிக்கிரமாய் வருகிறது (11:14)

(14) ஏழாம் எக்காளம்

(அ) வானத்தில் உண்டான கெம்பீர சத்தங்கள் (11:15)

(ஆ) இருபத்தினான்கு மூப்பர்களின் அறிக்கை (11:16-18)

(இ) பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது (11:19)

(ஈ) சூரியனை அணிந்திருந்த ஒரு ஸ்திரீ (12:1)

(உ) இஸ்ரவேலின் வேதனை (12:2)

(ஊ) சிவப்பான பெரிய வலுசர்ப்பம் (12:3)

(எ) பிள்ளையின்மீது வலுசர்ப்பத்தின் யுத்தம் (12:4)

(ஏ) சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகைசெய்யும் ஆண்பிள்ளை (12:5)

(ஐ) ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள் (12:6)

(ஒ) வானத்திலே யுத்தம் உண்டாயிற்று (12:7-9)

(ஓ) மூன்றாவது ஐயோ (12:10-12)

(ஔ) ஸ்திரீயின் துன்பம் (12:13-14)

(ஃ) சாத்தானின் அழிவு (12:15-16)

(க) வலுசர்ப்பம் ஸ்திரீயின் சந்ததியுடன் யுத்தம் பண்ணப்போயிற்று (12:17)

(ங) சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வந்தது (13:1)

(ச) மிருகத்தின் இராஜ்ஜியம் (13:2-3)

(ஞ) மிருகத்தின் அதிகாரம் (13:4)

(ட) பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் மிருகத்தின் வாய் - அதன் காலம் (13:5-6)

(ண) பரிசுத்தவான்களோடே மிருகத்தின் யுத்தம் (13:7)

(த) மிருகத்தின் இராஜ்ஜியத்தின் விஸ்தாரம் (13:8-10)

(ந) வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பியது (13:11-13)

(ப) மிருகத்தின் சொரூபம் (13:14-15)

(ம) மிருகத்தின் முத்திரை, அதின் நாமம், அதின் நாமத்தின் இலக்கம் (13:16-17)

(ய) மிருகமும் மிருகத்தின் இலக்கமும் (13:18)

1. ஆட்டுக்குட்டியானவரும் தங்கள் நெற்றிகளில் பிதாவின் நாமம் எழுதப்பட்டவர்களும் (14:1-5)

2. முதலாம் தூதனின் பிரசங்கம் (14:6-7)

3. இரண்டாம் தூதனின் பிரசங்கம் (14:8)

4. மூன்றாம் தூதனின் பிரசங்கம் (14:9-11)

5. கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் (14:12-13)

6. அறுவடைக்காலம் (14:14-16)

7. திராட்சப் பழங்களின் அறுவடை (14:17-20)

8. ஏழு வாதைகளையுடைய ஏழு தூதர்கள் (15:1)

9. கண்ணாடிக்கடல் (15:2-4)

10. பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது (15:5-8)

(15) முதலாவது கோபக்கலசம் - மனுஷர்களுக்கு பொல்லாத கொடிய புண் உண்டாயிற்று (16:2)

(16) இரண்டாம் கோபக்கலசம் - சமுத்திரம் செத்தவனுடைய இரத்தம்போலாயிற்று (16:3)

(17) மூன்றாம் கோபக்கலசம் - ஆறுகளும் நீரூற்றுகளும் இரத்தமாயின (16:4-7)

(18) நான்காம் கோபக்கலசம் - சூரியன் தீயினால் மனுஷரை தகித்தது (16:8-9)

(19) ஐந்தாம் கோபக்கலசம் - மிருகத்தின் இராஜ்ஜியம் இருளடைந்தது (16:10-11)

(20) ஆறாம் கோபக்கலசம் - ஐபிராத்து நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று (16:12)

மூன்று அசுத்த ஆவிகள் (16:13-16)

(21) ஏழாம் கோபக்கலசம் - சத்தங்களும் இடிமுழக்கங்களும் மின்னல்களும் உண்டாயின (16:17-21)

மகாவேசியும் மிருகமும்

1. மகா வேசி

(1) மகா வேசியின் ஆக்கினை (17:1)

(2) மகா வேசியின் பாவங்களும் அவளோடு வேசித்தனம் பண்ணினவர்களும் (17:2)

(3) மகா வேசியின் ஆளுகை (17:3)

(4) மகா வேசியின் சிங்காரமும் பாவங்களும் (17:4)

(5) மகா வேசியின் நாமம் (17:5)

(6) மகா வேசியின் குடிவெறி (17:6)

2. மகா வேசியின் இரகசியமும் மிருகத்தின் இரகசியமும் (17:7)

3. மிருகம்

(1) மிருகம் பாதாளத்திலிருந்து ஏறிவந்து நாசமடையப்போகிறது (17:8)

(2) மிருகத்தின் ஏழு தலைகளும் ஏழு இராஜாக்களாம் (17:9-10)

(3) மிருகம் - எட்டாவதானவன் (17:11)

(4) பத்துக் கொம்புகளும் பத்து இராஜாக்களாம் (17:12)

(5) ஏழு இராஜாக்கள் தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள் (17:13-14)

(6) தண்ணீர்கள் - ஜனக்கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரரும் (17:15)

(7) மிருகத்தின்மீது இருக்கும் பத்து கொம்புகளானவர்கள் (17:16-17)

4. ஸ்திரீ - மகா நகரம் (17:18)

ஏழாம் கோபக்கலசம்

1. மகா பாபிலோன் விழுந்தது (18:1-3)

2. பாபிலோன்மீது நியாயத்தீர்ப்பு (18:4-8)

3. பாபிலோனுக்காக அழுது புலம்புதல்

(1) பூமியின் இராஜாக்கள் (18:9-10)

(2) பூமியின் வர்த்தகர்கள் (18:11-16)

(3) மாலுமிகள், கப்பல்களில் யாத்திரை பண்ணுகிறவர்கள், கப்பலாட்கள், சமுத்திரத்திலே தொழில் செய்கிறவர்கள் (18:17-19)

4. பாபிலோனின் அழிவுக்காக களிகூருதல் (18:20)

5. பாபிலோனின் அழிவும் அதன் காரணமும் (18:21-24)

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக பரலோகத்தின் காட்சிகள்

1. பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் கர்த்தரைத் துதிக்கிறார்கள் (19:1-3)

2. இருபத்தினான்கு மூப்பர்களும் நான்கு ஜீவன்களும் தேவனைத் தொழுதுகொண்டார்கள் (19:4)

3. கர்த்தரைத் துதியுங்கள் என்று ஒரு சத்தம் சிங்காசனத்திலிருந்து பிறந்தது (19:5)

4. திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம் (19:6)

5. ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் (19:7-9)

6. யோவான் தூதனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தான் (19:10)

தெய்வீக ஆளுகை - ஆயிர வருஷ அரசாட்சி

(1) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (19:11-14)

(2) தேவன் ஆலையை மிதிக்கிறார் - அர்மகெதோன் யுத்தம்

(அ) உருவகம் - மதுவுள்ள ஆலை (19:15)

(ஆ) இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தா (19:16)

(இ) மகா தேவன் கொடுக்கும் விருந்து (19:17)

(ஈ) விருந்துக்கு கூடிவாருங்கள் (19:18)

(உ) விருந்துக்கு கூடி வருகிறார்கள் (19:19)

(ஊ) பட்டயத்தால் கொல்லப்பட்டவர்களுடைய மாம்சத்தினால் பறவைகள் யாவும் திருப்தியடைந்தன (19:20-21)

(3) சாத்தானை ஒரு தூதன் பாதாளத்திலே தள்ளி அடைத்தான் (20:1-3)

(4) பூமியில் ஆயிர வருஷ அரசாட்சி (20:4-6)

(5) ஆயிரம் வருஷம் முடிந்தபின்பு சாத்தானுடைய கிரியைகள் (20:7-9)

(6) சாத்தான் அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான் (20:10)

(7) இறுதி நியாயத்தீர்ப்பு (20:11-15)

9. வரப்போகிற காலங்கள்

(1) புதிய வானமும் புதிய பூமியும் (21:1)

(2) புதிய எருசலேம் (21:2-3)

(3) முந்தினவைகள் ஒழிந்து போகும் - கர்த்தர் சகலத்தையும் புதிதாக்குவார் (21:4-7)

(4) இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் - எரிகிற கடலிலே பங்கடைவோர்கள் (21:8)

(5) ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டி

(அ) மணவாட்டியின் அடையாளம் (21:9-10)

(ஆ) புதிய எருசலேமின் வெளித்தோற்றம் (21:11)

(இ) மதில், வாசல்கள், அஸ்திபாரக்கற்கள் (21:12-15)

(ஈ) நகரம் சதுரமாயிருந்தது (21:16-17)

(உ) புதிய எருசலேமில் பயன்படுத்தப் பட்டுள்ள பொருட்கள் (21:18-21)

(ஊ) தேவாலயம்(21:22)

(எ) புதிய எருசலேமின் வெளிச்சம் (21:23)

(ஏ) புதிய எருசலேமில் நடைபெறும் காரியங்கள் (21:24-27)

(ஐ) புதிய எருசலேமின் நதி, வீதி, கனி (22:1-2)

(ஒ) புதிய எருசலேமில் அரசாளுகிறவர்கள் (22:3-5)

முடிவுரை

1. வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகம் உண்மையும் சத்தியமுமானது (22:6)
2. இந்த புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்கிறவன் பாக்கியவான் (22:7)
3. தூதனை தொழுதுகொள்ளக்கூடாது - தேவனை மட்டுமே தொழுதுகொள்ள வேண்டும் (22:8-9)
4. இந்த புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களை முத்திரை போடவேண்டாம் (22:10)
5. அநியாயம் செய்கிறவர்கள், நீதியுள்ளவர்கள் ஆகியோரின் நித்திய முடிவு (22:11)

6. இயேசு கிறிஸ்து சீக்கிரமாய் வருகிறார் *(22:12-13)*

7. இயேசு கிறிஸ்துவினுடைய கற்பனைகளின் படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள் *(22:13-14)*

8. பாவத்தையும், நித்திய ஆக்கினையையும் குறித்த கடைசி எச்சரிப்பு *(22:15)*

9. வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தின் உறுதி பண்ணப்பட்ட சாட்சி *(22:16)*

10. எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்னும் அழைப்பு *(22:17)*

11. எல்லா மனுஷருக்கும் ஓர் எச்சரிப்பு *(22:18-19)*

12. முடிவுரையும் ஆசீர்வாதமும் *(22:20-21)*

1 அதிகாரம்

வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்திற்கு, இந்த முதலாம் அதிகாரம் முன்னுரையாக எழுதப்பட்டிருக்கிறது. ஆசிரியரைப்பற்றிய விவரம் (வெளி 1:1,2). அப்போஸ்தல ஆசீர்வாதம் (வெளி 1:3-8). யோவானுக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மகிமையோடு தரிசனங்கொடுத்த சம்பவம் (வெளி 1:9-20).

இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சி
வெளி 1 : 1,2

வெளி 1:1. சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு, தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம்.

வெளி 1:2. இவன் தேவனுடைய வசனத்தைக் குறித்தும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியைக்குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான்.

வெளிப்படுத்தின விசேஷம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றிய வெளிப்பாடு ஆகும். அப்போஸ்தலன் யோவான் ஆதித்திருச்சபையிலே தீர்க்கதரிசியாக ஊழியம் செய்கிறார். சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளை யோவான் விசுவாசிகளுக்கு வெளிப்படுத்துகிறார். இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற வெளிப்பாடுகளை தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்தார்.

தேவனுடைய தெய்வீக வெளிப்பாடு நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கிறது. கிறிஸ்துவானவரே பிதாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்.

தேவனிடமிருந்து நாம் எதிர்பார்க்கிற எல்லா சத்தியங்களையும் இயேசுகிறிஸ்து மூலமாகவே பெற்றுக்கொள்கிறோம். தேவன் நம்மிடத்திலிருந்து எதிர்பார்க்கிற எல்லா காரியங்களையும் இயேசுகிறிஸ்து மூலமாகவே எதிர்பார்க்கிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவே மத்தியஸ்தராக ஊழியம் செய்கிறார். கிறிஸ்துவானவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு தம்மைப்பற்றி வெளிப்படுத்தியிருக்கிறார். தூதர்கள் தேவனுடைய தூதுவர்களாக யிருக்கிறார்கள்.

கிறிஸ்துவினுடைய தூதனானவர் தன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட செய்தியை யோவானுக்கு வெளிப்படுத்தினார். இந்த ஊழியத்தைச் செய்வதற்கு தேவன் அப்போஸ்தலராகிய யோவானைத் தெரிந்துகொண்டார். அப்போஸ்தலர்களில் யோவான் மாத்திரமே இக்காலத்தில் உயிரோடிருந்தார் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் மற்ற சீஷர்களெல்லாம் இதற்கு முன்பாகவே இரத்த சாட்சிகளாக மரித்துப்போனார்கள்.

யோவான் இயேசுகிறிஸ்துவைப்பற்றிய வெளிப்பாட்டை சபைக்கு வெளிப்படுத்துகிறார். தேவனைப்பற்றிய சத்தியத்தை அறிந்துகொள்ளக்கூடிய உரிமை அவருடைய பிள்ளைகளுக்கு உண்டு.

இந்தப் புஸ்தகத்தில் சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகள் எழுதப்பட்டிருக்கிறது. இந்த வெளிப்பாட்டின் மூலமாக தேவனுடைய தெய்வீக பராமரிப்பைப்பற்றி நாம் ஓரளவு புரிந்துகொள்ளலாம்.

இந்தச் சம்பவங்களெல்லாம் சீக்கிரத்தில் நிறைவேறும். நிச்சயமாகவே நிறைவேறும். யோவான் தேவனுடைய வசனத்தைக்குறித்தும், இயேசு கிறிஸ்துவைப்பற்றிய சாட்சியைக் குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நடப்பித்த அற்புதங்களுக்கு யோவான் கண்ணாரக் கண்ட சாட்சியாயிருக்கிறார். அவருடைய உபதேசங்களுக்கு காதாரக் கேட்ட சாட்சியாகவும் இருக்கிறார். யோவான் தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவிக்கிறார். தான் கண்டவற்றில் எதையும் சாட்சியாக அறிவிக்காமல் விட்டுவிடவுமில்லை. தான் காணாததை கண்டதாகவும் அறிவிக்கவில்லை. தேவனுடைய ஆலோசனைகளை குறைக்காமல், கூட்டாமல், அப்படியே சொல்லுகிறார்.

பாக்கியவான்கள்
வெளி 1 : 3,4

வெளி 1:3. இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக் கொள்ளுகிறவர்களும் பாக்கிய வான்கள், காலம் சமீபமாயிருக்கிறது.

வெளி 1:4. யோவான் ஆசியாவிலுள்ள ஏழுசபைகளுக்கும் எழுதுகிறதாவது: இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமானவராலும், அவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிற ஏழு ஆவிகளாலும்,

அப்போஸ்தலர் யோவான் சபையாருக்கு தன்னுடைய அப்போஸ்தல ஆசீர்வாதத்தைச் சொல்லுகிறார். தேவனுடைய வெளிப்பாட்டோடு அப்போஸ்தல ஆசீர்வாதமும் சேர்ந்திருக்கிறது.

இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவர்கள், கேட்கிறவர்கள், இவற்றைக் கைக்கொள்கிறவர்கள் எல்லோரும் பாக்கியவான்கள். தேவனுடைய தீர்க்கதரிசனங்களை அறிந்திருப்பது நமக்கு ஆசீர்வாதம். தேவனுடைய தீர்க்கதரிசன வசனங்களுக்கு பங்குள்ளவர்களாகயிருப்பது நமக்குக் கிடைத்திருக்கிற சிலாக்கியம். தேவனுடைய வசனங்களை வாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள். தேவனுடைய வசனங்களை நாம் வாசிப்பது மாத்திரமல்ல, மற்றவர்கள் இந்த வசனங்களை வாசிக்கும்போது, நாம் அவற்றைக் கேட்டு ஆசீர்வாதம் பெறவேண்டும்.

கர்த்தருடைய தீர்க்கதரிசன வசனங்களை வாசித்தால் மாத்திரம் போதாது. அவற்றைக் கேட்டால் மாத்திரம் போதாது. இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை நாம் கைக்கொள்ளவும் வேண்டும். அப்போதுதான் நமக்கு ஆசீர்வாதம் உண்டாகும். இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற தீர்க்கதரிசினங்களெல்லாம் நிறைவேறும் காலம் சமீபமாயிருக்கிறது.

அப்போஸ்தலர் யோவான் ஆசியாவிலுள்ள ஏழுசபைகளுக்கு அப்போஸ்தல ஆசீர்வாதம் சொல்லுகிறார். எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா ஆகிய ஏழு சபைகளுக்கும் யோவான் எழுதுகிறார். இந்த சபை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக விசேஷித்த செய்திகளையும் சொல்லுகிறார். இந்த ஏழு சபையாருக்கும் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக என்று வாழ்த்துகிறார். தேவன் நமக்குக் கொடுக்கிற நன்மையே அவருடைய கிருபை. அவர் நமக்குள் நடப்பிக்கிற நற்கிரியைகளெல்லாம் அவருடைய கிருபையாயிருக்கிறது. தேவனுடைய கிருபை நமக்குள் இருக்கிறது என்பதற்கு சமாதானமே அத்தாட்சியாயிருக்கிறது.

தெய்வீக ஆசீர்வாதங்களெல்லாம் தேவனிடமிருந்தே வருகிறது. பிதாவாகிய தேவன் திரித்துவ தேவன். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரில் யோவான் முதலாவதாக பிதாவானவரைப்பற்றிச் சொல்லுகிறார். அவரை, “இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமானவர்” என்று சொல்லுகிறார். அவர் நித்தியமானவர். நேற்றும் இன்றும், என்றும் மாறாதவர்.

யோவான் பரிசுத்த ஆவியானவரைப்பற்றிச் சொல்லும்போது, “ஏழு ஆவிகள்” என்னும் வார்த்தையைப் பயன்படுத்துகிறார். தேவனுடைய ஆவியானவர் பரிபூரணமுள்ளவர். ஏழுஆவிகள் என்னும் வார்த்தை தேவஆவியானவருடைய பரிபூரணத்தைக் குறிப்பிடுகிற வார்த்தையாகும். தேவஆவியானவருக்குள் ஏராளமான வரங்களும், ஏராளமான கிருபைகளும், கிரியைகளும் உள்ளன. பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பு இருக்கிறார். தேவன் தம்முடைய ஆவியானவராலே சகலவற்றையும் சிருஷ்டித்தார். தம்முடைய சர்வசிருஷ்டிகளையும் தம்முடைய ஆவியானவராலேயே ஆளுகை செய்கிறார்.

இயேசுகிறிஸ்து
வெளி 1 : 5,6

வெளி 1:5. உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

வெளி 1:6. நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

அப்போஸ்தலர் யோவான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக்குறித்து விசேஷித்த வெளிப்பாடுகளைச் சொல்லுகிறார். இயேசுகிறிஸ்து உண்மையுள்ள சாட்சியாகயிருக்கிறவர். அவருடைய சாட்சியின் மீது நாம் பாதுகாப்பாக சார்ந்திருக்கிறோம். அவருடைய உண்மையுள்ள சாட்சிகளில் நமக்குப் பூரண பாதுகாப்பு உண்டு. அவர் நம்மை ஒருபோதும் வஞ்சிக்கமாட்டார். இயேசுகிறிஸ்துவையும் எக்காலத்திலும் யாரும் வஞ்சிக்க முடியாது.

இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவராயிருக்கிறார். இவரே பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியாக யிருக்கிறவர். ராஜாக்களுடைய அதிகாரம் ஒரு குறிப்பிட்ட வரம்புக்குட்பட்டது. ராஜாதி ராஜாவாகிய இயேசுகிறிஸ்துவோ சர்வஅதிகாரமுள்ளவர். அவர் சர்வவல்லமையுள்ளவர். பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியாயிருக்கிற இயேசுகிறிஸ்துவின் ஆலோசனைபடி, பூமியின் ராஜாக்கள் ஜனங்களை ஆளுகை செய்கிறார்கள். ராஜாக்களின் ஆலோசனைகளைவிட இயேசு கிறிஸ்துவின் ஆலோசனைகளே மகத்துவ முள்ளது. கிறிஸ்துவின் ஆலோசனைகள் மாத்திரமே நிலைத்துநிற்கும். பூமியின் ராஜாக்களெல்லோரும் தங்களுடைய ஆளுகையைக் குறித்து இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக கணக்கு ஒப்புவிக்கவேண்டும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு கிருபையும் சமாதானமும் உண்டாயிருக்கிறது.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மிடத்தில் அன்புகூருகிறார். தம்முடைய இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவுகிறார். பாவம் ஆத்துமாவை கறைபடியச் செய்துவிடும். பாவத்தின் கறைகளெல்லாம் கழுவப்பட வேண்டும். அப்போதுதான் நம்முடைய ஆத்துமா சுத்தமாகும். பாவத்தின் கறையை சாதாரண ஜலத்தினால் கழுவி சுத்தப்படுத்த முடியாது.

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் மாத்திரமே பாவக்கறைகளை கழுவ முடியும். நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவுவதற்கு இயேசுகிறிஸ்துவின் இரத்தமேயல்லாமல் வேறு எந்த இரத்தத்திற்கும் பலனில்லை. நம்முடைய பாவங்களைக் கழுவுவதற்கு கிறிஸ்துவானவர் தம்முடைய சொந்த இரத்தத்தையே சிந்தினார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினார். கிறிஸ்துவானவரே நம்மை நீதிமான்களாக்கியிருக்கிறார். அவரே நம்மை பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். அவரே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களாக்கியிருக்கிறார். ராஜாக்கள் இந்த உலகத்தை ஜெயிக்கிறவர்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் இந்த உலகத்தை ஜெயிக்கிற ராஜாக்கள்.

அவர் நம்மை பிதாவாகிய தேவனுக்கு முன்பாக ஆசாரியர்களாக்கினார். ஆசாரியர்கள் தேவனுடைய சமுகத்திற்கு கிட்டிச்சேரும் சிலாக்கியம் பெற்றவர்கள். அப்படிப்பட்ட பெரிய சிலாக்கியம் கிறிஸ்துவின் மூலமாய் நமக்குக் கிடைத்திருக்கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய், பிதாவாகிய தேவனுடைய சமுகத்தில் பிரவேசிக்கிற சிலாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு மேன்மையான ஆசீர்வாதங்களைக் கொடுத்திருக்கிறார். அவருக்கே மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக ஆமென்.

மேகங்களுடனே வருகிறார்
வெளி 1 : 7,8

வெளி 1:7. இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென்.

வெளி 1:8. இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தை நியாயந்தீர்க்கிற நியாயாதிபதியாக வருவார். இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையை முன்னறிவித்து வெளிப்படுத்தின விசேஷம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதே சத்தியத்தை மறுபடியும் சொல்லி இந்தப் புஸ்தகம் முடிவு பெறுகிறது. யோவான் அந்த நாளில் தான் கண்டதை அப்படியே எழுதுகிறார். "இதோ, மேகங்களுடனே வருகிறார்" என்று அவருடைய வருகையைத் தரிசித்து எழுதுகிறார்.

நம்முடைய மனக்கண்களும் பிரகாசமுள்ளதாகயிருக்கவேண்டும். அப்போதுதான் கர்த்தர் மேகங்களுடனே வருவதை நம்மால் காணமுடியும். மேகங்கள் என்பது அவருடைய ரதங்களையும், சேனைகளையும் குறிக்கிற வார்த்தை. இயேசுகிறிஸ்து மேகங்களுடனே வரும்போது கண்கள் யாவும் அவரைக் காணும். எல்லா ஜனங்களுடைய கண்களும் அவரைக் காணும். அவருடைய சிநேகிதரின் கண்களும், சத்துருக்களின் கண்களும் இயேசுகிறிஸ்து மேகங்களுடனே வருவதைக் காணும்.

இயேசுகிறிஸ்து மேகங்களுடனே வரும்போது அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள். இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தவர்கள், அவரை வாரினால் அடித்தவர்கள், அவருடைய சிரசின்மீது முள்முடியை சூட்டினவர்கள், அவருடைய விலாவிலே ஈட்டியால் குத்தினவர்கள் ஆகிய எல்லோரும் அவரைக் காண்பார்கள். அவருடைய வருகைக்கு முன்பாக இவர்களெல்லாம் மனந்திரும்பியிருக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக தூஷணவார்த்தைகளைப் பேசினவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கைசெய்து மனந்திரும்பியிருக்க வேண்டும். மனம் திரும்பாத பூமியின் கோத்திரத்தார் எல்லாரும், இயேசுகிறிஸ்து மேகங்களுடனே வரும்போது, அவரைப் பார்த்து புலம்புவார்கள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றி இங்கு வெளிப்படுத்துகிறார். தம்மை, "இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்'' என்று சொல்லுகிறார். மேலும், "நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்'' என்று தம்மைப்பற்றி திருவுளம் பற்றுகிறார் இயேசுகிறிஸ்துவே எல்லாவற்றிற்கும் ஆரம்பமும் முடிவுமாக இருக்கிறவர். எல்லா காரியங்களும் அவரிடமிருந்தே வந்திருக்கிறது. எல்லா காரியங்களும் அவருக்காகவே நடைபெறுகிறது. அவரே சர்வவல்லமையுள்ள தேவன். அவர் நித்தியமானவர். அவர் என்றும் மாறாதவர்.

யோவான்
வெளி 1 : 9,10

வெளி 1:9. உங்கள் சகோதரனும், இயேசுகிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய ராஜ்யத்திற்கும் அவருடைய பொறுமைக்கும் உங்கள் உடன் பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான் தேவவசனத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியினிமித்தமும், பத்மு என்னும் தீவிலே இருந்தேன்.

வெளி 1:10. கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காளசத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரிசிக்கிற சிலாக்கியம் யோவானுக்குக் கிடைத்திருக்கிறது. கிறிஸ்துவைத் தரிசித்தபோது தன்னுடைய நிலமை எப்படியிருந்தது என்பதை யோவான் விவரிக்கிறார். யோவான் உபத்திரவப் படுத்தப்பட்டார். தேவவசனத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியினிமித்தமும், யோவான் பத்மு என்னும் தீவிலே சிறையில் வைக்கப்பட்டிருந்தார்.

சபையாருக்குத் தன்னைப்பற்றி எழுதும்போது, தன்னை அவர்களுடைய சகோதரன் என்று சொல்லுகிறார். யோவான் ஒரு அப்போஸ்தலராக யிருந்தாலும் தன்னை அவர்களுடைய சகோதரன் என்று சொல்லி, தன்னையே தாழ்த்துகிறார்.

யோவான் இயேசுகிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கு உடன்பங்காளியாயிருக்கிறார். கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் உபத்திரவங்களை அநுபவிக்கும்போது, அவற்றை தனியாக அநுபவிப்பதில்லை. மற்ற விசுவாசிகள் உபத்திரவங்களை அநுபவிப்பதுபோல யோவானும் உபத்திரவங்களை அநுபவிக்கிறார். இயேசுகிறிஸ்துவினுடைய ராஜ்யத்திற்கும், அவருடைய பொறுமைக்கும், அப்போஸ்தலர் யோவான் மற்ற விசுவாசிகளுக்கு உடன்பங்காளனாயிருக்கிறார்.

மற்ற விசுவாசிகள் உபத்திரவங்களை அநுபவிக்கும்போது யோவான் அவர்களுக்காகப் பரிதாபப்படுகிறார். அவர்களுடைய உபத்திரவத்தில் அவர்களுக்கு ஆறுதலையும் ஆலோசனையையும் சொல்லுகிறார். யோவான் தரிசனம் கண்டபோது அவர் பத்மு என்னும் தீவிலே இருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியினிமித்தம் யோவான் இந்தத் தீவிலே சிறைவைக்கப்பட்டிருக்கிறார். சிறைவாசமாகயிருந்தாலும் அப்போஸ்தலர் யோவான் கிறிஸ்துவுக்குள் சமாதானமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறார்.

யோவான் தீமைகளைச் செய்து பாடுகளை அநுபவிக்கவில்லை. தேவவசனத்தினிமித்தமும், இயேசு கிறிஸ்துவைப்பற்றிய சாட்சியினிமித்தமுமாகவே அவர் இந்தத் தீவிலே சிறைவைக்கப்பட்டிருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகள் தீமை செய்து பாடநுபவிக்கக்கூடாது. நன்மை செய்து பாடநுபவிப்பதே நமக்கு ஆசீர்வாதம்.

அப்போஸ்தலர் யோவான் பத்மு தீவிலே சிறைவைக்கப்பட்டிருந்தபோது ஆவியானவருடைய மகிமையும் தேவனுடைய கிருபையும் அவர்மீது வந்து அமர்ந்தது. யோவான் உபத்திரவங்களை அநுபவித்தாலும் தேவனுடைய தெய்வீக பிரசன்னம் அவருக்கு மிகுந்த ஆறுதலாகவும், சந்தோஷமாகவும், சமாதானமாகவும் இருந்தது.

யோவான் தான் தரிசனங்கண்ட நாளைப்பற்றித் தெளிவாகச் சொல்லுகிறார். கர்த்தருடைய நாளில் யோவான் தரிசனங்கண்டார். அந்தநாளில் யோவான் ஆவிக்குள்ளானார். யோவான் தரிசனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பாகவே அவர் ஆவியிலே வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். கர்த்தர் தம்மைக் குறித்த விசேஷித்த வெளிப்பாடுகளை நமக்குக் கொடுப்பதற்கு முன்பாக, அந்த வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவர் நம்மை ஆயத்தம்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவினுடைய தரிசனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக, கர்த்தருடைய நாளிலே, யோவான் ஆவிக்குள்ளானார்.

யோவான் ஆவிக்குள்ளானபோது, அவருக்குப் பின்னாலே எக்காள சத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டார். இந்தச் சத்தம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சத்தமாகும்.

ஏழு சபைகள்
வெளி 1 : 11-16

வெளி 1:11 அது: நான் அல்பாவும் ஒமெகாவும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன். நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி, ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் பட்டணங்களிலுள்ள ஏழு சபைகளுக்கும் அனுப்பு என்று விளம்பினது.

வெளி 1:12. அப்பொழுது என்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்கத் திரும்பினேன்; திரும்பினபோது, ஏழு பொன் குத்துவிளக்குகளையும்,

வெளி 1:13. அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன்.

வெளி 1:14. அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப்போலவும் உறைந்த மழையைப்போலவும் வெண்மையாயிருந்தது; அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப் போலிருந்தது;

வெளி 1:15. அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது; அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப்போலிருந்தது.

வெளி 1:16. தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார்; அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது; அவருடைய முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப்போலிருந்தது.

யோவான் ஆவிக்குள்ளானபோது எக்காள சத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டார். "நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்திலே எழுது" என்று அந்தச் சத்தம் விளம்பினது. மேலும் எக்காள சத்தம்போன்ற பெரிதான இந்தச் சத்தத்தை பேசுவது யார் என்பதையும் அந்தச் சத்தம் தெளிவுபடுத்திற்று. "நான் அல்பாவும் ஓமெகாவும் முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்" என்று அந்தச் சத்தம் விளம்பினது. யோவான் தான் காண்கிறதை ஒரு புஸ்தகத்திலே எழுதி, ஆசியாவிலே இருக்கிற ஏழு சபைகளுக்கும் அனுப்பவேண்டும்.

யோவான் அந்தச் சத்தத்தைக் கேட்டபோது, தன்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்கத் திரும்பினார். திரும்பியபோது அவர் ஒரு மகிமையான தரிசனத்தைக் கண்டார். ஏழு பொன்குத்துவிளக்குகளையும், அந்தக் குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கு ஒப்பானவரை யோவான் கண்டார் (வெளி 1:12,13). ஏழுபொன்குத்துவிளக்குகளும் ஏழு சபைகளுக்கு அடையாளம். சபைகள் குத்துவிளக்குகளுக்கு ஒப்புமையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. குத்துவிளக்கு வெளிச்சத்தைக் கொடுக்கும். அதைப்போன்று சபைகள் சுவிசேஷத்தின் வெளிச்சத்தை உலகத்திற்கு பிரகாசமாகக் கொடுக்கவேண்டும்.

யோவான் ஏழுபொன்குத்து விளக்குகளின் நடுவிலே கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் கண்டார். இயேசுகிறிஸ்துவின் மகிமையான தரிசனத்தை யோவான் இவ்வாறு விரிவாக எழுதுகிறார்.

1. அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப்போலவும் உறைந்த மழையைப்போலவும் வெண்மையாயிருந்தது;

2. அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப் போலிருந்தது;

3. அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது;

4. அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப்போலிருந்தது.

5. தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார்;

6. அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது;

7. அவருடைய முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப்போலிருந்தது.

ஏழு குத்து விளக்குகள்
வெளி 1 : 17-20

வெளி 1:17. நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்; அப்பொழுது அவர் தம்முடைய வலதுகரத்தை என்மேல் வைத்து, என்னை நோக்கி: பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்.

வெளி 1:18. மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்.

வெளி 1:19. நீ கண்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகளையும் எழுது;

வெளி 1:20. என் வலதுகரத்தில் நீ கண்ட ஏழுநட்சத்திரங்களின் இரகசியத்தையும், ஏழு பொன் குத்துவிளக்குகளின் இரகசியத்தையும் எழுது; அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம்; நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்.

இயேசுகிறிஸ்து தம்முடைய மகிமையிலே யோவானுக்குத் தரிசனங்கொடுத்தார். இதுவரையிலும் யோவான் இப்படிப்பட்ட மகிமையான தரிசனத்தைக் கண்டதில்லை. அவர் இயேசுவைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்திலே விழுந்தார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ மகிமையுள்ள வராகயிருந்தாலும், அவர் கிருபையுள்ளவராகவும் இருக்கிறார். தம்முடைய சீஷரிடத்தில் அன்புள்ளவராகயிருக்கிறார்.

தம்முடைய பாதத்தில் செத்தவனைப்போல விழுந்துகிடக்கிற யோவான்மேல் தம்முடைய வலதுகரத்தை வைத்து, யோவானை நோக்கி, "பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன். மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்" என்று சொன்னார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து யோவானிடம், அன்போடு, "பயப்படாதே" என்று சொல்லுகிறார். தம்மைப்பற்றிய வெளிப்பாட்டை இயேசுகிறிஸ்து யோவானுக்குச் சொல்லுகிறார். தாம் யார் என்பதையும், தம்முடைய தெய்வீக சுபாவத்தையும் கர்த்தர் யோவானுக்கு வெளிப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து யோவானுக்கு ஆறுகாரியங்களை வெளிப்படுத்துகிறார். அவையாவன :

1. "நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்". இந்த வாக்கியம் இயேசுகிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்தைக் குறிப்பிடுகிறது.

2. "மரித்தேன்". இயேசுகிறிஸ்து ஏற்கெனவே தம்முடைய மாம்சத்தில் பாடுகளை அநுபவித்திருக்கிறார். நம்முடைய பாவத்தினிமித்தமாய் கிறிஸ்துவானவர் சிலுவையிலே மரித்தார்.

3. "ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்;" இயேசுகிறிஸ்துவே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாகயிருக்கிறவர். அவர் மரணத்தை வென்றவர். நித்திய ஜீவனுள்ளவர்.

4. "நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்". இயேசுகிறிஸ்துவுக்கு மரணத்தின்மீது சர்வ அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் மரணத்தை ஜெயித்தவர். சர்வலோகத்திற்கும் கிறிஸ்துவானவரே அதிபதியாகயிருக்கிறவர்.

5. "நீ கண்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகளையும் எழுது;" கிறிஸ்துவானவர் தம்முடைய சந்தோஷத்தையும் தம்முடைய சித்தத்தையும் வெளிப்படுத்தி, அதை எழுதுமாறு சொல்லுகிறார்.

6. "என் வலதுகரத்தில் நீ கண்ட ஏழுநட்சத்திரங்களின் இரகசியத்தையும், ஏழு பொன் குத்துவிளக்குகளின் இரகசியத்தையும் எழுது; அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம்; நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்". ஏழு நட்சத்திரங்கள், ஏழு குத்துவிளக்குகள் ஆகியவற்றின் இரகசியங்களை கர்த்தராகிய இயேசுகிறிஸ்து யோவானுக்குச் சொல்லுகிறார்.

2 அதிகாரம்

எபேசு சபை (வெளி 2:1-7). சிமிர்னா சபை (வெளி 2:8-11). பெர்கமு சபை (வெளி 2:12-17). தியத்தீரா சபை (வெளி 2:18-29).

எபேசு சபை
வெளி 2:1

வெளி 2:1. எபேசு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலதுகரத்தில் ஏந்திக்கொண்டு, ஏழு பொன்குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறவர் சொல்லுகிறதாவது.

ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலதுகரத்தில் ஏந்திக்கொண்டு, ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறவர், முதலாவதாக எபேசு சபையின் தூதனுக்கு இந்தச் செய்தியைச் சொல்லுகிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய வலது கரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருக்கிறார். நட்சத்திரங்கள் இயேசுகிறிஸ்துவின் ஊழியர்களைக் குறிக்கிறது. கர்த்தர் தம்முடைய ஊழியக்காரரின் நன்மைகளை விசாரிக்கிறவர். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவருடைய விசேஷித்த பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் இருக்கிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவருடைய பலத்த கரத்தில் அடங்கியிருக்கிறார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியக்காரர்களைத் தாங்குகிறார். ஊழியக்காரர்களுக்கு இயேசுகிறிஸ்துவே பாதுகாப்பாகயிருக்கிறார். கர்த்தர் ஊழியக்கார்களைத் தாங்கவில்லையென்றால், அவர்கள் சீக்கிரத்தில் கீழே விழுந்துவிடும் நட்சத்திரங்களாகயிருப்பார்கள்.

நாம் கர்த்தருடைய கரத்தில் இருக்கும் வரையில்தான் நம்மால் நன்மையான ஊழியங்களைச் செய்யமுடியும். கர்த்தருடைய கரம் நம்மோடு கூட கிரியை நடப்பிக்கிறது. நாம் கர்த்தருடைய கரத்திலுள்ள கருவிகளாக பயன்படுத்தப்படுகிறோம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஏழுபொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறார். இயேசுகிறிஸ்துவுக்கும் அவருடைய சபைகளுக்கும் இடையிலுள்ள ஐக்கியத்தை இந்த வாக்கியம் தெளிவுபடுத்துகிறது. கிறிஸ்துவானவர் இப்போது பரலோகத்திலிருந்தாலும், பூமியிலுள்ள தம்முடைய சபைகள் மத்தியிலே அவர் எப்போதும் உலாவிக்கொண்டிருக்கிறவர்.

அறிந்திருக்கிறேன்
வெளி 2 : 2,3

வெளி 2:2. உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும்;

வெளி 2:3. நீ சகித்துக்கொண்டிருக்கிறதையும், பொறுமையாயிருக்கிறதையும், என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன்.

கர்த்தர் எபேசு சபையைப்பற்றி நல்ல வார்த்தைகளினால் புகழ்ந்து பேசுகிறார். எபேசு சபையின் கிரியைகளை கர்த்தர் அறிந்திருக்கிறார். கர்த்தருக்கு மறைவான காரியம் எதுவுமில்லை. நம்மிடத்தில் தப்பிதம் இருக்கும்போது கர்த்தர் நம்மைக் கடிந்துகொள்வார். நாம் நன்மையானவைகளைச் செய்யும்போது கர்த்தர் நம்மைப் புகழ்ந்து பேசுவார்.

கர்த்தர் நமக்குச் சொல்லுகிற எல்லா வார்த்தைகளையும் கவனமாய்க் கேட்கவேண்டும். அவர் நம்மைப் புகழ்ந்துபேசும்போதும், அவர் நம்மைக் கடிந்துகொள்ளும்போதும் நாம் அவருக்குச் செவிகொடுக்கவேண்டும். தாம் என்ன சொல்லவேண்டுமென்பது கர்த்தருக்குத் தெரியும். அவர் தேவையில்லாமல் ஒரு வார்த்தையும் பேசுகிறவரல்ல.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எபேசு சபையை புகழ்ந்து பேசுகிறார். அவர்கள் நற்கிரியைகளைச் செய்கிறார்கள். பிரயாசத்தோடு ஊழியம் செய்கிறார்கள். அவர்களுக்குப் பாடுகள் வரும்போது, அவற்றைப் பொறுமையோடு சகித்துக்கொள்கிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் பிரயாசப்பட்டு நற்கிரியைகளை செய்தால் மாத்திரம் போதாது. அவர்கள் பொறுமையுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். நம்மிடத்தில் பொறுமையில்லையென்றால் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நம்மால் வளர்ச்சி பெறமுடியாது. பொறுமையில்லாதவர்களால் இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லவும் முடியாது.

கர்த்தருடைய பிள்ளைகள் சோதனைகளையும், வேதனைகளையும், பாடுகளையும், உபத்திரவங்களையும் சகித்துக்கொள்ளவேண்டும். இவற்றிற்கு மத்தியில் நாம் பொறுமையோடிருக்க வேண்டும். எபேசு சபையார் பொல்லாதவர்களை சகிக்கக்கூடாமல் இருக்கிறார்கள். எபேசு சபை பொல்லாப்புக்கு விரோதமாக பக்திவிருத்தியில் வைராக்கியமாயிருக்கிறது. நாம் மனுஷரிடத்தில் அன்புகூரவேண்டும். அதே வேளையில் அவர்களுடைய பொல்லாத பாவங்களுக்கு விரோதமாக நாம் எதிர்த்து நிற்கவும் வேண்டும். அவர்களுடைய பாவங்களுக்கு நாம் பங்காளிகளாகிவிடக்கூடாது.

அப்போஸ்தலரால்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலர் என்று சொல்லுகிறார்கள். எல்லா காரியங்களையும் நாம் சோதித்து அறியவேண்டும். ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தை கர்த்தர் நமக்குக் கிருபையாகக் கொடுத்திருக்கிறார். பொய்சொல்லுகிற அப்போஸ்தலர்களை எபேசு சபையார் சோதித்துப் பார்த்து அவர்களை பொய்யர் என்று கண்டறிந்தார்கள். நாம் சோதித்துப் பார்க்காமல் யாரையும் நம்முடைய சுயஇஷ்டம்போல நியாயந்தீர்த்து விடக்கூடாது. நீதியாய் விசாரியாமல் யாரையும் ஒதுக்கி வைத்துவிடவும் கூடாது.

எபேசு சபையார் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டு, நற்கிரியைகளைச் செய்கிறார்கள். எபேசு சபையாருடைய கிரியைகளையும், அவர்களுடைய பிரயாசத்தையும், அவர்களுடைய பொறுமையையும், அவர்கள் வார்த்தைகளைச் சோதித்துப் பார்ப்பதையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார்.

குறை உண்டு
வெளி 2 : 4-6

வெளி 2:4. ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு.

வெளி 2:5. ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன்.

வெளி 2:6. நான் வெறுக்கிற நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளை நீயும் வெறுக்கிறாய், இது உன்னிடத்திலுண்டு.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எபேசு சபையை புகழ்ந்துபேசினாலும், அவர்களிடத்தில் காணப்படுகிற ஒரு சில துர்க்கிரியைகளினிமித்தம், கர்த்தர் அவர்களைக் கடிந்துகொள்ளவும் செய்கிறார். நமக்குள் எவ்வளவு நன்மையான காரியங்கள் இருந்தாலும், ஒரு சில தீமையான காரியங்கள் இருப்பதற்கும் வாய்ப்புள்ளது. நற்சு பாவங்களுக்கு நடுவே தீயசுபாவங்களும் வாசம்பண்ண வாய்ப்பு இருக்கிறது.

எபேசு சபையார் ஆதியிலே கொண்டிருந்த அன்பை விட்டுவிட்டார்கள். அந்த அன்பை அவர்கள் முற்றிலுமாக விட்டு விலகிப்போய்விடவில்லை. அன்பை மொத்தமாகப் புறக்கணித்து ஒதுக்கிவிட வில்லை. அன்பின் அளவில் குறைவு உண்டாயிற்று. ஆதியிலே அவர்கள் அதிக அன்புள்ளவர்களாயிருந்தார்கள். அதன் பின்பு அவர்களுடைய அன்பு குறைந்து போயிற்று.

விசுவாசிகள் ஆரம்பத்தில் இயேசுகிறிஸ்துவிடம் அதிகமாய் அன்புகூருவார்கள். அவர்களுடைய அன்பில் ஜீவனும், வேகமும் இருக்கும். அன்பில் உற்சாகமாயிருப்பார்கள். இந்த அன்பை நாம் காத்துக்கொள்ளவேண்டும். இல்லையென்றால் அன்பு அணைந்துபோகும். பிரகாசமாயிருந்த அன்பு மங்கிப்போகும். உற்சாகமாயிருந்த அன்பு சோர்ந்துபோகும். ஜீவனோடும் ஆரோக்கியத்தோடும் இருந்த அன்பு நோய்வாய்ப்பட்டு பலவீனமாயிருக்கும். எபேசு சபையார் ஆதியிலே தம்மேல் கொண்டிருந்த அன்பை விட்டுவிட்டார்கள் என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவர்கள்மீது குற்றம் சொல்லுகிறார்.

அன்பில் குறைந்துபோனவர்கள், மறுபடியும் அந்த அன்பைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும். அதற்கு என்ன செய்யவேண்டுமென்று கிறிஸ்துவானவர் தாமே தம்முடைய தெய்வீக ஆலோசனைகளைச் சொல்லுகிறார். முதலாவதாக நாம் இன்ன நிலைமையிலிருந்து விழுந்தோம் என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும்.

நம்முடைய முந்திய நிலைமையையும், தற்போதைய நிலைமையையும் ஒப்பிட்டுப்பார்க்கவேண்டும். நாம் இப்போது இயேசுகிறிஸ்துவிடத்தில் அன்புகூருவதைவிட, ஆதியிலே அவரிடத்தில் எவ்வளவு அதிகமாய் அன்புகூர்ந்தோம் என்பதையும் நினைத்துப் பார்க்கவேண்டும். அப்போதுதான் நம்முடைய அன்பு குறைந்துபோனது நமக்குத் தெரியவரும்.

நாம் கர்த்தரிடத்தில் ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிட்டதை நினைத்து, மனந்திரும்பவேண்டும். இதைத் தொடர்ந்து நாம் ஆதியில் செய்த கிரியைகளைச் செய்யவேண்டும். நாம் செய்தவற்றை திரும்பவும் உற்சாகமாய்ச் செய்யவேண்டும். நம்முடைய ஆதிஅன்பை மறுபடியும் பெற்றுக்கொள்ளும் வரையிலும், மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்யவேண்டும். அப்போது நம்மிடத்தில் சோர்ந்துபோயிருக்கும் அன்பு புதுப்பிக்கப்படும். குறைந்துபோயிருக்கிற அன்பு நிறைவாயிருக்கும்.

கர்த்தருடைய ஆலோசனையை நாம் ஏற்றுக்கொண்டு, அதற்குக் கீழ்ப்படிந்து கிரியை நடப்பிக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளை நாம் புறக்கணித்தால் நமக்கு தண்டனை நிச்சயம் உண்டு. கர்த்தர் மனந்திரும்பு என்று சொல்லும்போது, நாம் மெய்யாகவே மனந்திரும்ப வேண்டும். நாம் மனந்திரும்ப மறுத்துவிட்டால் கர்த்தருடைய கோபாக்கினை நம்மீது வரும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கிருபையும் இரக்கமு முள்ளவர். அவருடைய கிருபையையும் இரக்கத்தையும் நாம் புறக்கணித்து விட்டால், நம்மால் கர்த்தருக்குப் பிரியமான பிள்ளைகளாக ஜீவிக்க முடியாது. கர்த்தர் நம்மிடத்தில் குறைவு உண்டு என்று சொல்லுவார். நம்முடைய குறைவை திருத்திக்கொள்ள நாம் முன்வரவில்லை யென்றால் நம்மைத் தண்டிப்பார்.

நாம் தேவனிடத்தில் ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிட்டால், நாம் உடனே மனந்திரும்பவேண்டும். ஆதியில் செய்த கிரியைகளை மறுபடியும் செய்யவேண்டும். இல்லாவிட்டால், நம்முடைய கர்த்தர் சீக்கிரமாய் நம்மிடத்தில் வந்து, நாம் மனந்திரும்பாத பட்சத்தில், நம்முடைய விளக்குத்தண்டை அதனிடத்திலிருந்து நீக்கிப்போடுவார். நமக்கு இயேசுகிறிஸ்துவின் வெளிச்சம் கிடைப்பதற்கு வாய்ப்பில்லாமல் போகும். நம்மால் வெளிச்சத்தில் இருக்கமுடியாது. இருளில் இருப்போம். நாம் போகும் இடம் எது என்று தெரியாமல் தவித்துக்கொண்டிருப்போம்.

எபேசு சபையாரிடத்தில் ஒரு சில குறைகள் காணப்பட்டாலும், அவர்களிடத்தில் ஒரு சில நற்காரியங்களும் காணப்படுகிறது. அதினிமித்தமாய் கர்த்தர் அவர்களைப் புகழ்ந்துபேசுகிறார். கர்த்தர் நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளை வெறுக்கிறார். எபேசு சபையார் அன்பில் குறைவுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆனாலும் கர்த்தர் வெறுக்கிற கிரியைகளை எபேசு சபையாரும் வெறுக்கிறார்கள்.

நன்மைக்கும் தீமைக்கும் வித்தியாசமுண்டு. மெய்க்கும் பொய்க்கும் வித்தியாசமுண்டு. கர்த்தர் நன்மையானவர். அவர் மெய்யானவர். அவரைப் பின்பற்றுகிற நாம் நன்மை செய்யவேண்டும். மெய்யைப் பற்றிக்கொள்ளவேண்டும். நிக்கொலாய் மதஸ்தரிடம் மெய்யான கிரியைகள் எதுவுமில்லை. கர்த்தருக்குப் பிரியமான கிரியைகள் எதையும் அவர்கள் செய்யவில்லை. கர்த்தர் அவர்களை வெறுக்கிறார். எபேசு சபையாரும் அவர்களை வெறுக்கிறார்கள். இதனால் கர்த்தர் எபேசு சபையார்மீது பிரியப்படுகிறார்.

ஆனாலும் எபேசு சபையார் தேவனிடத்தில், ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிட்டார்கள். அதினிமித்தமாய் கர்த்தர் அவர்கள்மீது கோபப்படுகிறார். கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து கிரியை செய்யும்போது, நாம் கர்த்தருக்குப் பிரியமுள்ள, பிரயோஜனமுள்ள பிள்ளைகளாகயிருப்போம். நம்மிடத்தில் நற்கிரியைகள் இருக்க வேண்டும். பொறுமையிருக்கவேண்டும். இவையெல்லாவற்றையும்விட நம்முடைய கிரியைகள் தேவனுக்குப் பிரியமுள்ளதாயிருக்கவேண்டும். தேவன் வெறுக்கிற கிரியைகளை நாம் செய்துவிடாதவாறு மிகுந்த எச்சரிப்போடிருக்கவேண்டும்.

ஜீவவிருட்சத்தின் கனி வெளி 2:7

வெளி 2:7. ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எபேசு சபையின் தூதனுக்குச் சொன்ன செய்தியின் முடிவுரையாக இந்த வாக்கியம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் செய்தி எபேசு சபைக்குச் சொல்லப்பட்டாலும், எல்லா சபைக்கும் பொருந்துகிற பொதுவான செய்தியாகும். ஜெயங்கொள்கிறவர்களுக்கு கர்த்தர் தம்முடைய பெரிதான கிருபையையும் இரக்கத்தையும் வாக்குப்பண்ணுகிறார்.

நமக்கு ஆவிக்குரிய சத்துருக்கள் உண்டு. அவர்கள் நம்மை மேற்கொள்ள இடங்கொடுக்கக்கூடாது. நம்முடைய சத்துருக்களோடு நாம் நல்ல போராட்டத்தைப் போராடவேண்டும். ஜெயங்கிடைக்கும் வரையிலும் சோர்ந்துபோகாமல் தொடர்ந்து போராடவேண்டும்.

ஆவிக்குரிய போராட்டத்தில் நாம் ஜெயம்பெறும்போது நமக்கு மேன்மையும், வெகுமதியும் உண்டாகும்.

ஜெயங்கொள்கிறவர்கள் ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிப்பார்கள். இந்த விருட்சம் தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிறது. ஜீவவிருட்சம் பூமிக்குரிய விருட்சமல்ல. இதன் கனியும் பூமிக்குரிய கனியல்ல. ஜீவவிருட்சத்தின் கனி பரலோகத்திற்குரியது. ஜெயங்கொள்கிறவன் எவனோ அவனுக்கு கர்த்தர் தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியை புசிக்கக் கொடுப்பார்.

சிமிர்னா
வெளி 2:8

வெளி 2:8. சிமிர்னா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: முந்தினவரும் பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்த வருமானவர் சொல்லுகிறதாவது;

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிமிர்னா சபையின் தூதனுக்கு இந்த நிருபத்தை எழுதுகிறார். கிறிஸ்துவானர் முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறார். நாம் இந்த உலகத்தில் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் மாத்திரமே ஜீவிக்கிறோம். ஒரு தரம் பிறப்பதும், பின்பு மரிப்பதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ நித்திய ஜீவன் உள்ளவராயிருக்கிறார். அவரே முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து மரித்திருந்து பிழைத்தவருமானவர். அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்தார். ஆனாலும் அவர் உயிரோடிருக்கிறார். அவர் நித்திய காலமாக உயிரோடிருக்கிறவர். நித்திய ஜீவனுள்ள இயேசுகிறிஸ்து பிதாவினிடத்தில் நமக்காகப் பரிந்து பேசுகிறார்.

அறிந்திருக்கிறேன்
வெளி 2:9

வெளி 2:9. உன் கிரியைகளையும், உன் உபத்திரவத்தையும், நீ ஐசுவரிய முள்ளவனாயிருந்தும் உனக்கிருக்கிற தரித்திரத்தையும், தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கி றவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன்.

சிமிர்னா சபையின் விசுவாசிகள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் ஐசுவரியமுள்ளவர்கள். ஆனாலும் அவர்களில் சிலர் உலகப்பிரகாரமான தரித்திரராயிருக்கிறார்கள். அவர்கள் தரித்திரராயிருந்தாலும், தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்திலே ஐசுவரியவான்களாயிருக்கிறார்கள். அவர்கள் விசுவாசத்திலும், நற்கிரியைகளைச் செய்வதிலும் ஐசுவரியமுள்ளவர்களாயிருக்கிறார்கள். நம்மிடத்தில் ஆவிக்குரிய ஐசுவரியம் இருக்கவேண்டும். ஆவிக்குரிய ஐசுவரியமுள்ளவர்கள் உலகப்பிரகாரமான தரித்திரத்தை பொறுமையோடு சகித்துக்கொள்வார்கள். தங்கள் தரித்திரத்திலும் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பார்கள்.

சிமிர்னா சபையாரின் கிரியைகளையும், அவர்களுடைய உபத்திரவத்தையும், அவர்களுக்கு இருக்கிற தரித்திரத்தையும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அறிந்திருக்கிறார். அவர்களுடைய உபத்திரவத்தின் ஒவ்வொரு பகுதியையும் கர்த்தர் அறிந்திருக்கிறார். நாம் கர்த்தருடைய பலத்த கரத்தில் அடங்கியிருக்கிறோம். கர்த்தருக்கு மறைவான காரியம் ஒன்றுமேயில்லை. எல்லாம் அவருக்கு வெளிச்சமாகவும், தெளிவாகவும் தெரியும். அவர் நம்முடைய கண்ணீர்களையும், உபத்திரவங்களையும் அறிந்திருக்கிறார். அவரே நம்முடைய ஆறுதலின் தேவன்.

சிமிர்னா சபையாருக்கு ஆவிக்குரிய சத்துருக்கள் இருக்கிறார்கள். அவர்கள் தூஷணமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். தூஷணமான கிரியை களைச் செய்கிறார்கள். அவர்கள் தங்களை யூதர்களென்று சொல்லு கிறார்கள். ஆனால் அவர்கள் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறார்கள். கர்த்தர் அந்தத் தூஷணக்காரரையும் அறிந்திருக்கிறார்.

யூதர்கள் தேவனுடைய விசேஷித்த உடன்படிக்கையின் ஜனங்கள். இவர்க ளுடைய சத்துருக்களோ சாத்தானுடைய கூட்டத்தார். ஆனால் அவர்கள் தங்களை யூதர் என்று சொல்லுகிறார்கள். தாங்களும் தேவனுடைய விசேஷித்த உடன் படிக்கையின் ஜனங்கள் என்று தூஷணமான வார்த்தைகளைச் சொல்லு கிறார்கள். இவர்கள் சாத்தானுக்கும், அவனுடைய துர்க்கிரியை களுக்கும் பங்காளிகள்.

கர்த்தருடைய சுதந்தரத்தில் சாத்தானுடைய கூட்டத்தாருக்கு பங்கு மில்லை. பாத்தியமுமில்லை. தேவனுடைய சபையைவிட்டு சாத்தானுடைய கூட்டத்தார் விலகி வெளியேறிப் போய்விட்டார்கள். கர்த்தர் இஸ்ரவேலின் தேவன். அவரை விசுவாசிக்கிறவர்க ளெல்லோரும் இஸ்ரவேலின் காணியாட்சிக் குட்பட்டவர்கள். சாத்தானுடைய கூட்டத்தாரோ தேவனுடைய காணியாட்சிக்குப் புறம்பாக்கப்பட்டவர்கள்.

ஜீவகிரீடம்
வெளி 2:10

வெளி 2:10. நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்.

நம்முடைய கர்த்தர் நம்மைப்பற்றிய எல்லா காரியங்களையும் அறிந்திருக்கிறார். நமக்கு இதுவரையிலும் நடந்தது, இப்போது நடைபெறுவது, இனிமேல் நடைபெறப்போவது எல்லாவற்றையும் கர்த்தர் அறிந்திருக்கிறார். சிமிர்னா சபையாருக்கு இனிமேல் பாடுகள் வரும். அவர்கள் படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படவேண்டாம் என்று கர்த்தர் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார். வரப்போகிற பாடுகளைக் குறித்து தம்முடைய பிள்ளைகளுக்கு முன்னெச்சரிப்பு சொல்லுகிறார்.

சிமிர்னா சபையார் ஏற்கெனவே உபத்திரவத்தை அனுபவித்தார்கள். அந்த உபத்திரவத்தோடு இனிமேல் காவலில் வைக்கப்படப்போகிறார்கள். சிறைச் சாலையில் பாடுகளை அநுபவிக்கப் போகிறார்கள். இதைக்குறித்து அவர்கள் பயப்படவேண்டியதில்லை. இனிமேல் அவர்கள் படப்போகிற பாடுகளுக்கு கர்த்தர் அவர்களைப் பலப்படுத்துகிறார். பாடுகளை சகித்துக்கொள்வதற்கும், அவற்றை எதிர்கொள்வதற்கும் கர்த்தர் அவர்களுக்குக் கிருபை கொடுத்திருக்கிறார். இதினிமித்தமாக கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவர்களுக்கு ஒரு சில ஆலோசனைகளைச் சொல்லுகிறார்.

முதலாவதாக அவர்கள் படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படவேண்டியதில்லை. கர்த்தர் அவர்களை, "பயப்படாதே" என்று கட்டளையிடுகிறார். இது கட்டளையின் வார்த்தை மாத்திரமல்ல. இந்தக் கட்டளைக்கு அவர்கள் கீழ்ப்படியும்போது, கர்த்தர் அவர்களை பாதுகாத்துக் கொள்வார் என்னும் நிச்சயமும் இந்த வார்த்தையில் இடம்பெற்றுள்ளது.

கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு பாடுகள் வந்தாலும், அது ஒரு வரம்புக்குட்பட்டதாகவே இருக்கும். நமக்கு நீண்டகாலமாக பாடுகள் இருக்காது. ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலுமே பாடுகள் இருக்கும். பாடுகளும் நாம் தாங்கிக்கொள்ளக்கூடிய அளவில்தான் இருக்கும். சிமிர்னா சபையின் விசுவாசிகள் பத்துநாள் மாத்திரமே உபத்திரவப்படுவார்கள். சோதிக்கப்படும் பொருட்டாகவே இவர்களுக்கு பாடுகள் உண்டாயிற்று. தம்முடைய பிள்ளைகளை அழிப்பதற்கு கர்த்தர் ஒருபோதும் பாடுகளை அனுமதிக்கமாட்டார்.

பிசாசானவன் எல்லா விசுவாசிகளையும் சோதிக்கமாட்டான். அவன் ஒரு சிலரை மாத்திரமே காவலில் போடுவான் என்று கர்த்தர் திருவுளம்பற்றுகிறார். அவனால் நம்மை நித்தியகாலத்திற்கு காவலில் போடமுடியாது. சாத்தான் மூலமாய் நமக்கு காவல் உண்டானாலும், அது பத்து நாள் மாத்திரமே அதாவது, குறுகிய காலம் மாத்திரமே இருக்கும்.

நமக்கு எப்படிப்பட்ட பாடுகள் வந்தாலும், எவ்வளவு பெரிய உபத்திரவங்கள் வந்தாலும், நாம் மரணபரியந்தம் கர்த்தருக்கு உண்மையாயிருக்கவேண்டும். அப்போது கர்த்தர் நமக்கு ஜீவகிரீடத்தைத் தருவார். கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. அவர் செய்கிறதை மாத்திரமே சொல்லுகிறவர். அவர் சொல்லுகிறதை நிச்சயமாகவே செய்கிறவர்.

நம்முடைய பாடுகளில் நாம் மரணபரியந்தம் உண்மையாயிருக்கும் போது, கர்த்தர் தாம் சொன்ன பிரகாரம், நிச்சயமாகவே நமக்கு ஜீவகிரீடத்தைத் தருவார்.

கர்த்தருடைய பிள்ளைகள் உலகப்பிரகாரமாக தரித்திரராயிருக்கலாம். நாம் மரணபரியந்தம் உண்மையுள்ளவராயிருக்கும்போது, நமக்கு கர்த்தர் ஜீவகிரீடத்தைத் தருகிறார். நம்முடைய உண்மையினிமித்தமும், விசுவாசத்தினிமித்தமும், பாடுகளைக் குறித்து பயப்படாததினிமித்தமும் கர்த்தர் நமக்கு ஜீவகிரீடத்தைத் தருகிறார். நாம் கர்த்தருக்கு சிறிதுகாலம் உண்மையுள்ளவர்களாயிருந்தால் போதாது. நம்முடைய மரணபரியந்தம் நாம் அவருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

இரண்டாம் மரணம்
வெளி 2:11

வெளி 2:11. ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்றெழுது.

கர்த்தர் சிமிர்னா சபைக்கு எழுதும் நிருபத்தின் முடிவுரையாக இந்த வார்த்தையைச் சொல்லுகிறார். இந்த உபதேசம் எல்லா சபைகளுக்கும் பொதுவானது. கர்த்தர் தம்முடைய ஜனத்தை எப்படி பாதுகாக்கிறார், எப்படி பராமரிக்கிறார் என்பதை முழுஉலகத்தாரும் கவனித்துப் பார்க்கவேண்டும். ஜெயங்கொள்கிறவர்களுக்கு கர்த்தர் வெகுமதி கொடுக்கிறார். தம்முடைய கிருபையுள்ள வாக்குத்தத்தங்களை கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்து, அவர்களை மேன்மைப்படுத்துகிறார்.

மனுஷருக்கு இரண்டு மரணம் நியமிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய முதலாம் மரணம் நமக்கு சரீரப்பிரகாரமான மரணம். நம்முடைய இரண்டாம் மரணமோ நித்திய மரணம். முதலாம் மரணத்தைவிட இரண்டாம் மரணம் மிகவும் கொடியது. இது நம்முடைய ஆத்துமாவின் மரணம். ஜெயங்கொள்கிறவர்கள் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை இரண்டாம் மரணமாகிய நித்திய மரணத்திலிருந்து பாதுகாத்துக்கொள்வார். இரண்டாம் மரணத்தினால் நமக்கு ஒரு சேதமும் உண்டாகாது. முதலாம் மரணமும் நம்மைச் சேதப்படுத்தாது. இரண்டாம் மரணம் நம்மைச் சேதப்படுத்துவதற்குப் பெலனற்றது.

பெர்கமு
வெளி 2:12

வெளி 2:12. பெர்கமு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர் சொல்லுகிறதாவது;

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பெர்கமு சபையின் தூதனுக்கு எழுதவேண்டியதை சொல்லும்போது, தம்மை இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர் என்று சொல்லுகிறார். பெர்கமு சபையில் வஞ்சிக்கிற மனமுள்ளவர்கள் உட்பிரவேசித்திருக்கிறார்கள். கர்த்தர் அவர்களோடு இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தினாலே யுத்தம்பண்ணுகிறார். தேவனுடைய வார்த்தையே கர்த்தருடைய பட்டயம். இது இருபுறமும் கருக்குள்ளது. இந்தப் பட்டயம் நம்மைப் பாதுகாக்கவும் செய்யவும். சத்துருவை அழிக்கவும் செய்யும்.

கர்த்தருடைய பட்டயம் கருக்குள்ளது. மிகவும் கூர்மையானது. மனுஷருடைய இருதயம் எவ்வளவு கடினமாகயிருந்தாலும், அந்த இருதயத்தை கர்த்தருடைய கருக்குள்ள பட்டயத்தினால் வெட்டிக் காயப்படுத்த முடியும். இந்தப் பட்டயம் இருபுறமும் கருக்கானது. ஒருபுறத்தில் கர்த்தருடைய நியாயப்பிரமாணம் இருக்கிறது. மற்றொரு புறத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷம் இருக்கிறது. கர்த்தருடைய பிரமாணத்தை மீறுகிறவர்களுக்கு விரோதமாக நியாயப்பிரமாணம் தீர்ப்பு செய்யும். சுவிசேஷத்திற்கு விரோதமாக வஞ்சிக்கிறவர்களை கர்த்தருடைய வார்த்தை நியாயந்தீர்க்கும்.

அறிந்திருக்கிறேன்
வெளி 2:13

வெளி 2:13. உன் கிரியைகளையும், சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும், நீ என் நாமத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறதையும், சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்திலே உங்களுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும் என்னைப் பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்ததையும் அறிந்திருக்கிறேன்.

கிறிஸ்துவானவர் தம்முடைய சபைக்கு வரும் பிரச்சனைகளை அறிந்திருக்கிறார். அவர்களுக்கு வருகிற சோதனைகள், கஷ்டங்கள் எல்லாவற்றையும் கர்த்தர் அறிந்திருக்கிறார். தம்முடைய பிள்ளைகளை யார் வஞ்சிப்பார்கள் என்பதும் கர்த்தருக்குத் தெரியும். பெர்கமு சபையார் இருக்கிற இடத்திலே சாத்தானும் குடிகொண்டிருக்கிறான். சபையாரைச் சுற்றிலும் பாவிகளும் துன்மார்க்கரும் குடியிருக்கிறார்கள்.

சாத்தானுடைய சிங்காசனம் இருக்கும் இடத்தில் பெர்கமு சபையார் குடியிருக்கிறார்கள். ஆனாலும் பெர்கமு சபையார் கர்த்தருடைய நாமத்தை பற்றிக்கொண்டிருக்கிறார்கள். கர்த்தரைப்பற்றும் விசுவாசத்தை பெர்கமு சபையார் மறுதலிக்கவில்லை. இவர்களைச் சுற்றிலும் சாத்தானுடைய சிங்காசனம் இருந்தாலும் பெர்கமு சபையார் நற்கிரியைகளைச் செய்கிறார்கள். இந்த உலகம் முழுவதிலும் சாத்தானுடைய சிங்காசனம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. எங்கெல்லாம் துன்மார்க்கம் நடைபெறுகிறதோ அங்கெல்லாம் சாத்தான் தன்னுடைய சிங்காசனத்தில் அமர்ந்திருந்து துன்மார்க்கரை ஆளுகை செய்கிறான்.

பெர்கமு சபையாரைப்பற்றி கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நல்ல வார்த்தைகளைச் சொல்லி புகழுகிறார். அவர்கள் தம்முடைய நாமத்தை பற்றிக்கொண்டிருப்பதை கர்த்தர் சாட்சியாய் அறிவிக்கிறார். அவர்கள் இயேசுகிறிஸ்துவுக்குச் சாட்சியாகயிருக்க வெட்கப்படவில்லை. கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றிக்கொண்டால் தங்களுக்கு அவமானம் வருமோ என்றோ, உபத்திரவம் வருமோ என்றோ பெர்கமு சபையார் யோசிக்கவில்லை. எல்லா சூழ்நிலைகளிலும் அவர்கள் கர்த்தருடைய நாமத்தை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

தேவனுடைய கிருபை பெர்கமு சபையாருக்குக் கிடைத்திருக்கிறது. அவர்கள் கர்த்தரைப்பற்றும் விசுவாசத்தில் உண்மையுள்ளவர்களாக, உறுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தைவிட்டு அவர்கள் விலகிப்போகவுமில்லை. விசுவாசத்தை மறுதலிக்கவுமில்லை.

பெர்கமு சபையார் சாத்தானுடைய சிங்காசனம் இருக்கிற இடத்தில் குடியிருக்கும்போது, அந்திப்பா என்பவர் கர்த்தருக்கு உண்மையுள்ள சாட்சியாக யிருந்தார். ஆனால் சத்துருக்களோ அந்திப்பாவை கொன்றுபோட்டார்கள். கர்த்தரைப்பற்றும் விசுவாசத்தினி மித்தமாய் அந்திப்பா இரத்த சாட்சியாக மரித்தார். இந்த இடத்தில் சாத்தான் குடிகொண்டிருந்தாலும், அந்திப்பாவின் இருதயத்திலோ கர்த்தர் குடிகொண்டிருந்தார். அந்திப்பா இரத்தசாட்சியாக மரித்ததைப் பார்த்து பெர்கமு சபையார் பயந்துபோய் விடவில்லை. அவர்கள் இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தை மறுதலிக்கவில்லை. கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய விசுவாசத்தை கர்த்தர் அறிந்திருக்கிறார்.

வெறுக்கிறேன்
வெளி 2:14-16

வெளி 2:14. ஆகிலும், சில காரியங்களைக் குறித்து உன்பேரில் எனக்குக் குறை உண்டு; விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம்பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரர் முன்பாகப் போடும்படி பாலாக் என்பவனுக்குப் போதனை செய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு.

வெளி 2:15. அப்படியே நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும் உன்னிடத்திலுண்டு; அதை நான் வெறுக்கிறேன்.

வெளி 2:16. நீ மனந்திரும்பு, இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம்பண்ணுவேன்.

பெர்கமு சபையார் கர்த்தருடைய நாமத்தைப் பற்றிக்கொண்டிருந்தாலும், கர்த்தரைப்பற்றும் விசுவாசத்தை அவர்கள் மறுதலியாமலிருந்தாலும், அவர்களிடத்திலும் சில குறைகள் காணப்படுகிறது. ஆவியின் அசுத்தமும் மாம்சத்தின் அசுத்தமும் ஐக்கியமாயிருக்கும். இவ்விரண்டும் எப்போதும் சேர்ந்தே காணப்படும். நாம் துன்மார்க்கரோடு ஐக்கியம் வைத்திருந்தால், நமக்குள்ளும் துன்மார்க்கமான சிந்தனைகள் பிரவேசிக்கும். நாமும் துன்மார்க்க கிரியைகளை செய்ய ஆரம்பித்துவிடுவோம். ஒருவரிடத்தில் துன்மார்க்கம் இருக்கும்போது அது மற்றவர்களிடத்திலும் பரவும். முடிவில் அது முழுசபையையும் அசுத்தப்படுத்திவிடும்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் பிலேயாம் பணத்திற்காக துர்ப்போதனை செய்தான். இஸ்ரவேல் புத்திரரை கர்த்தருடைய சமுகத்தில் இடறப்பண்ணுவதற்கு ஏற்ற போதகத்தை பாலாக் என்பவனுக்கு பிலேயாம் சொன்னான். பிலேயாம் பாலாக்குக்கு இரண்டு ஆலோசனைகளைச் சொன்னான். அவையாவன: 1. விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பது. 2. வேசித்தனம் பண்ணுவது. இஸ்ரவேல் புத்திரர்கள் இவ்விரண்டு காரியங்களையும் செய்து கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக இடறிப்போனார்கள்.

பிலேயாமுடைய இப்படிப்பட்ட போதகத்தைக் கைக்கொள்கிறவர்கள் பெர்கமு சபையிலும் இருக்கிறார்கள். இவர்கள் மனந்திரும்பவேண்டும். இல்லையென்றால் இவர்களுடைய பாவம் பெர்கமு சபையிலுள்ள மற்ற சபையாருக்கும் பரவும்.

பெர்கமு சபையிலே நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தை கைக்கொள்கிறவர்களும் இருக்கிறார்கள். இவர்களுடைய போதகம் இயேசு கிறிஸ்துவினுடைய போதகத்திற்கு விரோதமானது. இவர்களுடைய போதகத்தில் சத்தியமோ, ஜீவனோ இல்லை. இயேசுகிறிஸ்துவின் போதகமோ சத்தியமும் ஜீவனுமுள்ளது. பெர்கமு சபையிலுள்ள சிலர் கிறிஸ்துவின் போதகத்தைக் கைக்கொள்வதற்குப் பதிலாக, நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தைக் கைக்கொள்கிறார்கள். இவர்கள் உடனே மனந்திரும்பவேண்டும். இல்லையென்றால் நிக்கொலாய் மதஸ்தருடைய போதகம் பெர்கமு சபையில் அநேகருக்குப் பரவிவிடும். அந்தக் கள்ளப்போதகத்தை சபையிலுள்ள அநேகர் கைக்கொள்ள ஆரம்பித்துவிடுவார்கள். நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தை கர்த்தர் வெறுக்கிறார்.

தவறு செய்கிறவர்கள் காலதாமதம் பண்ணாமல் மனந்திரும்பவேண்டும். சபையாரும் மனந்திரும்பவேண்டும். பாவம் செய்கிற தனிநபர்களும் மனந்திரும்ப வேண்டும். ஒரு முழு சமுதாயமும் பாவம் செய்யும்போது, அந்த சமுதாயம் முழுவதும் மனந்திரும்பவேண்டும். பாவத்தை கூட்டாகச் செய்கிறவர்கள் கூட்டாக மனந்திரும்பவேண்டும். பாவத்திற்குப் பங்காளிகளாகயிருக்கிறவர்கள் மனந்திரும்புவதிலும் பங்காளிகளாகயிருக்க வேண்டும்.

கர்த்தர் சபையிலுள்ள துன்மார்க்கரை கண்டிக்கிறார். அவர்களைத் தண்டிக்கிறார். துன்மார்க்கரைத் தண்டிக்கும்போது முழுசபையாரையும் எச்சரிக்கிறார். சபையிலுள்ளவர்கள் பரிசுத்த மாயிருக்கவேண்டும். சபைக்குள்ளே கிறிஸ்துவின் சுத்த சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டும். பிலேயாமுடைய போதகத்திற்கு சபையில் இடமில்லை. கர்த்தருடைய வார்த்தைகளை கைக்கொள்கிறவர்கள்தான் சபையிலிருக்க வேண்டும்.

பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்கிறவர்களை சபையிலிருந்து வெளியேற்றிவிடவேண்டும். பரிசுத்தத்திற்கும் அசுத்தத்திற்கும் சம்பந்தமில்லை. நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமில்லை. கொஞ்சம் புளித்த மாவானது எல்லா மாவையும் புளிக்க வைத்துவிடும். சபையில் ஒரு சிலர் பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொண்டாலும், அநேகர் அந்தப் போதகத்தைக் கைக்கொள்வதற்கு வாய்ப்புண்டாகும்.

பாவம் செய்கிறவர்களை கர்த்தர் நியாயந்தீர்க்கிறார். தேவனுடைய வார்த்தை கர்த்தருடைய வாயிலுள்ள பட்டயமாகயிருக்கிறது. தம்முடைய பட்டயத்தினால் கர்த்தர் பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்கிறவர்களோடே யுத்தம்பண்ணுகிறார். பாவிகள் மனந்திரும்பவேண்டும். தவறான உபதேசத்தைப் பின்பற்றுகிறவர்கள் மனந்திரும்பி கிறிஸ்துவின் உபதேசத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். இல்லையென்றால் கர்த்தர் அவர்களிடத்தில் வந்து, தம்முடைய வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம்பண்ணுவார். யுத்தத்தில் எப்போதும் கர்த்தரே ஜெயிக்கிறவர். கர்த்தர் வெறுக்கிற காரியம் எதுவும் அவருடைய சபையில் இருக்கக்கூடாது.

மறைவான மன்னா, வெண்மையான குறிக்கல், புதிய நாமம் வெளி 2:17

வெளி 2:17. ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன் என்றெழுது.

ஜெயங்கொள்கிறவர்களுக்கு கர்த்தர் மூன்றுவிதமான ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறார். அவையாவன : 1. மறைவான மன்னா 2. வெண்மையான குறிக்கல் 3. புதிய நாமம்.

மறைவான மன்னா என்பது கிறிஸ்துவின் ஆவியானவருடைய ஆறுதலையும் ஊழியங்களையும் குறிக்கிற வார்த்தை. மன்னா வானத்திலிருந்து பூமிக்கு வந்தது. மறைவான மன்னாவோ வானத்திலிருந்து நம்முடைய ஆத்துமாவுக்கு இறங்கி வந்திருக்கிறது. உலகத்தாருக்கு இந்த மன்னா மறைவாயிருக்கிறது. இந்த மன்னாவை கிறிஸ்துவில் மாத்திரமே காணமுடியும். ஜெயங்கொள்கிறவர்களுக்கு கர்த்தர் இந்த மறைவான மன்னாவை புசிக்கக் கொடுக்கிறார்.

ஜெயங்கொள்கிறவர்களுக்கு கர்த்தர் வெண்மையான குறிக்கல்லைக் கொடுக்கிறார். வெண்மை நிறம் பரிசுத்தத்தைக் குறிக்கிற வார்த்தை. வெண்மையான குறிக்கல்லில் பாவத்தின் கறை எதுவுமில்லை. பழைய ஏற்பாட்டுக் காலத்திலே, நீதிபதிகள் நிரபராதிகளை விடுவித்து, குற்றவாளிகளைத் தண்டிப்பார்கள். ஒருவர் நிரபராதி என்பதை உறுதிசெய்யும் விதமாக, நீதிபதி அவருக்கு வெண்மையான குறிக்கல்லைக் கொடுப்பார். குற்றவாளிக்கோ கருப்பான குறிக்கல்லைக் கொடுத்துவிடுவார்.

கர்த்தர் ஜெயங்கொள்கிறவர்களுக்கு மாசற்ற, தூய்மையான, வெண்மையான குறிக்கல்லைக் கொடுக்கிறார். அந்தக் கல்லின்மேல் நமக்கு ஒரு புதிய நாமத்தை எழுதுகிறார். இந்தப் புதிய நாமம் நம்முடைய புத்திர சுவிகாரத்தின் நாமமாகும். நாம் மாத்திரமே நம்முடைய நாமத்தை அறியமுடியும். கர்த்தர் வெண்மையான கல்லின்மேல் எழுதியிருக்கிற நம்முடைய புதிய நாமத்தை, வேறொருவராலும் அறிய முடியாது. நம்முடைய சுவிகாரத்தின் அடையாளங்களை நம்மால் மாத்திரமே அறிந்துகொள்ள முடியும். நம்முடைய சுவிகாரம் மற்றவர்களுக்குத் தெரியாது.

தியத்தீரா
வெளி 2:18

வெளி 2:18. தியத்தீரா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: அக்கினிஜுவாலை போன்ற கண்களும், பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களுமுள்ள தேவகுமாரன் சொல்லுகிறதாவது;

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தியத்தீரா சபையின் தூதனுக்கு எழுதவேண்டியதை வெளிப்படுத்துகிறார். கிறிஸ்துவானவர் தம்மைப்பற்றிச் சொல்லும்போது, "அக்கினிஜுவாலை போன்ற கண்களும், பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களுமுள்ள தேவகுமாரன்" என்று சொல்லுகிறார். இயேசுகிறிஸ்துவின் கண்கள் அக்கினிஜுவாலைபோல பிரகாசமாகயிருக்கிறது. எல்லா நபர்களையும், எல்லா காரியங்களையும் கிறிஸ்துவின் பிரகாசமான கண்கள் ஊடுருவிப்பார்க்கும்.

அவருடைய பாதங்கள் பிரகாசமான வெண்கலம் போல இருக்கிறது. கிறிஸ்துவானவர் பரிபூரண ஞானத்தின் பிரகாரமாக நியாயந்தீர்க்கிறவர். பரிபூரணபலத்தினால் கிரியை செய்கிறவர். கிறிஸ்து தம்முடைய நீதியில் நிலைத்து நிற்கிறவர்.

அறிந்திருக்கிறேன்
வெளி 2:19

வெளி 2:19. உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்.

தியத்தீரா சபையாரை இயேசுகிறிஸ்து புகழ்ந்து பேசுகிறார். அவர்களைக்குறித்து நற்சாட்சி சொல்லுகிறார். அவர்கள் நற்கிரியைகளைச் செய்கிறார்கள். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள், தங்கள் விசுவாசத்தை நற்கிரியைகளின் மூலமாய் வெளிப்படுத்தவேண்டும். அன்போடு நற்கிரியைகளைச் செய்யவேண்டும்.

தியத்தீரா சபையார் இயேசுகிறிஸ்துவுக்காக உற்சாகமாய் ஊழியம் செய்கிறார்கள். அவர்களிடத்தில் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசம் உறுதியாயிருக்கிறது. தேவனுடைய கிருபையைப் பெற்றிருக்கிறார்கள். நீடிய பொறுமையுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெற்று கனிதருகிறார்கள். அவர்கள் முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறது. எல்லா விசுவாசிகளிடத்திலும் இப்படிப்பட்ட வாஞ்சை இருக்கவேண்டும். நாம் ஏற்கெனவே செய்த நற்கிரியைகளைவிட, இன்னும் அதிகமாய் நற்கிரியைகளைச் செய்யவேண்டும்.

குறை உண்டு
வெளி 2 : 20-23

வெளி 2:20. ஆகிலும், உன்பேரில் எனக்குக் குறை உண்டு; என்னவெனில், தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம்பண்ணவும் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய்.

வெளி 2:21. அவள் மனந்திரும்பும்படியாய் அவளுக்குத் தவணை கொடுத்தேன்; தன் வேசிமார்க்கத்தை விட்டு மனந்திரும்ப அவளுக்கு விருப்பமில்லை.

வெளி 2:22. இதோ, நான் அவளைக் கட்டில்கிடையாக்கி, அவளுடனே விபசாரஞ்செய்தவர்கள் தங்களுடைய கிரியைகளைவிட்டு மனந்திரும்பாவிட்டால் அவர்களையும் மிகுந்த உபத்திரவத்திலே தள்ளி,

வெளி 2:23. அவளுடைய பிள்ளைகளையும் கொல்லவே கொல்லுவேன்; அப்பொழுது நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவரென்று எல்லாச் சபைகளும் அறிந்துகொள்ளும்; அன்றியும் உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள் கிரியைகளின்படியே பலனளிப்பேன்.

தியத்தீரா சபையார் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள். நற்கிரியைகளை அதிகமாய்ச் செய்கிறார்கள். ஆனாலும் அவர்கள் பேரில் கர்த்தருக்கு குறையிருக்கிறது. சபையார் மத்தியிலே கள்ளத்தீர்க்கதரிசிகள் இருக்கிறார்கள். அவர்கள் விசுவாசிகளை வஞ்சிக்கிறார்கள். வஞ்சிக்கிற கள்ளத்தீர்க்கதரிசிகளை கிறிஸ்துவானவர் யேசபேல் என்னும் ஸ்திரீயானவளோடு ஒப்பிட்டுச் சொல்லுகிறார். அவளை பெயரிட்டு அழைக்கிறார்.

யேசபேல் கர்த்தருடைய ஊழியக்காரர்களை வஞ்சித்தாள். அவர்கள் வேசித்தனம்பண்ணவும், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்தாள். வஞ்சிக்கிற கள்ளத்தீர்க்கதரிசிகளும், யேசபேலைப்போலவே, விசுவாசிகளை வஞ்சித்து பாவத்தின் பாதையிலே வழிநடத்துகிறார்கள். இப்படிப்பட்ட வஞ்சகர்களை தியத்தீரா சபையார் தங்களுடைய சபையில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இடங்கொடுக்கிறார்கள்.

யேசபேல் மனந்திரும்பவேண்டுமென்று கர்த்தர் அவளுக்கு தவணை கொடுத்தார். ஆனால் அவளுக்கோ தன் வேசிமார்க்கத்தைவிட்டு மனந்திரும்ப விருப்பமில்லை. தேவனுடைய பொறுமையை யேசபேலும், விசுவாசிகளை வஞ்சிக்கிறவர்களும் அசட்டைபண்ணு கிறார்கள். தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி துன்மார்க்கம் பண்ணுகிறார்கள். அவர்கள் மனந்திரும்பும்படியாய் கர்த்தர் அவர்களுக்கு வாய்ப்பு கொடுத்தார். அவர்களோ கர்த்தர் கொடுத்த வாய்ப்பை பயன்படுத்தாமல் அசட்டைபண்ணிவிட்டார்கள். இன்னும் மனந்திரும்பாமலேயே இருக்கிறார்கள். அவர்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்னும் விருப்பமும் இல்லை.

கர்த்தர் நல்லோரையும் பொல்லோரையும் நேசிக்கிறவர். அவருடைய அன்பில் பட்சபாதமில்லை. அவர் நீதிமான்களை நேசிப்பதுபோல பாவிகளையும் நேசிக்கிறார். கர்த்தர் பாவிகளை நேசித்தாலும் அவர்களுடைய பாவங்களை வெறுக்கிறார். யேசபேல் தன் வேசிமார்க்கத்தைவிட்டு மனந்திரும்பாமல் போனபடியால் கர்த்தர் அவளை தண்டிக்கிறார். அவளைக் கட்டில் கிடையாக்குகிறார்.

யேசபேலோடு விபசாரம் செய்தவர்கள் தங்களுடைய கிரியைகளைவிட்டு மனந்திரும்ப வேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். மனந்திரும்பும்படியாய் அவர்களுக்கும் தவணை கொடுக்கிறார். அவர்கள் மனந்திரும்பாவிட்டால் கர்த்தர் அவர்களையும் மிகுந்த உபத்திரவத்திலே தள்ளுவார்.

கர்த்தர் யேசபேலைத் தண்டிப்பதோடு அவளுடைய பிள்ளைகளையும் கொல்லவே கொல்லுவேன் என்று சபிக்கிறார். இந்த மரணம் அவர்களுடைய இரண்டாம் மரணத்தைக் குறிக்கிறது. அவர்கள் நித்திய மரணமடைவார்கள்.

கர்த்தர் துன்மார்க்கரைத் தண்டிக்கும்போது, அதைப் பார்த்து, உணர்ந்து, நாம் மனந்திரும்பிவிட வேண்டும். நமக்கு நல்ல புத்திவரவேண்டுமென்பதற்காக கர்த்தர் துன்மார்க்கரை அழிக்கிறார். அவர்களைத் தண்டிக்கிறார். யேசபேலையும், அவளுடைய பிள்ளைகளையும், யேசபேலோடு விபசாரம் செய்தவர்களையும் கர்த்தர் உபத்திரவத்திலே தள்ளுகிறார். அவர்களைத் தண்டிக்கிறார். அப்பொழுது கர்த்தர் உள்ளிந்திரியங்களையும், இருதயங்களையும் ஆராய்கிறவர் என்று எல்லா சபைகளும் அறிந்துகொள்ளும். கர்த்தர் நீதியின்படி தீர்ப்பு செய்யும்போது, அவருடைய சுபாவம் வெளிப்படும்.

கர்த்தர் நம் எல்லோரையும் நோக்கிப் பார்க்கிறார். நம்முடைய கிரியைகளை அவர் ஆராய்ந்து அறிகிறார். ஒவ்வொருவருக்கும் அவரவருடைய கிரியைகளின்படி கர்த்தர் பலனளிப்பார். துர்க்கிரியைகளைச் செய்கிறவர்களை கர்த்தர் தண்டிப்பார். நற்கிரியைகளைச் செய்கிறவர்களை கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

சாத்தானுடைய ஆழங்கள்
வெளி 2 : 24,25

வெளி 2:24. தியத்தீராவிலே இந்தப் போதகத்தைப் பற்றிக்கொள்ளாமலும், சாத்தானுடைய ஆழங்கள் என்று அவர்கள் சொல்லுகிறார்களே, அந்த ஆழங்களை அறிந்துகொள்ளாமலுமிருக்கிற மற்றவர்களாகிய உங்களுக்கு நான் சொல்லுகிறதாவது; உங்கள்மேல் வேறொரு பாரத்தையும் சுமத்தமாட்டேன்.

வெளி 2:25. உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள்.

சபையார் மத்தியிலே யேசபேலைப்போல வஞ்சிக்கிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய துர்உபதேசத்திற்குச் செவிகொடுக்காமல், தங்களைத் தீட்டுப்படுத்தாமல், தங்களை பரிசுத்தமாய்க் காத்துக்கொள்கிறவர்களை கர்த்தர் ஆசீர்வதிப்பார். வஞ்சிக்கிறவர்கள் தங்கள் வார்த்தைகளினாலும், கிரியை களினாலும் விசுவாசிகளை வஞ்சிக்கிறார்கள். வேசித்தனம்பண்ணவும் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் இவர்கள் விசுவாசிகளுக்குப் போதித்து அவர்களை வஞ்சிக்கிறார்கள்.

தங்களுடைய வஞ்சகமான போதகத்தை "சாத்தானுடைய ஆழங்கள்" என்று பேரிட்டு அழைக்கிறார்கள். இவர்களுடைய உபதேசம் துன்மார்க்கமாயிருக்கிறது. தங்களுடைய போதகத்தை இவர்கள் இரகசியமான ஆழங்கள் என்று குறிப்பிடுகிறார்கள். ஆழத்தில் இருள்தான் இருக்கும். வெளிச்சம் இருக்காது.

கர்த்தரோ வஞ்சிக்கிறவர்களின் உபதேசத்தை, ஆழமான இரகசியம் என்று சொல்லவில்லை. அதற்குப் பதிலாக அவர்களுடைய போதகத்தை சாத்தானுடைய ஆழங்கள் என்று சொல்லுகிறார். இதற்கு சாத்தானுடைய ஏமாற்றுத்தனம், சாத்தானுடைய வஞ்சகம் என்று பொருள் சொல்லலாம்.

கர்த்தருடைய விசுவாசிகள் வஞ்சிக்கிற உபதேசங்களுக்கு செவிகொடுக்கமாட்டார்கள். அவர்கள் ஆழங்கள் என்று சொல்லு வதை விசுவாசிகள் அறிந்து கொள்ளாம லிருக்கிறார்கள். சாத்தானுடைய ஆழங்களுக்கு பங்காளிகளாக யிராதவர்களை கர்த்தர் ஆசீர்வதிக்கிறார். அவர்கள்மேல் வேறொரு பாரத்தையும் சுமத்தமாட்டேன் என்று வாக்குப்பண்ணுகிறார். விசுவாசிகளிடத்தில் கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசம் இருக்கிறது. கர்த்தர் வருமளவும் அவர்கள் தங்களிடத்திலுள்ள விசுவாசத்தைப் பற்றிக்கொள்ளவேண்டும்.

விசுவாசத்தோடு தங்களுடைய நல்மனச்சாட்சியையும் அவர்கள் உறுதியாய்ப் பற்றிக்கொள்ளவேண்டும். கர்த்தர் வரும்போது நம்முடைய எல்லா ஆபத்துக்களும், எல்லா வேதனைகளும், எல்லா கஷ்டங்களும் நம்மைவிட்டு நீங்கிப்போகும்.

ஜாதிகள் மேல் அதிகாரம், விடிவெள்ளி நட்சத்திரம் வெளி 2:26-29

வெளி 2:26. ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள் மேல் அதிகாரம் கொடுப்பேன்.

வெளி 2:27. அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான்; அவர்கள் மண்பாண்டங்களைப்போல நொறுக்கப்படுவார்கள்.

வெளி 2:28. விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக் கொடுப்பேன்.

வெளி 2:29. ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது.

ஜெயங்கொள்கிறவனுக்கு கர்த்தர் ஆசீர்வாதம் சொல்லுகிறார். ஜெயங்கொள்கிறவர்கள் முடிவுபரியந்தம் கர்த்தருடைய கிரியைகளை கைக்கொள்ள வேண்டும். கர்த்தர் ஜெயங்கொள்கிறவர்களுக்கு ஜாதிகள்மேல் அதிகாரங் கொடுப்பார். கர்த்தர் கொடுக்கிற வல்லமையும் அதிகாரமும் மிகவும் உன்னதமானது. இந்த உலகத்தின்மீது ஜெயங்கொள்கிற விசுவாசிகளுக்கு கர்த்தர் ஆளுகை செய்கிற அதிகாரத்தைக் கொடுப்பார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கிறார். தாம் பிதாவிடத்திலிருந்து அதிகாரம் பெற்றது போலவே, கிறிஸ்துவானவர் ஜெயங்கொள்கிறவர்களுக்கு ஜாதிகள்மேல் அதிகாரங்கொடுப்பார்.

ஜெயங்கொள்கிறவர்கள் ஜாதிகளை இருப்புக்கோலால் ஆளுகை செய்வார்கள். இவர்கள் ஜாதிகளை மண்பாண்டங்களைப் போல நொறுக்கிப்போடுவார்கள். மண்பாண்டங்களால் இருப்புக்கோலை எதிர்க்க முடியாது. இருப்புக்கோல் மண்பாண்டத்தில் பட்டாலும், மண்பாண்டம் இருப்புக்கோல்மீது பட்டாலும், மண்பாண்டமே நொறுங்கிப்போகும். ஜெயங்கொள்கிறவர்கள் ஜாதிகளை இருப்புக்கோலால் ஆளுகை செய்யும்போது, அவர்கள் மண்பாண்டங்களைப்போல நொறுக்கப்படுவார்கள். ஜெயங்கொள்கிறவர்களுக்கு கர்த்தர் அறிவையும், ஞானத்தையும், வல்லமையையும் கொடுப்பார்.

ஜெயங்கொள்கிறவர்களுக்கு கர்த்தர் விடிவெள்ளி நட்சத்திரத்தைக் கொடுப்பார். கிறிஸ்துவானவரே விடிவெள்ளி நட்சத்திரம். அவர் வரும்போது பொழுதுவிடியும். இருள் நீங்கும். பகல் பொழுது ஆரம்பமாகும். கிறிஸ்துவானவர் நம்முடைய ஆத்துமாவிற்குள் பிரவேசிக்கும்போது, நம்முடைய ஆத்துமாவின் இருள் நம்மைவிட்டு நீங்கிப்போகும். தேவனுடைய தெய்வீக பிரசன்னம் நம்முடைய ஆத்துமாவில் பிரகாசமாகயிருக்கும். விடிவெள்ளியின் வெளிச்சம் தேவனுடைய கிருபையையும், அவருடைய மகிமையையும் நமக்குக் கொடுக்கும்.

கர்த்தர் சொல்லுவதை நாம் செவிகொடுத்து கேட்கவேண்டும். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதை எல்லா விசுவாசிகளும் கேட்கவேண்டும். காதுள்ளவன் என்னும் வார்த்தை கேட்கும் ஆற்றலுடைய எல்லா விசுவாசிகளையும் குறிக்கிற வார்த்தை. கர்த்தருடைய வார்த்தையை எல்லோரும் கேட்கவேண்டும். கேட்கிறவர் எல்லோரும் கீழ்ப்படியவேண்டும்.

3 அதிகாரம்

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மேலும் மூன்று சபைகளுக்கு தம்முடைய செய்தியைச் சொல்லுகிறார். சர்தை (வெளி 3:1-6). பிலதெல்பியா (வெளி 3:7-13). லவோதிக்கேயா (வெளி 3:14-22).

சர்தை
வெளி 3:1

வெளி 3:1. சர்தை சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்.

அப்போஸ்தலர் யோவான் சர்தை பட்டணத்தில் சுவிசேஷத்தை பிரசங்கம் பண்ணினார். யோவானுடைய ஊழியத்தின் மூலமாய் முதன்முதலாக இரட்சிக்கப்பட்டவர்கள் சர்தை பட்டணத்தார்தான் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். சர்தை பட்டணத்தாரைப்பற்றி மேலும் ஒரு செய்தி உள்ளது. கிறிஸ்துவின் உபதேசத்திற்கு சர்தை பட்டணத்தாரே முதன்முதலாக எதிர்த்து நின்றவர்கள் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மைப்பற்றிச் சொல்லும்போது, "தேவனுடைய ஏழுஆவிகளையும், ஏழுநட்சத்திரங்களையும் உடையவர்" என்று சொல்லுகிறார். ஏழுஆவிகள் என்பது பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிற வார்த்தை. பரிசுத்த ஆவியானவர் வல்லமையுள்ளவர். அவரிடத்தில் வெவ்வேறு விதமான வல்லமைகள் உள்ளது. ஏழு என்பது பூரணத்தைக் குறிக்கிற எண். ஏழு ஆவிகள் என்னும் வார்த்தை பரிசுத்த ஆவியானவருடைய சர்வவல்லமையைக் குறிக்கிறது.

இயேசுகிறிஸ்துவிடம் தேவனுடைய ஏழுஆவிகளும் இருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவர் இயேசுகிறிஸ்துவின்மீது அளவில்லாமல் ஊற்றப்பட்டிருக்கிறார். பரிசுத்தஆவியானவர் கிறிஸ்துவினிடத்தில் பரிபூரணமாக வாசம் பண்ணுகிறார். சர்தை சபையாருக்கு பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் தேவைப்படுகிறது. ஆவியானவரே அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தைப் புதுப்பிக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்து ஏழுநட்சத்திரங்களை உடையவர். ஏழுநட்சத்திரங்களும் சபைகளின் தூதர்கள். பரிசுத்த ஆவியானவர் தம்முடைய ஊழியத்தின் மூலமாகவே கிரியை நடப்பிக்கிறார். ஆவியானவர் இல்லாமல் ஊழியம் கனிகொடுக்காது. பரிசுத்த ஆவியில்லாமல் ஊழியத்தில் ஜீவனோ வல்லமையோ இருக்காது.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கரம் பரிசுத்த ஆவியானவரையும் சபைகளையும் இணைக்கிறது. சபையில் ஆவியானவர் இல்லையென்றால் அந்த சபையில் ஜீவன் இருக்காது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய ஆவியானவர் மூலமாய், தம்முடைய சபைகளுக்கு ஜீவனைக் கொடுக்கிறார்.

கிறிஸ்துவானவர் சர்தை சபையின் தூதனுக்கு சொல்லும்போது, ஆரம்பத்திலேயே அந்த சபையைக் கடிந்துகொள்கிறார். சர்தை சபையைப்போலவே லவோதிக்கேயா சபையையும் கர்த்தர் ஆரம்பத்திலேயே கடிந்துகொள்கிறார். கர்த்தர் கடினமான வார்த்தைகளினால் அவர்களைக் கடிந்துகொள்கிறார். அவர்களிடத்தில் மாய்மாலம் இருக்கிறது. தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வீழ்ச்சியடைந்திருக்கிறார்கள்.

ஒரு காலத்தில் சர்தை சபை ஆவிக்குரிய வளர்ச்சி பெற்றிருந்தது. நற்சாட்சியுடையதாயிருந்தது. கனிதரும் சபையாகயிருந்தது. இந்த சபையின் மூலமாய் கர்த்தருடைய ஊழியம் அதிகமாய் நடைபெற்றது. இவர்கள் மத்தியிலே பிரிவினை எதுவும் காணப்படவில்லை. எல்லாமே கிரமமும் ஒழுக்கமுமாய் நடைபெற்றது. மனுஷருடைய பார்வையில் எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது.

கர்த்தரும் சர்தை சபையைப் பார்க்கிறார். கர்த்தருடைய பார்வையும் மனுஷருடைய பார்வையும் ஒன்றுபோல் இருப்பதில்லை. மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ மனுஷருடைய இருதயத்தைப் பார்க்கிறார். கர்த்தர் சர்தை சபையின் கிரியைகளை அறிந்திருக்கிறார். மனுஷர் மத்தியிலே சர்தை சபை உயிருள்ளது என்று பெயர் பெற்றிருக்கிறது. ஆனால் இந்த சபை செத்துப்போயிருப்பதை கர்த்தர் பார்க்கிறார். இந்தச் சபைக்கு மனுஷர் மத்தியிலே நற்பெயரும், பெயரும் புகழும் இருக்கிறது. ஆனால் உண்மையில் அந்த நற்பெயருக்கு சர்தை சபை பாத்திரமாயிருக்கவில்லை.

சர்தை சபையார் பக்தியுள்ளவர்களென்று வெளிவேஷம் போடுகிறார்கள். ஆனால் சபைக்குள்ளேயோ தேவனுடைய வல்லமையில்லை. சர்தை சபை உயிருள்ள சபையென்று பெயர் பெற்றிருக்கிறது. ஆனால் இது செத்துப்போன சபையாகயிருக்கிறது. இந்தச் சபையில் ஜீவனில்லை. ஜீவனிருந்தால் அசைவு இருக்கும். சர்தை சபையில் அசைவு எதுவுமில்லை. சர்தை சபை இன்னும் முழுவதுமாக செத்துப்போகவில்லை. கொஞ்சம் உயிர் இருக்கிறது. செத்துப்போக ஆயத்தமாயிருக்கிறது. கர்த்தர் சர்தை சபையின் உண்மையான நிலமையைப் பார்த்து அவர்களை எச்சரிக்கிறார்.

விழி, ஸ்திரப்படுத்து, மனந்திரும்பு வெளி 3 : 2,3

வெளி 3:2. நீ விழித்துக்கொண்டு, சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து; உன் கிரியைகள் தேவனுக்குமுன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை.

வெளி 3:3. ஆகையால் நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு. நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய்.

சர்தை சபையார் உயிருள்ளவர்கள் என்று பெயர் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களோ செத்தவர்களைப் போல இருக்கிறார்கள். அவர்கள் விழித்துக்கொள்ளவேண்டுமென்றுகிறிஸ்துவானவர் அவர்களுக்கு நல்ஆலோசனை சொல்லுகிறார். நாம் எப்போதெல்லாம் விழித்துக் கொள்ளாமலிருக்கிறோமோ அப்பொதெல்லாம் நம்முடைய ஸ்தானத்தை இழந்துபோகிறோம். விழித்துக்கொள்ளாத வேளையிலே தூங்குகிறவர்களாகக் காணப்படுவோம். தூங்கும் நிலமையிலிருந்து விழித்துக்கொள்ளும் நிலமைக்கு நாம் திரும்பவேண்டும்.

ஆபத்துக்கு விரோதமாகவும், சாத்தானுக்கு விரோதமாகவும் நாம் எப்போதும் விழிப்புள்ளவர்களாயிருக்க வேண்டும்.

சர்தை சபையாரிடத்தில் சாகிறதற்கு கேதுவானவைகள் ஏராளமாய் உள்ளன. இவற்றினால் இவர்கள் செத்தவர்களைப் போல இருக்கிறார்கள். இவர்களிடத்தில் கொஞ்சம் உயிர் இருக்கிறது. அந்த உயிரை இவர்கள் ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டும். சாகிறதற்கேதுவாய் இருக்கிற வர்கள் என்பது மரணத்திற் கேதுவான குணங்களைக் குறிக்கும் என்று ஒரு சிலர் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். இந்த வாக்கியம் மரணத்திற்கேதுவான வர்களையும் குறிக்கும் என்று வேறு சிலர் வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மைச் சுற்றிலும் சாவுக்கேதுவாயிருக்கி றவைகள் அதிகமாயிருக்கும்போது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நம்மால் உற்சாகமாயிருக்க முடியாது. நம்மைச் சுற்றிலும் ஆவிக்குரிய சோர்வும், மந்த நிலமையும் காணப்படும்போது, நாம் மாத்திரம் ஆவிக்குரிய காரியங்களில் சுறுசுறுப்பாயிருக்க முடியாது. ஆவிக்குரிய ரீதியாக செத்துப்போனவர்கள் நடுவிலே நாம் ஜீவிக்கும்போது, நம்முடைய ஆவிக்குரிய ஜீவனையும், தேவனுடைய வல்லமையையும் நமக்குள்ளே காத்துக் கொள்வது மிகவும் கடினம்.

சர்தை சபையின் விசுவாசிகள் சாகிறதற்கேதுவாயிருக்கிறவர்கள் மத்தி யிலே ஜீவிக்கிறார்கள். இதனால் இவர்களுடைய கிரியைகள் தேவனுக்கு முன் நிறைவுள்ளவைகளாயில்லை. அவர்களிடத்தில் குறை காணப்படுகிறது. இவர்கள் உயிருள்ளவர்கள் என்று பெயர் கொண்டிருக்கிறார்கள். ஆனால் செத்தவர்களாயிருக்கிறார்கள். ஒரு கடலை நெற்றில், வெளியே தோலும், உள்ளே கடலைப் பருப்பும் இருக்கும். இவர்களுக்கோ வெளித்தோல் மாத்திரமே இருக்கிறது.

உள்ளே கடலைப் பருப்பு இல்லை. ஓடு இருக்கிறது விதை இல்லை. உள்ளே ஒன்றுமில்லாமல் வெறுமையாயிருக்கிறது. வெளிப்பார்வைக்கு அழகாகயிருக்கி றார்கள்.

சர்தை சபையாரின் உள்ளான ஆவிக்குரிய ஜீவியம் ஒன்றுமில்லாமல் சூனியமாயிருக்கிறது. அவர்களுடைய இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணவில்லை. ஆவியானவர் இல்லையென்றால் அவர்களுக்கு ஜீவனும் இல்லை. அவர்களுக்கு தேவகிருபைகளும் இல்லை. ஆவிக்குரிய வரங்களும் இல்லை. இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நீண்ட நாட்களாய் நிலைத்து நிற்கமுடியாது. சீக்கிரமாய் மரித்துப்போவார்கள்.

சர்தை சபையாருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இவர்களோ சுவிசேஷ வார்த்தைகளை கேட்டும் மறந்துவிட்டார்கள். இவர்கள் கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையைப் நினைவுகூரவேண்டும். சுவிசேஷத்தின் வார்த்தைகளைக் கைக்கொண்டு மனந்திரும்பவேண்டும். சுவிசேஷத்தை இவர்கள் முதன்முதலில் கேட்டபோது தேவனுடைய கிருபை இவர்களுக்குள் பிரவேசித்தது. ஆனால் இவர்களோ தாங்கள் கேட்ட சுவிசேஷத்தை சீக்கிரத்தில் மறந்துபோனார்கள். சுவிசேஷத்தை மறந்துபோனபோது, இவர்களிடத்திலிருந்த தேவகிருபையும் இவர்களை விட்டு கடந்துபோயிற்று. ஆகையினால் சர்தை சபையார் தாங்கள் கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூரவேண்டும். தாங்கள் கேட்ட சுவிசேஷ வார்த்தைகளைக் கைக்கொண்டு மனந்திரும்பவேண்டும். அவர்கள் விழித்திருக்கவேண்டும்.

சர்தை சபையார் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்திலே விழித்திருக்க வில்லையென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவர்கள்மேல் திடீரென்று திருடனைப்போல வருவார். அவர் தங்கள்மேல் வரும் வேளையை அவர்கள் அறியாதிருப்பார்கள். கர்த்தருடைய வார்த்தை சர்தை சபையாருக்கு எச்சரிப்பாகச் சொல்லப்படுகிறது.

நாம் கிறிஸ்துவைப்பற்றிக்கொண்டு, அவருடைய கிருபையில் நிலைத்திருக்கும் போது, அவருடைய வருகை நமக்கு ஆசீர்வாதமாகயிருக்கும். நாம் அவருடைய வருகையை ஆவலாய் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருப்போம்.

நம்முடைய விசுவாசத்தில் நாம் கிறிஸ்துவைப்பற்றிக்கொள்ளாமல், அவருடைய கிருபையை இழந்திருப்போமென்றால், அவருடைய இரண்டாம் வருகை நமக்கு ஆச்சரியமாயிருக்கும். நமக்கு ஆவிக்குரிய பாதுகாப்பு இருக்காது. அவிசுவாசிகளுக்கு இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை திகைப்பாகவும், பயங்கரமானதாகவும் இருக்கும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவருடைய கிருபை வெளிப்படாது. அவருடைய நீதிமாத்திரமே வெளிப்படும். அவர் நீதியாய் சகல ஜனங்களையும் நியாயந்தீர்ப்பார்.

சர்தை சபையார் தங்கள் ஆவிக்குரிய தூக்க நிலையிலிருந்து விழித்துக்கொண்டு, தங்களை ஸ்திரப்படுத்தவேண்டும். மனந்திரும்பவேண்டும். இல்லையென்றால் அவிசுவாசிகளுக்கு வரும் நியாயத்தீர்ப்பைப்போல, சர்தை சபையாருக்கும் நீதியான நியாயத்தீர்ப்பு வரும்.

வெண்வஸ்திரம்
வெளி 3:4

வெளி 3:4. ஆனாலும் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையிலும் உனக்குண்டு; அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண்வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சர்தை சபையாரை எச்சரித்துச் சொல்லுகிறார். இவர்கள் உயிருள்ளவர்களென்று பெயர் கொண்டிருந்தாலும், இவர்கள் செத்தவர் களாயிருக்கிறார்களென்று, இவர்களுடைய உண்மையான ஆவிக்குரிய நிலமையை அவர்களுக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கிறார். அவர்கள் விழித்துக் கொள்ளவேண்டுமென்றும், தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தை ஸ்திரப்படுத்த வேண்டுமென்றும், மனந்திரும்ப வேண்டுமென்றும் கர்த்தர் அவர்களை எச்சரிக்கிறார். விழித்திராவிட்டால், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது அவர்களுக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகுமென்று கிறிஸ்துவானவர் எச்சரித்துச் சொல்லுகிறார்.

இயேசுகிறிஸ்து சர்தை சபையிலுள்ள பாவிகளைக் குறித்து எச்சரிப்பான வார்த்தைகளைச் சொன்னாலும், அவர்கள் மத்தியிலே இருக்கிற பரிசுத்தவான்கள் நிமித்தம் அவர்களைப் புகழ்ந்து பேசவும் செய்கிறார். கர்த்தருடைய வார்த்தை நமக்கு ஆறுதலாயிருக்கிறது. நம்மை உற்சாகப்படுத்துகிறது. நம்மை அழிக்கவேண்டுமென்பது கர்த்தருடைய நோக்கமல்ல. நம்மைத் திருத்தி, நமக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கவேண்டும் என்பதே கிறிஸ்துவின் சித்தம்.

சர்தை சபையில் சில பேர் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாமல் பரிசுத்தமாய் ஜீவிக்கிறார்கள். இவர்களுடைய எண்ணிக்கை கொஞ்சம்தான். ஆனாலும் இவர்கள் விசுவாசத்தில் உறுதியுள்ள வர்களாயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சில பேர் சர்தை சபையிலிருப்பதை கர்த்தர் கண்ணோக்கிப் பார்க்கிறார். இவர்களுடைய எண்ணிக்கை குறைவாக யிருந்தாலும், இவர்களும் கர்த்தருடைய பார்வைக்கு பிரத்தியட்சமாய்த் தெரிகிறார்கள். இவர்கள் எண்ணிக் கையில் குறைந்தவர்களாகயிருக்கலாம். ஆனாலும் இவர்கள் தேவகிருபையில் நிறைந்தவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருக்கு விசேஷித்தவர்கள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சர்தை சபையிலுள்ள ஒரு சில பரிசுத்தவான்களுக்கு தம்முடைய கிருபை நிறைந்த ஆசீர்வாதங்களை வாக்குப்பண்ணுகிறார். அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு கூட நடப்பார்கள். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் அவரோடு கூட நடப்பது அவர்களுக்குக் கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். கர்த்தரோடு கூட நடக்கும்போது விசுவாசிகளுக்கு அவரோடு நெருங்கிய ஐக்கியம் உண்டாகும். ஆவிக்குரிய காரியங்களை கர்த்தரோடு தாராளமாய் சம்பாஷணை செய்யமுடியும்.

சர்தை சபையிலுள்ள பரிசுத்தவான்கள் எண்ணிக்கையில் குறைவான பேராகயிருந்தாலும், கர்த்தர் அவர்களை தம்முடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரவான்களாகக் காண்கிறார். அவர்கள் வெண்வஸ்திரம் தரித்துக்கொள்வார்கள். பரலோகத்திலே வெண்வஸ்திரம் மகிமையையும் கனத்தையும் வெளிப்படுத்துகிறது. கர்த்தரோடு கூட நடக்கிற பரிசுத்தவான்கள், வெண்வஸ்திரம் தரித்து, கர்த்தருடைய பரிசுத்த மகிமையில் பிரவேசிப்பார்கள்.

ஜீவபுஸ்தகம்
வெளி 3 : 5,6

வெளி 3:5. ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்.

வெளி 3:6. ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது.

கர்த்தர் ஜெயங்கொள்கிற விசுவாசிகளுக்கு விசேஷித்த வெகுமதியை வாக்குப்பண்ணுகிறார். தேவனுடைய கிருபை பரிசுத்தமானது. அவருடைய மகிமையும் பரிசுத்தமானது. அவர் கொடுக்கிற வெகுமதியும் பரிசுத்தமானது. பரிசுத்தம் பரிபூரணமடையும்போது கர்த்தருடைய நாமம் மகிமைப்படுகிறது. கர்த்தரோ தம்முடைய பரிசுத்தவான்களை கனப்படுத்தி மேன்மைப்படுத்துகிறார். தம்முடைய தெய்வீக வாக்குத்தத்தங்களை அவர்களுக்குக் கிருபையாகக் கொடுக்கிறார். ஜெயங்கொள்கிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும் என்று கிறிஸ்துவானவர் வாக்குப்பண்ணுகிறார்.

இயேசுகிறிஸ்துவினிடத்தில் ஒரு விசேஷித்த புஸ்தகம் இருக்கிறது. இதற்கு ஜீவபுஸ்தகம் என்று பெயர். கிறிஸ்துவானவர் தம்மை விசுவாசித்து ஆத்தும இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டவர்களுடைய பெயர்களை இந்த ஜீவபுஸ்தகத்தில் எழுதி வைத்திருக்கிறார். கர்த்தர் தம்மிடத்திலுள்ள ஜீவபுஸ்தகத்தை தம்முடைய பிதாவுக்கு முன்பாகவும், அவருடைய தூதர்களுக்கு முன்பாகவும் சமர்ப்பிப்பார்.

ஜெயங்கொள்கிற விசுவாசிகளுடைய நாமத்தை கிறிஸ்துவானவர் இந்த ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடமாட்டார். அவர்கள் தங்கள் விசுவாசத்தில் ஜெயங்கொண்டவர்களென்று கிறிஸ்துவானவர் பிதாவுக்கு முன்பாகவும், அவருடைய தூதர் முன்பாகவும், அவர்களுடைய நாமத்தை அறிக்கை செய்வார். இதுவே கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு கிடைக்கப்போகிற மிகப்பெரிய மேன்மை.

நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கும் காலம் வரையிலும் நமக்கு பாடுகளும், வேதனைகளும், உபத்திரவங்களும் உண்டு. சத்துருவின் போராட்டங்களும் நமக்கு உண்டு. இவையெல்லாவற்றிலும் நாம் விசுவாசத்தோடு கர்த்தரைப் பற்றிக்கொள்ளவேண்டும்.

சத்துருவை ஜெயிக்கவேண்டும். ஜெயங்கொள்கிறவர்களுக்கு கர்த்தர் இப்படிப்பட்ட மேன்மையான ஆசீர்வாதத்தை வாக்குப்பண்ணி யிருக்கிறார்.

இந்தச் செய்தி சர்தை சபைக்கு விசேஷமாகச் சொல்லப்பட்டிருந்தாலும், இதை எல்லா சபைக்கும் பொதுவான செய்தியாக ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று கிறிஸ்துவானவர் திருவுளம் பற்றுகிறார்.

பிலதெல்பியா
வெளி 3:7

வெளி 3:7. பிலதெல்பியா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லு கிறதாவது;

பிலதெல்பியா என்னும் பெயருக்கு சகோதர சிநேகம் என்று பொருள். இது இந்தப் பட்டணத்தின் பழங்காலத்துப் பெயர். இந்தப் பட்டணத்தார் அன்பிலும், சகோதர சிநேகத்திலும் சிறந்து விளங்கினார்கள். ஒருவருக்கொருவர் உண்மையாய் அன்புகூர்ந்தார்கள். தங்களுடைய உள்ளத்தில் உள்ள அன்பை கிரியைகளினாலும் வெளிப்படுத்திக் காண்பித்தார்கள். விசுவாசிகள் அன்புள்ளவர்களாக இருக்கவேண்டும். அன்பின் ஆவி நம்மிடத்தில் இல்லையென்றால், நம்முடைய ஜீவியத்தில் ஆவியின் கனி வெளிப்படாது.

கர்த்தர் இந்த சபையில் ஒரு குற்றமும் காணவில்லை. இவர்கள் கர்த்தருடைய நாமத்தை மறுதலிக்க வில்லை. கிறிஸ்துவானவர் இந்த சபைக்கு தம்முடைய செய்தியைச் சொல்லும்போது தம்மைப்பற்றி "பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்கு திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக் கூடாதபடிக்கு பூட்டுகிறவருமாயிருக்கிறவர்" என்று தம்மைப்பற்றிச் சொல்லுகிறார். இது கிறிஸ்துவின் சுபாவம். கர்த்தர் பரிசுத்தமுள்ளவர். அவர் சத்தியமுள்ளவர். பரிசுத்தம் கர்த்தருடைய சுபாவம். ஆகையினால் அவர் தம்முடைய வார்த்தைகளில் சத்தியமுள்ளவராகவே இருக்கிறார். பரிசுத்தமுள்ள தேவனால் பொய்சொல்ல முடியாது.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடம் ஒரு திறவுகோல் உள்ளது. இது தாவீதின் திறவுகோல் என்று அழைக்கப்ப டுகிறது. கர்த்தருடைய ராஜ்யத்தின் திறவுகோல் அவரிடத்திலுள்ளது. கர்த்தர் தம்முடைய திறவுகோலினால் திறக்கிறார். தம்முடைய சபைகளுக்கு ஊழியவாய்ப்புக் களைத் திறந்துகொடுக்கிறார். அநுகூலமான வாசல்களைத் திறந்துகொடுக்கிறார். பிரவேசிக்கிற கதவுகளைத் திறக்கிறார். மனுஷருடைய இருதயங்களைத் திறக்கிறார். சபையின் கதவுகளைத் திறந்து ஆத்துமாக்களை உள்ளே அழைத்து வருகிறார். கர்த்தர் திறக்கும்போது, அவர் திறந்ததை ஒருவராலும் பூட்டமுடியாது.

கர்த்தர் கதவைத் திறப்பதுபோல, தம்முடைய திறவுகோலினால் அவர் கதவைப் பூட்டவும் செய்கிறார். கர்த்தருக்குச் சித்தமான வேளையில் அவர் வாய்ப்புக்களின் வாசல்களை அடைத்துப்போடுகிறார். பாவிகளுக்கும் துன்மார்க்கரும் விரோதமாக பரலோகத்தின் வாசலை அடைத்துப் போடுகிறார்.

கர்த்தருடைய கிரியை அவருடைய சர்வவல்லமையினால் நடைபெறுகிறது. அவர் தமக்குச் சித்தமான பிரகாரம் கிரியை செய்கிறார். அவருக்கு எதிராக கிரியை செய்ய யாராலும் கூடாது. கர்த்தர் கதவைப் பூட்டும்போது, பூட்டிய அந்தக் கதவை ஒருவராலும் திறக்க முடியாது.

அறிந்திருக்கிறேன்
வெளி 3:8

வெளி 3:8. உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்.

கிறிஸ்துவானவர் பிலதெல்பியா சபையாருடைய கிரியைகளை அறிந்திருக்கிறார். அவர்களுக்காக தாம் செய்ததை கர்த்தர் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார். திறந்தவாசலை அவர்களுக்கு முன்பாக வைத்திருக்கிறார். ஒருவராலும் அந்த வாசலைப் பூட்டமுடியாது. பிலதெல்பியா சபையில் கர்த்தரால் திறக்கப்பட்ட திறந்த வாசல், திறந்ததாகவே இருக்கும். கர்த்தர் அந்த வாசலைக் காத்துக்கொள்கிறார். பிலதெல்பியா சபையிலே ஒரு சில துன்மார்க்கர் இருந்தாலும் கர்த்தர் சபையாருக்கு திறந்த வாசலையே அவர்களுக்கு முன்பாக வைத்திருக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு சுயாதீன விடுதலை உண்டு. நம்முடைய மாம்சத்திற்கு நாம் அடிமைகளல்ல. மாம்சம் நம்மை ஆளுகை செய்யக்கூடாது. நாமே நம்முடைய மாம்சத்தை ஆளுகை செய்யவேண்டும்.

கர்த்தர் அநேக திறந்த வாசல்களை நமக்கு முன்பாக வைத்திருக்கிறார். துன்மார்க்கர் இந்த திறந்த வாசல்களைப் பார்த்து கர்த்தருடைய பிள்ளைகள்மேல் பொறாமைப்படுகிறார்கள். கர்த்தர் தம்முடைய பரிசுத்தவான்களுக்கு விரோதமாக திறந்தவாசல்களை அடைத்துப்போட்டால் சத்துருக்கள் சந்தோஷப்படுவார்கள். ஆனால் கர்த்தரோ நமக்கு முன்பாக வைத்திருக்கிற திறந்த வாசலை, ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்கு திறந்து வைத்திருக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள் அவருக்கு கோபம் உண்டாகும்படி நடந்துகொள்ளக்கூடாது. கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யக்கூடாது. நாம் கர்த்தருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியாமல், துன்மார்க்கமாய் ஜீவித்தால், கர்த்தர் நமக்கு முன்பாக வைத்திருந்த திறந்த வாசலைப் பூட்டிப்போடுவார். கர்த்தர் வாசலைப் பூட்டிவிட்டால், அந்தப் பூட்டிய வாசலை வேறு யாராலும் திறக்க முடியாது. கர்த்தருடைய கையில் இருப்பது தாவீதின் திறவுகோல். இந்த வார்த்தை சர்வவல்லமையுள்ள அதிகாரத்தை குறிக்கும் வார்த்தையாகும். கர்த்தருக்கு அதிகாரமுள்ள ஆளுகையுள்ளது. கர்த்தருடைய கிரியைக்கு யாரும் எதிர்த்து நிற்கமுடியாது. அவருடைய சித்தத்தை யாரும் தடைபண்ணமுடியாது.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிலதெல்பியா சபையாரை அன்பாய்ப் புகழ்ந்து பேசுகிறார். அவர்களிடத்தில் கொஞ்சம் பெலன்தான் இருக்கிறது. தேவகிருபை அவர்களிடத்தில் கொஞ்சம்தான் இருக்கிறது. ஆனாலும் அவர்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தை மறுதலிக்கவில்லை. அவர்களுடைய வசனத்தைக் கைக்கொண்டார்கள். நாம் பலவீனமாயிருந்தாலும், நம்மிடத்தில் தேவகிருபை மெய்யாகவே இருக்குமென்றால், அந்தக் கிருபை நம்மைப் பெலப்படுத்தும்.

விசுவாசிகளிடத்தில் கொஞ்சம் கிருபை இருக்ும்போது, அது போது மென்று திருப்தியடைந்து விடக்கூடாது. கிருபையில் நாம் வளர்ச்சி பெறவேண்டும். தேவகிருபையை நாம் அதிகமாய்ப் பெற்றுக்கொள்ளவேண்டும். கேட்கிறவர் களுக்குக் கொடுக்கப்படும். தம்மிடத்தில் அதிகமான கிருபைகளைக் கேட்கிற தம்முடைய பிள்ளைகளுக்கு, கர்த்தர் அதிகமான கிருபைகளைக் கொடுப்பார். நம்மிடத்தில் தேவகிருபை பெருகியிருக்கும் போது, நாம் கர்த்தருடைய வசனத்தைக் கைக்கொண்டு, அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து ஜீவிப்போம். அவருடைய நாமத்தை மறுதலிக்கமாட்டோம்.

சாத்தானுடைய கூட்டத்தார்
வெளி 3:9

வெளி 3:9. இதோ, யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய் சொல்லுகிறவர்களாகிய சாத்தானுடைய கூட்டத்தாரில் சிலரை உனக்குக் கொடுப்பேன்; இதோ, அவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து, நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்து கொள்ளும்படி செய்வேன்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிலதெல்பியா சபையாருக்கு ஒரு விசேஷித்த ஆசீர்வாதத்தைக் கொடுக் கிறார். சத்துருக்கள் அவர்களுடைய பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்துகொள்வார்கள். பிலதெல்பியா சபையாருக்கு விரோதமாக எழும்பியவர்கள் தோற்றுப்போவார்கள். இந்தச் சத்துருக்கள் யூதர்களல்ல. ஆனாலும் இவர்கள் தங்களை யூதரென்று பொய்சொல்லு கிறார்கள். கர்த்தர் இவர்களை சாத்தானுடைய கூட்டத்தார் என்று அழைக்கிறார். இப்படிப்பட்ட கூட்டத்தாரில் சிலரை கர்த்தர் பிலதெல்பியா சபையாருக்குக் கொடுப்பார். சபையார் மத்தியிலே இவர்கள் பிரச்சனை செய்யமாட்டார்கள். அவர்களுடைய பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து கொள்வார்கள்.

சாத்தானுடைய கூட்டத்தார் கர்த்தருடைய சபைக்குக் கீழ்ப்படிவார்கள். தாங்கள் யூதரல்லாததிருந்தும், தங்களை யூதரென்று பொய்சொன்னது தப்பிதமானது என்று உணர்ந்து அறிக்கை செய்வார்கள். அவர்களுக் குள்ளே மிகப்பெரிய மாற்றமுண்டாயி ருக்கும். தேவனுடைய வல்லமையினால் இந்த மாற்றம் உண்டாயிற்று. கர்த்தர் சத்துருக்களுடைய இருதயங்களிலும் மாற்றங்களை உண்டுபண்ணுகிறவர். தம்முடைய சபைக்கு அவர் விசேஷித்த கிருபைகளைக் கொடுக்கிறார். தம்முடைய சபையார்மீது அன்பாயிருக்கிறார்.

சாத்தானுடைய கூட்டத்தார் இதையெல்லாம் பார்ப்பார்கள். கர்த்தர் தம்முடைய பிள்ளைகள்மேல் அன்பாயிருப் பதை அறிந்துகொள்வார்கள். கர்த் தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாக தங்களால் யுத்தம்பண்ண முடியாது என்பதைப் புரிந்துகொண்டு, சபையாரு டைய பாதங்களுக்கு முன்பாக வந்து அவர்களைப் பணிந்து கொள்வார்கள்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகள்மேல் அன்பாயிருக்கிறதை அவர்கள் அறிந்து கொள்ளவேண்டும். சத்துருக்கள் இதை அறியும்போது, நாம் இதை அறியாதவர்களாயிருக்கக்கூடாது. கர்த்தருக்கும் அவருடைய பரிசுத்தவான் களுக்கும் விரோதமாக கிரியை நடப்பித்த சத்துருக்கள், கர்த்தருடைய விசேஷித்த அன்பை அறிந்துகொள்கிறார்கள். அவர்கள் அறிந்துகொள்ளும் விதத்தில் கர்த்தர் தம்முடைய விசேஷித்த அன்பை வெளிப்படுத்துகிறார். இந்த அன்பு அவருடைய பிள்ளைகளுக்கு மாத்திரமே உரியது.

சத்துருக்கள் இதைப்பார்த்து மனந்திருந்துவார்கள். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாய் எதிர்த்து நிற்பது, கர்த்தருக்கு விரோதமாய் எதிர்த்து நிற்பதற்கு சமமானது என்பதைப் புரிந்து கொள்வார்கள். தங்களுடைய பலவீனத் தையும், தோல்வியையும் ஒத்துக்கொள் வார்கள். சபையாருடைய பாதங்களுக்கு முன்பாக வந்து, பணிந்துகொள்வார்கள்.

சீக்கிரமாய் வருகிறேன்
வெளி 3 : 10,11

வெளி 3:10. என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்.

வெளி 3:11. இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிலதெல்பியா சபையாருக்கு மேலும் சில ஆசீர்வாதங்களை வாக்குப்பண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ வார்த்தைகள் அவருடைய பொறுமையின் வார்த்தைகளாகும். இந்த உலகம் பாவத்திலும் துன்மார்க்கத்திலும் நிரம்பியிருக்கிறது. பாவமான இந்த உலகத்தின்மீது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நீடியபொறுமையுள்ளவராயிருக்கிறார். கிறிஸ்துவின் சுவிசேஷம் அவருடைய பொறுமையின் கனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

பொறுமையின் காலத்திற்குப் பின்பு சோதனையின் காலம் வரும். சமாதானமான காலத்தில் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிறவர்கள், சோதனையான காலத்திலும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியவேண்டும். சோதனைக்காலத்திலும் தங்களுடைய விசுவாசத்தைக் காத்துக்கொள்ளவேண்டும். கர்த்தர் தம்முடைய பொறுமையைக் குறித்து சொல்லிய வசனத்தை பிலதெல்பியா சபையார் காத்துக்கொண்டார்கள். இவர்களுக்கு சோதனைக்காலம் வரப்போகிறது.

இது இவர்களுக்கு மாத்திரமல்ல, கர்த்தருடைய சோதனைக்காலம் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிறது. பூமியில் குடியிருக்கிறவர்களை சோதிக்கும்படியாக சோதனைக்காலம் வரப்போகிறது. இந்த சோதனைக்காலத்திற்கு பிலதெல்பியா சபையார் தப்பவேண்டும். கர்த்தருடைய கிருபையும், பாதுகாப்பும் இருக்கும்போது விசுவாசிகள் எல்லா சோதனைக்கும் தப்பிக்கலாம். கர்த்தரோ வரப்போகிற சோதனைக்காலத்திற்குத் தப்பும்படி, பிலதெல்பியா சபையாரை காப்பதாக வாக்குப்பண்ணுகிறார்.

விசுவாசிகள் தங்களுக்குள்ளதைப் பற்றிக்கொண்டிருக்கவேண்டும். நம்மிடத்தில் உள்ள நம்முடைய கிரீடத்தை ஒருவரும் எடுத்துக்கொள்ளக்கூடாது. அது கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற கிரீடம். இந்தக் கிரீடத்தை நாம் பற்றிக்கொண்டிருக்கவேண்டும். இது கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற பொக்கிஷம். அசட்டையாயிருப்போமென்றால் கர்த்தருடைய ஆசீர்வாதத்தை இழந்துபோவோம். விழித்திருக்காவிட்டால் நம்முடைய கிரீடத்தை சத்துரு எடுத்துக்கொள்வான். கர்த்தருடைய பிள்ளைகள் தங்களுக்குள்ளதைப் பற்றிக் கொண்டிருக்கவேண்டும்.

"இதோ சீக்கிரமாய் வருகிறேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். தம்முடைய பிள்ளைகளை சோதனைகளிலிருந்து தப்புவிக்கவும், ஆபத்துக்களுக்கு விடுவிக்கவும், அவர்களுடைய மெய்யான விசுவாசத்தினிமித்தம் அவர்களுக்கு வெகுமதிகளைக் கொடுக்கவும், துன்மார்க்கருக்குத் தண்டனை கொடுக்கவும் கர்த்தர் சீக்கிரமாக வரப்போகிறார். தங்களுடைய விசுவாசத்தைக் காத்துக்கொள்கிறவர்கள் கர்த்தரிடமிருந்து வெகுமதிகளைப் பெற்றுக்கொள்வார்கள். கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப்போனவர்களோ பிறருக்குள்ள கிரீடத்தை அபகரித்துக்கொள்ள முயற்சி செய்வார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் எச்சரிப்போடிருக்கவேண்டும். தங்களுக் குள்ளதைப் பற்றிக்கொண்டிருக்கவேண்டும்.

புதிய நாமம்
வெளி 3 : 12,13

வெளி 3:12. ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன்.

வெளி 3:13. ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிலதெல்பியா சபைக்கு சொல்லுகிற செய்தியின் முடிவுரையாக, இந்த வாக்குத்தத்தத்தைச் சொல்லுகிறார். ஜெயங்கொள்கிற விசுவாசிகளுக்கு கர்த்தர் இரண்டு ஆசீர்வாதங்களைக் கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார். அவையாவன : 1. அவர்களை தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவார் 2. அவர்கள்மேல் புதிய நாமத்தை எழுதுவார்.

ஜெயங்கொள்கிறவர்களை, கர்த்தர் தம்முடைய தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவார். இந்தத் தூண் ஆலயத்திற்கு ஆதாரமாகயிருப்பதில்லை. இந்தத் தூண் ஆலயத்தை தாங்கி நிற்பதில்லை. தேவனுடைய கிருபைக்கு இந்தத் தூண் அடையாளமாகயிருக்கிறது. இது கர்த்தருடைய கிருபையின் நினைவுச்சின்னம். நினைவுச்சின்னத்தை கர்த்தருடைய ஆலயத்திலிருந்து யாரும் நீக்கிப்போடக்கூடாது. நினைவுச் சின்னத்தின் மேன்மையை யாரும் அவமானப்படுத்தக்கூடாது.

ஆதித்திருச்சபைக் காலத்திலே ரோமப்பேரரசார் இதுபோல பல தூண்களை நிறுத்துவது வழக்கம். யுத்தத்தில் வெற்றி பெற்ற படைத்தளபதிகளை கௌரவிக்கும் விதமாக ரோமப்பேரரசு அவர்களுக்கு வெற்றி தூண்களை நிறுத்திற்று. அந்தத் தூணை ஒருவரும் அகற்றிப்போடக்கூடாது. வெற்றிபெற்ற படைத்தளபதிகளுக்கு இது ஒரு நினைவுச்சின்னமாக நிறுவப்பட்டது. இதுபோலவே கர்த்தர், ஆவிக்குரிய ஜீவியத்திலே ஜெயங்கொள்கிறவர்களை, தம்முடைய தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவதாக வாக்குப்பண்ணுகிறார்.

அந்தத் தூணிலே கர்த்தர் விசேஷித்த வாக்கியங்களை எழுதுகிறார். தேவனுடைய நாமம், புதிய எருசலேமாகிய தேவனுடைய நகரத்தின் நாமம் ஆகியவற்றை கர்த்தர் ஜெயங்கொள்கிற வன்மேல் எழுதுவார். இந்தப் புதிய நாமங்களோடு, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவார். விசுவாசிகள் ஜெயங்கொண்டாலும், அந்த ஜெயம் கர்த்தராலேயே வந்தது. கர்த்தருடைய கிருபையும், உதவியும், ஒத்தாசையும் இல்லையென்றால் நமக்கு ஜெயமில்லை. கர்த்தர் நம்மோடு யுத்தம்பண்ணவில்லையென்றால் நாம் தோற்றுப்போவோம். இதை நமக்கு உணர்த்தும் வண்ணமாக, ஜெயங்கொள்கிற நம்மீது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய புதிய நாமத்தை எழுதுகிறார்.

இந்த நிருபம் பிலதெல்பியா சபையாருக்கு விசேஷமாக எழுதப்பட்டாலும், எல்லா சபையாருக்கும் பொதுவான சத்தியம் இதில் எழுதப்பட்டிருக்கிறது. ஆகையினால் ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று கர்த்தர் திருவுளம் பற்றுகிறார்.

லவோதிக்கேயா
வெளி 3:14

வெளி 3:14. லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் சொல்லுகிறதாவது;

ஆசியாவில் ஏழு சபைகள் இருக்கிறது. இந்த ஏழு சபைகளில் லவோதிக்கேயா சபை கடைசியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களுடைய நிலமை மிகவும் பரிதாபமாக இருக்கிறது. கர்த்தர் இவர்களை புகழ்ந்து பேசும்படியாக இவர்களிடத்தில் எந்த ஒரு நற்குணமும் இல்லை. அப்போஸ்தலர் கொலோசெயருக்கு எழுதின நிருபத்தை இந்தப் பட்டணத்தில் இருந்துதான் எழுதினார். பவுல் லவோதிக்கேயா பட்டணத்தில் கர்த்தருடைய சபையை ஸ்தாபிப்பதில் பவுல் முக்கிய பங்கு வகித்தார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு தம்மைப்பற்றி, "உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென்" என்று சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய நோக்கங்களிலும், வாக்குத்தத்தங்களிலும் மாறாதவர். உறுதியாகயிருக்கிறவர். ஆகையினால் அவர், "ஆமென்" என்று அழைக்கப்படுகிறார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியாயிருக்கிறார். தேவனைப்பற்றி இயேசுகிறிஸ்து மனுஷருக்கு வெளிப்படுத்துகிற சாட்சி உண்மையும் சத்தியமுமானது. கர்த்தருடைய சாட்சியை மனுஷர் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளவேண்டும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிறார். இயேசுவானவர் உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவருமாயிருக்கிறார். இவரே ஆதியும் அந்தமுமானவர். தேவனுடைய சர்வசிருஷ்டிக்கும் கிறிஸ்துவானவரே ஆதியாகயிருக்கிறவர்.

குளிருமல்ல அனலுமல்ல
வெளி 3 : 15,16

வெளி 3:15. உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும்.

வெளி 3:16. இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன்.

லவோதிக்கேயா சபையார் ஆவிக்குரிய ஜீவியத்தில் பின்வாங்கிப் போயிருக்கிறார்கள். அவர்கள் குளிருமில்லாமல் அனலுமில்லாமல் இருக்கிறார்கள். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் வெதுவெதுப்பாயிருப்பது மிகப்பெரிய ஆபத்து. இந்த உலகத்தில் விசுவாசிகளுக்கு வருகிற சோதனைகளிலெல்லாம் மிகப்பெரிய சோதனை, நாம் குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருப்பதுதான்.

கர்த்தருடைய உபதேசம் நமக்குத் தேவை என்று நாம் நினைத்தால், அதை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவின் வார்த்தை முக்கியமானது என்று நாம் நினைத்தால், நாம் அதற்குரிய முக்கியத்துவத்தைக் கொடுக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் உபதேசமே நமக்குப் பிரதானமாயிருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் உபதேசம் தங்களுக்குத் தேவையில்லையென்று தீர்மானம்பண்ணினால், அவர்கள் அவருடைய உபதேசத்தைக் கேட்காமல் விலகிப்போய்விடவேண்டும். இரண்டிற்கும் இடைப்பட்ட நிலை என்று எதுவுமில்லை.

ஒன்று நாம் பரிசுத்தமுள்ளவர் களாயிருக்க வேண்டும். இல்லையென்றால் நாம் பாவிகளாயிருப்போம். இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட நிலமையில் நாம் இருக்கக்கூடாது. ஒன்று நாம் கிறிஸ்துவைச் சேர்ந்தவர்களாயிருக்க வேண்டும். அல்லது நாம் சாத்தானைச் சேர்ந்தவர்களாகயிருப்போம். கிறிஸ்துவையும் சாத்தானையும் சேர்ந்தவர்களாக யாரும் இருக்கக்கூடாது. இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவராலும் முடியாது. கிறிஸ்துவையும் பற்றிக்கொண்டு, சாத்தானையும் பற்றிக்கொண்டால், நம்முடைய நிலமை பரிதாபமாகயிருக்கும். நம்மால் இரட்சிப்பின் சந்தோஷத்தையும் அனுபவிக்க முடியாது. உலகப்பிரகாரமான பாவசந்தோஷத்தையும் அனுபவிக்க முடியாது. இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட நிலமையில் பரிதாபமாயிருப்போம்.

லவோதிக்கேயா சபையாரின் கிரியைகளை கர்த்தர் அறிந்திருக்கிறார். அவர்கள் குளிருமல்ல அனலுமல்ல. கர்த்தர் அவர்களைப் பார்த்து பரிதபிக்கிறார். அவர்கள் குளிராயாவது, அனலாயாவது இருந்தால் நலமாயிருக்குமென்று சொல்லுகிறார். ஆனால் அவர்களோ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறார்கள். கர்த்தர் இப்படிப்பட்டவர்களை தண்டிக்கவேண்டுமென்று சித்தங்கொண்டிருக்கிறார். வெதுவெதுப்பாயிருக்கிறவர்களை கர்த்தர் அங்கீகாரம்பண்ணுவதில்லை. அவர்களை தம்முடைய வாயினின்று வாந்திபண்ணிப் போடுவதாக எச்சரித்துச் சொல்லுகிறார்.

வெதுவெதுப்பாயிருக்கிற தண்ணீர் நம்முடைய வயிற்றுக்கு ஒத்துவராது. இப்படிப்பட்ட தண்ணீரினால் வயிற்றில் ஏதாவது பிரச்சனை உண்டாகும். பிரச்சனை பெரிதாகும்போது வாந்திவரும். ஒரு சில உபதேசியார்கள் குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருப்பார்கள். கர்த்தர் இப்படிப்பட்டவர்களைச் சகித்துக்கொள்ளமாட்டார். இவர்களை நீக்கிப்போடுவார்.

சுயவஞ்சனை

வெளி 3:17

வெளி 3:17. நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால்;

லவோதிக்கேயா சபையார் தங்களைத் தாங்களே வஞ்சிக்கிறார்கள். கர்த்தர் இவர்களைப்பற்றி நினைப்பது ஒருவிதமாக இருக்கிறது. ஆனால் இவர்கள் தங்களைப்பற்றி எண்ணிக்கொள்வது வேறுவிதமாக இருக்கிறது. இரண்டு பேருடைய எண்ணத்திலும் வித்தியாசம் இருக்கிறது. கர்த்தருடைய சிந்தையே நமக்குள் இருக்கவேண்டும். லவோதிக்கேயா சபையார் சுயபெருமையுள்ளவர்கள். தங்களைத் தாங்களே பெருமையாக நினைத்து, தங்களை வஞ்சித்துக் கொள்கிறார்கள்.

ஒருவேளை இவர்கள் தங்கள் சரீரத்தைக் குறித்து பெருமைப்படலாம். ஆனால் இவர்களுடைய ஆவியோ அலங்கோலமாய், பரிதாபமாயிருக்கிறது. தங்கள் சரீரத்தின் தேவைகளை இவர்கள் நேர்த்தியாய்ச் சந்திக்கிறார்கள். ஆனால் இவர்கள் தங்களுடைய ஆத்துமாக்களின் தேவைகளை சரிவர கவனிப்பதில்லை. தங்கள் ஆத்துமாக்கள் நன்றாகக் கவனிக்கப்படுவதாகவும், அவை ஆரோக்கியனாகயிருப்பதாகவும் இவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் உண்மையில், இவர்களுடைய ஆத்துமாக்கள் கவனிப்பு இல்லாமல், வியாதிப்பட்டிருக்கிறது.

ஒரு சிலர் தாங்கள் பரலோகத்திற்குப் போகிறோம் என்று நினைப்பார்கள். ஆனால் அவர்களில் அநேகர் நரகத்திற்குள் பிரவேசிப்பார்கள். இவர்களிடத்தில் கிறிஸ்துவின் சிந்தை யில்லை. கிறிஸ்துவின் வார்த்தை இவர்களை வழிநடத்தவில்லை. தங்கள் சுயசிந்தனைகளின்படி இவர்கள் நடந்துகொள்கிறார்கள்.

இவர்கள் நிர்ப்பாக்கியமுள்ளவர் களாயிருக்கிறார்கள். தரித்திரராயிருக்கி றார்கள். இவர்களிடத்தில் பானம்பண்ணு வதற்கோ, புசிப்பதற்கோ, உடுத்துவதற்கோ ஒன்றுமில்லை. ஆனால் இவர்கள் தங்களை ஐசுவரியவான்கள் என்று சொல்லிக்கொள்கிறார்கள். இவர்களுடைய ஆத்துமா ஆவிக்குரிய போஜனமில்லாமல் பசியால் வாடுகிறது. இவர்கள் ஒருவேளை தங்கள் சரீரத்திற்குப் போஜனம்கொடுக்கலாம். ஆனால் தங்கள் ஆத்துமாவுக்குப் போஜனம்கொடுக்காமல் அதைப் பட்டினி போட்டுவிடுகிறார்கள்.

இவர்களிடத்தில் ஒன்றுமேயில்லை. ஆனால் இவர்களோ தங்களை திரவியசம்பன்னர் என்று பெருமையாகச் சொல்லிக்கொள்கிறார்கள். இவர்கள் மெய்யாகவே நிர்பாக்கியமுள்ளவர்களும், பரிதபிக்கப்படத்தக்கவர்களும், தரித்திரரு மாகயிருக்கிறார்கள். ஆனால் இவர்களோ தங்களுடைய உண்மை நிலைமையை அறியாமல், தங்களை ஐசுவரியவான்கள் என்றும், திரவியசம்பன்னர் என்றும், தங்களுக்கு ஒரு குறைவுமில்லை என்றும் சொல்லிக்கொள்கிறார்கள்.

இவர்கள் குருடராயிருக்கிறார்கள். தங்களுடைய உண்மையான நிலைமையை இவர்களால் காணமுடியவில்லை. தாங்கள் போகும் பாதையும் இவர்களுக்குத் தெரியாது. தங்களைத் தாங்களே இவர்களால் பார்க்கவும் முடியாது. ஆனாலும் தங்களால் பார்க்க முடியும் என்று இவர்கள் நினைக்கிறார்கள்.

இவர்களால் கிறிஸ்துவைப் பார்க்க முடியாது. தேவனைப் பார்க்க முடியாது. ஆனாலும் தங்களால் தேவனையும் கிறிஸ்துவையும் பார்க்க முடியுமென்று நினைக்கிறார்கள்.

இவர்கள் நிர்வாணிகளாயிருக்கிறார்கள். இவர்களிடத்தில் நீதியின் வஸ்திரமோ, பரிசுத்தத்தின் வஸ்திரமோ இல்லை. ஆனாலும் தங்களுடைய நிர்வாணத்தை இவர்களால் பார்க்க முடியவில்லை. தங்களைத் தாங்களே பார்க்க முடியாத குருடராயிருக்கிறார்கள். ஆனாலும் தங்களைப்பற்றிச் சொல்லும்போது, தங்களுக்கு ஒரு குறைவுமில்லை என்று சொல்லுகிறார்கள்.

ஆலோசனை சொல்லுகிறேன் வெளி 3:18

வெளி 3:18. நான் நீ ஐசுவரியவனாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக் கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்.

லவோதிக்கேயா சபையார் தங்களைத் தாங்களை வஞ்சித்துக்கொள்கிறார்கள். தங்களைப்பற்றி எப்படி எண்ண வேண்டுமோ அப்படி எண்ணாமல், தங்களுடைய உண்மை நிலைமைக்கு மிஞ்சி எண்ணுகிறார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இப்படிப்பட்ட பாவிகளுக்கு நல்ல ஆலோசனைகளைத் தருகிறார். இயேசுகிறிஸ்துவின் நல்ல ஆலோசனைகளை இவர்கள் புறக்கணித்து ஒதுக்கிவிட்டாலும், கர்த்தர் இவர்களுக்கு நல்ல ஆலோசனைகளைத் தொடர்ந்து கொடுத்துக்கொண்டேயிருக்கிறார்.

லவோதிக்கேயா சபையார் மெய்யாகவே தரித்திரராயிருக்கிறார்கள். கர்த்தரோ அவர்களை ஐசுவரியவான்களாக்க வேண்டுமென்று விரும்புகிறார். அவர்கள் கர்த்தரிடமிருந்து நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னை வாங்கிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் இவர்கள் ஐசுவரியவான்களாக முடியும். மெய்யான ஐசுவரியம் எது என்பதை இவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அந்த ஐசுவரியத்தை எப்படி பெற்றுக்கொள்வது, அதை எப்படி தங்களிடத்தில் பாதுகாப்பாக வைத்துக்கொள்வது என்பது இவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும்.

கர்த்தரிடமிருந்து வருகிற ஐசுவரியமே மெய்யான ஐசுவரியம். கர்த்தர் தரும் ஐசுவரியம் மாத்திரமே நிலைத்து நிற்கும். இவர்கள் கர்த்தரிடத்திலிருந்து நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னை கிரயத்திற்கு வாங்கவேண்டும். இது அவர்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்படமாட்டாது. கிரயம் செலுத்தி வாங்கவேண்டும். கர்த்தருடைய சித்தத்தைச் செய்வதும், நம்முடைய சிலுவையை சுமந்துகொண்டு அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதும் நாம் செலுத்த வேண்டிய கிரயம்.

நமக்கு எல்லாம் இருக்கிறது என்று நினைக்கக்கூடாது. நம்மிடத்தில் ஒன்றும் இல்லாதபோதும், நம்மிடத்தில் எல்லாம் பரிபூரணமாயிருக்கிறது என்று சொல்லி நம்மைநாமே வஞ்சித்துக்கொள்ளக்கூடாது. கர்த்தருடைய சமுகத்தில் பெருமையோடு வரக்கூடாது. நம்மை வெறுமைப்படுத்தி மனத்தாழ்மையோடு அவருடைய சமுகத்திற்கு வரவேண்டும். நாம் தரித்திரர் என்றும், நம்மிடத்தில் ஒன்றுமில்லையென்றும் கர்த்தரிடத்தில் பயபக்தியோடும், மனத்தாழ்மையோடும் அறிக்கை பண்ணவேண்டும். அப்போது கர்த்தர் நமக்கு மறைவான பொக்கிஷங்களைக் கொடுத்து நம்மை ஆசீர்வதிப்பார். தம்முடைய ஐசுவரியத்தினால் நம்மை நிரப்புவார்.

லவோதிக்கேயா சபையார் நிர்வாணிகளாயிருக்கிறார்கள். அவர்களுடைய நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றக்கூடாது என்று கர்த்தர் சித்தமுள்ளவராயிருக்கிறார். அவர்களுக்கு உடுத்திக்கொள்வதற்கு வஸ்திரங்கள் தேவை. அதை அவர்கள் கர்த்தரிடமிருந்து வாங்கிக்கொள்ளவேண்டும். தங்களுடைய பழைய கந்தலான வஸ்திரங்களையெல்லாம் தங்களைவிட்டு கழற்றிப்போட்டு விடவேண்டும். கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிற வெண்மையான வஸ்திரத்தைத் தரித்துக்கொள்ளவேண்டும். வெண்வஸ்திரம் பரிசுத்தமான வஸ்திரம்.

லவோதிக்கேயா சபையார் குருடராயிருக்கிறார்கள். அவர்கள் பார்வையடையவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். அவர்கள் பார்வையடையும்படிக்கு தங்கள் கண்களுக்கு கலிக்கம் போடவேண்டுமென்று கர்த்தர் ஆலோசனை சொல்லுகிறார். தங்களுடைய சுயஞானத்தையும், சுயஅறிவையும் அவர்கள் சார்ந்திருக்கக்கூடாது. கர்த்தருடைய வார்த்தையும், கர்த்தருடைய ஆவியானவரும் நம்மை ஆளுகை செய்யவேண்டும். அப்போதுதான் நம்முடைய கண்கள் திறக்கப்படும்.

வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் வெளி 3 : 19,20

வெளி 3:19. நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு.

வெளி 3:20. இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்.

நாம் பாவிகளாகயிருந்தாலும், கர்த்தர் நம்மீது கிருபையாயிருக்கிறார். நாம் மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவை நம்முடைய இரட்சகராகவும் ஆண்டவராகவும் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும் போது, கர்த்தர் நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைத் தருகிறார். கர்த்தர் நம்மை நேசிக்கிறார். ஆகையினால்தான் அவர் நம்மை கடிந்துகொண்டு சிட்சிக்கிறார். நம்முடைய ஆத்துமா அழிந்துபோகக்கூடாது என்று கர்த்தர் கரிசனையோடிருக்கிறார். கர்த்தர் நம்மைக் கடிந்துகொள்ளும்போது, நம்முடைய நன்மைக்காகவே அவர் நம்மைக் கடிந்துகொள்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

கர்த்தருடைய கடிந்துகொள்ளும் வார்த்தைகள் நம்முடைய ஆத்துமாவைக் குணப்படுத்துகிற ஔஷதமாயிருக்கிறது. சத்துரு புன்சிரிப்போடு வஞ்சக வார்த்தைகளைப் பேசுவதைவிட, நம்முடைய சிநேகிதர் கோபமுகத்தோடு நம்மைக் கடிந்துகொள்வது நமக்கு நல்லது. கர்த்தருடைய சிட்சிக்கும் வார்த்தைகளை நாம் அங்கீகரிக்கும்போது, நம்முடைய ஆத்துமாக்களுக்கு நன்மை உண்டாகும். ஆகையினால் கர்த்தருடைய கடிந்து கொள்ளும் வார்த்தையை நாம் ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும். மனந்திரும்பவேண்டும்.

கர்த்தர் நமக்கு அருகாமையில் வந்து நிற்கிறார். தம்முடைய வார்த்தையினாலும் ஆவியினாலும் கிறிஸ்துவானவர் பாவிகளுடைய இருதயத்தின் கதவுக்கு அருகாமையில் வந்திருக்கிறார். கர்த்தருக்கு விரோதமாக பாவிகளின் இருதயக்கதவு அடைக்கப்பட்டிருக்கிறது. கர்த்தரோ பாவிகளின் இருதயத்தில் பிரவேசிக்க விரும்புகிறார். மனுஷருடைய இயல்பான சுபாவம் கிறிஸ்துவுக்கு விரோதமாகத் திரும்பியிருக்கிறது. தமக்கு விரோதமாக கதவு அடைக்கப்பட்டிருப்பதை பார்த்தவுடன், கர்த்தர் அந்த இடத்தை விட்டு கோபத்தோடு திரும்பிப் போய்விடுவதில்லை. அவர் கிருபையுள்ளவர். நம்முடைய கதவை நாம் திறக்கவேண்டுமென்று அவர் பொறுமையோடு காத்துக்கொண்டிருக்கிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வாசற்படியில் நின்று நம்முடைய இருதயத்தின் கதவைத் தட்டுகிறார். நாம் அவருடைய சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், கர்த்தர் நமக்குள் பிரவேசிப்பார். அவர் நம்மோடேகூட போஜனம்பண்ணுவார். நாமும் அவரோடுகூட போஜனம் பண்ணுவோம். நம்முடைய இருதயத்தில் கர்த்தருக்கு இடங்கொடுக்கும்போது அவர் நம்மை சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் நிரப்பி ஆசீர்வதிப்பார். உன்னதமான ஆசீர்வாதங்களை நமக்குக் கொடுப்பார்.

என்னுடைய சிங்காசனம் வெளி 3 : 21,22

வெளி 3:21. நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்.

வெளி 3:22. ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது என்றார்.

கர்த்தர் நம்மை கடிந்துகொண்டு சிட்சிக்கும்போது, நாம் ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பவேண்டும். கர்த்தரைப்பற்றும் விசுவாசத்தில் நாம் உறுதியாய் நிலைத்திருக்கவேண்டும். கர்த்தருடைய ஆலோசனைகளுக்கும், சிட்சிக்கிற வார்த்தைகளுக்கும் நாம் கீழ்ப்படியும்போது நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் அதிகமாய்க் கிடைக்கும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் புதுப்பிக்கப்படும். நமக்குள் புதிய உற்சாகமும், தெம்பும், பெலனும் உண்டாகும். கர்த்தருடைய கிருபையினால் நாம் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுவோம். சத்துருவை ஜெயிப்போம்.

BELLWETHER INTERNATIONAL

வெளிப்படுத்தின விசேஷம் - விரிவுரை

REVELATION - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

ஜெயங்கொள்கிறவர்களுக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மிகப்பெரிய ஆசீர்வாதத்தை வாக்குப்பண்ணுகிறார். ஜெயங்கொள்கிறவர்கள், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய சிங்காசனத்தில் அவரோடுகூட உட்காருவார்கள். இயேசு கிறிஸ்து ஜெயங்கொண்டு தம்முடைய பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடுகூட உட்கார்ந்திருக்கிறார். அதுபோலவே ஜெயங்கொள்கிற விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவோடுகூட அவருடைய சிங்காசனத்தில் உட்காருவார்கள்.

இயேசுகிறிஸ்து இந்தப் பூமியிலிருந்த போது அவருக்கு அநேகப் பாடுகளும் சோதனைகளும் உண்டாயிற்று. கிறிஸ்துவானவர் அவையெல்லாவற்றிலும் வெற்றி சிறந்தார். கர்த்தர் நமக்கு தம்முடைய சாயலைக் கொடுத்திருக்கிறார். கிறிஸ்துவின் சாயலை உடையவர்களாகிய நாம், கிறிஸ்துவானவர் ஜெயங்கொண்டதுபோல, நாமும் ஜெயங்கொள்ளவேண்டும் சோதனைகளை மேற்கொள்ளவேண்டும். சத்துருவை ஜெயிக்கவேண்டும்.

சோதனைகளில் நாம் கிறிஸ்துவுக்கு ஒப்பாயிருக்கும்போது, அவருடைய மகிமையிலும் அவருக்கு ஒப்பாயிருப்போம். கிறிஸ்துவோடுகூட பாடுகளை அநுபவிக்கிறவர்கள் அவரோடுகூட மகிமையிலும் பங்குபெறுவார்கள். நம்முடைய சுயமுயற்சியினால் இயேசுகிறிஸ்துவினுடைய சிங்காசனத்தில் நம்மால் உட்கார முடியாது. தம்மோடுகூட தம்முடைய சிங்காசனத்தில் உட்காருவதற்கு கிறிஸ்துவானவரே நமக்கு அருள்செய்கிறார்.

மற்ற சபைகளுக்கு சொன்ன ஆலோசனைகளைப்போல, லவோதிக்கேயா சபைக்கு சொல்லப்பட்டிருக்கிற ஆவிக்குரிய ஆலோசனைகள் எல்லா சபைகளுக்கும் பொதுவானவை. ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று எழுது என்று மற்ற சபைகளுக்குச் சொன்னதுபோல லவோதிக்கேயா சபையினுடைய தூதனுக்கும் சொல்லுகிறார். இத்துடன் கிறிஸ்துவானவர் ஆசியாவிலுள்ள ஏழுசபைகளுக்கும் சொல்லுகிற செய்தி நிறைவுபெறுகிறது.

4 அதிகாரம்

அப்போஸ்தலர் யோவான் பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் காண்கிறார் (வெளி 4:1-7). பரலோகத்தில் பாடப்படும் துதிப்பாடல்களையும் யோவான் தன் செவிகளினால் கேட்கிறார் (வெளி 4:8-11).

திறக்கப்பட்டிருந்த ஒரு வாசல் வெளி 4:1

வெளி 4:1. இவைகளுக்குப்பின்பு, இதோ, பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன். முன்னே எக்காளசத்தம் போல என்னுடனே பேச நான் கேட்டிருந்த சத்தமானது: இங்கே ஏறிவா, இவைகளுக்குப்பின்பு சம்பவிக்கவேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன் என்று விளம்பினது.

அப்போஸ்தலர் யோவானுக்கு இந்த தரிசனத்தை காணும் சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. யோவான் தரிசனம் காண்பதற்கு முன்பாக, பரலோகத்திலே திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் காண்கிறார். வருங்காலத்தில் நமக்கு என்ன நடைபெறும் என்பது நமக்குத் தெரியாது. கர்த்தர் நமக்கு எதை வெளிப்படுத்துகிறாரோ அதை மாத்திரமே நம்மால் காணமுடியும். வருங்காலத்தில் நடைபெறப்போகிற சம்பவங்களெல்லாம் ஒரு திரைக்குள் மறைவாயிருக்கிறது. கர்த்தர் வாசலைத் திறந்தால் மாத்திரமே இனிமேல் நடைபெறப்போகிற சம்பவங்களை நம்மால் தரிசிக்கமுடியும்.

யோவானுக்கு பரலோகத்தில் தரிசனம் கிடைக்கிறது. ஒவ்வொரு காரியத்தையும் அவர் தெளிவாகப் பார்க்கவேண்டுமென்பதற்காக, கர்த்தர் தாமே பரலோகத்திலுள்ள வாசலை அவருக்குத் திறந்துகொடுக்கிறார். ஏற்கெனவே எக்காள சத்தம்போல தன்னுடனே பேசின சத்தத்தை யோவான் கேட்டிருக்கிறார். இப்போது அதே சத்தம் யோவானோடு மறுபடியும் பேசுகிறது. "இங்கே ஏறிவா, இவைகளுக்குப் பின்பு சம்பவிக்கவேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன்" என்று அந்தச் சத்தம் யோவானுக்கு விளம்பினது.

ஒரு சிங்காசனம் வெளி 4 : 2,3

வெளி 4:2. உடனே ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது, இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது, அந்தச் சிங்காசனத்தின்மேல் ஒருவர் வீற்றிருந்தார்.

வெளி 4:3. வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார்; அந்தச் சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில்லிருந்தது; அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று.

எக்காள சத்தம்போல தன்னுடனே பேசின சத்தத்தை கேட்டவுடனே யோவான் ஆவிக்குள்ளானார். வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். தீர்க்கதரிசனத்தின் ஆவி யோவானை நிரப்பிற்று. பரிசுத்த ஆவியானவர் யோவானை பூரணமாக ஆளுகை செய்கிறார். ஆவியானவரே அவரை வழிநடத்துகிறார். முதலாவதாக யோவான் பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் காண்கிறார். அதன்பின்பு, அவர் வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறார்.

இந்தச் சிங்காசனம் மகிமையின் சிங்காசனம். இது அதிகாரத்தின் சிங்காசனம். சர்வஆளுகையின் சிங்காசனம். நீதியாய்த் தீர்ப்பு செய்கிற நியாயாதிபதியின் சிங்காசனம். இந்த சிங்காசனம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. பூமியிலுள்ள எல்லா சிங்காசனங்களும் பரலோகத்திலுள்ள மகிமையான இந்த சிங்காசனத்தின் ஆளுகைக்குட்பட்டிருக்கிறது.

வானத்தில் வைக்கப்பட்டிருக்கிற சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருப்பதை யோவான் காண்கிறார். சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவர் மகிமை நிறைந்தவர். பரலோகத்தின் சிங்காசனத்தில் வீற்றிருப்பதற்கு இவரே பாத்திரர். இவர் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தவாகவும் இருக்கிறவர். இவரே சர்வவல்லமையுள்ள தேவன்.

சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவருடைய விவரம் இங்கு எழுதப்பட்டிருக்கிறது. மனுஷருடைய சாயலைச் சொல்லி மகத்துவமானவர் விளக்கப்படவில்லை. அவர் பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்திற்கும் ஒப்பாகயிருக்கிறார். மனுஷருடைய சுபாவம் எதுவும் அவரிடத்தில் காணப்படவில்லை. தேவன் ஆவியாயிருக்கிறார். இங்கு தேவனுடைய பிரகாசமே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

பரலோகத்திலுள்ள தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில் இருக்கிறது. அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று. தேவன் நோவாவோடு உடன்படிக்கை பண்ணியபோது, தம்முடைய உடன்படிக்கையை உறுதிபண்ணும்விதமாக, வானவில்லினால் அதை முத்திரையிட்டார். அது பூமியில் காணப்பட்ட வானவில். இந்த வானவில்லோ பரலோகத்தில், தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றிலும் காணப்படுகிற வானவில் இது பார்வைக்கு மரகதம்போல் தோன்றுகிறது. மரகதம் பசுமை நிரம்பியது. பார்வைக்குக் குளிர்ச்சியாக இருக்கும். விருட்சங்களில் புதிய இலைகள் துளிர்க்கும்போது அது பார்ப்பதற்கு பசுமையாகயிருக்கும். இது இயற்கைப் புத்துணர்ச்சி பெற்றிருக்கும். அதுபோலவே தேவனுடைய புதிய உடன்பாடு நம்முடைய ஆத்துமாவைப் புதுப்பிக்கிறது. நமக்குப் புதிய ஜீவனைத் தருகிறது.

இருபத்து நான்கு சிங்காசனங்கள்
வெளி 4 : 4,5

வெளி 4:4. அந்தச் சிங்காசனத்தைச் சூழ இருபத்துநான்கு சிங்காசனங்களிருந்தன; இருபத்து நான்கு மூப்பர்கள் வெண்வஸ்திரந்தரித்து, தங்கள் சிரசுகளில் பொன் முடி சூடி, அந்தச் சிங்காசனங்களின் மேல் உட்கார்ந்திருக்கக்கண்டேன்.

வெளி 4:5. அந்தச் சிங்காசனத்திலிருந்து மின்னல்களும் இடிமுழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன; தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்துகொண்டிருந்தன.

தேவனுடைய மகிமையான சிங்காசனத்தைச் சூழ இருபத்து நான்கு சிங்காசனங்கள் இருக்கின்றன. இந்த சிங்காசனங்களின்மேல் இருபத்து நான்கு மூப்பர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். இவர்கள் வெண்வஸ்திரம் தரித்திருக்கிறார்கள். தங்கள் சிரசுகளில் பொன்முடி சூடியிருக்கிறார்கள். கர்த்தர் இவர்களைக் கனப்படுத்தியிருக்கிறார். இவர்களுக்கு ஆளுகையையும் அதிகாரத்தையும் கொடுத்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தில் மகிமையுள்ளவராய் உட்கார்ந்திருக்கிறார். அவருடைய மகிமையின் பிரகாசம் இருபத்து நான்கு மூப்பர்கள்மீதும் பிரதிபலிக்கிறது.

கர்த்தருடைய சிங்காசனத்திலிருந்து மின்னல்களும், இடிமுழக்கங்களும், சத்தங்களும் புறப்படுகின்றன. சீனாய் மலையிலே தேவன் பத்து கற்பனைகளைக் கொடுக்கும்போது அங்கும் மின்னல்களும், இடிமுழக்கங்களும், சத்தங்களும் உண்டாயிற்று. அதுபோலவே பரலோகத்திலும் தேவனுடைய சிங்காசனத்திலிருந்து சத்தங்கள் புறப்படுகின்றன. பழைய ஏற்பாட்டுக்காலத்து நியாயப்பிரமாணத்தை விட, புதிய ஏற்பாட்டுக்காலத்து சுவிசேஷம் எந்த விதத்திலும் மகிமை குறைந்ததல்ல. சுவிசேஷம் அதிகாரத்திலும் குறைந்ததல்ல.

தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக, தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் எரிந்துகொண்டிருக்கின்றன. தேவஆவியானவரின் வெவ்வேறு விதமான வரங்களையும், கிருபைகளையும், ஊழியங்களையும் இந்த ஏழு அக்கினி தீபங்களும் பிரத்தியட்சமாய் வெளிப்படுத்திக் காண்பிக்கின்றன.

நான்கு ஜீவன்கள்
வெளி 4 : 6,7

வெளி 4:6. அந்தச் சிங்காசனத்திற்கு முன்பாகப் பளிங்குக்கொப்பான கண்ணாடிக்கடலிருந்தது; அந்தச் சிங்காசனத்தின் மத்தியிலும் அந்தச் சிங்காசனத்தைச் சுற்றிலும் நான்கு ஜீவன்களிருந்தன, அவைகள் முன்புறத்திலும் பின்புறத்திலும் கண்களால் நிறைந்திருந்தன.

வெளி 4:7. முதலாம் ஜீவன் சிங்கத்திற்கொப்பாகவும், இரண்டாம் ஜீவன் காளைக்கொப்பாகவும், மூன்றாம் ஜீவன் மனுஷமுகம் போன்ற முகமுள்ளதாகவும், நான்காம் ஜீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவுமிருந்தன.

கர்த்தருடைய சிங்காசனத்திற்கு முன்பாக பளிங்குக்கொப்பான கண்ணாடிக் கடல் இருக்கிறது. கழுவப்பட்டவர்கள் மாத்திரமே தேவனுடைய மகிமையுள்ள பிரசன்னத்திற்கு முன்பாக பிரவேசிக்க அனுமதிக்கப்படுவார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டிருக்க வேண்டும். கிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய பாவக்கறைகளைக் கழுவி நம்மை சுத்திகரித்திருக்க வேண்டும். நம்முடைய சரீரம் ஜலத்தினாலும் சுத்திகரிக்கப்பட்டிருக்க வேண்டும். சுத்திகரிக்கப்பட்டவர்கள் மாத்திரமே தேவனுடைய பிரசன்னத்திற்கு முன்பாக பிரவேசிக்க முடியும்.

தேவனுடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் மத்தியிலும், அந்த சிங்காசனத்தைச் சுற்றிலும் நான்கு ஜீவன்கள் இருக்கின்றன. இவை ஜீவனுள்ள சிருஷ்டிகள். இந்த சிருஷ்டிகள் தேவனுடைய சிங்காசனத்திற்கு நடுவிலும், இருபத்து நான்கு மூப்பர்களுடைய சிங்காசனத்திற்கு நடுவிலும் இருக்கின்றன. தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக இந்த நான்கு ஜீவன்களும் நின்றுகொண்டிருக்கின்றன.

இருபத்து நான்கு மூப்பர்களும் சிங்காசனங்களின்மேல் உட்கார்ந்து ஊழியம் செய்கிறார்கள். இந்த நான்கு ஜீவன்களும் நின்றுகொண்டு ஊழியம் செய்கின்றன. இந்த நான்கு ஜீவன்களுக்கும் ஓய்வு இல்லை. இரவும் பகலும், கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருக்கின்றன. இந்த நான்கு ஜீவன்களும், முன்புறத்திலும் பின்புறத்திலும் கண்களால் நிறைந்திருக்கின்றன.

ஒவ்வொரு ஜீவனுடைய உருவமும் எதற்கு ஒப்பாயிருக்கிறது என்பதையும் யோவான் தரிசிக்கிறார். முதலாம் ஜீவன் சிங்கத்திற்கொப்பாயிருக்கிறது. இரண்டாம் ஜீவன் காளைக்கொப்பாயிருக்கிறது. மூன்றாம் ஜீவன் மனுஷமுகம்போன்ற முகமுள்ளதாயிருக்கிறது. நான்காம் ஜீவன் பறக்கிற கழுகுக்கொப்பாயிருக்கிறது.

கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்

வெளி 4 : 8,9

வெளி 4:8. அந்த நான்கு ஜீவன்களிலும் ஒவ்வொன்று அவ்வாறு சிறகுகளுள்ளவைகளும், சுற்றிலும் உள்ளேயும் கண்களால் நிறைந்தவைகளுமாயிருந்தன. அவைகள்: இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன.

வெளி 4:9. மேலும், சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவருக்கு அந்த ஜீவன்கள், மகிமையையும் கனத்தையும் ஸ்தோத்திரத்தையும் செலுத்தும்போது,

அப்போஸ்தலர் யோவான் நான்கு ஜீவன்களையும் தெளிவாகத் தரிசிக்கிறார். அந்த நான்கு ஜீவன்களிலும் ஒவ்வொன்று அவ்வாறு சிறகுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளுக்கு சுற்றிலும் உள்ளேயும் கண்கள் நிறைந்திருக்கிறது. யோவான் நான்கு ஜீவன்களை தரிசித்தபின்பு, அவை கர்த்தரைத் துதித்துப் பாடுவதை தன் செவிகளால் கேட்கிறார். இந்தத் தரிசனம் ஏசாயாவின் தீர்க்கதரிசனத்திற்கொப்பாயிருக்கிறது.

"உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில், ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக் கண்டேன்; அவருடைய வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது. சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள்; அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைகளிருந்தன; அவனவன் இரண்டு செட்டைகளால் தன் தன் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தன் தன் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து; ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள். கூப்பிடுகிறவர்களின் சத்தத்தால் வாசல்களின் நிலைகள் அசைந்து, ஆலயம் புகையினால் நிறைந்தது. அப்பொழுது நான்: ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே என்றேன்" (ஏசா 6:1-5).

மொத்தம் நான்கு ஜீவன்கள் இருக்கின்றன. இந்த நான்கு ஜீவன்களும் ஒரே தேவனையே துதிக்கின்றன. அவர் சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர். நான்கு ஜீவன்களும் கர்த்தரைத் துதிக்கும்போது, "இருந்தவரும், இருக்கிறவரும், வருகிறவருமாகிய சர்வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்" என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக் கொண்டிருக்கின்றன. திரித்துவ தேவனை நான்கு ஜீவன்களும் துதிக்கின்றன. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூன்றுபேரையும், இந்த நான்கு ஜீவன்களும் இடைவிடாமல் துதித்துக் கொண்டிருக்கின்றன.

சிங்காசனத்தில் வீற்றிருக்கிற தேவன் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவர். அவர் சர்வவல்லமையுள்ளவர். நித்திய ஜீவனுள்ளவர். அவர் ஒருவரே சாவாமையுள்ளவர். சர்வவல்லமையுள்ள தேவனுக்கு, நான்கு ஜீவன்களும் மகிமையையும், கனத்தையும், ஸ்தோத்திரத்தையும் செலுத்தி, இரவும் பகலும் ஓய்வில்லாமல் துதிக்கின்றன.

இருபத்து நான்கு மூப்பர்கள் வெளி 4 : 10,11

வெளி 4:10. இருபத்துநான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுது கொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்குமுன்பாக வைத்து:

வெளி 4:11. கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக் கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்.

சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற சர்வவல்லமையுள்ள தேவனை நான்கு ஜீவன்களும் இரவும் பகலும் ஓய்வில்லாமல் துதிப்பதை யோவான் தன் செவிகளால் கேட்கிறார். அப்போது தேவனுடைய சிங்காசனத்தைச் சூழ இருக்கிற, இருபத்துநான்கு சிங்காசனங்களின்மேல் உட்கார்ந்திருக்கிற, இருபத்து நான்கு மூப்பர்களும், சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுகிறார்கள்.

மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிற தேவன் வீற்றிருக்கிறார். இருபத்து நான்கு மூப்பர்களும் அவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, அவரைத் தொழுதுகொள்கிறார்கள்.

இருபத்து நான்கு மூப்பர்களும் தங்கள் சிரசுகளில் பொன்முடி சூடியிருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, அவரைத் தொழுதுகொள்ளும் போது, தங்கள் கிரீடங்களை கழற்றி, கர்த்தருடைய சிங்காசனத்திற்கு முன்பாக வைக்கிறார்கள். பரிசுத்தமுள்ள தேவனைக் கனப்படுத்துகிறார்கள். அவரை நன்றியோடு துதிக்கிறார்கள். இந்தப் பூமியிலே சர்வவல்லமையுள்ள தேவன் மனுஷருடைய ஆத்துமாக்களை இரட்சிப்பினால் முடிசூட்டுகிறார். பரலோகத்திலே, தம்முடைய பரிசுத்தவான்களுக்கு, மகிமையின் கிரீடத்தைச் சூட்டுகிறார். இருபத்து நான்கு மூப்பர்களுக்கும் கர்த்தருடைய கிருபையினால்தான் கிரீடம் கிடைத்திருக்கிறது. மகிமையுள்ள கர்த்தரால் இவர்கள் மகிமையடைந்திருக்கிறாகள்.

இருபத்து நான்கு மூப்பர்களும் தங்களுடைய சிங்காசனங்களில் உட்கார்ந்திருந்தாலும், அவர்கள் கர்த்தருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து அவரைத் தொழுதுகொள்கிறார்கள். சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவரே சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிற தேவன். அவர் மாத்திரமே தேவன். அவர் ஒருவரே தேவன். பூமியிலுள்ள சபையாரும், பரலோகத்திலுள்ள பரிசுத்தவான்களும் ஒன்றான மெய்த்தேவனாகிய கர்த்தரை மாத்திரமே தொழுதுகொள்கிறார்கள். அவரே நம்முடைய துதிக்குப் பாத்திரர்.

இருபத்து நான்கு மூப்பர்களும் கர்த்தரைத் துதிக்கும்போது, "கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்கிறதற்கு பாத்திரராயிருக்கிறீர்" என்று சொல்லி அவரைத் துதிக்கிறார்கள். கர்த்தரே சகலத்தையும் சிருஷ்டித்தவர். சர்வ சிருஷ்டிகர் மாத்திரமே நம்முடைய துதிகளுக்குப் பாத்திரராயிருக்கிறார். சர்வசிருஷ்டிகரும் தங்களை சிருஷ்டித்த சிருஷ்டிகரை மாத்திரமே தொழுதுகொள்ள வேண்டும். சிருஷ்டிகரைத் தொழுதுகொள்ளாமல், சிருஷ்டியைத் தொழுதுகொள்வது பாவம்.

சர்வவல்லமையுள்ள தேவனே சகலத்தையும் பாதுகாக்கிறவர். எல்லாவற்றையும் அவரே பராமரிக்கிறவர். சர்வசிருஷ்டிகளும் தேவனுடைய தெய்வீக சித்தத்தையும் வல்லமையையும் சார்ந்திருக்கிறது. தேவனைச் சார்ந்திருக்கிற சிருஷ்டிகள் தங்களை தேவனுக்கு மேலாக உயர்த்தக்கூடாது. தேவனுடைய சித்தத்தினாலேயே சகலமும் உண்டாக்கப்பட்டிருக்கிறது. அவருடைய தெய்வீக வல்லமையினாலேயே சகலமும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. தேவன் தம்முடைய சந்தோஷத்திற்காக சகலத்தையும் சிருஷ்டித்திருக்கிறார். சகலவற்றையும் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக சிருஷ்டித்திருக்கிறார். எல்லா சிருஷ்டிகளுக்கும் கர்த்தரே காரண கர்த்தா. கர்த்தருடைய சித்தமில்லாமல் ஒன்றும் சிருஷ்டிக்கப்படவில்லை. சர்வசிருஷ்டிகராகிய கர்த்தரே சர்வவல்லமையுள்ள தேவனாகயிருக்கிறார். அவரே மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்கிறதற்குப் பாத்திரராயிருக்கிறார்.

5 அதிகாரம்

சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற தேவனுடைய வலதுகரத்தில் ஒரு புஸ்தகம் இருக்கிறது. இந்தப் புஸ்தகம் ஏழுமுத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருக்கிறது (வெளி 5:1-9). ஆட்டுக்குட்டியானவராகிய இயேசுகிறிஸ்து தேவனுடைய வலது கரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்குகிறார். புஸ்தகத்தை வாங்கவும் அதன் முத்திரைகளை உடைக்கவும் ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கிறார் (வெளி 5:9-14).

ஒரு புஸ்தகம்
வெளி 5:1

வெளி 5:1. அன்றியும், உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தைச் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய வலதுகரத்திலே கண்டேன்.

அப்போஸ்தலர் யோவான் இதுவரையிலும் தேவனுடைய மகிமையை தரிசித்தார். இப்போது அவருடைய மகிமையான ஆளுகையை தரிசிக்கிற சிலாக்கியம் யோவானுக்குக் கிடைத்திருக்கிறது. தேவன் தம்முடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறார். அவருடைய வலதுகரத்திலே ஒரு புஸ்தகம் இருக்கிறது. இந்தப் புஸ்தகம் ஏழுமுத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புஸ்கத்தில் உள்ளும் புறம்பும் எழுதப்பட்டிருக்கிறது.

தேவன் சர்வவல்லமையுள்ளவர். அவர் தம்முடைய வலதுகரத்தில் இந்தப் புஸ்தகத்தை வைத்திருக்கிறார். இந்தப் புஸ்தகத்தின்மீது தேவனுக்கு சர்வ அதிகாரமுள்ளது. இதில் என்ன எழுதியிருக்கிறது என்பது தேவனுக்கு மாத்திரமே தெரியும். இந்தப் புஸ்தகத்தை தேவன் அனுமதித்தால் மாத்திரமே திறக்க முடியும். திறக்கப்பட்டால் தான், அதில் எழுதப்பட்டிருப்பதை மற்றவர்களால் பார்க்கமுடியும்.

இந்தப் புஸ்தகம் ஏழுமுத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகத்தில் ஏழுபகுதிகள் உள்ளன. ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு விசேஷித்த முத்திரையினால் முத்திரையிடப்பட்டிருக்கிறது. ஏழு முத்திரைகளையும் ஒரே நேரத்தில் திறந்து, புஸ்தகத்தின் ஏழுபகுதிகளையும் மொத்தமாகப் பார்ப்பதற்கு வாய்ப்பில்லை. ஒவ்வொரு முத்திரையாகத் திறக்கவேண்டும். தேவனுடைய பாராமரிப்பு ஒவ்வொன்றாக வரும். தேவனுடைய ஆசீர்வாதமும் ஒன்றன்பின் ஒன்றாகவே வரும். தேவனைப்பற்றிய வெளிப்பாடுகளும் நமக்கு ஒவ்வொன்றாகவே கொடுக்கப்படுகிறது.

பலமுள்ள ஒரு தூதன்
வெளி 5 : 2,3

வெளி 5:2. புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யார் என்று மிகுந்த சத்தமிட்டுக் கூறுகிற பலமுள்ள ஒரு தூதனையுங் கண்டேன்.

வெளி 5:3. வானத்திலாவது, பூமியிலாவது, பூமியின் கீழாவது, ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறக்கவும், அதைப் பார்க்கவும் கூடாதிருந்தது.

அப்போஸ்தலர் யோவான் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருடைய வலதுகரத்திலே ஒரு புஸ்தகத்தைக் காண்கிறார். அப்போது பலமுள்ள ஒரு தூதன் மிகுந்த சத்தமிட்டு சொல்லுகிற சத்தத்தையும் கேட்கிறார். அந்தத் தூதனையும் பார்க்கிறார். அந்தத் தூதன் "புஸ்தகத்தைத் திறக்கவும், அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யார்" என்று மிகுந்த சத்தமிட்டுக் கூறுகிறான். இவன் சாதாரண தூதனல்ல. மிகவும் பலமுள்ளவன். சர்வசிருஷ்டிகளுடைய பெலத்தையும், அவர்களுடைய ஞானத்தையும் சோதித்துப் பார்க்கக்கூடியவன். தேவனுடைய ஆலோசனைகளை திறக்க வேண்டுமென்றால், அதைத் திறக்கிறவருக்கு பலமும் ஞானமும் இருக்கவேண்டும்.

புஸ்தகத்தின் முத்திரையை எளிதாகத் திறக்க முடியாது. புஸ்தகத்தைத் திறக்கவும் அதைப் பார்க்கவும் வானத்திலாவது, பூமியின் கீழாவது ஒருவராலும் முடியவில்லை. விழுந்துபோன தூதர்களெல்லாம் பூமியின் கீழே பாதாளத்திலிருக்கிறார்கள். அவர்களுடைய எஜமானாகிய சாத்தானும் அவர்களோடுகூட பாதாளத்தில்தான் இருக்கிறான். அவர்களாலும் இந்தப் புஸ்தகத்தை திறக்க முடியவில்லை. சாத்தான் மாத்திரமல்ல, வேறு எந்த சிருஷ்டியாலும் அந்தப் புஸ்தகத்தை திறக்க முடியவில்லை. அதில் எழுதப்பட்டிருப்பதைப் பார்த்து வாசிக்கவும் முடியவில்லை. தேவனுடைய வலது கரத்திலுள்ள புஸ்தகத்தை, அவரால் மாத்திரமே திறக்க முடியும்.

யூதா கோத்திரத்து சிங்கம்
வெளி 5 : 4,5

வெளி 5:4. ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறந்து வாசிக்கவும் அதைப் பார்க்கவும் பாத்திரவானாகக் காணப்படாததினால் நான் மிகவும் அழுதேன்

வெளி 5:5. அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: நீ அழவேண்டாம்; இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான்.

அப்போஸ்தலர் யோவான் பலமுள்ள அந்தத் தூதனைக் காண்கிறார். அந்தத் தூதன் சத்தமிட்டு சொல்லுவதையும் கேட்கிறார். அவருடைய வார்த்தையைக் கேட்டு ஒருவராலும் அந்தப் புஸ்தகத்தைத் திறக்கவும், பார்க்கவும் கூடாதிருக்கிறது. அந்தப் புஸ்கத்தைத் திறந்து வாசிக்கவும், அதைப் பார்க்கவும் பாத்திரவானாக ஒருவரும் காணப்படவில்லை. இதனால் யோவான் மிகவும் அழுகிறார். அவருக்குள் மிகுந்த ஏமாற்றமுண்டாயிற்று.

சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற சர்வவல்லமையுள்ள தேவனை யோவான் தரிசிக்கிறார். அவருடைய வலதுகரத்தில் இந்தப் புஸ்தகம் இருக்கிறது. தேவனுடைய சிந்தையும் சித்தமும் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. தேவனுடைய சித்தத்தை எப்படியாவது தெரிந்து கொள்ளவேண்டுமென்று யோவான் விரும்புகிறார். தேவனுடைய மகிமையைக் காண்கிறவர்கள் அவருடைய சித்தத்தைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்று விரும்புவார்கள்.

தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றிலும் இருபத்துநான்கு சிங்காசனங்கள் உள்ளன. அவற்றின்மேல் இருபத்து நான்கு மூப்பர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். அந்த மூப்பர்களில் ஒருவர் யோவானுக்கு ஆதரவாகப் பேசுகிறார். யோவானைத் தேற்றுகிறார். அவரை உற்சாகப்படுத்துகிறார். யோவான் மிகவும் அழுதுகொண்டிருக்கிறார். மூப்பர்களில் ஒருவர் யோவானை நோக்கி, "நீ அழவேண்டாம்" என்று ஆறுதலாகச் சொல்லுகிறார். மேலும், "இதோ, யூதா கோத்திரத்து சிங்கமும், தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும், அதின் ஏழுமுத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார்" என்று சொல்லுகிறார்.

இயேசுகிறிஸ்து தம்முடைய மாம்சசுபாவத்தில் யூதாகோத்திரத்து சிங்கமாகயிருக்கிறார். அவர் தம்முடைய தெய்வீக சுபாவத்தில் தாவீதின் வேராகயிருக்கிறார். தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவே கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மத்தியஸ்த ஊழியம் செய்கிறார். தேவனுடைய ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு, அவற்றை மனுஷருக்கு வெளிப்படுத்த கிறிஸ்துவானவரே பாத்திரராகயிருக்கிறவர். கிறிஸ்துவானவரால் மாத்திரமே தேவனுடைய வலதுகரத்திலுள்ள புஸ்தகத்தைப் பெற்றுக்கொள்ளவும், அதிலுள்ள முத்திரைகளை உடைத்து, அந்தப் புஸ்தகத்தை திறக்கவும் முடியும்.

ஆட்டுக்குட்டியானவர்
வெளி 5 : 6,7

வெளி 5:6. அப்பொழுது, இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக்கண்டேன்; அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது; அந்தக் கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம்.

வெளி 5:7. அந்த ஆட்டுக்குட்டியானவர் வந்து, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடையவலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஆட்டுக் குட்டியானவராகயிருக்கிறார். அவரே அங்கு வந்து, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்குகிறார். குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனோடு அதே சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறார். பிதாவின் வலதுபாரிசத்தில் அமருகிற சிலாக்கியத்தையும் மகிமையையும் குமாரனாகிய இயேசுகிறிஸ்து பெற்றிருக்கிறார். கிறிஸ்துவானவர் தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராயிருக்கிறவர். சர்வ சிருஷ்டிகளைவிட கிறிஸ்துவானவரே பிதாவாகிய தேவனுக்கு மிகவும் சமீபமாயிருக்கிறவர்.

இருபத்து நான்கு மூப்பர்களில் ஒருவர் இயேசுகிறிஸ்துவைப்பற்றி சொல்லும்போது, அவர் யூதா கோத்திரத்து சிங்கம் என்று சொன்னார். ஆனால் கிறிஸ்துவானவரோ இங்கே அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டியாக நிற்கிறார். கிறிஸ்துவானவர் சாத்தானை ஜெயிப்பதற்கு ஒரு சிங்கமாகயிருக்கிறார். அதே வேளையில் இயேசுகிறிஸ்து தேவனுடைய நீதியை நிறைவேற்றுவதற்கு ஒரு ஆட்டுக்குட்டியாகவே இருக்கிறார்.

அந்த ஆட்டுக்குட்டி ஏழுகொம்புகளையும், ஏழுகண்களையும் உடையதாயிருக்கிறது. தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு ஆட்டுக்குட்டியானவரிடம் பரிபூரணமான வல்லமையுள்ளது. தேவனுடைய மனதைப் புரிந்துகொள்வதற்கு ஆட்டுக்குட்டியானவரிடம் பரிபூரணமான ஞானமுள்ளது. ஆட்டுக்குட்டியானவரிடம் இருக்கிற கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழுஆவிகளாகும். கிறிஸ்துவானவர் தேவனுடைய ஏழுஆவிகளையும் உடையவராயிருக்கிறார். கிறிஸ்துவானவர் மீது பரிசுத்த ஆவியானவர் அளவில்லாமல் ஊற்றப்பட்டிருக்கிறார்.

தேவனுடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கவும், அதைத் திறக்கவும், அதின் ஏழுமுத்திரைகளை உடைக்கவும் இயேசுகிறிஸ்து ஜெயங் கொண்டிருக்கிறார். கிறிஸ்துவானவர் பலவந்தம் செய்தோ, அல்லது ஏமாற்று வேலைசெய்தோ, தேவனுடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கவில்லை. கிறிஸ்து ஜெயங்கொண்டிருக்கிறவர். அந்தப் புஸ்தகத்தை வாங்குவதற்குப் பாத்திரராயிருக்கிறவர். இயேசுகிறிஸ்து தேவனுடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்குகிறார். உடனே சர்வசிருஷ்டிகளும் கர்த்தரைத் துதித்துப் புதிய பாட்டைப் பாடுகிறார்கள்.

புதிய பாட்டைப் பாடினார்கள் வெளி 5 : 8-10

வெளி 5:8. அந்தப் புஸ்தகத்தை அவர் வாங்கினபோது, அந்த நான்கு ஜீவன்களும், இருபத்துநான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக் கொண்டு, ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து:

வெளி 5:9. தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு,

வெளி 5:10. எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்.

இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனுடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினவுடனே, நான்கு ஜீவன்களும், இருபத்து நான்கு மூப்பர்களும் கர்த்தரைத் துதித்து புதிய பாட்டைப் பாடுகிறார்கள். அவர்கள் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, அவரைப் பணிந்துகொண்டு துதிக்கிறார்கள்.

ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். சுரமண்டலங்கள் துதிக்கும் இசைக்கருவிகளாகும். பொற்கலசங்களோ தூபவர்க்கத்தால் நிறைந்திருக்கிறது. பரிசுத்தவான்களுடைய ஜெபங்கள் அதில் நிரம்பியிருக்கிறது.

நான்கு ஜீவன்களும், இருபத்து நான்கு மூப்பர்களும், ஆட்டுக்குட்டியானவரை துதித்துப் பாடும்போது, "தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும், அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறார்" என்று சொல்லி போற்றிப் புகழுகிறார்கள்.

புஸ்தகத்தை வாங்குவதற்கு கிறிஸ்துவானவர் எப்படி பாத்திரராயிருக்கிறார் என்பதையும் அவர்கள் சொல்லி அவரைத் துதிக்கிறார்கள். கிறிஸ்துவானவர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து இவர்களை தேவனுக்கென்று தம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டார். இருபத்து நான்கு மூப்பர்களும், நான்கு ஜீவன்களும் கிறிஸ்துவின் பாடுகளைக் குறித்து சொல்லுகிறார்கள். கிறிஸ்துவானவர் தம்முடைய பாடுகளினிமித்தமாகவே, புஸ்தகத்தை வாங்கவும், அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறார்.

இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தத்தினாலே இவர்கள் மீட்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவானவர் இவர்களை தேவனுக்கு முன்பாக ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கியிருக்கிறார். கிறிஸ்துவினிமித்தமாய் இவர்கள் பூமியிலே அரசாளுவார்கள். இயேசுகிறிஸ்துவின் பாடுகளினிமித்தமாய் மனுஷருக்கு மீட்பு உண்டாயிருக்கிறது. மீட்கப்பட்டவர்கள் தேவனுக்கு முன்பாக ராஜாக்களாகவும் ஆசாரியர்களாவும் உயர்த்தப்பட்டிருக்கிறார்கள். இதற்காக நான்கு ஜீவன்களும், இருபத்து நான்கு மூப்பர்களும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, அவருக்குப் புதிய பாட்டைப்பாடி, அவரை நன்றியோடு துதிக்கிறார்கள்.

அநேக தூதர்கள்
வெளி 5 : 11,12

வெளி 5:11. பின்னும் நான் பார்த்தபோது, சிங்காசனத்தையும் ஜீவன்களையும் மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன்; அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரமாயிரமாகவுமிருந்தது.

வெளி 5:12. அவர்களும் மகா சத்தமிட்டு: அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள்.

நான்கு ஜீவன்களும் இருபத்து நான்கு மூப்பர்களும் ஆட்டுக்குட்டியானவருக்கு புதுப் பாட்டைப் பாடுகிறார்கள். அப்போது அநேகம் தூதர்களும் அவர்களோடு சேர்ந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் துதித்துப் பாடுகிறார்கள். இந்தத் தூதர்கள் தேவனுடைய சிங்காசனத்தையும், நான்கு ஜீவன்களையும், இருபத்து நான்கு மூப்பர்களையும் சூழ்ந்திருக்கிறார்கள். இவர்களுடைய எண்ணிக்கை அநேகம் என்று பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களுடைய இலக்கம் பதினாயிரமாகவும், ஆயிரமாயிரமாகவும் இருக்கிறது. எண்ணமுடியாத அளவுக்கு தூதர்களுடைய எண்ணிக்கை அதிகமாயிருக்கிறது.

தூதர்களை இரட்சிப்பதற்கு இரட்சகர் தேவையில்லை. ஆனாலும் பாவிகளுடைய இரட்சிப்பிலும், அவர்களுடைய மீட்பிலும் தூதர்கள் மிகுந்த சந்தோஷமடைகிறார்கள். சபையார் கிறிஸ்துவைத் துதிப்பதுபோல தூதர்களும் துதிக்கிறார்கள். மகா சத்தமிட்டு துதிக்கிறார்கள். "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்" என்று சொல்லி தூதர்கள் மகா சத்தமிட்டு துதித்துப் பாடுகிறார்கள்.

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

சிருஷ்கள் யாவும்
வெளி 5 : 13,14

வெளி 5:13. அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும்: சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக் குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன்.

வெளி 5:14. அதற்கு நான்கு ஜீவன்களும்: ஆமென் என்று சொல்லின. இருபத்துநான்கு மூப்பர்களும் வணக்கமாய் விழுந்து சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டார்கள்.

ஆட்டுக் குட்டியானவராகிய இயேசுகிறிஸ்துவை நான்கு ஜீவன்களும், இருபத்து நான்கு மூப்பர்களும் துதித்துப் பாடுகிறார்கள். அவர்களைத் தொடர்ந்து அநேக தூதர்களும் மகா சத்தமிட்டு கிறிஸ்துவானவரைத் துதிக்கிறார்கள். அப்பொழுது சர்வசிருஷ்டிகளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் துதித்து ஸ்தோத்திரிக்கிறார்கள். வானத்திலும் பூமியிலும், பூமியின் கீழும் இருக்கிற சிருஷ்டிகள் யாவும் மீட்பரைத் துதித்துப் பாடுகிறார்கள். சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுள் அடங்கிய வஸ்துக்கள் யாவும் ஆட்டுக்குட்டியானவரை துதித்துப் பாடுகிறார்கள்.

சர்வசிருஷ்டிகளும் சேர்ந்து "சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக் குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக" என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் துதித்துப் பாடுகிறார்கள். பிதாவாகிய தேவன் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறார். சர்வசிருஷ்களும் அவரைத் துதிக்கிறார்கள். ஆட்டுக் குட்டியானவர் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார். அவரையும் அவர்கள் துதிக்கிறார்கள்.

சர்வசிருஷ்டிகளும் துதிக்கிற மெய்த்தேவனை நாமும் துதிக்கிறோம். அவரை ஆராதிக்கிறோம். அவரை மகிமைப்படுத்துகிறோம். அவரே நம்முடைய சிருஷ்டிகர். அவரே நம்முடைய ஆத்தும மீட்பர். ஆட்டுக்குட்டியானவர் வந்து, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்திருக்கிற பிதாவாகிய தேவனுடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினபோது, பரலோகத்திலே புதிய பாடல்களும், துதிகளும், ஸ்தோத்திரங்களும் ஏறெடுக்கப்படுகிறது.

புஸ்தகம் சிருஷ்டிகருடைய கரத்திலிருந்து மீட்பரின் கரத்திற்கு வந்திருக்கிறது. மீட்பராகிய இயேசுகிறிஸ்து தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவே மத்தியஸ்தராகயிருக்கிறார். கிறிஸ்துவானவர் தேவனுடைய சித்தத்தையும், சிந்தையையும், விருப்பத்தையும் மனுக்குலத்திற்கு வெளிப்படுத்துகிறவர். அவர் புஸ்தகத்தை வாங்கவும், அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறார். இதனால் வானத்திலும், பூமியிலும், பூமியின் கீழும் உள்ள சர்வசிருஷ்டிகளும் மிகுந்த சந்தோஷத்தோடே கர்த்தரைத் துதித்து புதுப்பாட்டைப் பாடுகிறார்கள்.

6 அதிகாரம்

கர்த்தர் தம்முடைய சித்தத்தை எந்த அளவுக்கு வெளிப்படுத்துகிறாரோ, அந்த அளவுக்கு அதைப் புரிந்துகொள்ள நாம் முயற்சி செய்யலாம். கர்த்தர் வெளிப்படுத்துகிற ரகசியங்களை மாத்திரமே நாம் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விருப்பப்படவேண்டும். அதற்கு மிஞ்சி ஆழமாகப்போவோமென்றால், ஆழத்தில் இருள்தான் இருக்கும்.

சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவருடைய வலதுகரத்தில் ஒரு புஸ்தகம் இருக்கிறது. அது ஏழுமுத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருக்கிறது. ஆட்டுக்குட்டியானவர் தேவனிடமிருந்து அந்தப் புஸ்தகத்தை வாங்குகிறார். கிறிஸ்துவானவரே அந்தப் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறார். இயேசுகிறிஸ்து ஏழுமுத்திரைகளில் ஆறுமுத்திரைகளை ஒவ்வொன்றாக உடைக்கிறார். ஒவ்வொரு முத்திரை உடைக்கப்படும்போதும் யோவான் அங்கு பார்த்த சம்பவம் இந்த அதிகாரத்தில் விவரமாக எழுதப்பட்டிருக்கிறது.

முதலாம் முத்திரை (வெளி 6:1,2). இரண்டாம் முத்திரை (வெளி 6:3,4). மூன்றாம் முத்திரை (வெளி 6:5,6). நாலாம் முத்திரை (வெளி 6:7,8). ஐந்தாம் முத்திரை (வெளி 6:9-11). ஆறாம் முத்திரை (வெளி 6:12-17).

முதலாம் முத்திரை
வெளி 6 : 1,2

வெளி 6:1. ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றை உடைக்கக்கண்டேன். அப்பொழுது நான்கு ஜீவன்களில் ஒன்று என்னை நோக்கி: நீ வந்து பார் என்று இடிமுழக்கம்போன்ற சத்தமாய்ச் சொல்லக்கேட்டேன்.

வெளி 6:2. நான் பார்த்தபோது, இதோ, ஒரு வெள்ளைக்குதிரையைக் கண்டேன்; அதின் மேல் ஏறியிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான்; அவனுக்கு ஒரு கிரீடங் கொடுக்கப்பட்டது; அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான்.

கிறிஸ்துவானவரே ஆட்டுக்குட்டியானவராகவும் இருக்கிறார். அவர் முத்திரைகளில் ஒன்றை உடைக்கிறார். அப்பொழுது நான்கு ஜீவன்களில் ஒன்று யோவானை நோக்கி, "நீ வந்து பார்" என்று இடிமுழக்கம்போன்ற சத்தமாய்ச் சொல்லிற்று. யோவானும் அந்த ஜீவன் சொன்ன பிரகாரமாக முதலாம் முத்திரை உடைக்கப்பட்டபோது, அங்கு பார்க்கிறார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெள்ளைக்குதிரையின்மேல் ஏறியிருக்கிறார். அவர் தம்முடைய கரத்தில் ஒரு வில்லைப் பிடித்திருக்கிறார். தேவனுடைய வார்த்தை கூர்மையான அம்புகளைப்போல இருக்கிறது. கர்த்தருடைய கரத்திலிருந்து புறப்படும் அம்பு எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் சீறிப்பாயும். அது கடினமான எந்த இருதயத்தையும் ஊடுருவிப்பாயும் ஆற்றலுள்ளது.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஒரு கிரீடம் கொடுக்கப்படுகிறது. யுத்தத்திற்குப் போகிறவர்களுக்கு பொதுவாக தலைச்சீராவைத்தான் கொடுப்பார்கள். அதுதான் யுத்தவீரருடைய தலைக்கு பாதுகாப்பாகயிருக்கும். யுத்தத்திற்குப் போகும்போது யுத்தவீரருக்கு கிரீடம் கொடுக்கப்படுவதில்லை. ஆனால் இயேசுகிறிஸ்துவுக்கோ, அவர் வெள்ளைக்குதிரையில் ஏறியிருக்கும்போதே அவருக்கு ஒரு கிரீடம் கொடுக்கப்படுகிறது. யுத்தத்தில் அவருக்கு ஜெயம் கிடைக்கும் என்னும் நிச்சயம் இருக்கிறது. அந்த ஜெயத்திற்கு அச்சாரமாக அவருக்கு, யுத்தம்பண்ணுவதற்கு முன்பாகவே கிரீடம் கொடுக்கப்படுகிறது.

இயேசுகிறிஸ்து ஜெயிக்கிறவராகவும், ஜெயிப்பவராகவும் புறப்பட்டுப்போகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சபையை பாதுகாக்கிறார். சத்துருவுக்கு விரோதமாக ஒரு மாவீரராக யுத்தம்பண்ணுகிறார். கிறிஸ்துவானவர் சத்துருவை ஜெயிக்கும் வரையிலும் யுத்தம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள் தங்களுடைய சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். நம்முடைய கர்த்தரும் தம்முடைய பிள்ளைகளோடு சேர்ந்துகொண்டு, சத்துருவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார். சில சமயங்களில் கிறிஸ்துவின் யுத்தம் விசுவாசிகளுக்குள்ளேயே நடைபெறுகிறது. நமக்குள் பாவம் இருக்கும்போது அந்தப் பாவம் நமக்கு சத்துருவாகயிருக்கிறது. நம்முடைய பாவங்கள் கிறிஸ்துவுக்கும் சத்துருவாகயிருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நம்முடைய ஆத்துமாவிற்குள், தம்முடைய சர்வவல்லமையோடு பிரவேசிக்கும்போது, நமக்குள் காணப்படுகிற பாவமான சுபாவங்கள், பாவமான பேச்சுக்கள், பாவமான கிரியைகள், துன்மார்க்கமான குணங்கள் ஆகிய எல்லாவற்றிற்கும் விரோதமாக யுத்தம்பண்ணுகிறார். இவையெல்லாவற்றையும் ஜெயிக்கும் வரையிலும் கர்த்தர் நமக்குள்யே யுத்தம்பண்ணுகிறார்.

கிறிஸ்துவானவர் நமக்குள்ளே ஒவ்வொரு சத்துருவையும் ஜெயிக்கும்போது, நாம் நம்முடைய பரிசுத்த நிலமையில் வளர்ந்து முன்னேறிச் செல்கிறோம். கிறிஸ்துவானவர் நமக்குள்ளே நடத்துகிற தம்முடைய யுத்தத்தை, பூரண ஜெயம் பெறும்வரையிலும் தொடர்ந்து நடத்துகிறார். கிறிஸ்துவானவர் ஜெயிக்கிறவராகவும், ஜெயிப்பவராகவும் இருக்கிறார். நமக்குள் நடைபெறுகிற யுத்தத்தில், கிறிஸ்துவானவர் ஜெயிக்கும்போது, நாம் கிறிஸ்துவினுடைய வல்லமையினால் நம்முடைய பாவங்களை ஜெயித்து பரிசுத்தமாக்கப்படுகிறோம்.

இந்தப் பிரபஞ்சத்தில் தேவனுக்கு விரோதமான சத்துருக்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லோரும் துன்மார்க்கர்கள். கர்த்தர் உலகத்திலுள்ள துன்மார்க்கருக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணுகிறார். அவர்கள்மீது ஜெயங்கொள்கிறார். கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு தடையாகயிருக்கிற எல்லா தடைகளையும் கிறிஸ்துவானவர் உடைத்து நீக்கிப்போடுகிறார். சுவிசேஷ பிரபல்யத்திற்கு தடைகள் நீங்கும்போது கிறிஸ்து ஜெயம்பெறுகிறார்.

கிறிஸ்து கொடுக்கிற ஜெயத்தை அவருடைய பிள்ளைகளாகிய நாம் விசுவாசத்தோடு பெற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய ஊழியத்தைத் தொடர்ந்து செய்யவேண்டும். கிறிஸ்துவானவர் தம்முடைய சுவிசேஷப்பிரபல்யத்தை ஒரே நாளில், ஒரே நேரத்தில் செய்து முடித்துவிடுவதில்லை. சுவிசேஷ ஊழியம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆதித்திருச்சபைக் காலத்திலிருந்து, இப்போதுள்ள காலம் வரையிலும், திருச்சபை கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்து வருகிறது.

கிறிஸ்துவின் சுவிசேஷம் இந்த உலகத்தார் மத்தியில்தான் பிரசங்கிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தை மனுக்குலத்தார் எல்லோரும் தங்களுடைய இருதயத்தில் ஏற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தரை தங்கள் ஆண்டவராகவும், இரட்சகராகவும் விசுவாசிக்கவேண்டும். எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவேண்டும். இதுவே கிறிஸ்துவின் சித்தம். மனுஷர் மத்தியிலே கிறிஸ்துவானவர் யுத்தம்பண்ணுவதற்கான நோக்கமும் இதுதான். ஆனால் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு ஏராளமான தடைகள் உண்டாயிருக்கிறது.

மனுஷர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை தங்கள் இருதயத்தில் விசுவாசித்து, ஏற்றுக்கொண்டு, இரட்சிக்கப்படுவதற்குப் பதிலாக, அவர்கள் சுவிசேஷத்திற்கு எதிர்த்து நிற்கிறார்கள். கர்த்தரோ தம்முடைய சத்துருக்களுக்கு விரோதமான யுத்தத்தை இன்னும் நிறுத்திவிடவில்லை. ஜெயங்கிடைக்கிற வரையிலும் கர்த்தர் யுத்தம்பண்ணுகிறவர். கர்த்தர் தம்முடைய யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவார். கிறிஸ்துவின் சித்தம் அவருக்கேற்ற வேளையில், அவருக்கேற்ற வழியில், அவர் விரும்பிய பிரகாரம் நிறைவேறும். கிறிஸ்து எப்போதுமே ஜெயிக்கிறவராகவும், ஜெயிப்பவராகவும் இருக்கிறவர்.

இரண்டாம் முத்திரை
வெளி 6 : 3,4

வெளி 6:3. அவர் இரண்டாம் முத்திரையை உடைத்தபோது, இரண்டாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன்.

வெளி 6:4. அப்பொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு, பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலை செய்யத்தக்கதாகச் சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்துப் போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது; ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

கிறிஸ்துவானவர் இரண்டாம் முத்திரையை உடைக்கிறார். அடுத்த மூன்று முத்திரைகள் உடைக்கப்படும்போது, தேவனுடைய கோபாக்கினை வெளிப்படுகிறது. தேவனுடைய நித்திய சுவிசேஷத்திற்கு எதிர்த்து நின்றவர்களையும், அவருடைய வார்த்தைகளைத் தூஷித்தவர்களையும் வேதன் தண்டிக்கிறார். கிறிஸ்துவானவர் இரண்டாம் முத்திரையை உடைத்தபோது, இரண்டாம் ஜீவனானது யோவானிடம், "நீ வந்து பார்" என்று சொல்லிற்று. இரண்டாம் ஜீவன் சொன்ன பிரகாரம், யோவானும் அதை வந்து பார்க்கிறார்.

அப்பொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்படுவதை யோவான் காண்கிறார். இந்தக் குதிரை சிவப்பு நிறத்திலிருக்கிறது. முதலாவது குதிரை வெள்ளை நிறத்திலிருந்தது. சிவப்பு நிறம் யுத்தத்தின் நியாயத்தீர்ப்புக்கு அடையாளம். சிவப்பு குதிரையின்மேல் ஏறியிருந்தவருக்கு ஒரு பெரிய பட்டயம் கொடுக்கப்படுகிறது. இது யுத்தத்தின் பட்டயம். இரத்தம் சிந்துகிற பட்டயம். யுத்தத்தின் பட்டயம் ஈவு இரக்கம் பார்க்காமல் கடினமாய் நியாயத்தீர்ப்பு செய்யும்.

யுத்தத்தின் பட்டயம் பூமியிலிருந்து சமாதானத்தை எடுத்துப்போடும். சமாதானமான காலத்தில் பூமியிலுள்ளவர்கள் ஒருவருக்கொருவர் அன்பாயிருப்பார்கள். ஒருவருக்கொருவர் உதவிசெய்வார்கள். யுத்தக்காலம் வரும்போதோ பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலைசெய்வார்கள். சிவப்பு குதிரையின்மேல் ஏறியிருந்தவருக்கு பூமியிலிருந்து சமாதானத்தை எடுத்துப்போடும்படியான அதிகாரம் கொடுக்கப்படுகிறது. சமாதானம் நீங்கிப்போனால் அங்கு யுத்தம் வரும். யுத்தம் வந்தால் பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலைசெய்வார்கள்.

மூன்றாம் முத்திரை
வெளி 6 : 5,6

வெளி 6:5. அவர் மூன்றாம் முத்திரையை உடைத்தபோது, மூன்றாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன். நான் பார்த்தபோது, இதோ, ஒரு கறுப்புக்குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருந்தான்.

வெளி 6:6. அப்பொழுது, ஒரு பணத்துக்கு ஒரு படி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமையென்றும், எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும், நான்கு ஜீவன்களின் மத்தியிலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்டேன்.

ஆட்டுக்குட்டியானவர் மூன்றாம் முத்திரையை உடைக்கிறார். அப்போது மூன்றாம் ஜீவன் யோவானிடம், "நீ வந்து பார்" என்று சொல்லிற்று. யோவானும் தனக்குச் சொல்லப்பட்ட பிரகாரம், அங்கு வந்து பார்க்கிறார். அப்போது அங்கு அவர் ஒரு கறுப்புக் குதிரையைக் காண்கிறார். கறுப்புக் குதிரை கொடிய பஞ்சத்திற்கு அடையாளம். பொதுவாக நியாயத்தீர்ப்பு தனியாக வருவதில்லை. ஒரு நியாயத்தீர்ப்பு வந்தால், அதைத் தொடர்ந்து மற்றொரு நியாயத்தீர்ப்பு வரும். நியாயத்தீர்ப்புக்கள் தொடர் கதையைப்போல தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கும்.

யுத்தத்தின் முடிவினால் வருகிற நியாயத்தீர்ப்புக்கள் மிகவும் கொடுமை நிறைந்ததாயிருக்கும். யுத்தம் முடிந்தால் உடனே பஞ்சம் வந்துவிடும். யுத்தக்காலத்தில் ஜனங்கள் விவசாய வேலைகளை செய்யமாட்டார்கள். களஞ்சியங்களில் தானியம் இருக்காது. பஞ்சம் வரும்போது யுத்தம் முடிந்துபோகும். யுத்தம் முடியும்போது பஞ்சம் கொடிய பஞ்சமாக மாறிவிடும். கொடிதான நியாயத்தீர்ப்புகளில் பஞ்சமும் ஒன்று. இந்த உலகத்தில் போஜனத்திற்கு பஞ்சம் வரும்போது ஜனங்கள் மிகுந்த துன்பங்களை அனுபவிப்பார்கள். இதைவிட ஒரு கொடிய பஞ்சம் இனிமேல் வரப்போகிறது. அது போஜனபதார்த்த பஞ்சமல்ல. கர்த்தருடைய வார்த்தைக்குப் பஞ்சமுண்டாகும். கர்த்தருடைய வார்த்தையைத் தேடினாலும் அக்காலத்தில் பெற்றுக்கொள்ள முடியாது. இப்படிப்பட்ட பஞ்சம் எல்லா பஞ்சங்களையும் விட கொடியது.

கறுப்புக்குதிரையில் ஏறியிருக்கிறவர், தன் கையில் ஒரு தராசைப் பிடித்திருக்கிறார். அவர் எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்று சொல்லுகிறார். பஞ்சக்காலத்தில் எதையும் சேதப்படுத்தக்கூடாது. எல்லாவற்றையும் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும். நம்முடைய இஷ்டம்போல எதையும் தாராளமாய்ப் பயன்படுத்த முடியாது. அளவாய்ப் பயன்படுத்தவேண்டும். இதை உறுதிபண்ணும்விதமாக கறுப்புக்குதிரையில் ஏறியிருக்கிறவர் தன் கையிலே ஒரு தராசைப் பிடித்திருக்கிறார். அவர் எதையும் அளந்துதான் கொடுப்பார்.

பஞ்சகாலத்தில் இலவசமாக எதுவும் கொடுக்கப்படாது. எல்லவாற்றையும் கிரயம் செலுத்திதான் பெற்றுக்கொள்ளவேண்டும். கிரயம் செலுத்தும்போது சேதாரம் குறையும். பஞ்சம் அதிகரிக்கும்போது, கிரயம் செலுத்தினாலும் ஒன்றும் கிடைக்காது. அது கொடிய பஞ்சம்.

கறுப்புக்குதிரையில் ஏறியிருக்கிறவர், "ஒரு பணத்திற்கு ஒரு படி கோதுமை என்றும், ஒரு பணத்திற்கு மூன்று படி வாற்கோதுமை" என்றும் சொல்லுகிறார். எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தக்கூடாது என்றும் சொல்லுகிறார். பஞ்சகாலம் சேதப்படுத்துகிற காலமல்ல. நம்மிடத்திலுள்ளதை சிக்கனமாகப் பயன்படுத்துகிற காலம்.

நாலாம் முத்திரை
வெளி 6 : 7,8

வெளி 6:7. அவர் நாலாம் முத்திரையை உடைத்தபோது, நாலாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லுஞ் சத்தத்தைக் கேட்டேன்.

வெளி 6:8. நான் பார்த்தபோது, இதோ, மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம் அவன்பின் சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்டமிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலை செய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது.

ஆட்டுக்குட்டியானவர் நாலாம் முத்திரையை உடைக்கிறார். அப்போது நாலாம் ஜீவனானது யோவானிடம் “நீ வந்து பார்” என்று சொல்லிற்று. யோவான் அந்தச் சத்தத்தைக் கேட்டபோது அங்கு வந்து பார்க்கிறார். அங்கு மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் காண்கிறார். அதின்மேல் ஒருவன் ஏறியிருக்கிறான். அவனுக்கு மரணம் என்று பெயர். அவன் மகாபயங்கரங்களுக்கு ராஜாவாகயிருக்கிறான். பாதாளம் அவன் பின்னால் செல்லுகிறது. அதிபயங்கரமான ராஜாவுக்கு இவர்கள் வேலைக்காரராயிருக்கிறார்கள்.

பொதுவாக ஒரு நியாயத்தீர்ப்புக்கும் அடுத்த நியாயத்தீர்ப்புக்கும் இயல்பாகவே ஒரு தொடர்பு இருக்கும். யுத்தம் வரும்போது பேரழிவு வரும். பஞ்சம் உண்டாகும். ஜனங்கள் புசிப்பதற்கு போஜனம் இருக்காது. பஞ்சம் கொடிதாகும்போது கொள்ளைநோயும், சாவும் வரும். கர்த்தர் துன்மார்க்கருக்கு விரோதமாக எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்லுகிறார். அதே கர்த்தர் நீதிமான்களுக்கு ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களையும் சொல்லுகிறார். மனுப்புத்திரராகிய நாம் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளையும் கேட்கவேண்டும். அவருடைய ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களின் வார்த்தைகளையும் கேட்கவேண்டும்.

ஆட்டுக்குட்டியானவர் இதுவரையிலும் நான்கு முத்திரைகளை உடைத்திருக்கிறார். யுத்தம், பஞ்சம், சாவு ஆகிய நியாயத்தீர்ப்புக்கள் இதுவரையிலும் உண்டாயிற்று. இப்போது தேவனுடைய புதிய நியாயத்தீர்ப்பாக பூமியின் துஷ்டமிருகங்கள் வந்திருக்கிறது. உலகத்தில் பட்டயமும், பஞ்சமும், சாவும் தாராளமாய் வரும்போது, ஏராளமான ஜனங்கள் இவற்றில் சிக்கி செத்துப்போவார்கள். இவற்றிற்குத் தப்பி உயிரோடிருக்கிறவர்கள் கொஞ்சம் பேராகவே இருப்பார்கள். எண்ணிக்கையில் குறைவானவர்களை அழித்துப்போடுவது மிகவும் எளிது.

இவர்களை அழிக்கக்கூடிய அதிகாரம் பூமியின் துஷ்டமிருகங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பூமியின் காற்பங்கில் உள்ளவர்களை கொலைசெய்யும்படியான அதிகாரம் இந்த துஷ்டமிருகங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பூமியின் துஷ்டமிருகங்கள் என்னும் வார்த்தை மிருககுணமுள்ள மனுஷரையும், துன்மார்க்க குணமுள்ள மனுஷரையும், கொடூரகுணமுள்ள மனுஷரையும் குறிக்கும் என்று வேதபண்டிதர்களில் சிலர் கருத்து சொல்லுகிறார்கள்.

ஐந்தாம் முத்திரை
வெளி 6 : 9-11

வெளி 6:9. அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண்டேன்.

வெளி 6:10. அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.

வெளி 6:11. அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது; அன்றியும், அவர்கள் தங்களைப் போலக் கொலைசெய்யப்படப் போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங் கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

ஆட்டுக்குட்டியானவர் புஸ்தகத்திலுள்ள ஐந்தாம் முத்திரையை உடைக்கிறார். அப்போது புதிய வெளிப்பாடு எதுவும் காணப்படவில்லை. புதிய தீர்க்கதரிசனம் எதுவும் சொல்லப்படவில்லை. அங்கு ஆறுதலான வார்த்தைகள் உண்டாயிற்று. மகா உபத்திரவத்தில் சிக்குண்டிருக்கிறவர்களுக்கு தேவனுடைய சமுகத்தில் ஆறுதலான வார்த்தைகள் சொல்லப்படுகிறது.

ஐந்தாம் முத்திரை உடைக்கப்பட்டபோது, யோவான் இரத்த சாட்சிகளுடைய ஆத்துமாக்களைப் பார்க்கிறார். மகாபரிசுத்த ஸ்தலத்திலே அவற்றைப் பார்க்கிறார். பரலோகத்திலே கிறிஸ்துவானவருடைய பாதபடியில் அந்த ஆத்துமாக்களைப் பார்க்கிறார். அவர்கள் பலிபீடத்தின் கீழே இருக்கிறார்கள். இந்த உலகத்தில் கர்த்தருக்காக ஊழியம் செய்து பாடுகளை அநுபவித்த ஊழியக்காரர்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள். இவர்களில் அநேகர் தேவவசனத் தினிமித்தமும், தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டார்கள்.

இந்த உலகம் இவர்களுக்கு பாத்திரமாயிருக்கவில்லை. இப்பிரபஞ்சம் இவர்களை வெறுத்தது. உலகத்தால் வெறுத்து துன்புறுத்தப்பட்ட தம்முடைய பிள்ளைகளை, கர்த்தரோ, தம்முடைய பரலோகத்தில் ஒரு மகிமையான ஸ்தலத்திலே கொண்டு வந்து நிறுத்துகிறார். அவர்களுக்குப் பூமியில் இடமில்லை. பூமியிலே அவர்களால் பூரண ஆயுசோடு வாழமுடியவில்லை. உலகத்தார் அவர்களை தேவவசனத்தினிமித்தமும், அவர்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொன்றுபோட்டார்கள். உன்னதமான நோக்கத்திற்காக இவர்கள் இரத்த சாட்சியாக மரித்துப்போனார்கள். இவர்களுடைய ஆத்துமாக்கள் பலிபீடத்தின் கீழே இருப்பதை யோவான் காண்கிறார்.

இரத்தசாட்சியாக மரித்தவர்கள் கர்த்தரோடு பேசுகிறார்கள். அவர்கள் மகா சத்தமிட்டு கூப்பிடுவதை யோவான் தன் செவிகளினால் கேட்கிறார். இந்த ஆத்துமாக்கள் நீதிமான்களின் ஆவிகள். இவர்கள் பரிபூரணமுள்ளவர்கள். இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்தினிமித்தமாய் இவர்கள் பூமியிலே இரத்தசாட்சியாக மரித்தார்கள். இவர்கள் பரிசுத்தவான்களாகவும், பரிபூரணமானவர்களாகவும் இருந்தாலும், பூமியிலே தங்களை உபத்திரவத்திற்குட்படுத்தின சத்துருக்களை கர்த்தர் நியாயத்தீர்ப்பு செய்யவேண்டுமென்றும், பழிவாங்க வேண்டுமென்றும் எதிர்பார்க்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவினுடைய நியாயத்தீர்ப்பில் தாமதமுண்டாவதாக இவர்கள் நினைக்கிறார்கள். அவர் தங்களுடைய சத்துருக்களை பழிவாங்குவதில் தாமதப்படுத்துகிறார் என்று நினைத்து, எதுவரைக்கு அவர்களைப் பழிவாங்காமலிருப்பீர் என்று மகாசத்தமிட்டுக் கூப்பிடுகிறார்கள். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் தங்களுடைய சத்துருக்களை பழிவாங்கவில்லை. பழிவாங்குதல் கர்த்தருக்கே உரியது. ஆகையினால் அவர்களை நியாயத்தீர்ப்பு செய்யவும், பழிவாங்கவும் கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுத்துவிடுகிறார்கள்.

பரிசுத்தவான்கள் கர்த்தரை கூப்பிடும்போது, "பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே" என்று சொல்லிக் கூப்பிடுகிறார்கள். மேலும், "தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எது வரைக்கும் நியாயத்தீர்ப்பு செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்" என்று மகாசத்தமிட்டுக் கூப்பிடுகிறார்கள்.

தம்முடைய பரிசுத்தவான்கள் தம்மிடத்தில் மகாசத்தமிட்டுக் கூப்பிடுவதை கர்த்தர் செவிகொடுத்துக் கேட்கிறார். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளின் நன்மைகளை விசாரிக்கிறவர். நியாயத்தீர்ப்பு செய்வதையும், பழிவாங்குவதையும் குறித்து தம்மிடத்தில் மகாசத்தமிட்டு கூப்பிடுகிறவர்களிடத்தில், கர்த்தர் மிகுந்த அன்போடும், கரிசனையோடும் பிரதியுத்தரம் சொல்லுகிறார்.

தேவனானவர் முதலாவதாக, இரத்த சாட்சியாக மரித்துப்போன ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகளைக் கொடுக்கிறார். வெள்ளை அங்கிகள் ஜெயத்திற்கும், மகிமைக்கும், கனத்திற்கும் அடையாளம்.

தங்கள் இரத்தத்தைக்குறித்து பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் தேவன் நியாயத்தீர்ப்பு செய்யவேண்டுமென்றும், அவர் அவர்களை சீக்கிரமாய் பழிவாங்கவேண்டுமென்றும் பரிசுத்தவான்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் கர்த்தரோ அவர்களை இன்னும் கொஞ்சகாலம் பொறுமையாயிருக்குமாறு சொல்லுகிறார்.

இரத்தசாட்சியாக மரித்துப்போனவர்கள் இன்னும் கொஞ்சகாலம் இளைப்பாறவேண்டுமென்று கர்த்தர் அவர்களுக்குச் சொல்லுகிறார். அவர்களுடைய இரத்தத்தைக்குறித்து பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் அப்போது நிச்சயமாகவே நியாயத்தீர்ப்பு செய்யப்படும். கர்த்தர் அவர்களை அப்போது மெய்யாகவே பழிவாங்குவார். இரத்த சாட்சியாக மரித்துப்போனவர்கள், எவ்வளவு காலம் பொறுமையோடு காத்திருக்கவேண்டும் என்பதையும் தேவன் தெளிவுபடுத்துகிறார். ஏற்கெனவே இரத்த சாட்சியாக மரித்துப்போன இவர்கள்போல, இன்னும் கொலைசெய்யப்படப் போகிறவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஏற்கெனவே இரத்தசாட்சியாக மரித்துப்போனவர்களுடைய உடன்பணிவிடைக்காரராகவும், சகோதரருமாகவும் இருக்கிறார்கள். இவர்கள் இப்போது பூமியிலே கர்த்தருக்காக ஊழியம் செய்து வருகிறார்கள். இவர்களைப்போலவே அவர்களும் தேவவசனத்தினிமித்தமும், தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்படுவார்கள்.

எத்தனைபேர் இரத்தசாட்சியாக மரிக்கவேண்டுமென்று கர்த்தர் ஒரு தொகையை நிர்ணயம் செய்திருக்கிறார். இரத்தசாட்சியாக மரிக்கவேண்டியவர்களின் தொகை நிறைவாகும்போது, கர்த்தர் தம்முடைய பிள்ளைகளின் இரத்தத்தைக் குறித்து, பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் நியாயத்தீர்ப்பு செய்வார். அவர்களைப் பழிவாங்குவார்.

அதுவரையிலும், ஏற்கெனவே இரத்தசாட்சியாக மரித்தவர்கள் பொறுமையாயிருக்கவேண்டும். இன்னும் கொஞ்சகாலத்தில் கர்த்தர் நியாயத்தீர்ப்பு செய்வார். அந்தக் கொஞ்சகாலம் மட்டும் இரத்தசாட்சியாய் மரித்தவர்கள் இளைப்பாறவேண்டும். தம்முடைய பிள்ளைகளை உபத்திரவப்படுத்தியவர்களை கர்த்தர் பழிவாங்குவார். அவர்களுக்கு நித்திய ஆக்கினையைக் கொடுப்பார். தம்முடைய வசனத்தினிமித்தமும், தம்மைக்குறித்தும், சாட்சி கொடுத்து உபத்திரவப்பட்டவர்களுக்கோ, கர்த்தர் நித்திய இளைப்பாறுதலைத் தருவார்.

ஆறாம் முத்திரை
வெளி 6 : 12-17

வெளி 6:12. அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக்கண்டேன்; இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது; சூரியன் கறுப்புக் கம்பளியைப் போலக் கறுத்தது; சந்திரன் இரத்தம் போலாயிற்று.

வெளி 6:13. அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது, அதின் காய்கள் உதிருகிறதுபோல், வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது.

வெளி 6:14. வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம் போலாகி விலகிப்போயிற்று; மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின.

வெளி 6:15. பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு,

வெளி 6:16. பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்;

வெளி 6:17. அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும் என்றார்கள்.

ஆட்டுக்குட்டியானவர் ஆறாம் முத்திரையை உடைத்தார். அப்போது மிகவும் பயங்கரமான சம்பவங்களை யோவான் தரிசிக்கிறார். பூமி மிகவும் அதிர்ந்தது. சூரியன் கறுப்புக் கம்பளியைப்போல கறுத்தது. சந்திரன் இரத்தம் போலாயிற்று. தேவனுடைய நியாயத்தீர்ப்பு இந்த உலகத்தில் அதிபயங்கரமாக இருக்கும் என்பதற்கு இந்த சம்பவங்களெல்லாம் அடையாளம். மனுஷர் எதிர்பாராத காரியங்களெல்லாம் அப்போது நடைபெறும்.

கிறிஸ்துவானவர் ஆறாம் முத்திரையை உடைத்தபோது வானத்தின் நட்சத்திரங்கள் பூமியிலே விழுந்தது. அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது, அதின் காய்கள் உதிருகிறதுபோல, வானத்தின் நட்சத்திரங்கள் பூமியிலே விழுந்தது. இப்பிரபஞ்சம் முழுவதிலும் அப்போது பயங்கரமான சம்பவங்கள் நடைபெற்றது. பூமி மிகவும் அதிர்ந்தது. வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம்போலாகி விலகிப்போயிற்று. இந்தப் பயங்கரத்திற்கு எதுவுமே தப்பவில்லை. இந்தப் பயங்கரத்தை எதிர்த்து எதுவும் நிலைத்து நிற்கவுமில்லை. பூமி மிகவும் அதிர்ந்தபோது, மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின.

இது கர்த்தருடைய கோபாக்கினையின் மகாநாள். இந்த நாளில் நிலைநிற்க யாராலும் முடியவில்லை. பூமியிலுள்ள எல்லோரும் பூமி அதிருவதையும், மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களை விட்டு அகன்றுபோவதையும் பார்த்து நடுங்குகிறார்கள். சூரியன் கறுப்பு கம்பளியைப்போல கறுப்பதையும், சந்திரன் இரத்தம்போலாவதையும் பார்த்து பயப்படுகிறார்கள். வானம் சுருட்டப்பட்ட புஸ்தகம்போல விலகிப்போவதைப் பார்த்து திகைக்கிறார்கள். இந்த மகாபயங்கரத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு, மனுஷர்கள் தங்கள் சுயபலத்தையும், சுயபுத்தியையும், சுயயோசனையையும் சார்ந்திருக்கிறார்கள்.

பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும் பூமியிலும் வானத்திலும் நடைபெறுகிற பயங்கரமான சம்பவங்களைப் பார்த்து பயந்து நடுங்குகிறார்கள். அவர்கள் யாவரும் பர்வதங்களிலும், குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொள்கிறார்கள்.

பூமியிலும் வானத்திலும் பிரளயம் உண்டானதற்கு ஆட்டுக்குட்டியானவருடைய கோபமே காரணம் என்பதை ஜனங்கள் அறிந்துகொள்கிறார்கள். ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கு தாங்கள் மறைவாகயிருக்க வேண்டுமென்றும், யாராவது தங்களை மறைத்துக்கொள்ளவேண்டுமென்றும் எதிர்பார்க்கிறார்கள்.

இந்த ஜனங்களுக்கு இதுவரையிலும் சிருஷ்டிகரிடம் விண்ணப்பம்பண்ணி பழக்கமில்லை. இவர்கள் சிருஷ்டிகளையே தொழுது, சிருஷ்டிகளிடத்திலேயே தங்களுடைய விண்ணப்பங்களை ஏறெடுத்தவர்கள். தங்களுடைய வழக்கத்தின் பிரகாரமாக, இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடைய கோபாக்கினையின் மகாநாளில், சிருஷ்டிகளிடத்தில் முறையிடுகிறார்கள்.

இவர்கள் இதுவரையிலும் பர்வதங்களையும் கன்மலைகளையும் தொழுதுவந்தார்கள். இப்பொழுது தாங்கள் தொழுதுவந்த பர்வதங்களையும், கன்மலைகளையும் நோக்கி, "நீங்கள் எங்கள் மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லுகிறார்கள். காதுகளில்லாத, கேட்கமுடியாத பர்வதங்களிடத்திலும் கன்மலைகளிடத்திலும் விண்ணப்பம்பண்ணுகிறார்கள்.

தேவனுடைய கோபாக்கினை இவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. நடைபெறுகிற சம்பவங்களைப் பார்த்து, ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்தை இவர்கள் புரிந்துகொள்கிறார்கள். பர்வதங்களையும், கன்மலைகளையும் நோக்கிப் பேசியவர்கள், அவைகளிடம் தொடர்ந்து, "ஆட்டுக்குட்டியானவருடைய கோபாக்கினையின் நாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும்" என்று சொல்லுகிறார்கள்.

தேவன் சர்வவல்லமையுள்ளவர். அவர் அதரிசனமானவர். மனுஷரால் தேவனைப் பார்க்கமுடியாது. ஆனாலும் அவருடைய கோபாக்கினையை மனுஷரால் உணரமுடிகிறது. தேவனுடைய கோபாக்கினையின் மகாநாளில் சம்பவிக்கிற பயங்கரமான காரியங்களை மனுஷரால் காணமுடிகிறது.

கிறிஸ்துவானவர் ஆட்டுக்குட்டியானவராகவே இருக்கிறார். ஆட்டுக்குட்டி மிகவும் சாதுவானது. அது ஒருபோதும் கோபப்படாது. ஆனால் இங்கோ ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்தைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவானவர் ஆட்டுக்குட்டியானவராக இருந்தாலும், அவருடைய கோபம் மகாபயங்கரமாகயிருக்கிறது.

தேவன் நமக்கு கிருபையின் காலத்தைக் கொடுத்திருக்கிறார். மனந்திரும்புவதற்கு வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார். கிருபையின் காலத்தில் நாம் மனந்திரும்பி இரட்சிக்கப்படவேண்டும். கிருபையின் காலத்தை அசட்டை செய்துவிடக்கூடாது.

கிருபையின் காலத்தைத் தொடர்ந்து தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பின் காலம் வரப்போகிறது. அப்போது தேவன் தம்முடைய நீதியை மாத்திரமே வெளிப்படுத்துவார். தம்முடைய கிருபையைக் காண்பிக்கமாட்டார். தேவனுடைய நியாயத்தீர்ப்பு நாள், அவருடைய கோபாக்கினையின் மகாநாளாகயிருக்கும். அந்த நாளில் அவருடைய கோபத்திற்கு முன்பாக யாராலும் நிலைநிற்கமுடியாது.

கிருபையின் காலத்தை பிரயோஜனப்படுத்திக்கொள்கிறவர்கள் பாக்கியவான்கள். கிருபையின் காலத்தை அசட்டைசெய்துவிட்டு, தேவனுடைய நியாயத்தீர்ப்பினால் தண்டிக்கப் படுகிறவர்கள் சபிக்கப்பட்டவர்கள். தேவனுடைய நியாயத்தீர்ப்பும் நீதியாகவே இருக்கும். அவருடைய கோபாக்கினையும் நீதியாகவே இருக்கும்.

7 அதிகாரம்

இந்தப் பிரபஞ்சத்தில் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு உபத்திரவங்கள் உண்டு. இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்தினிமித்தமாய் உபத்திரவங்களை அநுபவிப்பவர்களுக்கு பரலோகத்திலே விசேஷித்த கிருபைகளும் ஆறுதல்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது. காற்று அடியாதபடிக்கு நிறுத்தப்படுகிறது (வெளி 7:1-3). முத்திரைபோடப்பட்டவர்களின் எண்ணிக்கை (வெளி 7:4-8). பரிசுத்தவான்களும் தூதர்களும் கர்த்தரைத் துதித்துப் பாடுகிற பாட்டுக்கள் (வெளி 7:9-12). வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிறவர்கள் (வெளி 7:13-17).

நான்கு காற்றுகள்
வெளி 7 : 1-3

வெளி 7:1. இவைகளுக்குப்பின்பு, பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின்மேலாவது, சமுத்திரத்தின்மேலாவது, ஒரு மரத்தின் மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கக்கண்டேன்.

வெளி 7:2. ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக்கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குந்திசையிலிருந்து ஏறிவரக்கண்டேன்; அவன், பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம் பெற்ற அந்த நான்கு தூதரையும் நோக்கி:

வெளி 7:3. நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத்தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்.

ஆட்டுக்குட்டியானவர் தேவனுடைய வலதுகரத்திலுள்ள புஸ்தகத்தை வாங்குகிறார். அந்தப் புஸ்தகத்தில் ஏழுமுத்திரைகள் போடப்பட்டிருக்கிறது. ஆட்டுக்குட்டியானவர் அந்த முத்திரைகளில் ஆறுமுத்திரைகளை உடைக்கிறார். அதன்பின்பு ஏழாம் முத்திரையை அவர் உடைப்பதற்கு முன்பாக, அப்போஸ்தலர் யோவான் வேறொரு தரிசனம் காண்கிறார்.

பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள். இவர்கள் பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால் பூமியின் மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின் மேலாவது காற்று அடிக்கவில்லை. இவற்றின்மீது காற்று அடியாதபடிக்கு, நான்கு திசைகளிலும், நான்கு தூதர்கள், நான்கு காற்றுகளையும் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் காற்றுகள் தேவனுடைய சபைக்கு துன்பங்களைக் கொடுக்கக்கூடியவை. இவை தேவனுடைய சபைக்கு உபத்திரவங்களையும், பிரச்சனைகளையும் கொடுக்கக்கூடியவை. தேவதூதர்கள் இந்தக் காற்றுகளைப் பிடித்துக்கொண்டார்கள். இதனால் இந்தக் காற்றுகளால் தேவனுடைய சபைகளுக்கு துன்பம் உண்டாக்க முடியவில்லை.

இந்தக் காற்றுகளை வேதபண்டிதர்கள் பிரச்சனைகளின் ஆவிகள் அல்லது தப்பிதங்களின் ஆவிகள் என்று சொல்லுகிறார்கள். இவை பூமியில் நான்கு திசைகளிலும் வீசுகிற நான்கு காற்றுகளோடு ஒப்பிடப்பட்டிருக்கிறது. நான்கு காற்றுகளும் ஒன்றுக்கொன்று எதிர்திசையில் வீசும். இவற்றுக்குள் ஒற்றுமையிராது. ஆனாலும் நான்கு காற்றுகளும் வெவ்வேறு திசைகளிலிருந்து வீசுவதினால், இவை தேவனுடைய திராட்சத்தோட்டத்தில் மிகுந்த சேதத்தை உண்டுபண்ணும்.

உபத்திரவங்கள் காற்றைப்போலவே வரும். காற்று ஓரிடத்தில் நிலையாக நிற்காது. ஏதாவது ஒரு திசையில் வீசிக்கொண்டேயிருக்கும். கள்ளப்போதகர்களுக்கும் இந்தக் காற்றுகள் ஒப்புமையாகச் சொல்லப்படுகிறது. கள்ளப்போதகர்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் நிலையில்லாதவர்கள். சத்தியத்தில் உறுதியாய் நிலைத்திருக்கமாட்டார்கள்.

பூமியில் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின் நான்கு காற்றுகளையும், காற்று அடியாதபடிக்கு பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால் வஞ்சகத்தின் ஆவிகளால் கிரியை நடப்பிக்க முடியவில்லை. நான்கு தூதர்களும் அவர்களுடைய துன்மார்க்கமான கிரியைகளை தடுத்து நிறுத்துகிறார்கள். கர்த்தருடைய தூதர்கள் சபைக்கு நன்மை செய்கிறார்கள். சபையின் சத்துருக்களை செயல் இழக்கச் செய்கிறார்கள். சத்துருக்களின் கிரியைகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரமே தடைபண்ணப்படுகிறது.

இதன்பின்பு வேறொரு தூதன் ஏறி வருகிறான். இவன் சூரியன் உதிக்கும் திசையிலிருந்து ஏறி வருகிறான். இவனிடத்தில் ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக் கோல் இருக்கிறது. இந்தத் தூதன் மற்ற நான்கு தூதர்களிடம் மகா சத்தமிட்டு பேசுகிறான். நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கிற நான்கு தூதர்களும், இந்த நான்கு தூதர்களும் ஒரே தூதர்களா அல்லது வெவ்வேறு தூதர்களா என்பதை வேதபண்டிதர்கள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். இந்த நான்கு தூதர்களும் பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம் பெற்றிருக்கிறார்கள் *(வெளி 7:2)*.

வேறொரு தூதன், இந்த நான்கு தூதரையும் நோக்கி, "நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டு தீருமளவும், பூமியையும், சமுத்திரத்தையும், மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள்" என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான். இவர்கள் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம் பெற்றவர்கள். ஆனாலும் இவர்களுடைய கிரியைகள் ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் தடைபண்ணப்பட்டிருக்கிறது. அந்தக் காலத்திற்குப் பின்பு இவர்கள் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துவார்கள்.

முத்திரை போடப்பட்டவர்கள் வெளி 7 : 4-8

வெளி 7:4. முத்திரைபோடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக்கேட்டேன்; இஸ்ரவேல் புத்திரருடைய சகலகோத்திரங்களிலும் முத்திரைபோடப்பட்டவர்கள் இலட்சத்துநாற்பத்து நாலாயிரம்பேர்.

வெளி 7:5. யூதாகோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். ரூபன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். காத் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம்.

வெளி 7:6. ஆசேர் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். நப்தலி கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். மனாசே கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம்.

வெளி 7:7. சிமியோன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். லேவி கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். இசக்கார் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம்.

வெளி 7:8. செபுலோன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். யோசேப்பு கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம். பென்யமீன் கோத்திரத்தில் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம்.

தேவனுடைய ஊழியக்காரர்களுக்கும் மற்ற ஜனங்களுக்கும் வித்தியாசம் காண்பிக்கப்படுகிறது. தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரை போடப்படுகிறது. கர்த்தருடைய தூதன் முத்திரைபோடுகிற ஊழியத்தைச் செய்வதற்கு அதிகாரம் பெற்றிருக்கிறான். தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரர்களை கள்ளப்போதர்களிடமிருந்து வேறு பிரித்துக் காண்பிப்பதற்காகவும், தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோடுவதற்காகவும் இந்தத் தூதன் அதிகாரம் பெற்றிருக்கிறான்.

தேவனுடைய ஊழியக்காரருக்கும், கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் இந்தத் தூதன் வித்தியாசம் காண்பிக்கிறான். தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோடுகிறான். தங்கள் நெற்றிகளில் முத்திரைபோடப்பட்டவர்கள் தேவனுடைய விசேஷித்த கிருபைகளையும், இரக்கங்களையும், பாதுகாப்பையும் பெற்றுக்கொள்வார்கள். உபத்திரவக்காலங்களில் நெற்றிகளில் முத்திரைபோடப்பட்டிருக்கிறவர்களுக்கு தேவனுடைய தெய்வீக பாதுகாப்பு கிடைக்கும்.

இஸ்ரவேலில் பன்னிரண்டு கோத்திரத்தார் இருக்கிறார்கள். ஒவ்வொரு கோத்திரத்திலும் பன்னீராயிரம்பேர் முத்திரை போடப்பட்டவர்கள். இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரைபோடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர்.

இஸ்ரவேல் தேசத்தாரை தவிர, சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும் பாஷைக்காரரிலும் இரட்சிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை எண்ண முடியவில்லை. அவர்கள் திரளான கூட்டமாய் இருக்கிறார்கள். அவர்களுடைய தொகை ஒருவராலும் எண்ணக்கூடாததாயிருக்கிறது.

தேவனுடைய சபை சிறுமந்தையாகத்தான் இருக்கிறது. இந்த உலகத்திலுள்ள துன்மார்க்கருடைய திரளான எண்ணிக்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கர்த்தருடைய பரிசுத்தவான்களின் எண்ணிக்கை சொற்பமாகத்தான் இருக்கிறது. ஆனாலும் கர்த்தருடைய பிள்ளைகளின் எண்ணிக்கையும் கொஞ்சமல்ல. திரளான கூட்டமாகிய ஜனங்கள் கர்த்தருடைய பரிசுத்தவான்களாயிருக்கிறார்கள். இவர்களுடைய தொகை ஒருவராலும் எண்ணக்கூடாததாயிருக்கிறது.

கர்த்தருடைய பரிசுத்தவான்களின் எண்ணிக்கைக்கு முடிவில்லை. இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் யாரெல்லாம் சுத்திகரிக்கப்படுகிறார்களோ, அவர்களெல்லோரும் கர்த்தருடைய பரிசுத்தவான்களுடைய கூட்டத்திலே சேர்க்கப்படுவார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அநுதினமும் தம்முடைய சபையிலே சேர்த்துக்கொண்டு வருகிறார்.

முத்திரைபோடப்பட்டவர்களின் எண்ணிக்கையைப்பற்றிச் சொல்லும்போது யூதா கோத்திரம் முதலாவது சொல்லப்பட்டிருக்கிறது. அதன்பின்பு ரூபன் கோத்திரம், காத் கோத்திரம், ஆசேர் கோத்திரம், நப்தலி கோத்திரம், மனாசே கோத்திரம், சிமியோன் கோத்திரம், லேவி கோத்திரம், இசக்கார் கோத்திரம், செபுலோன் கோத்திரம், யோசேப்பு கோத்திரம், பென்யமீன் கோத்திரம் என்று இஸ்ரவேலின் கோத்திரத்தார் வரிசைப்படுத்திச் சொல்லப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கோத்திரத்திலும் முத்திரை போடப்பட்டவர்கள் பன்னீராயிரம். இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரை போடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்.

திரளான கூட்டமாகிய ஜனங்கள் வெளி 7 : 9,10

வெளி 7:9. இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்.

வெளி 7:10. அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்.

கர்த்தருடைய பரிசுத்தவான்களும் தேவதூதர்களும் கர்த்தரைப் புகழ்ந்து பாடுகிறார்கள். அவர்கள் துதிப்பாடல்களை ஏறெடுக்கிறார்கள். பரிசுத்தவான்களின் எண்ணிக்கையை ஒருவராலும் எண்ணமுடியவில்லை. அவர்கள் திரள்கூட்டமான ஜனங்களாயிருக்கிறார்கள். இவர்கள் வெள்ளை அங்கி தரித்திருக்கிறார்கள். தங்கள் கைகளில் குறுத்தோலைகளைப் பிடித்திருக்கிறார்கள். இவர்கள் சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலுமிருந்து வந்தவர்கள். இவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கிறார்கள். சிருஷ்டிகருக்கு முன்பாகவும் மத்தியஸ்தருக்கு முன்பாகவும் நிற்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவே நம்முடைய மத்தியஸ்தர். பாவிகளாகிய நம்மால் தேவனுடைய பரிசுத்தமான சிங்காசனத்திற்கு முன்பாக, நம்முடைய சுயபக்தியினாலோ, சுயபரிசுத்தத்தினாலோ போய் நிற்கமுடியாது. நமக்கு ஒரு மத்தியஸ்தர் தேவை. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே தேவனுக்கும் நமக்கும் நடுவே மத்தியஸ்தராயிருக்கிறார். தேவனிடத்தில் நமக்காகப் பரிந்து பேசுகிறார். இதனிமித்தமாகவே பரிசுத்தவான்கள் கர்த்தருடைய சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கிறார்கள்.

யுத்தங்களில் ஜெயம் பெற்றவர்கள் வெற்றி பவனி வரும்போது வெள்ளை அங்கிகளைத் தரித்திருப்பார்கள். அவர்கள் தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்திருப்பார்கள். ஜெயம் பெற்றவர்களுக்கு ஒப்புமையாக கர்த்தருடைய பரிசுத்தவான்களும் வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து வருகிறார்கள். இவர்கள் சத்துருவை ஜெயித்தவர்கள். பாவத்தை ஜெயித்தவர்கள். சாத்தானை ஜெயித்தவர்கள்.

திரளான கூட்டமாகிய ஜனங்கள் சிங்காசனத்திற்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நின்று மகா சத்தமிட்டு ஆர்ப்பரிக்கிறார்கள். “இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக” என்று மகா சத்தமிட்டு ஆர்ப்பரிக்கிறார்கள். இவர்கள் கர்த்தருக்கு ஓசன்னா, அல்லேலூயா என்று சொல்லி ஆர்ப்பரிக்கிறார்கள். இவர்கள் பிதாவாகிய தேவனையும் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவையும் துதிக்கிறார்கள். இவர்களுடைய துதிகளில் பிதாவும் குமாரனும் இணைந்திருக்கிறார்கள்.

பிதாவானவர் மனுக்குலத்தின் இரட்சிப்பைத் திட்டமிட்டார். குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோ தம்முடைய சொந்த இரத்தத்தை மீட்பின் கிரயமாகச் செலுத்தி மனுக்குலத்திற்கு இரட்சிப்பை கிரயமாகப் பெற்றார்.

யாரெல்லாம் இரட்சிக்கப் பட்டிருக்கிறார்களோ அவர்களெல்லோரும் இரட்சிப்பின் சந்தோஷத்தை அநுபவிப்பார்கள். கர்த்தருக்குள் சந்தோஷமாகயிருப்பார்கள். இப்பேற்பட்ட பரிசுத்தவான்கள் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற பிதாவாகிய தேவனையும், குமாரனாகிய இயேசுகிறிஸ்துவையும் நன்றியோடு துதிப்பார்கள். இரட்சிப்பின் மகிமை அவர்களுக்கு உண்டாவதாக என்று சொல்லி ஆர்ப்பரிப்பார்கள்.

தூதர்கள்
வெளி 7 : 11,12

வெளி 7:11. தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழநின்று, சிங்காசனத்திற்குமுன்பாக முகங்குப்புற விழுந்து, தேவனைத் தொழுதுகொண்டு:

வெளி 7:12. ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக; ஆமென், என்றார்கள்.

கர்த்தருடைய பரிசுத்தவான்களாகிய திரளான கூட்டமாகிய ஜனங்கள், சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற தேவனையும், ஆட்டுக்குட்டியானவரையும் துதிக்கிறார்கள். பரிசுத்தவான்கள் சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நின்று அவர்களை ஸ்தோத்திரம் செய்து, மகா சத்தமிட்டு ஆர்ப்பரிக்கிறார்கள். தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும், மூப்பர்களையும், நான்கு ஜீவன்களையும் சூழ நின்றுகொண்டிருக்கிறார்கள். கர்த்தருடைய பரிசுத்தவான்ள் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவரையும், ஆட்டுக்குட்டியானவரையும் தொழுதுகொள்வதை தூதர்கள் பார்க்கிறார்கள், அவர்களுடைய மகா ஆர்ப்பரிப்பின் சத்தத்தையும் கேட்கிறார்கள்.

அப்போது தூதர்கள் யாவரும் சிங்காசனத்திற்கு முன்பாக முகங்குப்புறவிழுந்து தேவனைத் தொழுதுகொள்கிறார்கள். தங்களைத் தரைமட்டும் தாழ்த்துகிறார்கள். கர்த்தரை பயபக்தியோடு துதிக்கிறார்கள். கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக வரும்போது நாம் உடைக்கப்பட்ட பாத்திரங்களைப்போல இருக்கிறோம். நம்முடைய இருதயம் எவ்வளவு கடினமானதாகயிருந்தாலும், கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக வரும்போது அது மென்மையான இருதயமாக மாறும். தூதர்கள் விசேஷித்த சிருஷ்டிகளாகயிருந்தபோதிலும், அவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாக வரும்போது, முகங்குப்புற விழுந்து தேவனைத் தொழுதுகொள்கிறார்கள்.

தூதர்கள் யாவரும், "ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக; ஆமென்" என்று சொல்லி துதிக்கிறார்கள். தூதர்கள் துதிக்க ஆரம்பிக்கும்போதே, "ஆமென்" என்று சொல்லுகிறார்கள். கர்த்தருடைய பரிசுத்தவான்களாகிய திரளான கூட்டமாகிய ஜனங்கள், சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற தேவனையும், ஆட்டுக்குட்டியானவரையும், மகா சத்தமிட்டு ஆர்ப்பரித்து துதிப்பதை தூதர்கள் அங்கீகரிக்கும் வண்ணமாக, "ஆமென்" என்று சொல்லுகிறார்கள்.

இதற்குப் பின்பு தூதர்கள் யாவரும் தாங்களாகவே மேலும் சில பயபக்தியுள்ள வார்த்தைகளைச் சொல்லி தேவனை ஸ்தோத்திரம் பண்ணுகிறார்கள். "எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக; ஆமென்" என்று சொல்லி துதிக்கிறார்கள்.

இருதயத்தில் சந்தோஷமாயிருக்கிறவர்கள் கர்த்தரைத் துதிக்கிறார்கள். பரலோகத்தில் துதியின் சத்தம் எப்போதும் கேட்டுக்கொண்டிருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அவரோடுகூட பரலோகத்திலே நித்தியகாலமாக ஜீவிக்கப்போகிறோம். பரலோகத்தில் நாம் எப்போதும் தேவனைத் துதித்துக்கொண்டிருப்போம். நாம் பூமியிலிருக்கிற இந்தக் காலத்தில், பரலோகத்தில் கர்த்தரைத் துதிப்பதற்கு பயிற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். பரலோகத்தில் நம்முடைய துதிகளும், சந்தோஷமும் பரிபூரணமாயிருக்கும்.

மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள் வெளி 7 : 13,14

வெளி 7:13. அப்பொழுது, மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? என்று கேட்டான்.

வெளி 7:14. அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்.

இந்தப் பூமியில் கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்தவர்கள் பரலோகத்திலே மிகுந்த சந்தோஷத்தோடிருப்பார்கள். அப்போஸ்தலர் யோவானுக்கு பரலோகத்தில் கர்த்தரை ஆர்ப்பரித்து துதிக்கிற பரிசுத்தவான்களை தரிசிக்கிற சிலாக்கியம் கிடைத்திருக்கிறது.

இதன்பின்பு, இருபத்து நான்கு மூப்பர்களில் ஒருவர் யோவானிடம் பேசுகிறார். பரலோகத்தில் நடப்பது எல்லாம் மூப்பர்களுக்குத் தெரியும். ஆனாலும் மூப்பர்களில் ஒருவர் யோவானை நோக்கி, "வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்" என்று கேட்கிறார். தனக்குத் தெரியவேண்டும் என்பதற்காக மூப்பர் யோவானிடம் இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை. யோவானுக்கு இதைப்பற்றி விளக்கமாகச் சொல்ல வேண்டும் என்பதற்காகவே அவர் இந்தக் கேள்வியை யோவானிடம் கேட்கிறார். இந்தப் பூமியிலே வேதபண்டிதர்கள் ஏராளமானோர் இருக்கலாம். இருந்தாலும், பரலோகத்திலுள்ள சாதாரண தூதர்களின் அறிவு, நம்முடைய வேதஅறிவைவிட, மிகவும் அதிகம்.

அப்போஸ்தலர் யோவான் தன்னிடம் கேள்வி கேட்ட மூப்பரிடம், "ஆண்டவரே அது உமக்கே தெரியும்" என்று சொல்லுகிறார். யோவான் தன்னைத் தாழ்த்துகிறார். தன்னுடைய அறியாமையை அங்கீகரிக்கிறார். தனக்குத் தெரியாததையும் தெரிந்ததாகச் சொல்லி மாய்மாலம் பண்ணவில்லை. உள்ளதை உள்ளபடியே சொல்லிவிடுகிறார். அதைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்னும் ஆர்வம் யோவானுக்கு இருக்கிறது. ஆகையினால் யோவான் மூப்பரிடம், "அது உமக்கே தெரியும்" என்று பணிவோடும், மரியாதையோடும் சொல்லுகிறார்.

திரளான கூட்டமாகிய ஜனங்கள் வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிறார்கள். இவர்களைப்பற்றிய விவரத்தை மூப்பர்களில் ஒருவர் யோவானுக்கு விளக்கமாகச் சொல்லுகிறார். அவர்களெல்லோரும் பூமியிலே இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் மிகுந்த துன்பங்களை அனுபவித்தவர்கள். அவர்கள் பூமியிலே சாதாரண ஜனங்களாக இருந்தவர்கள். இயேசுகிறிஸ்துவினுடைய வசனத்தினிமித்தமாகவும், அவருக்கு சாட்சியாக ஜீவித்ததினிமித்தமாகவும், அவர்கள் பூமியிலே மிகுந்த உபத்திரவத்தை அநுபவித்தவர்கள். பரலோகத்திற்குச் செல்லும் பாதையில் அநேக பாடுகளும், வேதனைகளும், உபத்திரவங்களும் உண்டு. இவற்றையெல்லாம் கடந்துதான் பரலோகத்தில் பிரவேசிக்க முடியும். உபத்திரவம் தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்காது.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் பூமியிலிருந்த காலத்தில் பரலோகத்தின் சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்வதற்காக தங்களை ஆயத்தப்படுத்தினார்கள். இப்போதோ அந்தச் சந்தோஷத்தைப் பெற்று அநுபவிக்கிறார்கள். இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் பரிசுத்தவான்களுடைய அங்கிகளை வெண்மையாக்குகிறது. அவர்களுடைய அங்கிகளைச் சுத்திகரிக்கிறது.

தேவனை இரவும் பகலும் சேவிக்கிறார்கள் வெளி 7 : 15-17

வெளி 7:15. ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்.

வெளி 7:16. இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள் மேல் படுவதுமில்லை.

வெளி 7:17. சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக் குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்றான்.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் பரலோகத்திலே பிரவேசிக்கிறார்கள். இவர்கள் தேவனுடைய விசேஷித்த ஆசீர்வாதத்தைப் பெற்றவர்கள். இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள். சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற தேவன் இவர்களுக்குள்ளே வாசமாயிருக்கிறார்.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிப்பதினால் மிகுந்த சந்தோஷத்தோடிருக்கிறார்கள். அவர்கள் பூமியிலே இருந்த காலங்களில் கிறிஸ்துவுக்காக அநேக பாடுகளை அநுபவித்தவர்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விடுதலையோடு ஆராதிக்க முடியாமல் அநேக பாடுகளையும் உபத்திரவங்களையும் அநுபவித்தவர்கள். இப்போதோ அவர்களுக்கு, பரலோகத்திலே கர்த்தரை ஆராதிப்பதற்கு ஒரு தடையும் இல்லை. கர்த்தருடைய ஆலயத்திலே அவரை இரவும் பகலும் சேவிக்கிறார்கள். தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிற சிலாக்கியம் இவர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

கர்த்தருடைய பிள்ளைகள் பூமியிலே இருந்த காலத்திலே அவர்களுக்கு பசியுண்டாயிற்று. தாகமுண்டாயிற்று. வெயிலும் உஷ்ணமும் அவர்கள்மேல் பட்டது. இப்போது இவர்கள் பரலோகத்திலிருக்கிறார்கள். இவர்கள் இனி பசியடைவதுமில்லை. இனி தாகமடைவதுமில்லை. வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை. இவர்களுடைய தேவைகளெல்லாவற்றையும் கர்த்தர் கிருபையாகச் சந்திப்பார். இவர்களுக்கு இனிமேல் வியாதிகளும் வேதனைகளும் வராது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய அன்பிலே இவர்கள் சந்தோஷப்படுவார்கள். கிறிஸ்துவானவரே இவர்களை வழிநடத்துவார். இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார். இவர்களுடைய துக்கங்கள் சந்தோஷமாக மாறியிருக்கும். கிறிஸ்துவானவர் தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார். இவர்களை மேய்ப்பார். இவர்களைப் போஷிப்பார். கிறிஸ்துவானவர் தம்முடைய கிருபையுள்ள மென்மையான கரத்தினால் தம்முடைய பரிசுத்தவான்கள் கண்ணீர்கள் யாவையும் துடைப்பார். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் பூமியிலே உபத்திரவப்பட்டபோது அவர்களுக்கு அதிகமான கண்ணீர்கள் உண்டாயிற்று. கர்த்தரோ அந்தக் கண்ணீர் யாவையும் இப்போது துடைக்கிறார்.

சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. அவர் தம்முடைய பிள்ளைகளுக்கு ஒரு அன்பான தகப்பனைப்போல இருக்கிறார். தாம் நேசிக்கிற பிள்ளைகள் கண்ணீர்விட்டு அழும்போது, அவர்கள்மீது அன்பாயிருக்கிற தகப்பன், அவர்களுடைய கண்ணீரை துடைப்பதுபோல, நம்முடைய கர்த்தர் தம்முடைய பரிசுத்தவான்களின் கண்ணீர்களைத் துடைக்கிறார். அவர்களுக்கு ஆறுதலாகயிருக்கிறார். அவர்களுடைய துக்கங்களை சந்தோஷமாக மாற்றுகிறார். இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் பூமியிலே துயரப்பட்டவர்கள், இப்போது பரலோகத்திலே இயேசுகிறிஸ்துவினாலே தேற்றப்படுகிறார்கள்.
ஆறுதல்படுத்தப்படுகிறார்கள்.

8 அதிகாரம்

ஆட்டுக்குட்டியானவர் ஏழாம் முத்திரையை உடைக்கிறார் (வெளி 8:1). தேவனுக்கு முன்பாக நிற்கிற ஏழுதூதர்கள் (வெளி 8:2). பொற்கலசத்தைப் பிடித்து பலிபீடத்தின்மேல் நிற்கிற வேறொரு தூதன் (வெளி 8:3-5). ஏழு எக்காளங்கள் (வெளி 8:6-13).

ஏழாம் முத்திரை வெளி 8:1

வெளி 8:1. அவர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது, பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணிநேரமளவும் அமைதல் உண்டாயிற்று.

ஆட்டுக்குட்டியானவர் ஏழாம் முத்திரையை உடைக்கிறார். இப்போது யோவான் அநேக புதிய சம்பவங்களைத் தரிசிக்கிறார். ஆட்டுக்குட்டியானவர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது, பரலோகத்தில் அமைதலுண்டாயிற்று. இந்த அமைதல் ஏறக்குறைய அரைமணி நேரமளவும் இருந்தது. எல்லோரும் எதிர் பார்ப்போடு அமைதியாகயிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய பரிசுத்தவான்களை அற்புதமாகப் பராமரிக்கிறார். தேவனுடைய சபையார் பரலோகத்திலும் பூமியிலும் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். தேவன் இனிமேல் என்ன செய்யப்போகிறார் என்பதைக் காண்பதற்கு பரிசுத்தவான்களெல்லோரும் அமைதியாக காத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அமைதி எதிர்பார்ப்பின் அமைதி.

ஏழு தூதர்கள் வெளி 8:2

வெளி 8:2. பின்பு, தேவனுக்குமுன்பாக நிற்கிற ஏழு தூதர்களையுங் கண்டேன்; அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்டது.

ஆட்டுக்குட்டியானவர் ஏழாம் முத்திரையை உடைக்கிறார். அப்போது என்ன நடைபெறும் என்று பார்ப்பதற்கு யோவான் மிகுந்த ஆவலாயிருக்கிறார். ஆனால் அங்கு உடனே ஒன்றும் நடைபெறவில்லை. பரலோகத்தில் அமைதலுண்டாயிற்று. யாரும் ஆர்ப்பரிக்கவுமில்லை. யாரும் ஒரு கிரியையும் நடப்பிக்கவில்லை. எல்லோரும் அமைதியாகயிருக்கிறார்கள். ஏறக்குறைய அரைமணிநேரமளவும் இந்த அமைதல் அங்கு உண்டாயிற்று.

அரைமணி நேர அமைதிக்குப் பின்பு தேவனுக்கு முன்பாக நிற்கிற ஏழுதூதர்களை யோவான் காண்கிறார். அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்கப்படுகிறது. இந்த எக்காளங்களை ஏழுதூதர்களும் தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாக ஊதவேண்டும்.

வேறொரு தூதன் வெளி 8 : 3-5

வெளி 8:3. வேறொரு தூதனும் வந்து, தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்துப் பலிபீடத்தின் படியிலே நின்றான்; சிங்காசனத்திற்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின்மேல் சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

வெளி 8:4. அப்படியே பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தப்பட்ட தூபவர்க்கத்தின் புகையானது தூதனுடைய கையிலிருந்து தேவனுக்குமுன்பாக எழும்பிற்று.

வெளி 8:5. பின்பு, அந்தத் தூதன் தூபகலசத்தை எடுத்து, அதைப் பலி பீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினான்; உடனே சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சியும் உண்டாயின.

ஏழுதூதர்கள் தேவனுக்கு முன்பாக நிற்கும்போது அங்கு வேறொரு தூதன் வருகிறான். அவன் பலிபீடத்தின் படியிலே நிற்கிறான். தன்னுடைய கையில் அவன் தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்திருக்கிறான். எக்காளம் ஊதப்படுவதற்கு முன்பாக தூபபலி செலுத்தப்படுகிறது. சிங்காசனத்திற்கு முன்பாக பொற்பீடம் இருக்கிறது. இந்தப் பொற்பீடத்தில் சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம் இந்தத் தூதனுக்குக் கொடுக்கப்படுகிறது.

கர்த்தருடைய பரிசுத்தவான் களெல்லோருமே ஜெபிக்கிற ஜனங்களாகவே இருக்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகள் அவருடைய சமுகத்தில் ஊமையாயிருப்பதில்லை. ஒருவேளை கர்த்தரோடு நம்முடைய வாய் பேசவில்லையென்றாலும், நம்முடைய இருதயம் அவரோடு பேசும். நம்முடைய இருதயத்தில் கர்த்தர் வாசம்பண்ணுகிறார்.

நம்முடைய ஆபத்து வேளைகள் நமக்கு ஜெபிக்கிற வேளைகளாகயிருக்க வேண்டும். சோதனைகளும், வேதனைகளும், உபத்திரவங்களும் வரும்போது நாம் ஜெபம்பண்ணவேண்டும். ஜெபிக்கிற வேளை எப்போதுமே, நம்முடைய ஜெபத்திற்கு கர்த்தரிடத்திலிருந்து பதிலை எதிர்பார்க்கிற வேளையாகயிருக்கும். நம்முடைய ஜீவியத்தில் பயமிருந்தாலும், நம்பிக்கையிருந்தாலும் அதை கர்த்தருடைய சமுகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். ஜெபம் இல்லையேல் நமக்கு ஜெயமில்லை.

நம்முடைய ஜெபங்கள் தேவனுடைய சமுகத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்காக தேவனிடத்தில் பரிந்து பேசவேண்டும். அத்துடன் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிற பொற்பீடத்தின்மேல் தூபவர்க்கம் செலுத்தப்படவேண்டும். நம்முடைய துதிகளோடும், ஸ்தோத்திரங் களோடும், வேண்டுதல்களோடும், விண்ணப் பங்களோடும், பொற்பீடத்தின் மேல் செலுத்தப்பட்ட தூபவர்க்கத்தின் புகையானது தேவனுக்கு முன்பாக எழும்பவேண்டும். கர்த்தருக்குச் சித்தமான வழியில் நாம் ஜெபிக்கும்போது, கர்த்தர் நிச்சயமாகவே நம்முடைய ஜெபத்தைக் கேட்பார். நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கொடுப்பார்.

பரலோகத்திலுள்ள தேவன் நம்முடைய ஜெபத்தைக் கேட்டு பூமியிலே கிரியை செய்கிறார். இதன் மூலமாய் இப்பிரபஞ்சத்தில் அநேக மாற்றங்கள் உண்டாகிறது. தூதனுடைய கையிலிருந்து தூபவர்க்கத்தின் புகையானது தேவனுக்கு முன்பாக எழும்புகிறது. அதன்பின்பு அந்தத் தூதன், தூபகலசத்தை எடுத்து அதை பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டுக்கிறான். உடனே சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சிகளும் உண்டாயின.

பரலோகத்திலே ஏழாம் முத்திரை உடைக்கப்பட்டபோது, ஏறக்குறைய அரைமணி நேரமளவும் அமைதலுண்டாயிற்று. இப்போதோ சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சிகளும் உண்டாகிறது. தேவனுக்கு முன்பாக நிற்கிற ஏழுதூதர்கள், தங்கள் எக்காளங்களை ஊதுவதற்கு முன்பாக, பரலோகத்திலே மிகப்பெரிய ஆயத்தம் நடைபெறுகிறது.

ஏழு எக்காளங்களையுடைய ஏழுதூதர்கள்
வெளி 8:6

வெளி 8:6. அப்பொழுது, ஏழு எக்காளங்களையுடைய ஏழு தூதர்கள் எக்காளம் ஊதுகிறதற்குத் தங்களை ஆயத்தப்படுத்தினார்கள்.

பரலோகத்தில் நிலவிய அமைதி அரைமணி நேரத்தில் முடிந்துபோயிற்று. இதன்பின்பு சத்தங்களும் இடிமுழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சிகளும் உண்டாயிற்று. இதுவரையிலும் தங்கள் கரங்களிலே ஏழுஎக்காளங்களைப் பிடித்திருந்தவர்கள், இப்போது அவற்றை ஊதுகிறதற்கு தங்களை ஆயத்தப்படுத்துகிறார்கள்.

எக்காளம் தூதர்களுடைய கைகளில் இருந்தாலும், அவர்கள் அதை தங்கள் சுயஇஷ்டத்தின் பிரகாரம் ஊதக்கூடாது. கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே, அவர் நமக்கு கொடுத்திருக்கிற கருவிகளைப் பயன்படுத்தவேண்டும். தூதர்கள் எக்காளங்களை ஊதுவதற்கு முன்பாக தங்களை ஆயத்தப் படுத்துகிறார்கள். ஆயத்தமில்லாமல் எந்த வேலையையும் அவசரம் அவசரமாகச் செய்யக்கூடாது. கர்த்தருடைய பரிசுத்தவான்களாகிய நமக்கு ஜெபஆயத்தம் வேண்டும். வேதவாசிப்பு ஆயத்தம் வேண்டும். ஊழிய ஆயத்தம் வேண்டும்.

முதலாம் எக்காளம்
வெளி 8:7

வெளி 8:7. முதலாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது இரத்தங்கலந்த கல்மழையும் அக்கினியும் உண்டாகி, பூமியிலே கொட்டப்பட்டது; அதினால் மரங்களில் மூன்றிலொருபங்கு வெந்துபோயிற்று, பசும்புல்லெல்லாம் எரிந்துபோயிற்று.

முதலாம் தூதன் எக்காளம் ஊதுகிறான். அப்போது மிகவும் பயங்கரமான புயல்காற்றுபோல ஒன்று உண்டாயிற்று. இரத்தம் கலந்த கல்மழையும் அக்கினியும் உண்டாகி அவை பூமியிலே கொட்டப்படுகிறது. கல்மழையும் அக்கினியும் ஒரு விநோதமான கலவை. இது பூமியின்மேல் கொட்டப்பட்டதினால் பூமியில் பேரழிவு உண்டாயிற்று. ஆனால் அந்த அழிவு ஒரு கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது. பூமியிலுள்ள மரங்களில் மூன்றிலொரு பங்கு மாத்திரம் வெந்துபோயிற்று. பசும்புல் எல்லாம் எரிந்துபோயிற்று.

கர்த்தருடைய கோபாக்கினை பூமியின்மீது வந்தாலும், கர்த்தர் தம்முடைய கிருபையினால் பூமியை முழுவதுமாக அழித்துப்போடவில்லை. ஆனாலும் தேவனுடைய கோபம் பற்றியெரிகிறது. பூமியிலுள்ள மரங்களில் மூன்றிலொருபங்கு மாத்திரம் வெந்து போவதற்கு கர்த்தர் அனுமதிகொடுக்கிறார்.

இரண்டாம் எக்காளம்
வெளி 8 : 8,9

வெளி 8:8. இரண்டாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது அக்கினியால் எரிகிற பெரிய மலைபோன்றதொன்று சமுத்திரத்திலே போடப்பட்டது; அதினால் சமுத்திரத்தில் மூன்றிலொருபங்கு இரத்தமாயிற்று.

வெளி 8:9. சமுத்திரத்திலிருந்த ஜீவனுள்ள சிருஷ்டிகளில் மூன்றிலொருபங்கு செத்துப்போயிற்று; கப்பல்களில் மூன்றிலொருபங்கு சேதமாயிற்று.

இரண்டாம் தூதன் இரண்டாம் எக்காளம் ஊதுகிறான். அப்போது அக்கினியால் எரிகிற பெரிய மலை போன்றது ஒன்று சமுத்திரத்தின்மேல் போடப்படுகிறது. இதனால் சமுத்திரத்திற்கு பேரழிவு உண்டாயிற்று. சமுத்திரத்தில் மூன்றிலொருபங்கு இரத்தமாயிற்று. முதலாம் எக்காளம் ஊதப்பட்டதுபோலவே, இப்போதும் தேவனுடைய கிருபையினால் இந்த அழிவு மூன்றிலொரு பங்கு மாத்திரம் என்று ஒரு கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது.

அக்கினியால் எரிகிற மலை சமுத்திரத்தில் போடப்பட்டவுடன், சமுத்திரத்திலிருந்த ஜீவனுள்ள சிருஷ்டிகளில் மூன்றிலொரு பங்கு செத்துப்போயிற்று. கப்பல்களில் மூன்றிலொரு பங்கு சேதமாயிற்று. தேவன் தம்முடைய நியாயத்தீர்ப்புக்கு மத்தியிலும், தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் நினைவுகூருகிறார்.

மூன்றாம் எக்காளம் வெளி 8 : 10,11

வெளி 8:10. மூன்றாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது ஒரு பெரிய நட்சத்திரம் தீவட்டியைப்போல எரிந்து, வானத்திலிருந்து விழுந்தது; அது ஆறுகளில் மூன்றிலொருபங்கின்மேலும், நீரூற்றுகளின்மேலும் விழுந்தது.

வெளி 8:11. அந்த நட்சத்திரத்திற்கு எட்டியென்று பெயர்; அதினால் தண்ணீரில் மூன்றிலொருபங்கு எட்டியைப் போலக் கசப்பாயிற்று; இப்படிக் கசப்பான தண்ணீரினால் மனுஷரில் அநேகர் செத்தார்கள்.

மூன்றாம் தூதன் எக்காளம் ஊதுகிறான். அப்போது ஒரு பெரிய நட்சத்திரம் தீவட்டியைப்போல எரிந்து வானத்திலிருந்து விழுகிறது. இந்த நட்சத்திரத்தினால் பூமியிலுள்ள தண்ணீரில் மிகப்பெரிய சேதமுண்டாயிற்று. இந்த நட்சத்திரத்திற்கு எட்டி என்று பெயர். இது பெரிய நட்சத்திரம். இது தீவட்டியைப்போல எரிந்து வானத்திலிருந்து விழுகிறது. அது பூமியில் விழும்போது, பூமியிலுள்ள ஆறுகளில் மூன்றிலொரு பங்கின் மேலும், நீரூற்றுகளின்மேலும் விழுகிறது.

எட்டி என்னும் பெயருக்கு கசப்பு என்று பொருள். வானத்திலிருந்து விழுகிற பெரிய நட்சத்திரம் பூமியிலுள்ள தண்ணீரை கசப்பாக்குகிறது. இதனால் அந்த நட்சத்திரத்திற்கு எட்டி என்று பெயர். இந்த நட்சத்திரம் தண்ணீரின்மேல் விழுந்ததினால், தண்ணீரில் மூன்றிலொருபங்கு எட்டியைப்போல கசப்பாயிற்று. இந்தத் தண்ணீர் ஆரோக்கியமான தண்ணீரல்ல. பருகுவதற்கு உகந்ததல்ல. இந்தக் கசப்பான தண்ணீரினால் மனுஷரில் அநேகர் செத்துப்போனார்கள்.

வானத்திலிருந்து விழுந்த பெரிய நட்சத்திரம் ஆறுகளையும், நீரூற்றுகளையும் விஷத்தன்மையுள்ளதாக மாற்றிவிடுகிறது. கசப்பான இந்த நீரைப் பருகியவர்கள் எல்லோரும் செத்துப் போனார்கள். நம்முடைய ஆத்துமாவுக்குத் தாகமுண்டாகும்போது ஜீவத்தண்ணீரை மாத்திரம் பருகவேண்டும். கள்ளப்போதகர்கள் கொடுக்கிற விஷத்தண்ணீரைப் பருகினால், நம்முடைய ஆத்துமாவும் செத்துப்போகும்.

நான்காம் எக்காளம் வெளி 8:12

வெளி 8:12. நான்காம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது சூரியனில் மூன்றிலொருபங்கும், சந்திரனில் மூன்றிலொருபங்கும், நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கும் சேதப்பட்டது, அவற்றவற்றில் மூன்றிலொருபங்கு இருளடைந்தது; பகலிலும் மூன்றிலொருபங்கு பிரகாசமில்லாமற் போயிற்று, இரவிலும் அப்படியேயாயிற்று.

நான்காம் தூதன் எக்காளம் ஊதுகிறான். அப்போது இயற்கையில் பேரழிவு உண்டாயிற்று. பகலிலும் இரவிலும் இருள் உண்டாயிற்று. நான்காம் தூதன் எக்காளம் ஊதும்போது சூரியனில் மூன்றிலொருபங்கு சேதப்பட்டது. சந்திரனிலும், நட்சத்திரங்களிலும் மூன்றிலொருபங்கு சேதப்பட்டது. இவையெல்லாம் உலகத்திற்கு வெளிச்சத்தைக் கொடுக்கக்கூடியவை. இவை பிரகாசமாக எரியக்கூடியவை. ஆனால் இவற்றில் மூன்றிலொருபங்கு இப்போது சேதப்பட்டுப்போயிற்று. ஆகையினால் அவற்றவற்றில் மூன்றிலொருபங்கு இருளடைந்தது.

சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவை நமக்கு வெளிச்சத்தைக் கொடுக்கக்கூடியவை. கர்த்தருடைய கோபாக்கினையினால் இவற்றிற்குச் சேதமுண்டாயிற்று. கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பில், தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் நினைவு கூர்ந்து, சூரியனையும் சந்திரனையும், நட்சத்திரங்களையும் மொத்தமாக சேதப் படுத்தவில்லை. அவற்றில் மூன்றிலொரு பங்கு மாத்திரம் சேதமாவதற்கு அனுமதிக்கிறார். இந்தப் பிரபஞ்சத்தில் மொத்தம் இருளடைவதற்கு கர்த்தர் அனுமதிக்கவில்லை. மூன்றிலொருபங்கு மாத்திரம் இருளடைவதற்கு அனுமதிக்கிறார். இருளின் பாதிப்பு பகலிலும் இருக்கிறது. இரவிலும் இருக்கிறது. பகலில் மூன்றிலொருபங்கு பிரகாசமில்லாமல் போயிற்று. இரவிலும் அப்படியே, மூன்றிலொருபங்கு பிரகாசமில்லாமல் போயிற்று.

சுவிசேஷம் ஜனங்கள் மத்தியிலே பிரசங்கிக்கப்படுகிறது. கர்த்தருடைய வார்த்தை நம்முடைய ஆத்துமாவுக்கு வெளிச்சத்தைக் கொடுக்கும். சுவிசேஷத்தின் வசனங்களை நாம் ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், நம்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். தேவனோ கிருபையுள்ளவர். நம்மை நீதியாய் நியாயந்தீர்ப்பதற்கு முன்பாக நமக்கு எச்சரிப்புக்களைக் கொடுக்கிறார். தேவனுடைய நியாயத்தீர்ப்பு மனுஷருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடாது. அதற்காகவே தேவன் முன்னெச்சரிப் புகளைக் கொடுக்கிறார். ஒருவேளை தேவனுடைய நியாயத் தீர்ப்புக்கள் மனுஷருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கு மென்றால் அதற்கு மனுஷருடைய தப்பிதங்களே காரணம். மனுஷருடைய ஆச்சரியத்திற்கு தேவன் காரணரல்ல.

தேவன் தம்முடைய நியாயத் தீர்ப்பின்போது நீதியான கோபாக்கினையை வெளிப்படுத்துகிறார். மனுஷர் தங்கள் பாவத்தினால் பூரணமாய் அழிந்துபோகவேண்டும். தேவனோ நீதியுள்ளவராகவும், அதே வேளையில் கிருபை மிகுந்தவராகவும் இருக்கிறார். தம்முடைய முழுகோபத்தையும் இந்தப் பூமியின்மீது அவர் கொட்டிவிடுவதில்லை. தேவன் தம்முடைய கோபத்தைக் கட்டுப் படுத்துகிறார். கோபத்தினால் உண்டாகும் அழிவையும் கட்டுப்படுத்துகிறார். இதனால் தான் தூதர்கள் எக்காளம் ஊதியபோது, வானத்திலும் பூமியிலும் பூரண அழிவு உண்டாகாமல், மூன்றிலொருபங்கு மாத்திரமே அழிந்துபோகிறது.

மற்ற மூன்று எக்காள சத்தங்கள் வெளி 8:13

வெளி 8:13. பின்பு, ஒரு தூதன் வானத்தின் மத்தியிலே பறந்து வரக்கண்டேன்; அவன் மகா சத்தமிட்டு: இனி எக்காளம் ஊதப்போகிற மற்ற மூன்று தூதருடைய எக்காளசத் தங்களினால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ, (ஆபத்துவரும்) என்று சொல்லக்கேட்டேன்.

தேவனுக்கு முன்பாக ஏழுதூதர்கள் நிற்கிறார்கள். அவர்களுக்கு ஏழுஎக்காளங்கள் கொடுக்கப்படுகிறது. அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய எக்காளங்களை ஊதுகிறார்கள். இதுவரையிலும் நான்கு எக்காளங்கள் ஊதப்பட்டிருக்கிறது. இன்னும் மூன்று எக்காளங்கள் உள்ளது. அந்த மூன்று எக்காளங்களும் ஊதப்படும்போது, பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு எப்படிப்பட்ட ஆபத்து வரும் என்று முன்னெச்சரிப்பாகச் சொல்லப்படுகிறது.

ஒரு தூதன் வானத்தின் மத்தியிலே பறந்து வருகிறான். இவன் விரைவாக வருகிறான். இவனுடைய வேகத்தைக் காண்பிப்பதற்காகவே, இவன் பறந்து வருகிறான் என்று எழுதப்பட்டிருக்கிறது. இனி எக்காளம் ஊதப்போகிற மற்ற மூன்று தூதருடைய எக்காள சத்தங்களினால், பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு எப்படிப்பட்ட ஆபத்து வரும் என்று அந்தத் தூதன் சொல்லுகிறான். அவன் மகாசத்தமிட்டு, "பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு, ஐயோ, ஐயோ, ஐயோ" என்று சொல்லுகிறான்.

இதற்கு முன்பு உண்டான அழிவையும், சேதங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இனிமேல் உண்டாகப்போகிற அழிவும் சேதமும் மிகவும் அதிகமாயிருக்கும். இந்த பேரழிவை வலியுறுத்திச் சொல்லுவதற்காக, தூதன் மூன்றுமுறை, "ஐயோ" என்று சொல்லுகிறான். பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு மூன்று மடங்கு ஐயோக்கள் உண்டாகும்.

தேவனுடைய கோபம் நம்மீது கொஞ்சமாக வரும்போது, உடனே நாம் மனந்திரும்பி விடவேண்டும். நம்முடைய இருதயத்தைக் கடினப்படுத்தி, மனந்திரும்பாமல் இருப்போமென்றால், நம்மீது தேவனுடைய கோபம் அதிகமாய் வரும். கர்த்தர் நம்மை சிட்சிக்கும்போது, உடனே மனந்திரும்பிவிடுவது நமக்கு நல்லது. மனந்திரும்பாதவர்களுக்கு தண்டனை நிச்சயம் உண்டு. பாவத்தின் சம்பளம் மரணம். கிருபையின் காலத்தில் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும். நியாயத்தீர்ப்பின் காலத்தில் தேவனுடைய நீதி மாத்திரமே வெளிப்படும்.

9 அதிகாரம்

ஐந்தாம் தூதனும், ஆறாம் தூதனும் எக்காளம் ஊதுகிறார்கள். அதைத் தொடர்ந்து நடைபெறுகிற சம்பவங்கள் இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதுகிறான் (வெளி 9:1-12). ஆறாம் தூதன் எக்காளம் ஊதுகிறான் (வெளி 9:13-21).

ஐந்தாம் எக்காளம்
வெளி 9 : 1-4

வெளி 9:1. ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது வானத்திலிருந்து பூமியின்மேல் விழுந்த ஒரு நட்சத்திரத்தைக் கண்டேன்; அவனுக்குப் பாதாளக்குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது.

வெளி 9:2. அவன் பாதாளக்குழியைத் திறந்தான்; உடனே பெருஞ்சூளையின் புகையைப்போல அந்தக் குழியிலிருந்து புகை எழும்பிற்று; அந்தக் குழியின் புகையினால் சூரியனும் ஆகாயமும் அந்தகாரப்பட்டது.

வெளி 9:3. அந்தப் புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் புறப்பட்டுப் பூமியின்மேல் வந்தது; அவைகளுக்குப் பூமியிலுள்ள தேள்களின் வல்லமைக்கொப்பான வல்லமை கொடுக்கப்பட்டது.

வெளி 9:4. பூமியின் புல்லையும் பசுமையான எந்தப் பூண்டையும் எந்த மரத்தையும் சேதப்படுத்தாமல், தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரைமாத்திரம் சேதப்படுத்த அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது.

பரலோகத்திலே தேவனுக்கு முன்பாக ஏழுதூதர்கள் நிற்கிறார்கள். அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக ஒவ்வொரு தூதனும் தங்களுடைய எக்காளத்தை ஊதுகிறார்கள். இதுவரையிலும் நான்கு தூதர்கள் எக்காளம் ஊதி விட்டார்கள். இன்னும் மூன்று தூதர்கள் எக்காளம் ஊதப்போகிறார்கள். இப்போது ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதுகிறான்.

ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதினபோது வானத்திலிருந்து பூமியின்மேல் ஒரு நட்சத்திரம் விழுகிறது. அந்த நட்சத்திரம் ஒரு ஆள்தத்துவ பண்புள்ள நபராக இங்கு சொல்லப் பட்டிருக்கிறது. அவனுக்கு பாதாளக் குழியின் திறவுகோல் கொடுக்கப்படுகிறது. இந்தத் திறவுகோல் சாத்தானுடைய திறவு கோலாயிற்று. இந்தத் திறவு கோலால் பாதாளக்குழியைத் திறக்க முடியும். திறக்கப்பட்ட பாதாளக் குழியிலிருந்து அந்தகார சக்திகள் கிறிஸ்துவின் சபைக்கு விரோதமாக எழும்பி வருகிறார்கள்.

பாதாளத்தின் திறவுகோலைப் பெற்றுக்கொண்டவன் பாதாளக்குழியைத் திறக்கிறான். உடனே பெருஞ்சூளையின் புகையைப்போல அந்தக் குழியிலிருந்து புகை எழும்பிற்று. அந்தக் குழியின் புகையினால் சூரியனும் ஆகாயமும் அந்தகாரப்பட்டது. இது சாத்தானுடைய கிரியை. மனுஷர் மத்தியிலே வெளிச்சமும், தேவனைப்பற்றிய ஞானமும் இருப்பதை சாத்தான் தடைபண்ணிப்போடுகிறான். வெளிச்சத்தை நீக்கி அங்கு இருளைக் கொண்டுவருகிறான். இருள் வரும்போது அந்தகாரமுண்டாகும். இருளில் நாம் போகும் பாதை இன்னதென்று தெரியாமல் தடுமாறுவோம். தடுமாறுகிற ஆத்துமாக்களை சாத்தான் வஞ்சகமாகப் பிடித்து, அவர்களை தன்னுடைய பாதையிலே வழிநடத்திச் செல்லுவான். வஞ்சிக்கப்பட்ட ஆத்துமாக்களும், தாங்கள் யாரை பின்பற்றுகிறோம் என்பது தெரியாமல், சாத்தானைப் பின்பற்றுவார்கள்.

பாதாளக்குழி திறக்கப்பட்டபோது, அந்தக் குழியிலிருந்து புகை எழும்பிற்று. சூரியனும் ஆகாயமும் அந்தப் புகையினால் அந்தகாரப்பட்டது. அந்தப் புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் புறப்பட்டு பூமியின்மேல் வந்தது. தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரை சேதப்படுத்துகிற அதிகாரம் இந்த வெட்டுக்கிளிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவன் தாமே இவற்றிற்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். தேவன் எந்த அளவுக்கு அனுமதிக்கிறாரோ, அந்த அளவுக்கு மாத்திரமே அவைகளால் மனுஷரை வேதனைப்படுத்த முடியும்.

புகையிலிருந்து புறப்பட்டு வருகிற வெட்டுக்கிளிகளுக்கு பூமியிலுள்ள தேள்களின் வல்லமைக்கொப்பான வல்லமை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வல்லமையினால் இவை மனுஷரைச் சேதப்படுத்தும். இராணுவத்திலுள்ள சேனைகளைப்போல இவை பட்டயத்தாலும் அக்கினியினாலும் எல்லாவற்றையும் அழித்துப்போடாது. எல்லாவற்றையும் அழிக்கும் உத்தரவு இவற்றிற்குக் கொடுக்கப்படவில்லை. பூமியின் புல்லையும் பசுமையான எந்தப் பூண்டையும், எந்த மரத்தையும் இந்த வெட்டுக்கிளிகள் சேதப்படுத்தாது. ஏனெனில் இவற்றை சேதப்படுத்துகிற உத்தரவு இவற்றிற்குக் கொடுக்கப்படவில்லை.

கர்த்தருடைய பிள்ளைகள் தங்களுடைய நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திருக்கிறார்கள். துன்மார்க்கரோ தேவனுடைய முத்திரையைத் தரித்திருப்பதில்லை. தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரை மாத்திரம் சேதப்படுத்த இந்த வெட்டுக்கிளிகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது. மனுஷரைச் சேதப்படுத்தும்போது, வெட்டுக்கிளிகள் அவர்களுடைய நெற்றிகளைப் பார்க்கும். நெற்றிகளில் தேவனுடைய முத்திரை தரிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை.

தேவனுடைய முத்திரை தரிக்கப்படாதிருந்தால் அவர்களுக்கு வெட்டுக்கிளிகளினால் சேதமுண்டு. தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரை, இந்த வெட்டுக்கிளிகள், சேதப்படுத்தும். அவர்களை சேதப்படுத்துகிற உத்தரவு மாத்திரமே வெட்டுக்கிளிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களை கொலைசெய்யும்படிக்கு இந்த வெட்டுக்கிளிகளுக்கு உத்தரவு கொடுக்கப்படவில்லை.

ஐந்துமாதமளவும்
வெளி 9 : 5,6

வெளி 9:5. மேலும் அவர்களைக் கொலைசெய்யும்படிக்கு அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்படாமல், ஐந்துமாதமளவும் அவர்களை வேதனைப்படுத்தும்படிக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது; அவைகள் செய்யும் வேதனை தேளானது மனுஷரைக் கொட்டும்போது உண்டாகும் வேதனையைப் போலிருக்கும்.

வெளி 9:6. அந்நாட்களில் மனுஷர்கள் சாவைத் தேடியும் அதைக் காணாதிருப்பார்கள், சாக வேண்டுமென்று ஆசைப்படுவார்கள், சாவோ அவர்களுக்கு விலகி ஓடிப்போம்.

பாதாளக்குழி திறக்கப்பட்டவுடன் அதிலிருந்து புகை எழும்பிற்று. அந்தப் புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் புறப்பட்டு பூமியின்மேல் வருகிறது. இவற்றிற்கு சர்வ அதிகாரம் கொடுக்கப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட அளவு மாத்திரமே இவற்றிற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் இவற்றிற்கு கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரமும் நித்தியகாலத்திற்குரிய அதிகாரமல்ல. ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்குமே இவற்றிற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வெட்டுக்கிளிகள் ஐந்து மாதமளவும் தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரை வேதனைப்படுத்தும் உத்தரவு பெற்றிருக்கிறது. மிகவும் குறுகிய காலம்தான். ஐந்துமாதத்திற்குப் பின்பு இந்த வெட்டுக்கிளிகளுக்கு மனுஷரைச் சேதப்படுத்துகிற அதிகாரமில்லை.

வெட்டுக்கிளிகளினால் உண்டாகும் வேதனை ஐந்து மாதம் மாத்திரமே உண்டாகும். குறுகிய காலம்தான். ஆனாலும் வெட்டுக்கிளியினால் உண்டாகும் வேதனை மிகவும் கொடிய வேதனையாக இருக்கும். அவைகள் செய்யும் வேதனை தேளானது மனுஷரைக் கொட்டும்போது உண்டாகும் வேதனையைப்போலிருக்கும். ஐந்துமாத காலத்திற்கு வெட்டுக்கிளிகள் தேளைப்போல மனுஷரைக் கொட்டினால், அந்த வேதனையை மனுஷரால் தாங்கிக்கொள்ள முடியாது.

வெட்டுக்கிளிகளின் உருவம் வெளி 9 : 7-10

வெளி 9:7. அந்த வெட்டுக்கிளிகளின் உருவம் யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணப்பட்ட குதிரைகளுக்கு ஒப்பாயிருந்தது; அவைகளுடைய தலைகளின்மேல் பொன்மயமான கிரீடம் போன்றவைகளிருந்தன; அவைகளின் முகங்கள் மனுஷருடைய முகங்கள்போலிருந்தன.

வெளி 9:8. அவைகளுடைய கூந்தல் ஸ்திரீகளுடைய கூந்தல்போலிருந்தது; அவைகளின் பற்கள் சிங்கங்களின் பற்கள்போலிருந்தன.

வெளி 9:9. இருப்புக் கவசங்களைப்போல் மார்க்கவசங்கள் அவைகளுக்கு இருந்தன; அவைகளுடைய சிறகுகளின் இரைச்சல் யுத்தத்திற்கு ஓடுகிற அநேகங் குதிரைகள் பூண்ட இரதங்களின் இரைச்சலுக்கு ஒப்பாயிருந்தன.

வெளி 9:10. அவைகள் தேள்களின் வால்களுக்கு ஒப்பான வால்களையும், அந்த வால்களில் கொடுக்குகளையும் உடையவைகளாயிருந்தன; அவைகள் ஐந்து மாதமளவும் மனுஷரைச் சேதப்படுத்துவதற்கு அதிகாரம் உடையவைகளாயிருந்தன.

வெட்டுக்கிளிகள் அளவில் பெரியவையாகயிருக்கிறது. இவற்றின் உருவம் யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணப்பட்ட குதிரைகளுக் கொப்பாயிருக்கிறது. அவைகளுடைய தலைகளின்மேல் பொன்மயமான கிரீடம் போன்றவைகள் இருக்கின்றன. இது மெய்யான கிரீடமல்ல. இது கிரீடம் போன்ற ஒன்று. மாய்மாலமான கிரீடம். கிரீடம் அதிகாரத்திற்கு அடையாளம். வெட்டுக்கிளிகளிடம் மெய்யான அதிகாரமில்லை. ஆனால் தங்களிடம் அதிகாரம் இருப்பதுபோல இவை மாய்மாலம் பண்ணுகிறது.

வெட்டுக்கிளிகளின் முகங்கள் மனுஷருடைய முகங்கள் போலிருக்கிறது. இவை பிசாசுகளின் ஆவிகள். ஆனாலும் மனுஷரிடத்தில் காணப்படுகிற புத்தியும், ஞானமும் தங்களிடத்தில் இருப்பதுபோல மாய்மாலம் பண்ணுகின்றன.

வெட்டுக்கிளிகள் பார்ப்பதற்கு அழகாகயிருக்கிறது. தங்களை அழகாகக் காண்பிப்பதற்காக இவை தங்களை அலங்கரித்துக் கொள்கின்றன. இவைகளுடைய கூந்தல் ஸ்திரீகளுடைய கூந்தல்போலிருக்கிறது. ஸ்திரீகள் மென்மையான சுபாவமுள்ளவர்கள். வெட்டுக்கிளிகளுக்கு ஸ்திரீகளுடைய கூந்தல்போல இருப்பதினால், இவை தங்களை மென்மையான சுபாவமுள்ளவைபோல காண்பிக்கின்றன. ஆனால் மெய்யாகவே இந்த வெட்டுக்கிளிகள் கொடூரசுபாவமுள்ளவை. இவைகளின் பற்கள் சிங்கங்களின் பற்களைப்போலிருக்கின்றன.

வெட்டுக்கிளிகளுக்கு இருப்பு கவசங்களைப்போல மார்க்கவசங்கள் இருக்கின்றன. பூமியிலுள்ள வல்லமைகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு இவை இருப்பு கவசங்களை அணிந்திருக்கின்றன. இவை யுத்தத்திற்கு ஆயத்தமாய்ப் புறப்படுகின்றன.

வெட்டுக்கிளிகள் சாத்தானுடைய கருவிகள். இவை இந்த உலகத்திலே மகா இரைச்சலாய் ஓலமிடுகின்றன. இவைகளுடைய சிறகுகளின் இரைச்சல், யுத்தத்திற்கு ஓடுகிற, அநேகங்குதிரைகள் பூண்ட இரதங்களின் இரைச்சலுக் கொப்பாயிருக்கின்றது. தங்களுடைய இரைச்சலினால் இவை மனுஷரைப் பயமுறுத்தும்.

வெட்டுக் கிளிகளுக்கு ஸ்திரீகளுடைய கூந்தலைப்போல கூந்தல் இருக்கிறது. பார்ப்பதற்குத் தங்களை மென்மையானவர்களைப் போல காண்பித்துக்கொள்கின்றன. ஆனால் இது மாய்மாலமான தோற்றம். ஸ்திரீகளைப்போல இவை மென்மையாய்ப் பேசுவதில்லை. கம்பீரமாய்ப் பேசுகிறது. இவற்றின் சிறகுகள் பேரிரைச்சலாக கத்துகிறது. இரதங்களின் இரைச்சலுக்கொப்பாக இவை ஓலமிடுகிறது.

வெட்டுக்கிளிகளுடைய கூந்தல் ஸ்திரீகளுடைய கூந்தல்போலிருந்தாலும், இவற்றிற்கு தேள்களின் வால்களுக்கொப்பான வால்கள் இருக்கிறது. அந்த வால்களில் கொடுக்குகளும் இருக்கிறது. ஐந்துமாதமளவும் மனுஷரைச் சேதப்படுத்துவதற்கு இந்த வெட்டுக்கிளிகள் அதிகாரம் பெற்றிருக்கிறது. வெட்டுக்கிளிகளின் எண்ணிக்கை ஏராளம். இவற்றிற்கு ஒரு ராஜா இருக்கிறான்.

அபெத்தோன், அப்பொல்லியோன் வெளி 9 : 11,12

வெளி 9:11. அவைகளுக்கு ஒரு ராஜன் உண்டு, அவன் பாதாளத்தின் தூதன்; எபிரெயு பாஷையிலே அபெத்தோன் என்றும், கிரேக்கு பாஷையிலே அப்பொல்லியோன் என்றும் அவனுக்குப் பெயர்.

வெளி 9:12. முதலாம் ஆபத்து கடந்துபோயிற்று; இவைகளுக்குப்பின்பு இன்னும் இரண்டு ஆபத்துகள், இதோ, வருகிறது.

பாதாளத்திலிருந்து ஏராளமான வெட்டுக்கிளிகள் புறப்பட்டு வருகிறது. இவைகளுக்கு ஒரு ராஜன் உண்டு. இந்த ராஜா ஒரு தூதனாக இங்கு விவரிக்கப்பட்டிருக்கிறான். இவன் பரலோகத்தின் தூதனல்ல. இவன் பாதாளத்தின் தூதன். பாதாளத்திலே விழுந்துபோன தூதர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஆழம் காணமுடியாத பாதாளத்தில் விழுந்துவிட்டார்கள். இவனுடைய பெயர் அபெத்தோன். இது எபிரெய பாஷைப்பெயர். கிரேக்கு பாஷையிலே இவனுடைய பெயர் அப்பொல்லியோன். இந்தப் பெயருக்கு "அழிக்கிறவன்" என்பது பொருள். இதுதான் இவனுடைய வேலை. மனுஷரை இவன் அழித்துப்போடுவான். தன்னுடைய அழிக்கும் வேலையை இவன் சுறுசுறுப்பாய்ச் செய்கிறான்.

ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதியபோது இந்த ஆபத்து உண்டாயிற்று. ஆபத்து கடந்துபோயிற்று. இது முதலாம் ஆபத்து. இன்னும் இரண்டு எக்காளங்கள் ஊத வேண்டியதாயிருக்கிறது. ஆகையினால் இந்த முதலாம் ஆபத்துக்குப் பின்பு, இன்னும் இரண்டு ஆபத்துக்கள் வரப்போகிறது. ஆறாம் எக்காளம் ஊதப்படும்போது ஒரு ஆபத்தும், ஏழாம் எக்காளம் ஊதப்படும்போது மற்றும் ஒரு ஆபத்தும் வரும்.

ஆறாம் எக்காளம்
வெளி 9 : 13,14

வெளி 9:13. ஆறாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது தேவனுக்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின் நான்கு கொம்புகளிலுமிருந்து ஒரு சத்தந்தோன்றி,

வெளி 9:14. எக்காளத்தைப் பிடித்திருந்த ஆறாம் தூதனை நோக்கி: ஐபிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களையும் அவிழ்த்துவிடு என்று சொல்லக்கேட்டேன்.

ஆறாம் தூதன் எக்காளம் ஊதுகிறான். தேசங்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தமாயிருக்கிறது. அவருடைய கோபாக்கினையை அனுபவிப்பதற்கு தேசங்கள் பாத்திரமுள்ளவை களாயிருக்கிறது. தேவன் தம்முடைய கோபத்தை வெளிப்படுத்துவதற்கு ஒரு சிலரைத் தம்முடைய கருவிகளாகப் பயன்படுத்துகிறார். தேவனுடைய திட்டத்தின் பிரகாரம் அந்தக் கருவிகள் கட்டவிழ்த்துவிடப்படுகிறது.

ஆறாம் தூதன் எக்காளம் ஊதினபோது, தேவனுக்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின் நான்கு கொம்புகளிலுமிருந்து ஒரு சத்தம் தோன்றிற்று. அந்தச் சத்தம் ஆறாம் தூதனை நோக்கிப் பேசிற்று. அந்தச் சத்தம் அவனிடம் "ஐபிராத் என்னும் பெரிய நதியண்டையிலே கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களையும் அவிழ்த்துவிடு" என்று சொல்லிற்று. நான்கு தூதர்களும் அவிழ்த்துவிடப்படும் வரையிலும் அவர்கள் யாருக்கும் சேதம்பண்ண மாட்டார்கள். கர்த்தர் அனுமதி கொடுக்கும்போது மாத்திரமே அவர்கள் அவிழ்த்துவிடப்படுவார்கள். கர்த்தர் இப்போது இந்த நான்கு தூதர்களையும் அவிழ்த்துவிடுவதற்கு சித்தங்கொண்டிருக்கிறார்.

நான்கு தூதர்களும் அவிழ்த்துவிடப்பட்டார்கள்
வெளி 9:15

வெளி 9:15. அப்பொழுது மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொல்லும்படிக்கு ஒருமணிநேரத்திற்கும், ஒரு நாளுக்கும், ஒரு மாதத்திற்கும், ஒரு வருஷத்திற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருந்த அந்த நான்கு தூதர்களும் அவிழ்த்துவிடப்பட்டார்கள்.

தேவனுக்கு முன்பாகயிருந்த பொற்பீடத்தின் நான்கு கொம்புகளிலுமிருந்து தோன்றின சத்தத்தின் பிரகாரம், இந்த நான்கு தூதர்களும் அவிழ்த்துவிடப்படுகிறார்கள். மனுஷரில் மூன்றிலொரு பங்கை கொல்லும்படி இவர்களுக்கு அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிறது. தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகார வரம்புக்குட்பட்டுத்தான் இவர்கள் மனுஷரைக் கொல்லமுடியும். எல்லா மனுஷரையும் கொன்றுபோடுவதற்கு இவர்களுக்கு அதிகாரங்கொடுக்கப் படவில்லை. மனுஷரில் மூன்றிலொருபங்கை மாத்திரமே இந்த நான்கு தூதர்களால் கொல்ல முடியும்.

நான்கு தூதர்களுக்கும் நித்தியகால அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரமும் ஒரு காலவரம்புக்குட் பட்டிருக்கிறது. ஒரு மணி நேரத்திற்கும், ஒரு நாளுக்கும், ஒரு மாதத்திற்கும், ஒரு வருஷத்திற்கும் மாத்திரமே இவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த காலத்திற்கு மாத்திரமே இந்த நான்கு தூதர்களும் ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு மணி நேரம், ஒரு நாள், ஒரு மாதம், ஒரு வருஷம் என்பது தீர்க்கதரிசன வார்த்தைகள். இதைப் புரிந்துகொள்வதற்கு கடினமாகயிருந்தாலும், வேதபண்டிதர்கள் இதன் வியாக்கியானத்தை ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். இவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் மாத்திரமே அதிகாரம் கொடுக்கப்பட்டாலும், அந்தக் காலத்தில் இவர்கள் சீக்கிரமாய்ச் செயல்பட்டு, மனுஷரில் மூன்றிலொருபங்கை கொன்றுபோடுகிறார்கள்.

குதிரைச் சேனைகள்
வெளி 9 : 16-19

வெளி 9:16. குதிரைச்சேனைகளாகிய இராணுவங்களின் தொகை இருபது கோடியாயிருந்தது; அவைகளின் தொகையைச் சொல்லக்கேட்டேன்.

வெளி 9:17. குதிரைகளையும் அவைகளின் மேல், ஏறியிருந்தவர்களையும் நான் தரிசனத்தில் கண்டவிதமாவது; அவர்கள் அக்கினிநிறமும் நீலநிறமும் கந்தக நிறமுமான மார்க்கவசங்களையுடையவர்களாயிருந்தார்கள்; குதிரைகளுடைய தலைகள் சிங்கங்களின் தலைகளைப்போலிருந்தன; அவைகளுடைய வாய்களிலிருந்து அக்கினியும் புகையும் கந்தகமும் புறப்பட்டன.

வெளி 9:18. அவைகளுடைய வாய்களிலிருந்து புறப்பட்ட அக்கினி புகை கந்தகம் என்னும் இம்மூன்றினாலும் மனுஷரில் மூன்றிலொரு பங்கு கொல்லப்பட்டார்கள்.

வெளி 9:19. அந்தக் குதிரைகளின் வல்லமை அவைகளுடைய வாயிலேயும் வால்களிலேயும் இருக்கிறது; அவைகளுடைய வால்கள் பாம்புகளுக்கு ஒப்பானவைகளாயும், தலைகளுள்ளவை களாயுமிருக்கிறது, அவைகளாலே சேதப்படுத்துகிறது.

மனுஷரில் மூன்றிலொருபங்கை கொல்லும்படிக்கு நான்கு தூதர்களும் ஆயத்தமாக்கப் பட்டிருக்கிறார்கள். மனுஷரைக் கொல்லுகிற தங்கள் வேலையிலே இவர்கள் குதிரைச் சேனைகளாகிய இராணுவங்களைப் பயன்படுத்துகிறார்கள். கொல்லப்பட வேண்டிய ஜனங்கள் ஏராளமாயிருக்கிறார்கள். மொத்த மனுஷ ஜனத்தொகையில் மூன்றிலொருபங்கு கொல்லப்படவேண்டும். இதற்காக நான்கு தூதர்களும் குதிரைச் சேனைகளாகிய இராணுவங்களை பயன்படுத்துகிறார்கள்.

இவர்களுடைய தொகை இருபது கோடியாகும். குதிரைகளின் எண்ணிக்கை இருபது கோடியாக இருக்கும்போது, குதிரை வீரர்களின் எண்ணிக்கை எத்தனைபேராகஇருக்கும் என்பதை நாமே நிதானித்து அறிந்து கொள்ளவேண்டும். இந்தச் சேனையின் எண்ணிக்கை மிகவும் அதிகம். இவர்கள் திரள்கூட்டமான சேனையாகயிருக்கிறார்கள்.

குதிரைகளின்மேல் குதிரைவீரர்கள் ஏறியிருக்கிறார்கள். அவர்கள் அக்கினி நிறமும் நீலநிறமுடையவர்கள். அவர்களுக்கு கந்தக நிறமான மார்க்கவசங்கள் இருக்கிறது. குதிரைகளுடைய தலைகள் சிங்கங்களுடைய தலைகளைப் போலிருக்கிறது. குதிரைகளுடைய வாய்களிலிருந்து அக்கினியும், புகையும், கந்தமும் புறப்படுகிறது. அவைகளுடைய வாயிலிருந்து புறப்பட்ட அக்கினி, புகை, கந்தகம் என்னும் இம்மூன்றினாலும் மனுஷரில் மூன்றிலொருபங்கு கொல்லப்படுகிறார்கள்.

இருபதுகோடி குதிரைகளுக்கும் வல்லமையிருக்கிறது. குதிரைகளின் வல்லமை அவைகளுடைய வாயிலேயும் வால்களிலேயும் இருக்கிறது. அவைகளுடைய வால்கள் பாம்புகளுக் கொப்பானவைகளாயிருக்கிறது. வால்களில் தலைகளும் இருக்கிறது. குதிரைகள் தங்களுடைய வால்களாலே மனுஷரைச் சேதப்படுத்துகிறது.

மனந்திரும்பவில்லை
வெளி 9 : 20,21

வெளி 9:20. அப்படியிருந்தும், அந்த வாதைகளால் கொல்லப்படாத மற்ற மனுஷர்கள் பேய்களையும், பொன் வெள்ளி செம்பு கல்மரம் என்பவைகளால் செய்யப் பட்டவைகளாயும் காணவும் கேட்கவும் நடக்கவு மாட்டாதவைகளாயுமிருக்கிற விக்கிரகங்களையும் வணங்காத படிக்குத் தங்கள் கைகளின் கிரியைகளை விட்டு மனந்திரும்பவுமில்லை;

வெளி 9:21. தங்கள் கொலை பாதகங்களையும், தங்கள் சூனியங்களையும், தங்கள் வேசித்தனங்களையும், தங்கள் களவுகளையும் விட்டு மனந்திரும்பவுமில்லை.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு மனுஷர்மீது வருகிறது. மனுஷரில் மூன்றிலொருபங்கு கொல்லப் படுகிறார்கள். மீதமுள்ளோர் மாத்திரமே உயிரோடிருக்கிறார்கள். உயிரோடிருக்கிறவர்கள் தேவனுடைய கோபாக்கினையைப் பார்க்கிறார்கள். மனுஷர்மீது ஆக்கினை வருவதையும் பார்க்கிறார்கள். மனுஷர்கள் கொல்லப்படுவதைப் பார்க்கிறார்கள். ஆனாலும் உயிரோடிருக்கிறவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்ப மறுத்துவிடுகிறார்கள். அவர்கள் தங்கள் பொல்லாத கிரியைகளை விட்டு மனந்திருந்தவில்லை. தங்கள் கொலைப்பாதகங்களையும், தங்கள் சூனியங்களையும், தங்கள் வேசித்தனங்களையும், தங்கள் களவுகளையும் விட்டு மனந்திரும்பவில்லை.

மனுஷரில் மூன்றிலொருபங்கு தேவனுடைய வாதையினால் கொல்லப்படுவதை, கொல்லப்படாத மற்ற மனுஷர்கள் பார்க்கிறார்கள். பார்த்தும் அவர்கள் கர்த்தரை விசுவாசிக்கவில்லை. இயேசுகிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராகவும், ஆண்டவராகவும் அங்கீகரிக்கவில்லை. அவர்கள் ஒன்றான மெய்த்தேவனை ஆராதிக்கவுமில்லை. உண்மையான தேவனை வணங்குவதற்குப் பதிலாக, அவர்கள் பேய்களையும், பொன் வெள்ளி செம்பு கல் மரம் என்பவைகளால் செய்யப்பட்ட விக்கிரங்களையும் வணங்குகிறார்கள். இந்த விக்கிரகங்கள் காணவும், கேட்கவும், நடக்கவும் மாட்டாதவைகள். அப்படியிருந்தும் கொல்லப்படாத மற்ற மனுஷர்கள் ஜீவனுள்ள தேவனை வணங்குவதற்குப் பதிலாக, ஜீவனில்லாத விக்கிரகங்களை வணங்குகிறார்கள்.

மனுஷருடைய பாவத்தினிமித்தமாகவே கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். அவர்களுடைய துன்மார்க்கத்தினிமித்தமாய், மனுஷரில் மூன்றிலொருபங்கை கொன்றுபோட அனுமதிகொடுக்கிறார். தங்களுக்கு கடுமையான தண்டனை வந்தாலும், மனுஷர்கள் தங்கள் பழைய பாவஜீவியத்தில் தொடர்ந்து நிலைத்திருக்கிறார்கள். பரலோகத்திலிருந்து தேவகோபாக்கினை அவர்களுக்கு விரோதமாக வந்திருக்கிறது. ஆனால் பூமியிலுள்ள மனுஷரோ அதைப் பற்றி அக்கரை காண்பிக்கவில்லை. தங்கள் பாவங்களிலிருந்து அவர்கள் மனந்திரும்பவுமில்லை.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு நம்மீது வரும்போது நாம் உடனே மனந்திரும்பிவிடவேண்டும். நம்முடைய இருதயத்தைக் கடினப்படுத்தக்கூடாது. இருதயத்தைக் கடினப்படுத்தி, மனந்திரும்பாத பாவிகள் தங்களுக்கு அழிவை வருவித்துக்கொள்வார்கள். கர்த்தராகிய தேவன் நீதியுள்ள நியாயாதிபதி. அவர் நமக்கு கிருபையைக் காண்பிக்கும்போது, நாம் தேவகிருபையைப் பற்றிக்கொள்ள வேண்டும். மனந்திரும்பவேண்டும். இரட்சிக்கப்பட வேண்டும். தேவகோபாக்கினையிலிருந்து தப்பித்துக் கொள்ளவேண்டும். துணிகரமாகப் பாவம் செய்யக்கூடாது.

10 அதிகாரம்

அப்போஸ்தலர் யோவான் பலமுள்ள வேறொரு தூதனைக் காண்கிறார். திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகம் அந்த தூதனுடைய கையில் இருக்கிறது (வெளி 10:1-3). ஏழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழக்குகிறது (வெளி 10:4). சமுத்திரத்தின்மேலும் பூமியின்மேலும் நிற்கிற தூதன், வானத்திற்கு நேராக தன் கையை உயர்த்தி ஆணையிடுகிறார் (வெளி 10:5-7). அப்போஸ்தலர் யோவானுக்குக் கொடுக்கப்படுகிற கட்டளை (வெளி 10:8-11).

பலமுள்ள வேறொரு தூதன் வெளி 10 : 1-4

வெளி 10:1. பின்பு, பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கிவரக் கண்டேன்; மேகம் அவனைச் சூழ்ந்திருந்தது, அவனுடைய சிரசின்மேல் வானவில்லிருந்தது, அவனுடைய முகம் சூரியனைப் போலவும், அவனுடைய கால்கள் அக்கினி ஸ்தம்பங்களைப்போலவும் இருந்தது.

வெளி 10:2. திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகம் அவன் கையில் இருந்தது; தன் வலது பாதத்தைச் சமுத்திரத்தின் மேலும், தன் இடதுபாதத்தைப் பூமியின் மேலும் வைத்து,

வெளி 10:3. சிங்கம் கெர்ச்சிக்கிறது போல மகாசத்தமாய் ஆர்ப்பரித்தான்; அவன் ஆர்ப்பரித்தபோது ஏழு இடிகளும் சத்திமிட்டு முழங்கின.

வெளி 10:4. அவ்வேழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழங்கினபோது, நான் எழுத வேண்டுமென்றிருந்தேன். அப்பொழுது ஏழு இடிமுழக்கங்கள் சொன்னவைகளை நீ எழுதாமல் முத்திரைபோடு என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்.

அப்போஸ்தலர் யோவானுக்கு பரலோகத்திலுள்ள ஒவ்வொரு சம்பவங்களையும் தரிசிக்கிற சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கி வருகிறார். அந்தத் தூதனை யோவான் காண்கிறார். அந்தத் தூதனை மேகம் சூழ்ந்திருக்கிறது. தூதனுடைய முகம் சூரியனைப்போலவும், அவருடைய கால்கள் அக்கினி ஸ்தம்பங்களைப் போலவும் இருக்கிறது.

தூதன் தன் வலதுபாதத்தை சமுத்திரத்தின்மேலும், தன் இடது பாதத்தை பூமியின் மேலும் வைத்திருக்கிறார். அவருடைய கையில் திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகம் இருக்கிறது. இந்தப் புஸ்தகம் ஒருவேளை இதற்கு முன்பு சொல்லப்பட்ட முத்திரிக்கப்பட்ட புஸ்தகமாக இருக்கலாமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். அந்தப் புஸ்தகத்தின் முத்திரைகள் இப்போது உடைக்கப்பட்டு, அது இப்போது திறக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தைகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். அவையெல்லாம் நிச்சயமாய் ஏற்றக்காலத்தில் நிறைவேறும்.

பலமுள்ள அந்த வேறொரு தூதன், சிங்கம் கெர்ச்சிக்கிறதுபோல மகா சத்தமாய் ஆர்ப்பரிக்கிறார். அந்தத் தூதன் ஆர்ப்பரித்தபோது ஏழுஇடிகளும் சத்தமிட்டு முழங்குகிறது. தேவனுடைய சிந்தையை அறிவதற்கு ஏழுவழிகள் உள்ளன. அவை பரிசுத்தமான வழிகள். அதே வேளையில் அந்த வழிகள் பயங்கரமானவையாகவும் இருக்கும்.

அப்போஸ்தலர் யோவான் ஏழு இடிகளும் சத்தமிட்டு முழங்குகிறதைக் கேட்கிறார். அப்பொழுது யோவானுக்கு எழுதவேண்டும் என்னும் விருப்ப முண்டாயிற்று. அவர் தான் பார்த்ததையும், கேட்டதையும் எழுதுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார். அப்போது யோவானுக்கு வானத்திலிருந்து ஒரு சத்தமுண்டாயிற்று. அந்தத் சத்தத்தை யோவான் கவனித்துக் கேட்கிறார். "ஏழு இடிமுழக்கங்கள் சொன்னவைகளை நீ எழுதாமல் முத்திரைபோடு" என்று அந்தச் சத்தம் யோவானுக்குச் சொல்லிற்று. அந்த இரகசியத்தை எழுதுவதற்கு இன்னும் ஏற்றகாலம் வரவில்லை. காலம் நிறைவேறும் போது, தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாக, தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிற காரியங்களெல்லாம் ஒவ்வொன்றாய் நிறைவேறும்.

தேவரகசியம் நிறைவேறும்
வெளி 10 : 5-7

வெளி 10:5. சமுத்திரத்தின்மேலும் பூமியின்மேலும் நிற்கிறதாக நான் கண்ட தூதன், தன் கையை வானத்திற்கு நேராக உயர்த்தி:

வெளி 10:6. இனி காலம் செல்லாது; ஆனாலும் தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தபடி, ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறதுபோது தேவரகசியம் நிறைவேறும் என்று,

வெளி 10:7. வானத்தையும் அதிலுள்ளவைகளையும், பூமியையும் அதிலுள்ளவைகளையும், சமுத்திரத்தையும் அதிலுள்ளவைகளையும் சிருஷ்டித்தவரும், சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவருமானவர்மேல் ஆணையிட்டுச் சொன்னான்.

வானத்திலிருந்து இறங்கி வந்த பலமுள்ள வேறொரு தூதன், தான் சொன்னவற்றை தேவன் மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறார். பலமுள்ள தூதன் சமுத்திரத்தின் மேலும், பூமியின்மேலும் நிற்கிறார். அவருடைய வலதுபாதம் சமுத்திரத்தின் மேலும், அவருடைய இடதுபாதம் பூமியின்மேலும் நிற்கிறது. அந்தத் தூதன் தன்னுடைய கையை வானத்திற்கு நேராக உயர்த்தி ஆணையிடுகிறார்.

"இனி காலம் செல்லாது. சுவிசேஷத்திலுள்ள தேவரகசியம் நிறைவேறும்" என்று தூதன் ஆணையிடுகிறார். தேவரகசியம் நிறைவேறுவதில் இனிமேல் காலதாமதம் ஏற்படாது. இந்தச் சுவிசேஷத்தைத் தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்கு அறிவித்திருக்கிறார்.

வானத்திலிருந்து இறங்கி வந்த தூதன், இந்தத் தேவரகசியம் நிறைவேறும் காலத்தையும் முன்னறிவிக்கிறார். ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே, அவன் எக்காளம் ஊதப்போகிறபோது, சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிற தேவரகசியம் நிறைவேறும். இந்த ரகசியம் நிறைவேறுவதற்கு இதற்கு மேல் காலதாமதம் உண்டாகாது. தேவனுடைய ரகசியம் நிறைவேறும்போது, அதற்குப் பின்பு ஒரு காலமும் இராது. எல்லா காலமும் முடிந்துபோகும்.

வானத்திலிருந்து இறங்கி வந்த தூதன், தான் சொன்ன வார்த்தைகளை தேவன்மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறார். தேவனைப்பற்றி சொல்லும் போது அவருடைய சர்வவல்லமையையும், சிருஷ்டிக்கும் வல்லமையையும் விசேஷமாக எடுத்துச் சொல்லுகிறார். கர்த்தர் வானத்தையும் அதிலுள்ளவைகளையும், பூமியையும் அதிலுள்ளவைகளையும், சமுத்திரத்தையும் அதிலுள்ளவைகளையும் சிருஷ்டித்தவர். அவரே சர்வசிருஷ்டிகர். தேவன் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவர். அப்பேற்பட்ட சர்வவல்லமையுள்ள தேவன்மேல் வானத்திலிருந்து இறங்கி வந்த தூதன் ஆணையிட்டுச் சொல்லுகிறார்.

சிறுபுஸ்தகம்
வெளி 10 : 8,9

வெளி 10:8. நான் வானத்திலிருந்து பிறக்கக்கேட்ட சத்தம் மறுபடியும் என்னுடனே பேசி: சமுத்திரத்தின் மேலும் பூமியின் மேலும் நிற்கிற தூதனுடைய கையிலிருக்கும் திறக்கப்பட்ட சிறு புஸ்தகத்தை நீ போய் வாங்கிக்கொள் என்று சொல்ல,

வெளி 10:9. நான் தூதனிடத்தில் போய்: அந்தச் சிறு புஸ்தகத்தை எனக்குத் தாரும் என்றேன். அதற்கு அவன்: நீ இதை வாங்கிப் புசி; இது உன் வயிற்றுக்குக் கசப்பாயிருக்கும், ஆகிலும் உன் வாய்க்கு இது தேனைப்போல மதுரமாயிருக்கும் என்றான்.

வானத்திலிருந்து இறங்கி வந்த தூதன் சமுத்திரத்தின்மேலும் பூமியின்மேலும் நிற்கிறார். அவர் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிற தேவன்மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறார். அப்போஸ்தலர் யோவான் அந்தத் தூதனை தரிசிக்கிறார். அவர் சொன்ன வார்த்தைகளைக் கவனித்துக் கேட்கிறார். இந்தத் தூதன் வானத்திற்கு நேராக தன் கையை உயர்த்தி பேசுவதற்கு முன்பாக, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. அந்தச் சத்தம் யோவானிடம், "ஏழுஇடிமுழக்கங்கள் சொன்னவைகளை நீ எழுதாமல் முத்திரைபோடு" (வெளி 10:4) என்று சொல்லிற்று. அந்தச் சத்தம் இப்போது மறுபடியும் யோவானோடு பேசிற்று.

வானத்திலிருந்து இறங்கி வந்து, சமுத்திரத்தின்மேலும் பூமியின்மேலும் நிற்கிற தூதனுடைய கையில் திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகம் இருக்கிறது. அந்தப் புஸ்தகத்தை போய் வாங்கிக்கொள்ளுமாறு, வானத்திலிருந்து பிறந்த சத்தம் யோவானிடம் சொல்லிற்று. யோவான் அந்தச் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, சமுத்திரத்தின்மேலும் பூமியின்மேலும் நிற்கிற தூதனிடத்தில் போய், "அந்தச் சிறு புஸ்தகத்தை எனக்குத் தாரும்" என்று கேட்கிறார்.

அந்தத் தூதன் யோவானிடம், "நீ இதை வாங்கி புசி" என்று சொல்லுகிறார். ஏழுஇடிகளும் தங்கள் சத்தங்களை முழங்கினபோது, யோவான் அதை எழுதவேண்டுமென்றிருந்தார் (வெளி 10:4). அப்போது வானத்திலிருந்து ஒரு சத்தம் அவரை எழுதவிடாமல் தடைபண்ணிற்று.

யோவான் தேவரகசியங்களை எழுதுவதற்கு முன்பாக, அந்த ரகசியங்களை அவர் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். தேவனுடைய சத்தியங்களைக் குறித்த தெளிந்த ஞானம் அவருக்கு இருக்கவேண்டும். தனக்குப் புரியாத ஒன்றை யோவான் எழுதக்கூடாது. ஆகையினால்தான், சமுத்திரத்தின்மேலும் பூமியின்மேலும் நிற்கிற தூதன், யோவானிடம், "நீ இந்தப் புஸ்தகத்தை வாங்கிப் புசி" என்று சொல்லுகிறார்.

யோவான் எழுதுவதற்கு முன்பாக, அந்தப் புஸ்தகத்தை முழுவதுமாகப் படிக்க வேண்டும். அதில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற தேவ ரகசியங்கள் யோவானுடைய இருதயத்தில் நிரம்பியிருக்கவேண்டும். சத்திய வசனம் ஆவிக்குரிய போஜனம். சரீரப்பிரகாரமான போஜனத்தைப் புசிப்பதுபோல, ஆவிக்குரிய போஜனத்தையும் புசிக்கவேண்டும்.

திறக்கப்பட்ட சிறு புஸ்தகத்தை சுவைக்கும்போது, அதன் சுவை எப்படியிருக்கும் என்பதையும் தூதன் யோவானுக்குச் சொல்லுகிறார். அந்தப் புஸ்தகம் யோவானுடைய வயிற்றுக்கு கசப்பாயிருக்கும். ஆனாலும் அவருடைய வாய்க்கு அது தேனைப்போல மதுரமாயிருக்கும். யோவான் திறக்கப்பட்ட அந்தச் சிறு புஸ்தகத்திலுள்ள தீர்க்க தரிசனங்களையெல்லாம் தியானித்து, அவற்றின் தாற்பரியங்களை புரிந்து கொள்ளும் போது, அதிலுள்ள சத்தியங்கள் அவருக்கு மிகவும் கசப்பாயிருக்கும். இனிமேல் நடைபெறப் போவதாக முன்னறிவிக்கப்பட்டிருக்கிற சம்பவங்களெல்லாம் மிகவும் பயங்கரமானதாகயிருக்கும். அந்தச் சம்பவங்கள் நடைபெறும்போது மனதிற்கு மகிழ்ச்சி இருக்காது. பயங்கரமான சம்பவம் இனிக்காது. அது கசப்பாகவே இருக்கும்.

அப்போஸ்தலர் யோவான்
வெளி 10 : 10-11

வெளி 10:10. நான் அந்தச் சிறு புஸ்தகத்தைத் தூதனுடைய கையிலிருந்து வாங்கி, அதைப் புசித்தேன்; என் வாய்க்கு அது தேனைப்போல் மதுரமாயிருந்தது; நான் அதைப் புசித்தவுடனே என் வயிறு கசப்பாயிற்று.

வெளி 10:11. அப்பொழுது அவன் என்னை நோக்கி: நீ மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், ராஜாக்களையுங் குறித்துத் தீர்க்கதரிசனஞ் சொல்ல வேண்டும் என்றான்.

அப்போஸ்தலர் யோவான் தூதனுடைய கையிலிருந்து அந்தச் சிறு புஸ்தகத்தை வாங்குகிறார். வானத்திலிருந்து பிறந்த சத்தம் தனக்குச் சொன்னதுபோலவே அந்தச் சிறு புஸ்தகத்தை தூதனுடைய கையிலிருந்து வாங்கிக்கொள்கிறார். தூதன் அந்தப் புஸ்தகத்தைக் குறித்து யோவானுக்கு மேலும் ஒரு கட்டளையைக் கொடுக்கிறார். யோவான் அந்தப் புஸ்தகத்தை வாங்கி புசிக்கவேண்டுமென்பதுதான் அந்தக் கட்டளை. யோவானும் தூதனுடைய வார்த்தையின் பிரகாரம், அந்தப் புஸ்தகத்தை அவனுடைய கையிலிருந்து வாங்கி அதைப் புசிக்கிறார். தூதன் சொன்ன பிரகாரமாக, அந்தப் புஸ்தகம் யோவானுடைய வாய்க்கு தேனைப்போல மதுரமாயிருக்கிறது. யோவான் அந்தப் புஸ்தகத்தைப் புசித்தவுடனே, அவருடைய வயிறு கசப்பாயிற்று.

யோவானுடைய சொந்த ஆர்வத்தை தீர்த்துவைப்பதற்காக தீர்க்கதரிசன புஸ்தகம் அவருக்குக் கொடுக்கப்படவில்லை. மனுஷருடைய ஆசையை நிறைவேற்றுவது தீர்க்கதரிசனத்தின் நோக்கமல்ல. யோவான் தூதனுடைய கையிலிருந்து சிறுபுஸ்தகத்தை வாங்கி புசித்தபோது, அந்தத் தூதன் யோவானுக்கு மேலும் ஒரு கட்டளை கொடுக்கிறார். இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வார்த்தைகளை யோவான் இந்த உலகத்திற்கு அறிவிக்கவேண்டும். யோவான் மாத்திரம் அதைப் புசித்தால் போதாது. அந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வார்த்தைகள் எல்லா ஜனங்களுக்கும் அறிவிக்கப்படவேண்டும்.

தீர்க்கதரிசனத்தில் தேவனுடைய சித்தமும், அவருடைய சிந்தையும் மறைந்திருக்கிறது. தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வார்த்தைகளை அறிவிக்கிறார்கள். மனுஷரைக்குறித்த தேவனுடைய சித்தம் என்ன என்பதை தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்குத் தெளிவுபடுத்துகிறார்கள். முழு உலகத்திற்கும் தேவனுடைய வார்த்தை அறிவிக்கப்படவேண்டும்.

யோவான் மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், ராஜாக்களையும் குறித்து தீர்க்கதரிசனம் சொல்லவேண்டும். கர்த்தருடைய தீர்க்கதரிசன வார்த்தைகள் எல்லா பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும். சர்வசிருஷ்டிகளுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டும்.

சகல ஜனங்களும், சகல ஜாதியாரும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தங்கள் காதுகளால் கேட்கவேண்டும். அவற்றை தங்கள் இருதயத்தில் விசுவாசிக்க வேண்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தங்கள் ஆத்துமாவுக்கு இரட்சகராகவும், தங்கள் ஜீவனுக்கு ஆண்டவராகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும். சர்வசிருஷ்டியும், தங்களை சிருஷ்டித்த சர்வசிருஷ்டிகராகிய தேவனை துதிக்கவேண்டும்.

11 அதிகாரம்

அப்போஸ்தலர் யோவானுக்கு கைக்கோலுக்கு ஒப்பான ஒரு அளவுகோல் கொடுக்கப்படுகிறது. இந்த அளவுகோலினால் யோவான் தேவனுடைய ஆலயத்தை அளந்து பார்க்கவேண்டும் (வெளி 11:1,2). தேவனுடைய இரண்டு சாட்சிகள் (வெளி 11:3-13). ஏழாம் எக்காளம் (வெளி 11:14-19).

அளவுகோல்
வெளி 11 : 1,2

வெளி 11:1. பின்பு கைக்கோலுக்கு ஒப்பான ஒரு அளவுகோல் என்னிடத்தில் கொடுக்கப்பட்டது. அப்பொழுது தேவதூதன் நின்று, என்னை நோக்கி: நீ எழுந்து, தேவனுடைய ஆலயத்தையும், பலி பீடத்தையும், அதில் தொழுது கொள்ளுகிறவர்களையும் அளந்துபார்.

வெளி 11:2. ஆலயத்திற்குப் புறம்பே இருக்கிற பிராகாரம் புறஜாதியாருக்குக் கொடுக்கப்பட்ட படியால் அதை அளவாமல் புறம்பாக்கிப்போடு; பரிசுத்த நகரத்தை அவர்கள் நாற்பத்திரண்டு மாதமளவும் மிதிப்பார்கள்.

அப்போஸ்தலர் யோவானுக்கு ஒரு அளவுகோல் கொடுக்கப்படுகிறது. இது கைக்கோலுக்கு ஒப்பாயிருக்கிறது. அப்பொழுது ஒரு தேவதூதன் யோவானுக்கு அருகிலே நிற்கிறார். அவர் யோவானைப்பார்த்து, "நீ எழுந்து, தேவனுடைய ஆலயத்தையும், பலிபீடத்தையும், அதில் தொழுது கொள்ளுகிறவர்களையும் அளந்து பார்" என்று சொல்லுகிறார்.

தேவதூதன் யோவானிடத்தில் சொன்ன இந்தச் சம்பவம்போலவே, எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புஸ்தகத்திலும் ஒரு சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது. எசேக்கியேல் தேவனுடைய ஆலயத்தைத் தரிசித்தார். எசேக்கியேல் தரிசித்த ஆலயத்தின் அளவு அளக்கப்பட்டது (எசே 40:3). அந்த சம்பவம் போலவே, இங்கு தேவதூதன் யோவானிடம், தேவாலயத்தை அளந்து பார்க்குமாறு சொல்லுகிறார்.

கர்த்தருடைய கோபாக்கினை பூமியின்மீது வரப்போகிறது. உலகமெங்கும் பேரழிவு உண்டாகப் போகிறது. வரப்போகிற நியாயத் தீர்ப்பைக் குறித்து கர்த்தர் ஏற்கெனவே முன்னறிவித்திருக்கிறார். துன்மார்க்கருக்கு மாத்திரமே அழிவுவரும். கர்த்தருடைய பிள்ளைகளோ அந்த அழிவுகளிலிருந்து பாதுகாக்கப்படுவார்கள். தேவதூதன் யோவானிடம், தேவனுடைய ஆலயத்தையும், பலிபீடத்தையும், அதில் தொழுதுகொள்கிறவர்களையும் அளந்து பார்க்குமாறு சொல்லுகிறார். இவர்கள் தேவனால் பாதுகாக்கப்படுவார்கள். இவர்களுக்கு ஒரு சேதமும் உண்டாகாது. இதை அளந்து பார்த்து உறுதிசெய்துகொள்ளலாம்.

தேவதூதன் யோவானிடம் ஆலயத்தை அளப்பது பற்றிச் சொல்லும் போது, அதை எப்படி அளக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார். தேவனுடைய ஆலயத்தை அளக்கவேண்டும். ஆலயம் என்பது பொதுவாக சுவிசேஷ சபையைக் குறிக்கிற வார்த்தை. புதிய ஏற்பாட்டுக்காலத்திலுள்ள எல்லா சபைகளையும் இந்த வார்த்தை பொதுவாகக் குறிப்பிடுகிறது.

யோவான் தேவனுடைய ஆலயத்தை அளக்கும் போது அதிலுள்ள பலிபீடத்தையும் அளக்க வேண்டும். சபைகளில் உண்மையான பலிபீடம் இருக்க வேண்டும். விசுவாசிகள் பலிபீடத்தண்டையில் வந்து, தங்களை கர்த்தரிடத்தில் ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும்.

யோவான் தேவனுடைய ஆலயத்தையும், பலிபீடத்தையும் அளக்கும் போது, அதில் தொழுது கொள்கிறவர்களையும் அளந்து பார்க்க வேண்டும். அவர்களுடைய இருதயத்தை ஆராய்ந்து அளந்து பார்க்கவேண்டும். அவர்கள் தேவனுடைய ஆலயத்திலே கர்த்தரை மெய்யாகவே மகிமைப்படுத்துகிறார்களா என்பதை அளந்து பார்க்கவேண்டும். தேவனுடைய வார்த்தை அவர்களுடைய ஜீவியத்தை ஆளுகை செய்கிறதா என்பதையும் அளந்து பார்க்கவேண்டும். ஆலயத்திலே வந்து தொழுதுகொள்ளுகிறவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கிறார்களா என்பதையும், அவர்கள் கர்த்தருக்கு சாட்சியாக ஜீவிக்கிறார்களா என்பதையும் அளந்து பார்க்கவேண்டும்.

தேவனுடைய ஆலயத்தை அளக்கும் போது, தேவாலயத்திலுள்ள எந்தப் பகுதிகளை அளக்கவேண்டுமென்றும், எந்தப் பகுதிகளை அளக்கக்கூடாது என்றும் தேவதூதன் யோவானுக்குச் சொல்லுகிறார். தேவாலயத்திலே புறம்பேயிருக்கிற வெளிப்பிரகாரம், புறஜாதியாருக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. யோவான் வெளிப் பிரகாரத்தை அளக்கக்கூடாது. அதைப் புறம்பாக்கிப்போடவேண்டும்.

ஏரோது ராஜா தேவாலயத்தை செப்பனிட்டு புதுப்பித்துக் கட்டினார். அப்போது ஏற்கெனவே இருந்த தேவாலயத்தில், மேலும் சில பகுதிகளை சேர்த்துக் கட்டினார். தேவாலயத்திலுள்ள வெளிப்பிரகாரம் ஏரோது ராஜாவினால் கட்டப்பட்டது. இது தேவாலயத்திற்குரிய தல்ல. வெளிப்பிரகாரத்தை புறஜாதியாரின் பிரகாரம் என்று பேரிட்டு அழைத்தார்கள். வெளிப்பிரகாரத்தை தேவாலயத்தின் ஒரு பகுதியாக கர்த்தர் அங்கீகரிக்கவில்லை. கர்த்தர் வெளிப்பிரகாரத்தை பரிசுத்தமான பகுதியாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகையினால் ஆலயத்திற்குப் புறம்பேயிருக்கிற வெளிப்பிரகாரத்தை அளவாமல், அதைப் புறம்பாக்கிப்போடுமாறு தேவதூதன் யோவானிடம் சொல்லுகிறார்.

தேவனுடைய ஆலயமும், எருசலேம் நகரமும் உபத்திரவத்திற்குட்படுத்தப்படும். இந்த உபத்திரவம் நித்திய காலமாயிருக்காது. உபத்திரவப்படுத்து கிறவர்கள் தேவாலயத்தையும், பரிசுத்த நகரமாகிய எருசலேமையும் நாற்பத்திரண்டு மாதமளவும் மிதிப்பார்கள். உபத்திரவம் இந்தக் குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரமே இருக்கும்.

வெளிப்பிரகாரத்தில் ஆராதிக்கிறவர்கள் கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கமாட்டார்கள். அவர்களுடைய இருதயத்தில் உண்மைக்குப் பதிலாக மாய்மாலம் இருக்கிறது. மாய்மாலமான ஆராதனையைகர்த்தர் அங்கீகரிப்பதில்லை. தேவனுடைய ஆலயத்தில் உட்பிரகாரத்தில் ஆராதிக்கிறவர்களை மாத்திரமே கர்த்தர் அங்கீகரிக்கிறார். திரைச்சீலைக்குள்ளே ஆராதிக்கிறவர்கள் மாத்திரமே கர்த்தருடைய சுதந்தரத்திற்குரியவர்கள். திரைச் சீலைக்கு வெளியே, வெளிப்பிரகாரத்திலிருந்து ஆராதிக்கிறவர்கள் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள்.

வெளிப்பிரகாரத்தில் ஆராதிக்கிற புறஜாதியார்கள், கர்த்தரை ஆராதித்தாலும் அவர்கள் மாய்மாலமான இருதயத்தோடு ஆராதிக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவதில்லை. தேவனுடைய பரிசுத்த நகரத்தை பரிசுத்தப்படுத்துவதில்லை. அவர்கள் பரிசுத்த நகரத்தை நாற்பத்திரண்டு மாதமளவும் மிதிப்பார்கள்.

இரண்டு சாட்சிகள்
வெளி 11 : 3,4

வெளி 11:3. என்னுடைய இரண்டு சாட்சிகளும் இரட்டு வஸ்திர முடுத்திக் கொண்டிருக்கிறவர்களாய், ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் தீர்க்கதரிசனஞ் சொல்லும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பேன்.

வெளி 11:4. பூலோகத்தின் ஆண்டவருக்கு முன்பாக நிற்கிற இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குத்தண்டுகளும் இவர்களே.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு எவ்வளவு உபத்திரவம் வந்தாலும், ஒரு கூட்டம் ஜனத்தார் கர்த்தருக்கு மீதியான ஜனமாக பாதுகாக்கப்படுவார்கள். கர்த்தருக்காக மீந்திருக்கிறவர்கள் எல்லா தேசங்களிலும், எல்லா ஜாதியார் மத்தியிலும், எல்லா பாஷைக்காரரிடத்திலும் இருக்கிறார்கள். கர்த்தர் தமக்காக உண்மையுள்ள சாட்சிகளை நியமித்து வைத்திருக்கிறார்.

கர்த்தருடைய சாட்சிகளின் எண்ணிக்கை குறைவாகயிருக்கலாம். ஒரு சாட்சியிருந்தாலே, சத்தியம் தெளிவாக அறிவிக்கப்படும். இரண்டு சாட்சிகள் இருக்கும்போது, சத்தியம் உறுதி பண்ணப்படும். இரண்டு சாட்சிகள் போதுமானது. கர்த்தர் தமக்காக இரண்டு சாட்சிகளை இங்கு வைத்திருக்கிறார். இவர்களுடைய வாயிலிருந்து வரும் வார்த்தையினால் சத்தியம் உறுதி பண்ணப்படும். இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை ஊழியத்திற்கு அனுப்பும்போது, அவர்களை இரண்டு இரண்டுபேராக அனுப்பினார். இரண்டுபேரும் சேர்ந்து ஒரே சுவிசேஷத்தை சாட்சியாய் அறிவித்தார்கள்.

இவ்விரண்டு சாட்சிகளும் இரட்டு வஸ்திரம் உடுத்திக்கொண்டிருக்கிறார்கள். கர்த்தருடைய சத்திய வசனத்தை இவர்கள் தீர்க்கதரிசனமாகச் சொல்ல வேண்டும். தீர்க்கதரிசன ஊழியம் செய்வதற்கு கர்த்தர் இவர்களுக்கு அதிகாரங் கொடுத்திருக்கிறார். இவர்களுடைய ஊழியக்காலமும் ஒரு வரையறைக்குட்பட்டதாயிருக்கிறது. இவர்கள் ஆயிரத்து இருநூற்று அறுபது நாளளவும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். இந்தக் காலஅளவு, அந்திக்கிறிஸ்துவினுடைய ஆளுகையின் காலஅளவுக்கு ஒத்திருப்பதாக வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

இவ்விரண்டு சாட்சிகளும் இரட்டு வஸ்திரம் உடுத்தி, ஆயிரத்து இருநூற்று அறுபது நாளளவும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் துக்கம் அநுசரிக்கிறவர்கள் இரட்டு உடுத்திக்கொள்வது வழக்கம். சபைகளின் நிலமை பரிதாபமாகவும், துக்கரமாகவும் இருக்கிறது. சபைகளுக்குச் சொல்லப்படுகிற தீர்க்கதரிசன வார்த்தைகளும் துக்கம் நிறைந்ததாகவே இருக்கிறது. ஆகையினால் தங்கள் துக்கத்தை வெளிப்படுத்தும் வண்ணமாக இவ்விரண்டு சாட்சிகளும் இரட்டு வஸ்திரம் உடுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்விரண்டு சாட்சிகளும் ஆண்டவருக்கு முன்பாக நிற்கிறார்கள். கர்த்தராகிய தேவன் சர்வஉலகத்திற்கும் ஆண்டவராயிருக்கிறார். இந்தப் பூலோகத்திற்கும் கர்த்தரே ஆண்டவர். இவ்விரண்டு சாட்சிகளும் பூலோகத்தின் ஆண்டவருக்கு முன்பாய் நிற்கிறார்கள். தேவனானவர் இவ்விரண்டு சாட்சிகளையும் செருபாபேலைப்போலவும், யோசுவாவைப்போலவும் ஆக்கியிருக்கிறார்.

சகரியா தீர்க்கதரிசி தரிசனத்திலே ஒலிவமரங்களையும் விளக்குத் தண்டுகளையும் தரிசித்தார். இந்த சம்பவம் சகரியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது. "நீ காண்கிறது என்னவென்று கேட்டார்; அதற்கு நான்: இதோ, முழுவதும் பொன்னினால் செய்யப்பட்ட குத்துவிளக்கைக் காண்கிறேன்; அதின் உச்சியில் அதின் கிண்ணமும், அதின்மேல் அதின் ஏழு அகல்களும், அதின் உச்சியில் இருக்கிற அகல்களுக்குப்போகிற ஏழு குழாய்களும் இருக்கிறது. அதின் அருகில் கிண்ணத்திற்கு வலதுபுறமாக ஒன்றும், அதற்கு இடதுபுறமாக ஒன்றும், ஆக இரண்டு ஒலிவமரங்கள் இருக்கிறது என்றேன்" *(சக 4:2,3)*.

சகரியா கண்ட தரிசனத்தைப் போலவே, யோவானும் பரலோகத்தில் தரிசனம் காண்கிறார். பரலோகத்திலே இரண்டு சாட்சிகள் பூலோகத்தின் ஆண்டவருக்கு முன்பாக நிற்கிறார்கள். இவர்களே ஆண்டவருக்கு முன்பாக நிற்கிற இரண்டு ஒலிவமரங்களாகவும், இரண்டு விளக்குத்தண்டுகளாகவும் இருக்கிறார்கள்.

இரண்டு சாட்சிகளின் அதிகாரம் வெளி 11 : 5,6

வெளி 11:5. ஒருவன் அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருந்தால், அவர்களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு, அவர்களுடைய சத்துருக்களைப் பட்சிக்கும்; அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருக்கிறவன் எவனோ அவன் அப்படியே கொல்லப்படவேண்டும்.

வெளி 11:6. அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லிவருகிற நாட்களிலே மழை பெய்யாதபடிக்கு வானத்தை அடைக்க அவர்களுக்கு அதிகாரமுண்டு; அவர்கள் தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், தங்களுக்கு வேண்டும்போதெல்லாம் பூமியைச் சகலவித வாதைகளாலும் வாதிக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு.

இரண்டு சாட்சிகளும் செருபாபேலைப் போலவும், யோசுவாவைப் போலவும் இருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை ஆயிரத்து இருநூற்று அறுபது நாளளவும் தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டும். கர்த்தர் இவர்களுக்கு ஊழிய அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். இவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுகிற காலத்திலே தேவனுடைய பாதுகாப்பு இவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இவர்களை யாரும் எளிதாக சேதப்படுத்த முடியாது.

இரண்டு சாட்சிகளுக்கு விரோதமாக, இவர்களை சேதப்படுத்த யாராவது வந்தால், சாட்சிகளுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு, அவர்களுடைய சத்துருக்களைப் பட்சித்துப்போடும். இரண்டு சாட்சிகளையும் சேதப்படுத்த மனதாயிருக்கிறவன் எவனாயிருந்தாலும், அவன் கொல்லப்படுவான்.

இவ்விரண்டு சாட்சிகளும் பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஊழியம் செய்த எலியாவைப் போல வல்லமையுடையவர்களாயிருக்கிறார்கள். எலியாவைப் பிடிக்க போர்ச்சேவகர்கள் ஒருசமயம் வந்தார்கள். அப்பொழுது எலியா, “நான் தேவனுடைய மனுஷனானால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி, உன்னையும் உன் ஐம்பதுபேரையும் பட்சிக்கக்கடவது” என்று சொன்னார். உடனே தேவனுடைய அக்கினி வானத்திலிருந்து இறங்கி, அவனையும் அவன் ஐம்பது பேரையும் பட்சித்தது (2இராஜா 1:10,12). எலியா தேவனுடைய மனுஷன். எலியா சொன்னபோது அக்கினி வந்து, அவருடைய சத்துருக்களைப் பட்சித்துப் போட்டது.

அதுபோலவே இரண்டு சாட்சிகளையும் சேதப்படுத்த யாராவது மனதாயிருந்தால், அவர்களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு, அவர்களுடைய சத்துருக்களைப் பட்சித்து போடுகிறது. கர்த்தர் தமக்கு சாட்சியாக ஊழியம் செய்கிறவர்களை பாதுகாக்கிறார். அவர்களுடைய சத்துருக்களைப் பட்சித்துப்போடுகிறார்.

இவ்விரண்டு சாட்சிகளும் தீர்க்க தரிசனம் சொல்லி வருகிற நாட்களிலே, கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசன வார்த்தைகளை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதி பண்ணுகிறார். இவர்கள் ஊழியம் செய்யும்போது, வானத்தை அடைக்கிற அதிகாரத்தை கர்த்தர் இவர்களுக்குக் கொடுக்கிறார். இவர்களுடைய வார்த்தையின் பிரகாரம் மழையும் பனியும் பெய்யும். அதுபோலவே இவர்களுடைய வார்த்தையின் பிரகாரம் மழையும் பனியும் பெய்யாதிருக்கும். கர்த்தருடைய இரண்டு சாட்சிகளும் வானத்தை அடைத்துப் போடுவார்கள்.

எலியா கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணினார். அவருடைய வார்த்தையின்படியே கர்த்தர் வானத்தை அடைத்துப்போட்டார். எலியா மறுபடியும் சொல்லும்வரையிலும், தேசத்தில் பனியும் மழையும் பெய்யாதிருந்தது (1இராஜா 17:1). பழைய ஏற்பாட்டுக்காலத்திலே கர்த்தர் எலியாவுக்கு அதிகாரம் கொடுத்ததுபோல, இந்த இரண்டு சாட்சிகளுக்கும் இப்போது அதிகாரம் கொடுத்திருக்கிறார்.

இரண்டு சாட்சிகளும் தண்ணீர்களை இரத்தமாக மாற்றக் கூடியவர்கள். தங்களுக்கு வேண்டும்போதெல்லாம் பூமியை சகலவித வாதைகளாலும் வாதிக்கக்கூடியவர்கள். இந்தக் காரியங்களையெல்லாம் இரண்டு சாட்சிகளும் தங்களுடைய சுயவல்லமையினால் செய்யவில்லை. இவற்றை செய்வதற்கு சர்வவல்லமையுள்ள கர்த்தர் இவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை அற்புதங்களினாலும் அடையாளங் களினாலும் உறுதி பண்ணுகிறவர். இரண்டு சாட்சிகளும் தீர்க்கதரிசனம் சொல்லி ஊழியம் செய்கிற ஆயிரத்து இருநூற்று அறுபது நாளளவும், கர்த்தர் இவர்களுக்கு இந்த விசேஷித்த அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறார்.

பாதாளத்திலிருந்து ஏறுகிற மிருகம்
வெளி 11 : 7-10

வெளி 11:7. அவர்கள் தங்கள் சாட்சியைச் சொல்லி முடித்திருக்கும் போது, பாதாளத்திலிருந்தேறுகிற மிருகம் அவர்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயித்து, அவர்களைக் கொன்றுபோடும்.

வெளி 11:8. அவர்களுடைய உடல்கள் மகாநகரத்தின் விசாலமான வீதியிலே கிடக்கும். அந்த நகரம் சோதோம் என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும்; அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறையப்பட்டார்.

வெளி 11:9. ஜனங்களிலும், கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜாதிகளிலுமுள்ளவர்கள் அவர்களுடைய உடல்களை மூன்றரைநாள் வரைக்கும் பார்ப்பார்கள், அவர்களுடைய உடல்களைக் கல்லறைகளில் வைக்கவொட்டார்கள்.

வெளி 11:10. அவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் பூமியின் குடிகளை வேதனைப்படுத்தினபடியால் அவர்கள் நிமித்தம் பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து, ஒருவருக்கொருவர் வெகுமதிகளை அனுப்புவார்கள்.

கர்த்தருடைய இரண்டு சாட்சிகளும் ஆயிரத்து இருநூற்று அறுபது நாளளவும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஊழியக்காலத்தில், அவர்களை யாரும் சேதப்படுத்த முடியாது. கர்த்தர் அவர்களுக்கு விசேஷித்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். ஆனாலும் அவர்கள் தங்கள் சாட்சியை சொல்லி முடிக்கும் போது, அவர்கள் கொல்லப்படுவார்கள். கர்த்தருடைய இரண்டு சாட்சிகளும் இரத்தசாட்சிகளாக மரித்துப்போவார்கள். தாங்கள் சொன்ன சாட்சிகளை, இவர்கள் தங்களுடைய இரத்தத்தினால் முத்திரையிடுவார்கள்.

இரண்டு சாட்சிகளும் சாட்சிகளைச் சொல்லி முடிக்கும் வரையிலும் அவர்களுக்கு ஒரு சேதமும் உண்டாகவில்லை. ஆனாலும் அவர்கள் தங்கள் சாட்சியை சொல்லி முடித்திருக்கும் போதோ, அவர்கள் கொலை செய்யப்படுகிறார்கள்.கர்த்தர் அவர்களுக்கு நியமித்திருக்கிற ஊழியத்தைச் செய்து முடிக்கும் வரையிலும் அவர்களுக்கு மரணம் நேரிடவில்லை. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கும் கர்த்தர் ஊழியம் கொடுத்திருக்கிறார். அந்த ஊழியத்தை நாம் உண்மையாய், பயபக்தியாய் நிறைவேற்ற வேண்டும். கர்த்தர் கொடுத்திருக்கிற ஊழியத்தை நாம் நிறைவேற்றும் வரையிலும் நமக்கு மரணம் உண்டாகாது.

இரண்டு சாட்சிகளும் தங்கள் சாட்சியை சொல்லிமுடித்திருக்கும்போது, பாதாளத்திலிருந்து ஒரு மிருகம் ஏறுகிறது. அந்த மிருகம் அவர்களோடே யுத்தம் பண்ணுகிறது. யுத்தத்தில் அவர்களை ஜெயித்து, அவர்களைக் கொன்று போடுகிறது. அந்திக்கிறிஸ்து கர்த்தருடைய இரண்டு சாட்சிகளுக்கு விரோதமாக பயங்கரமாய் யுத்தம்பண்ணுகிறான். சாட்சிகளோடு முரட்டுத்தனமாக மோதுகிறான். இந்த யுத்தத்தில், சத்துரு ஜெயிப்பதற்கும், தம்முடைய சாட்சிகள் தோற்றுப்போவதற்கும் கர்த்தர் அனுமதிகொடுக்கிறார்.

அந்தக்கிறிஸ்து நித்திய ஜெயம் பெறுவதில்லை. கர்த்தருடைய சாட்சிகளும் நித்தியமாய்த் தோற்று போவதில்லை. ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் மாத்திரமே கர்த்தருடைய சாட்சிகளுக்கு தோல்வி உண்டாயிற்று. இந்தத் தோல்வியும் அவர்களுக்கு மிகவும் பயங்கரமான தோல்வியாயிற்று. பாதாளத்திலிருந்து ஏறுகிற மிருகம் இவர்கள் இருவரையும் கொன்று போடுவதோடு தன்னுடைய கொலை வெறியை தணித்துக் கொள்வதில்லை. அவர்களுடைய உடல்களை மகாநகரத்தின் விசாலமான வீதியிலே தூக்கியெறிகிறது. அந்த வீதியிலே இரண்டு சாட்சிகளுடைய உடல்களும் கிடக்கிறது.

சாட்சிகள் இருவரும் செத்துப்போன பின்பும், அவர்களுடைய உடல்களைக் கண்ணியமாக அடக்கம்பண்ண மிருகம் அனுமதி கொடுக்கவில்லை. அவர்களுடைய உடல்களை கல்லறைகளில் வைக்க அனுமதி இல்லை. அதற்குப் பதிலாக, மிருகம் அவர்களுடைய உடல்களை நகரத்தின் விசாலமான வீதியிலே தூக்கியெறிந்து போடுகிறது. அந்த நகரம் சோதோம் என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய் சொல்லப்படும். அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறையப்பட்டார்.

மகாநகரத்தின் விசாலமான வீதியிலே இரண்டு சாட்சிகளுடைய உடல்களும் மூன்று நாட்கள் வரையிலும் கிடக்கும். அந்த உடல்களை ஜனங்களிலும், கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும்,ஜாதிகளிலுமுள்ளவர்கள் பார்ப்பார்கள். மூன்று நாட்கள் வரைக்கும் உடல்களை வீதியிலே பார்ப்பார்கள். அந்த உடல்களை கல்லறைகளில் வைப்பதற்கு யாரும் அனுமதி கொடுக்கமாட்டார்கள். பாதாளத்திலிருந்து ஏறுகிற மிருகம், இரண்டு சாட்சிகளை கொன்று போட்டதோடு நிறுத்திக்கொள்ளாமல், அவர்களுடைய மரித்துப்போன உடல்களையும் வாதிக்கிறது.

கர்த்தருடைய இரண்டு சாட்சிகளின் மரணம் துன்மார்க்கருக்கு மிகுந்த சந்தோஷமாயிருக்கும். இந்த உலகம் துன்மார்க்கத்தில் நிரம்பியிருக்கிறது. அந்திக்கிறிஸ்துவே அவர்களுடைய அதிபதியாயிருக்கிறான். இவ்விரண்டு சாட்சிகளும் அந்திக்கிறிஸ்துவுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொன்னார்கள். இவர்கள் கர்த்தருடைய சத்திய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாகச் சொல்லி பூமியின் குடிகளை வேதனைப்படுத்தினார்கள்.

இப்போதோ இரண்டு தீர்க்க தரிசிகளும் கொலை பண்ணப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய உடல்களை கல்லறைகளில் வைக்க முடியாதபடி, அவை மகாநகரத்தின் விசாலமான வீதியிலே கிடக்கிறது. இதைப் பார்த்து பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டு களிகூருவார்கள். தங்களுக்கு ஜெயமுண்டாயிற்று என்று நினைத்து, ஒருவருக்கொருவர் வெகுமதிகளை அனுப்புவார்கள். கர்த்தருடைய பரிசுத்த வான்களுக்கு துன்பம் வரும்போது, துன்மார்க்கர்கள் சந்தோஷப்படுகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் இரத்த சாட்சியாய் மரிக்கும்போது, பாவிகள் மகிழ்ந்து களிகூருகிறார்கள்.

ஜீவஆவி
வெளி 11:11

வெளி 11:11. மூன்றரை நாளைக்குப் பின்பு தேவனிடத்திலிருந்து ஜீவஆவி அவர்களுக்குள் பிரவேசித்தது, அப்பொழுது அவர்கள் காலூன்றி நின்றார்கள்; அவர்களைப் பார்த்தவர்களுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று.

பாதாளத்திலிருந்து ஏறுகிற மிருகம் கர்த்தருடைய இரண்டு சாட்சிகளோடே யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயித்து, அவர்களைக் கொன்றுபோடுகிறது. அவர்களுடைய உடல்களும் கல்லறைகளில் வைக்கப்படாமல் வீதியில் கிடக்கிறது. தங்களுக்கு நித்திய ஜெயம் கிடைத்திருப்பதாக நினைத்து பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டு களிகூருகிறார்கள். ஆனால் அவர்களுடைய சந்தோஷம் நிலைத்திருக்கவில்லை. அவர்களுடைய ஜெயமும் நிலைத்திருக்கவில்லை.

மூன்றரை நாளைக்குப் பின்பு கர்த்தர் தம்முடைய இரண்டு சாட்சிகளையும் உயிர்த்தெழச் செய்கிறார். கர்த்தருக்காக உண்மையாய் ஊழியம் செய்தவர்களை துன்மார்க்கர் கொன்றுபோடலாம். கர்த்தருடைய பிள்ளைகளோ மரித்தாலும் மறுபடியும் பிழைப்பார்கள். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை மறுபடியும் பிழைக்கச் செய்வார். தம்முடைய ஊழியத்தை தடையில்லாமல் நடைபெறச் செய்வார். இரண்டு சாட்சிகளும் செத்துப்போன போது, தீர்க்கதரிசன ஊழியம் முடிந்துபோயிற்று என்று பூமியில் குடியிருக்கிறவர்கள் நினைத்தார்கள். ஆனால் கர்த்தருடைய ஊழியம் முடிந்துபோகவில்லை.

இரண்டு சாட்சிகளும் மரித்துப் போனார்கள். அவர்களுடைய உடல்கள் மகாநகரத்தின் விசாலமான வீதியிலே கிடக்கிறது. மூன்று நாட்களாக வீதியிலேதான் கிடக்கிறது. எல்லோரும் அவர்களுடைய சடலங்களைப் பார்த்து மகிழ்ந்து களிகூருகிறார்கள். மூன்றரை நாளைக்குப் பின்பு, தேவனிடத்திலிருந்து ஜீவஆவி அவர்களுக்குள் பிரவேசிக்கிறது.

மரித்துப்போன உடல்களுக்குள் தேவனுடைய ஜீவஆவி பிரவேசிக்கிறது. அப்போது இரண்டு சாட்சிகளும் மறுபடியும் உயிரோடு எழுப்பப்படுகிறார்கள். மகாநகரத்தின் விசாலமான வீதியிலே செத்தவர்களாகக் கிடந்த சாட்சிகள், இப்போது உயிர்பெற்று, காலூன்றி நிற்கிறார்கள். அவர்களை பார்த்தவர்களுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று.

தம்முடைய இரண்டு சாட்சிகளுக்கும் தேவன் ஜீவனைக் கொடுத்ததோடு நிறுத்திக்கொள்ளவில்லை. அவர்களுக்கு சரீரப்பலத்தையும் கொடுக்கிறார். இதனால் இரண்டு சாட்சிகளும் மறுபடியும் உயிர்பெற்று காலூன்றி நிற்கிறார்கள். இவர்களுடைய உடல்கள் வீதிகளிலே கிடந்து நாற்றமெடுக்கவேண்டும் என்றும், வெயிலிலும் மழையிலும் இந்த உடல்கள் கிடந்து அழுகிப்போகவேண்டும் என்றும் சத்துருக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் கர்த்தரோ மரித்துப்போன சரீரத்திற்கு ஜீவனைக் கொடுக்கிறார். பெலனற்று, உயிரற்று வீதியிலே கிடந்த உடல்களுக்கு ஜீவனையும் பலத்தையும் கொடுக்கிறார்.

வீதிகளில் கிடந்த உடல்களைப் பார்த்து பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டு களிகூர்ந்தார்கள். இப்போதோ இரண்டு சாட்சிகளும் காலூன்றி நிற்கிறார்கள். இவர்களைப் பார்த்த போது பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று. சந்தோஷப்பட்டு களிகூர்ந்தவர்கள் இப்போது மிகவும் பயப்படுகிறார்கள்.

பாதாளத்திலிருந்து ஏறுகிற மிருகம் கர்த்தருடைய ஊழியக்காரர்களை வஞ்சனையாக கொன்றுபோடலாம். ஊழியக்காரர்கள்மீது முரட்டுத்தனமாக மோதலாம். பலவந்தமாக யுத்தம் பண்ணலாம். கர்த்தருடைய ஊழியக் காரர்களுக்கு இரத்த சேதாரம் உண்டாகலாம். ஊழியக்காரர்கள் இரத்தசாட்சியாக மரிக்கவேண்டியது கூட வரலாம். ஆனாலும் கர்த்தர் நமக்கு ஜெயங்கொடுக்கிறவர்.

கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள். நாம் மரித்தாலும் மறுபடியும் உயிரோடு எழுந்திருப்போம். உபத்திரவப்படுத்துகிற ஆவியையுடையவர்கள் துன்மார்க்கர்கள். இவர்கள் வீரர்களைப்போல மாய்மாலம் பண்ணுகிறார்கள். மெய்யாகவே இவர்கள் வீரர்களல்ல. இவர்கள் கோழைகள்.

வானத்திற்குப் போனார்கள்
வெளி 11 : 12,13

வெளி 11:12. இங்கே ஏறிவாருங்கள் என்று வானத்திலிருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போனார்கள்; அவர்களுடைய சத்துருக்கள் அவர்களைப் பார்த்தார்கள்.

வெளி 11:13. அந்நேரத்திலே பூமி மிகவும் அதிர்ந்தது, உடனே அந்த நகரத்தில் பத்திலொருபங்கு இடிந்து விழுந்தது; மனுஷரில் ஏழாயிரம்பேர் பூமியதிர்ச்சியினால் அழிந்தார்கள்; மீதியானவர்கள் பயமடைந்து பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

தேவனிடத்திலிருந்து ஜீவஆவி செத்துப் போன சாட்சிகளுடைய உடல்களுக்குள் பிரவேசித்தது. அப்போது அவர்கள் மறுபடியும் உயிர்பெற்று காலூன்றி நிற்கிறார்கள். அந்த வேளையில், "இங்கே ஏறி வாருங்கள்" என்று வானத்திலிருந்து அவர்களுக்கு பெரிய சத்தமுண்டாயிற்று. இரண்டு சாட்சிகளும் பெரிய சத்தத்தைக் கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போனார்கள்.

தேவன் அவர்களை அழைக்கும் வரையிலும், இரண்டு சாட்சிகளும் வானத்திற்கு ஏறிப்போக முயற்சி பண்ணவில்லை. கர்த்தர் தங்களை மகிமைப்படுத்துகிற வேளை வரும் வரையிலும் இவர்கள் பொறுமையோடு காத்திருக்கிறார்கள். "இங்கே ஏறி வாருங்கள்" என்று கர்த்தர் அவர்களை அழைத்தபோதோ, இரண்டு சாட்சிகளும் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, மேகத்தில் ஏறி, வானத்திற்குப் போகிறார்கள்.

கர்த்தருக்காக சாட்சி கொடுக்கிறவர்கள், கர்த்தருடைய சத்தத்தைக் கேட்கவேண்டும். கர்த்தர் தங்களை அழைக்கும் வரையிலும் பொறுமையோடு காத்திருக்க வேண்டும். கர்த்தரிடத்திலிருந்து அழைப்பு வரும் போதோ, அவருடைய அழைப்புக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி, முன்னேறிச் செல்லவேண்டும்.

இரண்டு சாட்சிகளும் மேகத்தில் ஏறி வானத்திற்குப் போகிறார்கள். அவர்களுடைய சத்துருக்கள் அவர்களைப் பார்க்கிறார்கள். அவர்கள் இருவரும் மறுபடியும் உயிர்பெற்று, காலூன்றி நின்றபோது, பூமியில் குடியிருக்கிறவர்கள் அவர்களைப் பார்த்து பயந்தார்கள். இப்போதோ அவர்கள் இருவரும் மேகத்தில் ஏறி வானத்திற்குப் போவதைப் பார்க்கிறார்கள். அந்த நேரத்திலே பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே அந்த நகரத்தில் பத்தில் ஒரு பங்கு இடிந்து விழுந்தது. மனுஷரில் ஏழாயிரம் பேர் பூமியதிர்ச்சியினால் அழிந்தார்கள்.

பூமியில் குடியிருக்கிறவர்கள் இரண்டு சாட்சிகளும் மேகத்தில் ஏறி வானத்திற்குப் போனதையும் பார்க்கிறார்கள். தங்களுக்கு திடீரென்று வந்திருக்கிற பேரழிவையும் பார்க்கிறார்கள். மனுஷர் மத்தியிலே திகிலும், நடுக்கமும், பயமும் உண்டாயிற்று. எல்லோரும் அதிர்ச்சியடைந்திருக்கிறார்கள். தேவனைப் பற்றிய பயம் அவர்களுடைய உள்ளத்தில் உண்டாயிற்று. மரித்துப்போனவர்களைத் தவிர, மீதியானவர்கள் பயமடைந்து, பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள்.

தேவனுடைய ஊழியம் புதுப்பிக்கப்படுகிறது. அவருடைய இரண்டு சாட்சிகளும் மறுபடியும் உயிர்ப்பிக்கப்படுகிறார்கள். அப்போது பிசாசின் கிரியைகள் வீழ்ந்துபோகிறது. பிசாசினுடைய கூட்டத்தார் கர்த்தருக்கு முன்பாக தாழவிழுகிறார்கள். அவர்கள் பயமடைந்து பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள். கர்த்தர் கிரியை செய்கிறார். கர்த்தர் யுத்தம் பண்ணுகிறார். கர்த்தர் ஜெயம்பெறுகிறார். யுத்தம் கர்த்தருடையது. சாத்தான் பாதாளத்திலிருந்து ஒரு மிருகம்போல ஏறிவந்தாலும் அவன் அழிந்துபோகிறான். ஆரம்பத்தில் சாத்தானுக்கு வெற்றி கிடைப்பதுபோல தெரிந்தாலும், முடிவில் அவருக்கு தோல்வியே உண்டாயிற்று.

ஏழாம் எக்காளம்
வெளி 11 : 14-18

வெளி 11:14. இரண்டாம் ஆபத்து கடந்துபோயிற்று; இதோ, மூன்றாம் ஆபத்து சீக்கிரமாய் வருகிறது.

வெளி 11:15. ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின.

வெளி 11:16. அப்பொழுது தேவனுக்கு முன்பாகத் தங்கள் சிங்காசனங்கள்மேல் உட்கார்ந்திருந்த இருபத்துநான்கு மூப்பர்களும் முகங்குப்புற விழுந்து:

வெளி 11:17. இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தராகிய தேவனே, உம்மை ஸ்தோத்திரிக்கிறோம்; தேவரீர் உமது மகா வல்லமையைக் கொண்டு ராஜ்யபாரம்பண்ணுகிறீர்.

வெளி 11:18. ஜாதிகள் கோபித்தார்கள், அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது; மரித்தோர் நியாயத் தீர்ப்படைகிறதற்கும், தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உமது நாமத்தின்மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கும் பலனளிக்கிறதற்கும், பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கும், காலம் வந்தது என்று சொல்லி, தேவனைத் தொழுது கொண்டார்கள்.

ஆறாம் தூதன் எக்காளம் ஊதியவுடனே, ஏழாம் தூதன் எக்காளம் ஊதுவான் என்று ஒரு எதிர்பார்ப்பு உண்டாயிற்று. ஆனால் ஏழாம் தூதன் உடனே எக்காளம் ஊதவில்லை. இவன் எக்காளம் ஊதுவதற்கு முன்பாக ஒரு சில சம்பவங்கள் நடைபெறுகிறது. அந்தச் சம்பவங்களெல்லாம் முடிந்த பின்பு தான், ஏழாம் தூதன் எக்காளம் ஊதுகிறான். இதுவரையிலும் இரண்டாம் ஆபத்து கடந்துபோயிற்று. இனிமேல் மூன்றாம் ஆபத்து சீக்கிரமாய் வரப்போகிறது.

ஏழாம் தூதன் எக்காளம் ஊதியபோது பரலோகத்திலுள்ள பரிசுத்தவான்களும் தூதர்களும் கர்த்தருடைய சமுகத்திலே சந்தோஷமாய் ஆர்ப்பரிக்கிறார்கள்.

ஏழாம் தூதன் எக்காளம் ஊதியபோது, வானத்தில் கெம்பீர சத்தமுண்டாயிற்று. "உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்கும் உரிய ராஜ்யங்களாயின,அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார்" என்று கெம்பீர சத்தங்களாய் வானத்தில் உண்டாயிற்று.

இருபத்து நான்கு மூப்பர்களும் தேவனுக்கு முன்பாக தங்கள் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். வானத்தில் உண்டான கெம்பீர சத்தத்தை இருபத்து நான்கு மூப்பர்களும் கேட்டபோது, அவர்கள் தங்கள் சிங்காசனத்திலிருந்து எழுந்திருந்து, தேவனுக்கு முன்பாக முகங்குப்புற விழுகிறார்கள். கர்த்தரைத் துதிக்கிறார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே உலகத்தின் ராஜ்யங்களை சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ண பாத்திரராயிருக்கிறார். உலகத்தின் எல்லா ராஜ்யங்களும் கர்த்தருக்கே உரியது என்று சொல்லி மூப்பர்கள் கர்த்தரைத் துதிக்கிறார்கள். தேவனுடைய சர்வவல்லமையை மூப்பர்கள் அங்கீகரித்து அவரை நன்றியோடு துதிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் ராஜ்யபாரத்திற்கு முடிவில்லை. அவர் சதாகாலங்களிலும் ஆட்சிபுரிகிறவர். கர்த்தருடைய கையிலுள்ள செங்கோலை யாராலும் பறித்துக்கொள்ள முடியாது.

கர்த்தராகிய தேவனே இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாயிருக்கிறார். அவரே சர்வவல்லமையுள்ளவர். தேவன் தமது மகாவல்லமையைக் கொண்டு ராஜ்யபாரம் பண்ணுகிறார் என்று இருபத்து நான்கு மூப்பர்களும், தேவனுக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து, அவரை நன்றியோடு துதிக்கிறார்கள்.

தேவனுடைய வல்லமை இந்த உலகத்தில் வெளிப்பட்டபோது, எல்லா ஜனங்களும் அவருடைய வல்லமையை ஏற்றுக்கொள்ளவில்லை. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத ஜாதிகள் தேவனுடைய வல்லமையைப் பார்த்து கோபித்தார்கள். அப்போது கர்த்தருடைய கோபமும் மூண்டது. துன்மார்க்கருடைய இருதயம் தேவனுக்கு விரோதமாக எழும்பிற்று. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். தங்களுடைய பாவமான கிரியைகளினால் தங்களுக்கு அதிகமான அழிவை வருவித்துக் கொண்டார்கள். அவர்களுடைய துன்மார்க்கமான கிரியைகளெல்லாம் அவர்களுக்கு கேடாக லபித்தது.

தேவன் தம்முடைய மகாவல்லமையைக் கொண்டு ராஜ்யபாரம் பண்ணுவதைப் பார்த்து, கர்த்தருடைய பரிசுத்தவான்கள் சந்தோஷப்பட்டார்கள். ஆனால் கர்த்தருக்கு விரோதமான துன்மார்க்கமான ஜாதிகளோ கோபித்தார்கள். கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். தமக்கு விரோதமாக கோபிக்கிறவர்கள்மீது தேவனுடைய கோபம் மூண்டது. தேவனுடைய கோபத்தை துன்மார்க்கரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. முதலில் கோபித்தார்கள். கர்த்தரை எதிர்த்தார்கள். கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். கர்த்தர் அவர்கள்மீது கோபங்கொண்டவுடன், துன்மார்க்கரால் கர்த்தருடைய கோபத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் பரிதபித்தார்கள்.

கர்த்தர் நீதியாய் ராஜ்யபாரம் பண்ணுகிறார். அவர் தமது மகாவல்லமையைக் கொண்டு ராஜ்யபாரம்பண்ணுகிறார். இருபத்து நான்கு மூப்பர்களும் தேவனுக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து, தேவனைத் தொழுதுகொள்கிறார்கள். அப்போது, மூப்பர்கள், "மரித்தோர் நியாயத் தீர்ப்படைகிறதற்கும், தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உமது நாமத்தின் மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கும் பலனளிக்கிறதற்கும், பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கும், காலம் வந்தது" என்று சொல்லி தேவனைத் தொழுது கொள்கிறார்கள்.

பரலோகத்தில் தேவனுடைய ஆலயம்
வெளி 11:19

வெளி 11:19. அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது, அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன் படிக்கையின் பெட்டி காணப்பட்டது; அப்பொழுது மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்ச்சியும், பெருங்கல்மழையும் உண்டாயின.

பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டதை யோவான் தரிசிக்கிறார். தேவனுடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி இருக்கிறது. இந்தப் பெட்டி இருக்கிற இடம் கர்த்தருடைய மகாபரிசுத்த ஸ்தலம். உடன்படிக்கை பெட்டியில் கர்த்தருடைய கட்டளை பலகைகள் வைக்கப்பட்டிருக்கிறது. யோசியாவின் காலத்திற்கு முன்பாக உடன்படிக்கை பெட்டி காணாமல்போயிற்று. அது மறுபடியும் கண்டுபிடிக்கப்பட்டது. அதுபோல

அந்திக்கிறிஸ்துவினுடைய ஆட்சிக் காலத்தில் தேவனுடைய உடன்படிக்கை பெட்டி எங்கு இருக்குமென்று தெரியாது. ஆனாலும் அந்திக்கிறிஸ்துவினுடைய ஆட்சி முடிவுபெற்றவுடன் தேவனுடைய உடன்படிக்கை பெட்டி, தேவனுடைய ஆலயத்தில் காணப்படும். அந்திக் கிறிஸ்துவினுடைய ஆட்சிக்காலத்தில் தேவனுடைய பிரமாணத்திற்குப் பதிலாக, அந்திக்கிறிஸ்துவின் பிரமாணமே அமுலில் இருக்கும். தேவனுடைய ஆட்சி வரும்போது, அவருடைய பிரமாணம் மறுபடியும் ஆளுகை செய்யும். தேவனுடைய சத்தியவசனங்கள் திறக்கப்படும். அது எல்லோரும் காணும்படியாகயிருக்கும். பரலோகத்திலே தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டபோது, அங்கு அவருடைய உடன்படிக்கை பெட்டி, எல்லோருக்கும் காணப்படுகிறது. எல்லோரும் அந்தப் பெட்டியிலுள்ள தேவனுடைய பிரமாணத்தை வாசிக்கலாம்.

கர்த்தர் சீனாய் மலையிலே மோசேக்கு பத்துக்கட்டளைகளைக் கொடுத்தபோது அங்கு மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்ச்சியும், பெருங்கல்மழையும் உண்டாயிற்று. அதுபோலவே தேவனுடைய ஆலயத்தில் உடன்படிக்கை பெட்டி காணப்பட்டபோதும், அங்கு மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்ச்சியும், பெருங்கல்மழையும் உண்டாயின. தேவன் நீதியுள்ளவர். அவர் பயங்கரமான கிரியைகளை நடப்பிக்கிறவர். தேவனுடைய பரிசுத்த ஆலயத்திலே ஏறெடுக்கப்படுகிற எல்லா வேண்டுதல்களுக்கும் விண்ணப்பங்களுக்கும் செவி கொடுக்கிறவர். கர்த்தர் பெரியவர். இப்போது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டிருக்கிறது.

12 அதிகாரம்

கிறிஸ்து ஸ்திரீயினுடைய வித்தாகயிருக்கிறவர். அந்திக்கிறிஸ்துவோ சர்ப்பத்தின் வித்தாகயிருக்கிறான். பரலோகத்திலே கிறிஸ்துவுக்கும் அந்திக்கிறிஸ்துவுக்கும் இடையே யுத்தமுண்டாயிற்று (வெளி 12:1-11). இதன்பின்பு இந்த யுத்தம் வனாந்தரத்திலே நடைபெறுகிறது (வெளி 12:12-17).

சூரியனை அணிந்திருந்த ஒரு ஸ்திரீ
வெளி 12 : 1,2

வெளி 12:1. அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள், அவள் பாதங்களின் கீழே சந்திரனும், அவள் சிரசின் மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன.

வெளி 12:2. அவள் கர்ப்பவதியாயிருந்து, பிரசவ வேதனையடைந்து, பிள்ளைபெறும்படி வருத்தப்பட்டு அலறினாள்.

சாத்தான் கர்த்தருடைய சபையின் வளர்ச்சியை தடைபண்ணுவதற்கு முயற்சிகளை மேற்கொள்கிறான். இந்த அதிகாரத்தில் சபையானது ஒரு ஸ்திரீக்கு ஒப்புமையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சபை கிறிஸ்துவினுடைய பரிசுத்தமான மணையாட்டி. திருச்சபையே எல்லா பரிசுத்தவான்களுக்கும் தாயாகயிருக்கிறவள்.

அப்போஸ்தலர் யோவான் வானத்திலே ஒரு பெரிய அடையாளத்தைக் காண்கிறார். ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருக்கிறாள். கிறிஸ்துவானவர் நீதியின் சூரியனாகயிருக்கிறவர். இந்த ஸ்திரீ கிறிஸ்துவை அணிந்திருக்கிறாள். கிறிஸ்துவின் பிரகாசம் இந்த ஸ்திரீயின்மீது பிரதிபலிக்கிறது.

ஸ்திரீயினுடைய பாதங்களின்கீழ் சந்திரன் இருக்கிறது. ஸ்திரீயினுடைய இருதயமும் நம்பிக்கையும் கர்த்தருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறது. ஸ்திரீயின் தலையோ பரலோகத்திலிருக்கிறது. சபையான ஸ்திரீயானவள் பரலோகத்திலுள்ள மேலான காரியங்களை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறாள்.

ஸ்திரீயினுடைய சிரசின்மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடம் இருக்கிறது. இவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்த பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள்.

ஸ்திரீயானவள் இப்போது கர்ப்பவதியாயிருக்கிறாள். பிரசவ வேதனையடைந்து, பிள்ளைபெறும்படி வருத்தப்பட்டு அலறுகிறாள். கிறிஸ்துவின் பரிசுத்தமான சந்ததியார் சபையிலே சேர்க்கப்படவேண்டும். இதுவே சபையின் பிரதான ஊழியம். விசுவாசிகளைச் சபையில் கூட்டிச் சேர்க்கும்போது, பிரசவ வேதனையைப்போல, சபைக்கு வேதனை உண்டாகும். வேதனையினால் வருத்தமும் உண்டாகும்.

பெரிய வலுசர்ப்பம்
வெளி 12 : 3,4

வெளி 12:3. அப்பொழுது வேறொரு அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையும், தன் தலைகளின்மேல் ஏழு முடிகளையுமுடைய சிவப்பான பெரிய வலுசர்ப்பமிருந்தது.

வெளி 12:4. அதின் வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கை இழுத்து, அவைகளைப் பூமியில் விழத்தள்ளிற்று; பிரசவவேதனைப்படுகிற அந்த ஸ்திரீ பிள்ளை பெற்றவுடனே, அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது.

அப்போஸ்தலர் யோவான் வானத்திலே சூரியனை அணிந்திருந்த ஒரு ஸ்திரீயை அடையாளமாகக் காண்கிறார். இதைத் தொடர்ந்து அவர் வேறொரு அடையாளத்தை வானத்தில் காண்கிறார். கர்த்தருடைய சபைக்கு விரோதமாக சத்துருவானவன் எழும்பிவருகிறான். அவன் பெரிய வலுசர்ப்பம்போல இருக்கிறான். இவன் சிவப்பான நிறமுடையவன். சிவப்பு நிறம் பயங்கரத்திற்கு அடையாளம். இவன் மிகுந்த கொடூர குணமுள்ளவன்.

பெரிய வலுசர்ப்பத்திற்கு ஏழுதலைகள் இருக்கிறது. இந்த ஏழுதலைகளும் ரோமப்பேரரசை குறிக்கலாமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். வலுசர்ப்பத்திற்கு பத்துக் கொம்புகளும் இருக்கிறது. வலுசர்ப்பத்தின் அதிகாரம் பத்துப்பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அகஸ்துராயனுடைய காலத்திலே, ரோமப்பேரரசு, பத்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வலுசர்ப்பத்தின் தலையிலுள்ள பத்துக்கொம்புகளும், ரோமப்பேரரசின் பத்து மாகாணங்களுக்கு அடையாளம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

வலுசர்ப்பத்தின் தலைகளின்மேல் ஏழுமுடிகள் உள்ளது. இவையெல்லாம் கிரீடங்கள். இந்த ஏழு முடிகளும் ஏழு ராஜாக்களாக விவரிக்கப்பட்டிருக்கிறார்கள் (வெளி 17:10).

வலுசர்ப்பத்திற்கு ஒரு வால் இருக்கிறது. வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொரு பங்கை வலுசர்ப்பத்தின் வால் இழுத்து, அவற்றை பூமியில் விழத்தள்ளிற்று. வலுசர்ப்பத்தின்வால் அந்த அளவுக்கு நீளமானது, வலிமையானது. ரோமப்பேரரசின் அதிகாரம் உலகின் பல பகுதிகளுக்கும் பரவி விரிந்திருந்தது.

சூரியனை அணிந்திருந்த ஸ்திரீ, பிரசவ வேதனைப்பட்டு பிள்ளைபெறுகிறாள். பிள்ளை பிறந்தவுடனே, அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு, வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நிற்கிறது. ஓரிடத்தில் சபை ஸ்தாபிக்கப்படும்போதே, சாத்தான் அதை அழித்துப்போட முயற்சிபண்ணுகிறான். சபையின் ஆரம்பநிலைமையிலேயே அதை உபத்திரவப்படுத்துவதற்கு சாத்தான் அங்கு வந்துவிடுகிறான். கிறிஸ்தவ மார்க்கத்தை ஆரம்பத்திலேயே அழித்துவிட வேண்டுமென்பதுதான் சாத்தானுடைய வஞ்சகமான திட்டம். ஸ்திரீயினுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடுவது என்பதற்கு, சபையை அழித்துப்போடுவது என்று பொருள்.

ஆண்பிள்ளை
வெளி 12 : 5,6

வெளி 12:5. சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகைசெய்யும் ஆண்பிள்ளையை அவள் பெற்றாள்; அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும், எடுத்துக் கொள்ளப்பட்டது.

வெளி 12:6. ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்; அங்கே ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காக தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது.

வலுசர்ப்பத்தினால் பிள்ளையைப் பட்சித்துப்போட முடியவில்லை. ஸ்திரீயானவள் தன்னுடைய பிள்ளையைப் பெற்றெடுக்கிறாள். அது ஒரு ஆண்பிள்ளை. அந்தப் பிள்ளை சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகை செய்யும். ஆண்பிள்ளை பாதுகாப்பாக பெற்றெடுக்கப்படுகிறது.

கர்த்தரானவர் ஆண்பிள்ளையை பாதுகாக்கிறார், பராமரிக்கிறார். சபை ஆரம்பிக்கப்படும்போது, சபையின்மீது தேவனுடைய விசேஷித்த கிருபை வந்து இறங்குகிறது. சபையின் ஆரம்பகாலத்தில் கர்த்தர் தம்முடைய விசேஷித்த பராமரிப்பை சபைக்கு அருளுகிறார். நம்முடைய தேவன் மகாதேவன். நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே உலகஇரட்சகராகவும் இருக்கிறார். சபை அழிந்துபோகாதபடிக்கு கிறிஸ்துவானவர் தம்முடைய சபையை பாதுகாக்கிறார். கர்த்தருடைய சமுகத்திலிருந்து ஆண்பிள்ளைக்கும், இந்தப் பிள்ளையை பெற்றெடுத்த ஸ்திரீக்கும் பாதுகாப்பும் பராமரிப்பும் கொடுக்கப்படுகிறது.

ஸ்திரீ தன் பிள்ளையைப் பெற்றவுடன், அந்தப் பிள்ளை தேவனிடத்திற்கும், அவளுடைய சிங்காசனத்தினிடத்திற்கும் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்தப் பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நிற்கிறது. பிள்ளையோ வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஸ்திரீயானவள் வலுசர்ப்பத்திற்குத் தப்பித்து வனாந்தரத்திற்கு ஓடிப்போகிறாள்.

தேவன் ஸ்திரீயைப் பாதுகாக்கிறார். பராமரிக்கிறார். வனாந்தரத்திலே அவளுக்கு ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணுகிறார். ஸ்திரீ வனாந்தரத்திலிருக்கும் போது கர்த்தரானவர் அவளைப் போஷிக்கிறார். கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் மாத்திரமே நிர்ணயிக்கப்படுகிறது. கர்த்தர் அந்த ஸ்திரீயை ஆயிரத்தி இருநூற்று நாற்பது நாளளவும் வனாந்தரத்திலே போஷிக்கிறார். அவளைப் போஷிப்பதற்காக தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் வனாந்தரத்திலே அவளுக்கு உண்டாயிருக்கிறது.

வானத்திலே யுத்தமுண்டாயிற்று வெளி 12 : 7-9

வெளி 12:7. வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம் பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம் பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை.

வெளி 12:8. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற் போயிற்று.

வெளி 12:9. உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது, அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்.

சாத்தான் சபையைப் பட்சித்துப்போட முயற்சி செய்து கொண்டிருக்கிறான். ஆனால் சபைக்கு விரோதமாக சாத்தானால் ஜெயங்கொள்ள முடியவில்லை. சபையைப் பட்சிக்க வேண்டுமென்று யுத்தம்பண்ணியவன் தோற்றுப்போகிறான். பட்சிக்க நினைத்தவன் பட்சிக்கப்படுகிறான்.

கர்த்தருக்கும் சாத்தானுக்கும் பரலோகத்தில் யுத்தமுண்டாயிற்று. கர்த்தருடைய சார்பாக மிகாவேலும், அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணுகிறார்கள். வலுசர்ப்பத்தோடு அதைச் சேர்ந்த தூதர்கள் சேர்ந்துகொண்டு, கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். சபையில் நடைபெறுகிற சண்டைகளும் சச்சரவுகளும், பிரிவினைகளும், போட்டிகளும் பரலோகத்திலே பிரத்தியட்சமாகத் தெரியும். சபைக்கு விரோதமாக நடைபெறுகிற யுத்தம் வானத்திலே உண்டாயிருக்கும்.

யுத்தம் வானத்திலே உண்டாயிற்று. பரலோக ராஜ்யம் பூமியிலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் திருச்சபையே, பூமியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற பரலோக ராஜ்யம். இயேசுகிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையே நடைபெறுகிற யுத்தம், பூமியிலே, கர்த்தருடைய சபையிலே நடைபெறுகிறது. இங்கு நடைபெறுகிற யுத்தம் பரலோகத்திலிருந்து கவனிக்கப்படுகிறது.

கர்த்தருடைய பட்சத்திலே இயேசுகிறிஸ்துவும், பிரதான தூதனாகிய மிகாவேலும், மிகாவேலைச் சேர்ந்த தூதர்களும், கர்த்தரை உண்மையாய்ப் பின்பற்றுகிற விசுவாசிகளும் இணைந்திருக்கிறார்கள். இவர்கள், கிறிஸ்துவின் தலைமையிலே, சத்துருவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். இந்த யுத்தத்தில் சாத்தானுடைய பட்சத்தில் வலுசர்ப்பமும் அதைச் சேர்ந்த தூதரும் கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள்.

இயேசுகிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார். இதுவே திருச்சபையின் பெலன். சபையாரின் இரட்சிப்புக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே அதிபதியாயிருக்கிறார். கர்த்தர் நம் பட்சத்தில் இல்லையென்றால் நாம் ஒன்றுமில்லை. இந்த உலகத்தில் இருக்கிறவனிலும் நமக்குள்ளிருக்கிற இயேசுகிறிஸ்து பெரியவர்.

இயேசு கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் நடைபெற்ற யுத்தத்திலே கர்த்தர் ஜெயம் பெறுகிறார். சாத்தான் தோற்றுப்போகிறான். கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் ஜெயமுண்டாயிற்று. சாத்தானுக்கும் அவனுடைய பிசாசுகளுக்கும் தோல்வியுண்டாயிற்று. இந்தத் தோல்வியைத் தொடர்ந்து அவர்கள் கீழே தள்ளப்பட்டார்கள். வானத்தில் சாத்தானும் அவனுடைய பிசாசுகளும் இருந்த இடம் காணப்படாமற்போயிற்று. சாத்தானுக்கு பெரிய தோல்வி உண்டாயிற்று. வலுசர்ப்பம் சபையைப் பட்சித்துப்போட வேண்டுமென்று கர்த்தரோடு யுத்தம்பண்ணிற்று. இந்த யுத்தத்தில் வலுசர்ப்பம் தோற்றுப்போயிற்று. சர்ப்பம் அழிந்துபோயிற்று.

வானத்திலே ஒரு பெரிய சத்தம் வெளி 12 : 10,11

வெளி 12:10. அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ்சுமத்தும் பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான்.

வெளி 12:11. மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.

அப்போஸ்தலர் யோவான் வானத்திலே சூரியனை அணிந்திருந்த ஸ்திரீயையும், சிவப்பான பெரிய வலுசர்ப்பத்தையும் தரிசிக்கிறார். ஸ்திரீயானவள் பிள்ளைபெறுகிறாள். பிசாசானவன் பிள்ளையைப் பட்சித்துப்போடும்படி கர்த்தரோடு யுத்தம்பண்ணுகிறான். இந்த யுத்தத்தில் வலுசர்ப்பம் தோற்றுப்போயிற்று. அது கீழே தள்ளப்படுகிறது. அதைத் தொடர்ந்து வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாயிற்று. யோவான் அந்தச் சத்தத்தைக் கவனித்துக் கேட்கிறார்.

கர்த்தரும் அவருடைய சேனையும் வெற்றிபெற்றிருக்கிறார்கள். வெற்றி பெற்றவர்கள் ஆனந்த சந்தோஷமாய் ஆர்ப்பரிக்கிறார்கள். கர்த்தரைத் துதிக்கிற ஜெயப்பாடல்களைப் பாடுகிறார்கள். கர்த்தரைத் துதித்து துதிப்பாடல்களைப் பாடுகிறார்கள். கிறிஸ்துவானவரே ஜெயம் பெற்றிருக்கிறார். துதிப்பாடல்களில் கிறிஸ்துவானவர் துதிக்கப்படுகிறார்.

“இரட்சிப்பும் வல்லமையும், நமது தேவனுடைய ராஜ்யமும் அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது” என்று வானத்திலே உண்டான பெரிய சத்தம் கர்த்தரைத் துதித்துப்பாடுகிறது. சபையின் இரட்சிப்பும் பெலனும் ராஜாதி ராஜாவாகிய இயேசுகிறிஸ்துவிடம் மாத்திரமே இருக்கிறது. அவரே சபைக்குத் தலையாகயிருக்கிறார்.

சத்துருவாகிய சாத்தான் இரவும் பகலும் தேவனுக்கு முன்பாக, கர்த்தருடைய பிள்ளைகள்மேல் குற்றம் சுமத்தும் பொருட்டு நிற்கிறான். தேவனுடைய பிரசன்னத்தை சாத்தான் விரும்புவதில்லை. ஆனாலும் தேவனுடைய பிள்ளைகள்மேல் குற்றம் சுமத்தும் பொருட்டு, தேவனுக்கு முன்பாக நிற்கிறான். தேவனை விரும்பாதவன், தேவனுடைய சமுகத்திலே, அவருடைய பிள்ளைகளை குற்றப்படுத்த விரும்புகிறான்.

கர்த்தரோ சாத்தானுடைய குற்றச்சாட்டை அங்கீகரிக்கவில்லை. மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ நம்முடைய இருதயத்தைப் பார்க்கிறார். அவர் தம்முடைய பிள்ளைகளின் இருதயத்தை அறிந்திருக்கிறார். சாத்தான் தேவனுக்கு முன்பாக கர்த்தருடைய பிள்ளைகள்மேல் குற்றம் சாட்டினாலும், அவனுடைய குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை. சாத்தான் பொய்யனாகவும், பொய்க்குத் தகப்பனாகவும் இருக்கிறான். தம்முடைய பிள்ளைகள்மேல் குற்றம்சாட்டுகிற சத்துருவை கர்த்தர் கீழே தள்ளிவிடுகிறார். உலகம் அனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும், சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது. அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது. அதனோடேகூட அதைச் சேர்ந்த பிசாசுகளும் தள்ளப்பட்டார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் சாத்தானை ஜெயித்தார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு இரண்டு உபாயங்களினால் சாத்தான்மீது ஜெயமுண்டாயிற்று.அந்த உபாயங்களாவன: 1. ஆட்டுக்குட்டியின் இரத்தம் 2. தங்கள் சாட்சியின் வசனம். கர்த்தருடைய பிள்ளைகள் இவ்விரண்டு உபாயங்களையும் பயன்படுத்தி வலுசர்ப்பதை ஜெயித்தார்கள். விசுவாசிகள் சாத்தானோடு யுத்தம்பண்ணும்போது, மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும், அதற்குத் தப்பும்படி, தங்கள் ஜீவனையும் பார்க்கவில்லை. கர்த்தருடைய பரிசுத்தவான்கள் இரத்தசாட்சியாக மரிப்பதற்கு ஆயத்தமாகயிருந்தார்கள். சத்துருவை ஜெயிக்கவேண்டுமென்று தீர்மானமாய் யுத்தம்பண்ணினார்கள். நித்திய சுவிசேஷத்தை தேவனுடைய வல்லமையினால் தொடர்ந்து பிரசங்கம்பண்ணினார்கள்.

சாத்தானோடு யுத்தம்பண்ணும்போது கர்த்தருடைய பரிசுத்தவான்களிடத்தில் பரிசுத்தமான தைரியம் இருந்தது. அவர்கள் துன்பங்களை அனுபவிக்கும்போது நீடியபொறுமையோடு அவற்றைச் சகித்துக்கொண்டார்கள். தங்கள் ஜீவனை அவர்கள் நேசிக்கவில்லை. மரணத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுக்கவும் ஆயத்தமாயிருந்தார்கள். ஜீவன்மேலுள்ள ஆசையை கர்த்தர்மேல் வைத்திருக்கிற விசுவாசம் மேற்கொண்டது. சாத்தானோடு யுத்தம்பண்ணவேண்டும் என்னும் பக்திவைராக்கியம் ஜீவன் மேலுள்ள ஆசையை மேற்கொண்டது. கர்த்தருடைய பிள்ளைகள் தங்கள் ஜீவன்மேல் வைத்திருந்த ஆசை தோற்றுப்போயிற்று. கர்த்தர்மேல் வைத்திருந்த விசுவாசம் ஜெயம்பெற்றது. சாத்தானை ஜெயிக்கவேண்டும் என்னும் பக்திவைராக்கியம் ஜெயம்பெற்றது.

ஆபத்து வரும்
வெளி 12:12

வெளி 12:12. ஆகையால் பரலோகங்களே! அவைகளின் வாசமாயிருக்கிறவர்களே! களிகூருங்கள். பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும் என்று சொல்லக்கேட்டேன்.

வானத்திலிருந்து உண்டான பெரிய சத்தம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் துதித்துப் பாடுகிறது. கர்த்தருடைய பிள்ளைகள் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் வலுசர்ப்பத்தை ஜெயித்தார்கள் என்று சொல்லுகிறது. இதைத் தொடர்ந்து பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஆபத்து வரும் என்றும் எச்சரித்துச் சொல்லுகிறது.

கர்த்தர் வலுசர்ப்பத்தை ஜெயித்தார். ஆகையால் பரலோகங்களும், அவைகளில் வாசமாயிருக்கிறவர்களும் களிகூரவேண்டும். ஆனால் பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களுக்கு பிரச்சனைகள் உண்டாகும். வலுசர்ப்பமானது வானத்திலிருந்து பூமியிலே விழத்தள்ளப்பட்டது. அது பூமியிலிருக்கும்போது சும்மாயிருக்காது.

தன்னுடைய துர்க்கிரியைகளைச் செய்வதற்கு பிசாசானவனுக்கு கொஞ்சகாலம் மாத்திரமே இருக்கிறது. கர்த்தர் அவனுக்கு கொஞ்சகாலம் மாத்திரமே அனுமதிருக்கிறார்.

பிசாசானவனும் தனக்கிருக்கிற கொஞ்சகாலத்தைப்பற்றி நன்றாக அறிந்திருக்கிறான். ஆகையினால் அவன் கர்த்தருடைய பிள்ளைகள்மீது மிகுந்த கோபங்கொண்டிருக்கிறான். விசுவாசிகள் மத்தியிலே கோபத்தோடு இறங்கி வந்திருக்கிறான். ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு வலுசர்ப்பத்தினால் ஆபத்து வரும் என்று வானத்திலே உண்டான பெரிய சத்தம் எச்சரித்துச் சொல்லுகிறது.

வலுசர்ப்பம் சபைக்கு விரோதமாக மேற்கொண்ட யுத்தத்திலே தோற்றுப்போயிற்று. தான் தோல்வியடைந்ததினால் சாத்தான் மிகவும் கோபமாயிருக்கிறான். இந்த உலகம் முழுவதிலும் பிரச்சனை கொடுக்க வேண்டுமென்று சாத்தான் துரிதமாய்ச் செயல்படுகிறான். வலுசர்ப்பத்தினால் பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களுக்கு ஆபத்து வரும்.

பெருங்கழுகின் இரண்டு சிறகுகள்
வெளி 12 : 13-17

வெளி 12:13. வலுசர்ப்பமானது தான் பூமியிலே தள்ளப்பட்டதை அறிந்து, அந்த ஆண்பிள்ளையைப்பெற்ற ஸ்திரீயைத் துன்பப்படுத்தினது.

வெளி 12:14. ஸ்திரீயானவள் அந்தப் பாம்பின் முகத்திற்கு விலகி, ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத் தக்கதாய் வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் பறந்துபோகும்படி பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது.

வெளி 12:15. அப்பொழுது அந்த ஸ்திரீயை வெள்ளங்கொண்டு போகும்படிக்குப் பாம்பானது தன் வாயிலிருந்து ஒரு நதிபோன்ற வெள்ளத்தை அவளுக்குப்பின்னாக ஊற்றிவிட்டது.

வெளி 12:16. பூமியானது ஸ்திரீக்கு உதவியாகத் தன் வாயைத் திறந்து, வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து ஊற்றின வெள்ளத்தை விழுங்கினது.

வெளி 12:17. அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின் மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப் போயிற்று.

வலுசர்ப்பம் கர்த்தருடைய சபையின்மீது இரண்டாம் முறையாக யுத்தம்பண்ணுகிறது. முதலில் வானத்திலே யுத்தமுண்டாயிற்று. இரண்டாவது யுத்தம் வனாந்தரத்திலே உண்டாயிற்று. முதலாவது யுத்தத்தில் வலுசர்ப்பம் தோற்றுப்போயிற்று. அது பூமியிலே தள்ளப்பட்டது. தான் தோற்றுப்போனதையும், பூமியிலே தள்ளப்பட்டதையும் அறிந்து, வலுசர்ப்பம் அந்த ஆண்பிள்ளையைப் பெற்ற ஸ்திரீயைத் துன்பப்படுத்துகிறது. ஸ்திரீயானவள் பாம்பின் முகத்திற்கு விலகி வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் போகிறாள்.

கர்த்தர் தம்முடைய சபையைப் பாதுகாக்கிறார். பராமரிக்கிறார். வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்கு பறந்து போகும்படிக்கு, கர்த்தரானவர் அந்த ஸ்திரீக்கு, பெருங்கழுகின் இரண்டு சிறகுகளைக் கொடுக்கிறார். வனாந்தரத்திலுள்ள அந்த இடம் ஸ்திரீக்கும் பாதுகாப்பான இடம். கர்த்தரே இந்த இடத்தை ஸ்திரீக்குக் கொடுத்திருக்கிறார்.

சபையானது கர்த்தரால் பாதுகாக்கப்படுகிறது, பராமரிக்கப்படுகிறது, போஷிக்கப்படுகிறது. கர்த்தர் ஸ்திரீயானவளை, வனாந்தரத்திலே போஷிக்கிறார். போஷிப்பின் காலமும் கர்த்தரால் நிர்ணயிக்கப்படுகிறது. அவள் ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமுமாக போஷிக்கப்படுகிறாள். ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு பறந்து போனாலும், வலுசர்ப்பம் அங்கும் வந்து ஸ்திரீயோடு யுத்தம்பண்ணுகிறது. ஸ்திரீயானவளுக்கு பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் கொடுக்கப்பட்டாலும், அவளால் தன் சுயபலத்தினால் தன்னைக் காத்துக்கொள்ள முடியவில்லை. கர்த்தரே அவளைப் போஷிக்கவேண்டும். கர்த்தரே அவளைப் பாதுகாத்து பராமரிக்கவேண்டும்.

பாம்பானது தன் வாயிலிருந்து ஒரு நதிபோன்ற வெள்ளத்தை அவளுக்குப் பின்னாக ஊற்றிவிடுகிறது. அந்த வெள்ளத்தில் ஸ்திரீயானவள் அடித்துக்கொண்டு போகப்படவேண்டும் என்பதுதான் பாம்பின் வஞ்சகமான திட்டம். கர்த்தரோ பாம்பு அனுப்பிய வெள்ளத்திலிருந்து ஸ்திரீயைப் பாதுகாக்கிறார். கர்த்தருடைய பாதுகாப்பு இல்லையென்றால் சபைக்கு பாதுகாப்பு இல்லை.

பூமியானது ஸ்திரீக்கு உதவியாக தன் வாயைத் திறக்கிறது. வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து ஒரு நதிபோன்ற வெள்ளத்தை ஸ்திரீக்குப் பின்னாக ஊற்றிவிடுகிறது. அந்த வெள்ளம் ஸ்திரீயைப் பின்தொடர்ந்து வருகிறது. ஸ்திரீயை வெள்ளம் கொண்டுபோகும்படி நதி அவளைப் பின்தொடர்ந்து வருகிறது. இந்த ஆபத்தான வேளையில் பூமியானது தன் வாயைத் திறந்து, வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து ஊற்றின வெள்ளத்தை விழுங்குகிறது. ஸ்திரீயானவள் வெள்ளம் கொண்டு போகப்படாதபடிக்கு பாதுகாக்கப்படுகிறாள். வனாந்தரத்திலும் ஸ்திரீக்கு கர்த்தருடைய பாதுகாப்பு உண்டாயிற்று. சபைக்கு ஆபத்து வரும்போதெல்லாம் கர்த்தர் தம்முடைய வல்லமையினால் சபையை அற்புதமாகப் பாதுகாக்கிறார். சபையை அதிசயமாய்ப் பராமரிக்கிறார்.

ஸ்திரீயானவள் வெள்ளத்திலிருந்து தப்பித்துக்கொள்கிறாள். இதனால் வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொள்கிறது. இப்போது ஸ்திரீயோடு யுத்தம்பண்ணுவதற்குப் பதிலாக கர்த்தருடைய பிள்ளைகளோடு யுத்தம்பண்ணுவதற்கு வலுசர்ப்பம் புறப்பட்டுப்போகிறது.

இந்தப் பூமியிலே தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்கிறவர்கள் இருக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சியுடையவர்கள் இருக்கிறார்கள். கர்த்தருக்கு மீதியான ஜனங்கள் உலகமெங்கும் எல்லா தேசத்தார் மத்தியிலும் இருக்கிறார்கள். இவர்கள் ஸ்திரீயினுடைய சந்ததிகள். வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று. கடைசி சத்துரு அழிக்கப்படும் வரையிலும் உலகத்தில் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்கிறவர்கள் இருப்பார்கள். இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சியுடையவர்கள் இருப்பார்கள்.

13 அதிகாரம்

சாத்தான் கர்த்தருடைய சபைகளுக்கு விரோதமாக எப்போதுமே கிரியை நடப்பிக்கிறான். வலுசர்ப்பத்திற்குப் பின்பு மேலும் இரண்டு மிருகங்கள் சபைக்கு சத்துருக்களாய் வருகிறது. அவற்றைப்பற்றிய விவரம் இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. முதலாம் மிருகம் (வெளி 13:1-10). இரண்டாம் மிருகம் (வெளி 13:11-18).

சமுத்திரத்திலிருந்து எழும்பி வந்த ஒரு மிருகம் வெளி 13 : 1,2

வெளி 13:1. பின்பு நான் கடற்கரை மணலின்மேல் நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பிவரக் கண்டேன்; அதற்கு ஏழு தலைகளும் பத்துக்கொம்புகளும் இருந்தன; அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின்மேல் தூஷணமான நாமமும் இருந்தன.

வெளி 13:2. நான் கண்ட மிருகம் சிறுத்தையைப்போலிருந்தது. அதின் கால்கள் கரடியின் கால்களைப்போலவும், அதின் வாய் சிங்கத்தின் வாயைப்போலவும் இருந்தன; வலுசர்ப்பமானது தன் பலத்தையும், தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது.

அப்போஸ்தலர் யோவான் இந்தத் தரிசனத்தைக் காண்கிறபோது கடற்கரை மணலின்மேல் நிற்கிறார். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வரக் காண்கிறார். ஏற்கெனவே சபைக்கு விரோதமாக வலுசர்ப்பம் எழும்பி வந்தது. இப்போது அதன் தொடர்ச்சியாக, சமுத்திரத்திலிருந்து இந்த மிருகம் எழும்பி வருகிறது.

இந்த மிருகத்திற்கு ஏழு தலைகளும் பத்துக்கொம்புகளும் இருக்கிறது. தானியேல் தீர்க்கதரிசி நான்கு மிருகங்களை தரிசனத்திலே கண்டார். "பாபிலோன் ராஜாவாகிய பெல்ஷாத்சாரின் முதலாம் வருஷத்திலே தானியேல் ஒரு சொப்பனத்தையும் தன் படுக்கையின்மேல் தன் தலையில் தோன்றின தரிசனங்களையும் கண்டான். பின்பு அவன் அந்தச் சொப்பனத்தை எழுதி, காரியங்களின் தொகையை விவரித்தான். தானியேல் சொன்னது: இராத்திரி காலத்தில் எனக்கு உண்டான தரிசனத்திலே நான் கண்டது என்னவென்றால்: இதோ, வானத்தின் நாலு காற்றுகளும் பெரிய சமுத்திரத்தின்மேல் அடித்தது. அப்பொழுது வெவ்வேறு ரூபமுள்ள நாலு பெரிய மிருகங்கள் சமுத்திரத்திலிருந்து எழும்பின" (தானி 7:1-3). இந்த நான்கு மிருகங்களும், நான்கு ராஜ்யங்களைக்குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

இந்த மிருகத்திற்கு ஏழுதலைகளும் பத்துக்கொம்புகளும் இருக்கிறது. இந்த மிருகத்திற்கு வெவ்வேறு விதமான அதிகாரங்கள் இருப்பதை இந்தத் தலைகளும், கொம்புகளும் விவரிக்கிறது. அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகள் இருக்கிறது. இந்த முடிகள் கப்பம் செலுத்துகிற ராஜாக்களைக் குறிக்கிறது. மேலும் இந்த மிருகத்தின் தலைகளின்மேல் தூஷணமான நாமமும் இருக்கிறது. இந்த மிருகம் தேவனுடைய மகிமைக்கு விரோதமாயிருக்கிறது. தேவனுக்கும், அவருடைய சபைக்கும் விரோதமாய்க் கிரியை நடப்பிக்கிறது.

சமுத்திரத்திலிருந்து எழும்பி வந்த மிருகம் சிறுத்தையைப்போலிருக்கிறது. அதின் கால்கள் கரடியின் கால்களைப்போலவும், அதின் வாய் சிங்கத்தின் வாயைப்போலவும் இருக்கிறது. இந்த மிருகத்திற்கு சுயமாக எந்தப் பெலனுமில்லை. இது ஒரு பெலனற்ற மிருகம். ஆனாலும், வலுசர்ப்பமானது தன் பலத்தையும், தன் சிங்காசனத்தையும், தன்னுடைய மிகுந்த அதிகாரத்தையும் இந்த மிருகத்திற்குக் கொடுக்கிறது. மிருகமும் வலுசர்ப்பத்திடமிருந்து தனக்குத் தேவையான பலத்தையும் அதிகாரத்தையும் பெற்றுக்கொள்கிறது.

மிருகம் வலுசர்ப்பத்தின் அடியாள் போல இருக்கிறது. வலுசர்ப்பத்தினுடைய துன்மார்க்கமான கிரியைகளுக்கு மிருகம் துணைபோகிறது. வலுசர்ப்பம் மிருகத்திற்குப் பெலன் கொடுத்து, அதை தன்னுடைய துன்மார்க்கமான கிரியைக்கு பங்காளியாக்கிக்கொள்கிறது.

வலுசர்ப்பத்தையும், மிருகத்தையும் வணங்கினார்கள் வெளி 13 : 3,4

வெளி 13:3. அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன்; ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடேஅந்த மிருகத்தைப் பின்பற்றி,

வெளி 13:4. அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள். அல்லாமலும்: மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம்பண்ணத்தக்கவன் யார்? என்று சொல்லி, மிருகத்தையும் வணங்கினார்கள்.

மிருகத்திற்கு ஏழுதலைகள் இருக்கிறது. அந்தத் தலைகளில் ஒன்று சாவுக்கேதுவாய் காயப்பட்டிருக்கிறது. ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்படுகிறது. சத்துரு கீழே விழுந்தாலும் மறுபடியும் எழும்பி சபைக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறான். அவன் காயம்பட்டாலும் தன் காயத்தை ஆற்றிக்கொள்கிறான். அவனுக்கு சாவுக்கேதுவான காயம் உண்டானாலும், அவன் செத்துப்போகாமல், தன்னைச் சொஸ்தமாக்கிக்கொள்கிறான்.

பூமியிலுள்ள யாவரும் அந்த மிருகத்தைப் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். அந்த மிருகத்திற்கு இருக்கிற அதிகாரத்தைப் பார்த்து, பலத்தைப்பார்த்து, அதன் சிங்காசனத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, அந்த மிருகத்தைப் பின்பற்றுகிறார்கள். வலுசர்ப்பத்திற்கோ, மிருகத்திற்கோ மெய்யாகவே ஒரு பலனுமில்லை. அவற்றிற்கு ஒரு அதிகாரமுமில்லை. அவற்றிற்கு சிங்காசனமுமில்லை. ஆனால் தங்களிடத்தில் இவையெல்லாம் இருப்பதுபோல மாய்மாலம் பண்ணுகிறது. ஜனங்கள் மாய்மாலத்தை மெய்யென்று நம்பி ஆச்சரிப்படுகிறார்கள்.

வலுசர்ப்பத்தையும், மிருகத்தையும் கனப்படுத்துகிறார்கள். வலுசர்ப்பமானது தன் பலத்தையும், தன் சிங்காசனத்தையும், மிகுந்த அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுத்திருக்கிறது. அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரம் கொடுத்த வலுசர்ப்பத்தை பூமியிலுள்ள யாவரும் வணங்குகிறார்கள்.

வலுசர்ப்பத்தை வணங்குகிறவர்கள் மிருகத்தையும் வணங்குகிறார்கள். மிருகத்திற்கு ஒப்பானவர்கள் யாருமில்லை என்று சொல்லுகிறார்கள். மிருகத்தோடே யுத்தம்பண்ணத்தக்கவன் ஒருவருமில்லை என்று அறிக்கையிடுகிறார்கள். மிருகத்திற்கு அதிக வல்லமையிருப்பதாக நினைத்து, பூமியிலுள்ள யாவரும் மிருகத்தையும் வணங்குகிறார்கள்.

மிருகத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது
வெளி 13 : 5-7

வெளி 13:5. பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது; அல்லாமலும், நாற்பத்திரண்டு மாதம் யுத்தம்பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது.

வெளி 13:6. அது தேவனைத் தூஷிக்கும்படி தன் வாயைத்திறந்து, அவருடைய நாமத்தையும், அவருடைய வாசஸ்தலத்தையும், பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் தூஷித்தது.

வெளி 13:7. மேலும், பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டதுமல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தின்மேலும் பாஷைக்காரர்மேலும் ஜாதிகள்மேலும் அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது.

மிருகம் வலுசர்ப்பத்திடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கிறது. மிருகத்தினுடைய வாய் பெருமையானவைகளையும் தூஷணமானவைகளையும் பேசுகிறது. கர்த்தருடைய பரிசுத்தவான்களோடு நாற்பத்திரண்டு மாதம் யுத்தம்பண்ண அதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. மிருகத்திற்கு பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயிக்கும்படிக்கும் அதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

சமுத்திரத்திலிருந்து எழும்பி வந்த மிருகம் தேவனைத் தூஷிக்கும்படி தன்னுடைய வாயைத் திறக்கிறது. தேவனுடைய நாமத்தையும், அவருடைய வாசஸ்தலத்தையும், பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் மிருகம் தூஷிக்கிறது. மிருகம் தன்னுடைய துன்மார்க்கமான கிரியையை பூமியிலும் செய்கிறது. பரலோகத்திலும் செய்கிறது. கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு விரோதமாகவும் தூஷிக்கிறது. கர்த்தருக்கு விரோதமாகவும் தூஷிக்கிறது.

மிருகத்தினால் தேவனுடைய நாமத்தையும், அவருடைய வாசஸ்தலத்தையும், பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் தூஷிக்க மாத்திரமே முடியும். அவர்களோடு யுத்தம்பண்ணுவதற்கோ, அவர்களை ஜெயிப்பதற்கோ மிருகத்திற்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. பரலோகத்திலுள்ளவர்களை தூஷித்துவிட்டு மிருகம் தன்னுடைய துன்மார்க்கமான கிரியையை அங்கே நிறுத்திக்கொள்கிறது. அதற்குமேல் மிருகத்திற்கு அதிகாரமில்லை.

ஆனால் பூமியிலுள்ள பரிசுத்தவான்களோ மிருகத்தினால் அதிகமாய்ப் பாதிக்கப்படுகிறார்கள். மிருகம் பரிசுத்தவான்களோடே யுத்தம் பண்ணுகிறது. அவர்களில் சிலபேரை ஜெயிக்கிறது. மிருகத்திற்கு இப்படிப்பட்ட அதிகாரமிருந்தாலும், அதற்கு நித்திய அதிகாரம் கொடுக்கப்படவில்லை. நாற்பத்திரண்டு மாதம் மாத்திரமே யுத்தம்பண்ணுவதற்கு அதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மிருகத்திற்குத் தங்களை யார் ஒப்புக்கொடுக்கிறார்களோ அவர்கள்மீது மாத்திரமே, அந்த மிருகத்திற்கு அதிகாரமுண்டு. மிருகத்தை வணங்குகிறவர்கள் மிருகத்திற்கு அடிமைகளாயிருக்கிறார்கள்.

ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள்
வெளி 13 : 8-10

வெளி 13:8. உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்.

வெளி 13:9. காதுள்ளவனெவனோ அவன் கேட்கக்கடவன்.

வெளி 13:10. சிறைப்படுத்திக்கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப்போவான்; பட்டயத்தினாலே கொல்லுகிறவன் பட்டயத்தினாலே கொல்லப்பட வேண்டும். பரிசுத்தவான்களுடைய பொறுமையும் விசுவாசமும் இதிலே விளங்கும்.

மிருகத்திற்கு நித்திய அதிகாரம் கொடுக்கப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் மாத்திரமே அதற்கு அதிகாரமுண்டு. மிருகத்தின் அதிகாரத்திற்கு எல்லோரும் அடிமைகளல்ல. மிருகத்தை எல்லோரும் வணங்குவதுமில்லை. ஒரு குறிப்பிட்ட எண்ணிகையிலுள்ளவர்கள் மாத்திரமே மிருகத்தை வணங்குகிறார்கள். இவர்கள் மாத்திரமே மிருகத்திற்கு அடிமைகளாயிருக்கிறார்கள்.

உலகத்தோற்ற முதல் இரட்சிக்கப்பட்டவர்களின் பெயர்கள், ஆட்டுக்குட்டியினுடைய ஜீவப்புஸ்தகத்திலே எழுதப்பட்டிருக்கிறது. ஜீவப்புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் மாத்திரமே மிருகத்தை வணங்குவார்கள். கர்த்தருக்கு விரோதமாய் கிரியை செய்கிறவர்கள் மிருகத்தை வணங்குவார்கள். கர்த்தருக்குக் கீழ்ப்படியாதவர்கள் மிருகத்திற்குக் கீழ்ப்படிவார்கள்.

பட்டயத்தினால் கொல்லுகிறவன் பட்டயத்தினாலே கொல்லப்படவேண்டும். மற்றவர்களை பட்டயத்தினால் கொல்லுகிறவர்கள், தங்களுடைய பட்டயங்களின்மேல் விழுந்து செத்துப்போவார்கள். கர்த்தருடைய பிள்ளைகளை சிறைப்படுத்திக் கொண்டு போகிறவர்கள் சிறைப்பட்டுப்போவார்கள். துர்க்கிரியைகளைச் செய்து, மற்றவர்களை அழிக்கிறவர்கள், துர்க்கிரியைகளினால் அழிந்துபோவார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகள் சிறைப்பட்டுப்போகும்போது, தங்களுடைய பொறுமையையும், விசுவாசத்தையும் வெளிப்படுத்துகிறார்கள். இதுபோலவே கர்த்தருடைய பிள்ளைகள் பட்டயத்தினாலே கொல்லப்படும்போதும், தங்கள் பொறுமையையும் விசுவாசத்தையும் வெளிப்படுத்துகிறார்கள். யோவான் இந்தச் சத்தியத்தைச் சொல்லும்போது, “காதுள்ளவனெவனோ அவன் கேட்கக்கடவன்” என்று சொல்லுகிறார். இந்தச் சத்தியத்தை எல்லோரும் கேட்டு புரிந்துகொள்ளவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாகத் தீங்குசெய்கிறவர்களுக்கு, தீங்கு வரும். கர்த்தருடைய பிள்ளைகளை அழிக்கிறவர்களுக்கு அழிவு வரும். கர்த்தருடைய பிள்ளைகளைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கு துன்பம் வரும்.

வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பி வருகிறது வெளி 13 : 11,12

வெளி 13:11. பின்பு, வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பக் கண்டேன்; அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையதாயிருந்து, வலுசர்ப்பத்தைப்போலப் பேசினது.

வெளி 13:12. அது முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும் அதின் முன்பாக நடப்பித்து, சாவுக்கேதுவான காயம் ஆறச் சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் வணங்கும்படி செய்தது.

அப்போஸ்தலர் யோவான் வேறொரு மிருகத்தையும் காண்கிறார். முதலாவது மிருகம் சமுத்திரத்திலிருந்து எழும்பி வருகிறது. இரண்டாவது மிருகம் பூமியிலிருந்து எழும்பி வருகிறது. இந்த மிருகத்திற்கு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகள் இருக்கிறது. ஆனால் இதன் வாயோ வலுசர்ப்பத்தைப் போல பேசுகிறது. இந்த மிருகம் கள்ளப்போதகர்களுக்கு ஒப்பாயிருக்கிறது. கள்ளப்போதகர்கள் சத்தியத்தைப் போதிப்பதாகச் சொல்லிக்கொண்டு, துர்உபதேசத்தைப் போதிப்பார்கள். நல்லவர்களைப் பேசி நடிப்பார்கள். ஆத்துமாக்களை வஞ்சிப்பார்கள். இரண்டாவது மிருகம் வலுசர்ப்பத்தைப்போல பேசி ஜனங்களை வஞ்சிக்கிறது.

இரண்டாம் மிருகம் ஜனங்களை தவறான பாதையில் வழிநடத்திச் செல்லுகிறது. முந்தின மிருகத்தை பூமியும் அதன்குடிகளும் வணங்கும்படி செய்கிறது. ஜனங்களை வஞ்சிக்கிறது. முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும், இரண்டாம் மிருகம் அதற்கு முன்பாக நடப்பிக்கிறது.

முந்தின மிருகத்திற்கு ஏழுதலைகள் இருக்கிறது. அந்தத் தலைகளில் ஒன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கிறது. ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக்காயம் சொஸ்தமாக்கப்பட்டது. சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தை பூமியும் அதின்குடிகளும் வணங்கும்படி இரண்டாம் மிருகம் வஞ்சிக்கிறது.

கள்ளப்போதகர்கள் கர்த்தருடைய பிள்ளைகளை வஞ்சிப்பார்கள். மெய்யான தேவனை ஆராதியாமல், தேவர்களல்லாதவர்களை ஆராதிப்பதற்கு கள்ளப்போதகர்கள் ஜனங்களை வஞ்சித்து வழிநடத்துவார்கள். இரண்டாம் மிருகம் கள்ளப்போதகர்களைப் போலவே வஞ்சிக்கிறது. பூமியையும் அதன்குடிகளையும் கர்த்தரை வணங்கும்படி செய்வதற்குப் பதிலாக, மிருகத்தை வணங்கும்படி செய்கிறது.

கள்ளப்போதகர்கள் தங்களை வணங்குமாறு சொல்லமாட்டார்கள். ஆனால் தவறான உபதேசத்தைச் சொல்லி கர்த்தரை வணங்குவதிலிருந்து அவர்களை திசை திருப்பிவிடுவார்கள். அதுபோலவே இரண்டாம் மிருகம் பூமியையும் அதின் குடிகளையும் தன்னை வணங்குமாறு சொல்லவில்லை. அதற்குப் பதிலாக அவர்களை முந்தின மிருகத்தை வணங்கும்படி செய்கிறது.

அற்புதங்களை நடப்பித்து, பூமியின் குடிகளை மோசம்போக்கிற்று வெளி 13 : 13-17

வெளி 13:13. அன்றியும், அது மனுஷருக்குமுன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கப்பண்ணத்தக்கதாகப் பெரிய அற்புதங்களை நடப்பித்து,

வெளி 13:14. மிருகத்தின்முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம்போக்கி, பட்டயத்தினாலே காயப்பட்டுப் பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று.

வெளி 13:15. மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலைசெய்யத் தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங்கொடுக்கப்பட்டது.

வெளி 13:16. அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும்,

வெளி 13:17. அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது.

இரண்டாம் மிருகம் ஏராளமான ஜனங்களை வஞ்சிக்கிறது. தன்னிடத்தில் மெய்யான வல்லமையிருப்பதுபோல காண்பிக்கிறது. பெரிய அற்புதங்களை நடப்பிக்கிறது. மனுஷருக்கு முன்பாக வானத்திலிருந்து அக்கினியை இறங்கப்பண்ணத்தக்கதாக பெரிய அற்புதங்களை நடப்பிக்கிறது. ஜனங்கள் மிருகம் நடப்பிக்கிற அற்புதங்களைப் பார்த்து வஞ்சிக்கப்படுகிறார்கள். இந்த அற்புதங்கள் மெய்யான அற்புதங்களல்ல. இவை மாய்மாலமானவை. வானத்திலிருந்து பூமியின்மேல் மெய்யாகவே அக்கினி இறங்கவில்லை. அக்கினி இறங்குவதுபோல காண்பிக்கிறது. இந்த மாய்மாலத்தை முந்தின மிருகத்திற்கு முன்பாக செய்து காண்பிக்கிறது.

கர்த்தர் சில சமயங்களில் பிசாசுகளுக்கு அற்புதம் செய்கிற அதிகாரத்தைக் கொடுக்கிறார். விசுவாசத்தில் உறுதியாயில்லாதவர்கள் சாத்தானைப் பின்பற்றிப் போவதற்கு அனுமதி கொடுத்துவிடுகிறார். அவர்கள் இப்படிப்பட்ட பொய்யான அற்புதங்களைப் பார்த்து வஞ்சிக்கப்படுகிறார்கள்.

இரண்டாம் மிருகம் பொய்யான அற்புதங்களை நடப்பித்து பூமியின் குடிகளை மோசம்போக்குகிறது. மிருகத்திற்கு முன்பாக இப்படிப்பட்ட பொய்யான அற்புதங்களைச் செய்யும்படிக்கு இரண்டாம் மிருகத்திற்கு சத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

முதலாம் மிருகத்தின் ஏழுதலைகளில் ஒன்று, பட்டயத்தினாலே சாவுக்கேதுவாய் காயம்பட்டிருந்தது. ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. அந்த மிருகத்திற்கு முன்பாக இரண்டாம் மிருகம் பொய்யான அற்புதங்களை நடப்பித்து பூமியின் குடிகளை மோசம்போக்குகிறது. மோசம்போன ஜனங்களிடத்தில் இரண்டாம் மிருகம் துர்உபதேசம் பண்ணுகிறது. "பட்டயத்தினாலே காயப்பட்டு பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம்பண்ணவேண்டும்" என்று இரண்டாம் மிருகம் பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று.

இந்தச் சொரூபம் சாதாரண சொரூபமல்ல. இது பேசும் சொரூபம். தன்னை வணங்காத யாவரையும் கொலைசெய்து போடும் சொரூபம். மிருகத்தினுடைய சொரூபத்திற்கு அப்படிப்பட்ட துன்மார்க்கமான ஆவியை இரண்டாம் மிருகம் கொடுக்கிறது. இந்த ஆவியைக் கொடுக்கும்படி இரண்டாம் மிருகத்திற்கு சத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பூமியின் குடிகள் மிருகத்தின் சொரூபம் பேசுவதைப் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் அது கொலைசெய்வதைப் பார்த்து பயப்படுகிறார்கள். இதனால் பூமியின்குடிகள் வஞ்சிக்கப்பட்டு மிருகத்தின் சொரூபத்தை வணங்குகிறார்கள்.

மிருகத்தின் சொரூபத்தை வணங்குகிறவர்களில், சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள் ஆகிய எல்லோரும் இருக்கிறார்கள். இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலது கைகளிலாவது, நெற்றிகளிலாவது மிருகத்திடமிருந்து ஒரு முத்திரையைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

மிருகத்தை வணங்குகிறவர்கள், அந்த மிருகத்தின் முத்திரையையாவது, அதின் நாமத்தையாவது, அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்கிறார்கள். பூமியின் குடிகள் மிருகத்தின் முத்திரையை வெளிப்படையாகத் தரித்துக்கொண்டு, அந்த மிருகத்தின் சொரூபத்தை வணங்குகிறார்கள். இந்த முத்திரையைத் தரித்துக்கொள்கிறவர்கள் மாத்திரமே பூமியில் ஒரு பொருளை விற்கவோ அல்லது வாங்கவோ முடியும். இந்த முத்திரையைத் தரித்துக் கொள்ளாதவர்களுக்கு இந்தப் பூமியிலே தொழில் செய்வதற்கோ, வியாபாரம் செய்வதற்கோ, பொருட்களை கொள்முதல் செய்வதற்கோ அனுமதி மறுக்கப்படுகிறது. இரண்டாம் மிருகம் ஜனங்களை வஞ்சிக்கிறது.

அறுநூற்று அறுபத்தாறு
வெளி 13:18

வெளி 13:18. இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப் பார்க்கக்கடவன்; அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு.

அப்போஸ்தலர் யோவான் மிருகத்தின் இலக்கத்தை கணக்குப் பார்த்துச் சொல்லுகிறார். அதினுடைய இலக்கம் அறுநூற்று அறுபத்தாறு. இந்த இலக்கத்தில் மனுஷருடைய ஞானமும், புத்தியும் வெளிப்படுவதாகச் சொல்லுகிறார். அறுநூற்று அறுபத்தாறு என்னும் இலக்கம் மனுஷருடைய இலக்கமாகவும் இருக்கிறது என்றும் சொல்லுகிறார். இதைப்பற்றிய தெளிவான விளக்கத்தை வேதபண்டிதர்கள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

தேவன் தம்முடைய சத்துருக்கள் எல்லோர்மீதும், “மெனே தெக்கேல்” என்று எழுதுகிறார். சத்துருக்களுடைய நாட்கள் எண்ணப்படுகிறது. அவர்களுடைய காலம் முடிந்துபோகும். அவர்கள் அழிந்துபோவார்கள். சத்துருக்கள் அழிவார்கள். ஆனாலும் கர்த்தருடைய ராஜ்யமோ நித்திய காலமாய் நிலைத்துநிற்கும்.

14 அதிகாரம்

சீயோன் மலையிலே ஆட்டுக்குட்டியானவரும், அவருடைய பரிசுத்தவான்களும் இருக்கிறார்கள் (வெளி 14:1-5). பாபிலோனின் அறிவை மூன்று தூதர்கள் ஒவ்வொருவராக அறிவிக்கிறார்கள் (வெளி 14:6-13). அறுவடையைப்பற்றிய தரிசனம் (வெளி 14:14-20).

சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரும், லட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரும் வெளி 14 : 1-5

வெளி 14:1. பின்பு நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையும் நிற்கக்கண்டேன்.

வெளி 14:2. அல்லாமலும், பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும், ஒரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக்கேட்டேன்; நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப்போலிருந்தது.

வெளி 14:3. அவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாகவும், நான்கு ஜீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும் புதுப்பாட்டைப் பாடினார்கள்; அந்தப் பாட்டு பூமியிலிருந்து மீட்டுக் கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்துநாலாயிரம் பேரேயல்லாமல் வேறொருவரும் கற்றுக்கொள்ளக் கூடாதிருந்தது.

வெளி 14:4. ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற் பலனாக மீட்டுக்கொள்ளப் பட்டவர்கள்.

வெளி 14:5. இவர்களுடைய வாயிலே கபடம் காணப்படவில்லை; இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக மாசில்லாதவர்களா யிருக்கிறார்கள்.

தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு இயேசுகிறிஸ்துவே தலையாகயிருக்கிறார். ஆட்டுக்குட்டியானவராகிய இயேசுகிறிஸ்து சீயோன் மலையின்மேல் நிற்கிறார். வெளிப்படுத்தின விசேஷம் 13-ஆவது அதிகாரத்தில் ஆட்டுக்குட்டிக்கு ஒப்பான ஒரு மிருகத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது (வெளி 13:11). அது மெய்யான ஆட்டுக்குட்டியல்ல. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே மெய்யான ஆட்டுக்குட்டி. சாத்தான் ஆட்டுக்குட்டிபோல வேஷம் தரித்து ஜனங்களை வஞ்சிக்கிறான். சாத்தான் ஒரு வலுசர்ப்பம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே மெய்யான ஆட்டுக்குட்டியாகயிருக்கிறார்.

இயேசுகிறிஸ்து சீயோன் மலையின்மேல் நிற்கும்போது, அவரோடுகூட லட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் நிற்கிறார்கள். இவர்கள் கர்த்தருடைய பரிசுத்தவான்கள். இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவின் நாமம் அவர்களுடைய நெற்றிகளில் எழுதப்பட்டிருக்கிறது. இவர்கள் உபத்திரவங்கள் வழியாகக் கடந்து வந்தார்கள். அந்த உபத்திரவங்களினால் இவர்களில் ஒருவரும் சேதப்பட்டுப் போகவில்லை.

ஆட்டுக்குட்டியானவராகிய இயேசு கிறிஸ்துவோடு நிற்கிற இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரும், சிங்காசனத்திற்கு முன்பாகவும், நான்கு ஜீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும் புதுப்பாட்டைப் பாடுகிறார்கள். அவர்கள் பாடுகிற சத்தம் பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும் இருக்கிறது. அந்தச் சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப் போலிருக்கிறது.

பரலோகத்தில் பரிசுத்தவான்கள் கர்த்தரைத் துதித்துப்பாடுகிறார்கள். பூமியிலிருந்து ஏராளமான பரிசுத்த வான்கள் மீட்கப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும் இந்தப் புதுப்பாட்டை, பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரேயல்லாமல், வேறொருவராலும் கற்றுக்கொள்ள முடியவில்லை.

சீயோன் மலையின்மேல் ஆட்டுக் குட்டியானவரோடு நிற்கிற இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரைப்பற்றிய விவரத்தை யோவான் இங்கு எழுதுகிறார். அவர்கள் பரிசுத்தமும் கற்புமுள்ளவர்கள். இவர்கள் ஸ்திரீகளால் தங்களை கறைப்படுத்திக்கொள்ளவில்லை. கற்புள்ளவர்களாகயிருக்கிறார்கள். இவர் களிடத்தில் மாம்சப்பிரகாரமான விபசாரமோ அல்லது ஆவிக்குரிய விபசாரமோ காணப்படவில்லை. விபசாரத்தினால் தங்களை கறைப் படுத்திக்கொள்ளாமலிருக்கிறார்கள்.

இவர்கள் ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறார்கள். கர்த்தருக்கு உண்மையுள்ள ஊழியக்காரர்களா யிருக்கிறார்கள். கர்த்தரைப்பற்றும் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்கிறார்கள்.

இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள். இப்படிப்பட்ட விசேஷித்த மேன்மையும் கனமும் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேருக்கு உண்டாயிருக்கிறது. தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் இன்னும் ஏராளமான பரிசுத்தவான்கள் மீட்டுக்கொள்ளப்படுவார்கள். அநேகர் மீட்டுக்கொள்ளப்படுவதற்கு இவர்கள் முதற்பலனாக அதாவது அச்சாரமாக மீட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேருடைய வாயிலே கபடம் காணப்படவில்லை. இவர்கள் மெய்யான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். இவர்களுடைய இருதயம் தேவனுக்கு முன்பாக செம்மையாயிருக்கிறது. கர்த்தர் இவர்களை இலவசமாக மீட்டுக் கொண்டார். இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக மாசில்லாதவர் களாயிருக்கிறார்கள். கர்த்தருடைய கிருபை இவர்களுக்கு அதிகமாய் கிடைத்திருக்கிறது.

முதலாம் தூதன்
வெளி 14 : 6,7

வெளி 14:6. பின்பு, வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக்கண்டேன்; அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக் காரருக்கும், ஜனக்கூட்டத் தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து.

வெளி 14:7. மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத் தீர்ப்புக்கொடுக்கும் வேளைவந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத் தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுது கொள்ளுங்கள் என்று கூறினான்.

பாபிலோனுடைய அழிவை அறிவிப்பதற்கு வானத்திலிருந்து மூன்று தூதர்கள் அனுப்பப்படுகிறார்கள். அவர்களில் முதலாவது தூதன் வானத்தின் மத்தியிலே பறந்து வருவதை யோவான் காண்கிறார். பாபிலோன் அழிவதற்கு முன்பாக தேவனுடைய சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் நித்திய சுவிசேஷம். தூதர்கள் இயேசு கிறிஸ்துவின் நித்திய சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவதற்கு தகுதியுள்ளவர் களாயிருக்கிறார்கள். முழு உலகத்தாரும் நித்திய சுவிசேஷத்தை கவனித்துக் கேட்கவேண்டும். சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிற சத்தியத்தைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படியவேண்டும்.

நித்திய சுவிசேஷம் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கப் படுகிறது. சுவிசேஷம் எல்லோருக்கும் பொதுவானது. கர்த்தரும் உலகஇரட்சராக யிருக்கிறார்.

ஜனங்கள் தேவனுக்குப் பயந்து அவரை மகிமைப்படுத்தவேண்டும். இதற்காகவே நித்திய சுவிசேஷம் ஜனங்கள் மத்தியிலே பிரசங்கம் பண்ணப்படுகிறது. மனுஷர்கள் சிருஷ்டிகளைத் தொழுதுகொள்ளாமல் சிருஷ்டிகரைத் தொழுதுகொள்ளவேண்டும். கர்த்தராகிய தேவனே சர்வசிருஷ்டிகராக யிருக்கிறார். வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், நீரூற்றுகளையும் சர்வசிருஷ்டிகராகிய தேவனே உண்டாக்கினார். மனுக்குலத்தா ரெல்லோரும் சிருஷ்டிகளைத் தொழுது கொள்ளாமல், சர்வத்தையும் சிருஷ்டித்திருக்கிற தேவனையே தொழுதுகொள்ளவேண்டும். தேவனைத் தொழுதுகொள்ளாதவர்கள்மீது நியாயத் தீர்ப்பு வரும். தேவன் நியாயத்தீர்ப்பு கொடுக்கும் வேளை வந்திருக்கிறது என்பதை நித்திய சுவிசேஷம் அறிவிக்கிறது.

இரண்டாம் தூதன்
வெளி 14:8

வெளி 14:8. வேறொரு தூதன் பின்சென்று: பாபிலோன் மகா நகரம் விழுந்தது! விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே! என்றான்.

முதலாம் தூதனைத் தொடர்ந்து இரண்டாம் தூதன் வருகிறான். பாபிலோனுக்கு வரும் அழிவை இரண்டாம் தூதன் அறிவிக்கிறான். பாபிலோன் மகாநகரம் என்பது ரோமப்பேரரசை குறிக்கிற வார்த்தையென்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். பாபிலோன் துன்மார்க்கத்தினால் நிறைந்திருக்கிறது. இரண்டாம் தூதன், “பாபிலோன் மகாநகரம் விழுந்தது! விழுந்தது!” என்று அறிவிக்கிறான். துன்மார்க்கத்தில் நிரம்பியிருக்கிற பாபிலோனுக்கு தேவன் நியாயத்தீர்ப்பு கொடுத்திருக்கிறார். தேவனுடைய நீதியான தீர்ப்பின் பிரகாரமாக பாபிலோன் மகாநகரம் விழுந்தது.

மூன்றாம் தூதன்
வெளி 14 : 9-12

வெளி 14:9. அவர்களுக்குப் பின்னே மூன்றாம் தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு: மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவனெவனோ.

வெளி 14:10. அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்.

வெளி 14:11. அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது.

வெளி 14:12. தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக் கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும் என்று கூறினான்.

இரண்டு தூதர்களுக்குப் பின்பு மூன்றாம் தூதனும் வருகிறான். முதலாம் தூதன் நித்திய சுவிசேஷத்தை அறிவிக்கிறான். இரண்டாம் தூதன் பாபிலோன் விழுந்ததை அறிவிக்கிறான். சுவிசேஷத்தைக் கேட்டவர்களும், பாபிலோன் விழுந்ததைப் பார்த்தவர்களும் மனந்திரும்பவேண்டும். மெய்த்தேவனாகிய சர்வசிருஷ்டிகராகிய கர்த்தரைத் தொழுதுகொள்ளவேண்டும். இதற்குப் பின்பும் யாராவது கர்த்தரை ஆராதியாமல், விக்கிரகாராதனையில் ஈடுபட்டிருப்பார்களென்றால் அவர்கள்மீது தேவனுடைய கோபாக்கினை வரும்.

பாபிலோன் விழுந்த சம்பவத்திற்குப் பிறகு மனந்திரும்பாமல், மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்குகிறவர்கள்மீது தேவனுடைய கோபாக்கினை வரும். கர்த்தரை ஆராதியாமல், தங்கள் நெற்றியிலாவது தங்கள் கையிலாவது மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்கிறவர்கள்மீது தேவகோபாக்கினை நிச்சயமாய் வரும். இவர்கள் தேவனுடைய கோபாக்கினையின் பாத்திரத்திலே பானம்பண்ணுவார்கள். கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட தேவனுடைய உக்கிரமாகிய மதுவை குடிப்பார்கள். பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும், அவர்கள் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவார்கள்.

பாபிலோனைவிட்டு வெளியேற மறுக்கிறவர்கள், பாபிலோனுடைய வாதைகளில் பங்குபெறுவார்கள். பாபிலோன்மீது வந்த வாதைகள் இவர்களுக்கும் வரும். இவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும். இவர்களுடைய வாதைகளுக்கு முடிவு இருக்காது. இவர்களுக்கு இரவும் பகலும் இளைப்பாறுதல் இராது. மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கு ஒருபோதும் இளைப்பாறுதல் இல்லை. மிருகத்தினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்கிறவர்கள், இளைப்பாறுதலில்லாமல், இரவும் பகலும் தவித்துக் கொண்டிருப்பார்கள்.

கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாதவர்கள் தண்டிக்கப் படுவார்கள். கர்த்தருடைய கற்பனை களையும், இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக் கொள்கிறவர்கள் கனப்படுத்தப்படுவார்கள். இவர்கள் பரிசுத்தவான்களாயிருப்பார்கள். தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள் வதிலும், கிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தைக் காத்துக்கொள்வதிலும் இவர்களுடைய பொறுமை வெளிப் பட்டிருக்கிறது. இதுவரையிலும் நீடியபொறுமையோடிருந்த பரிசுத்தவான் களுக்கு இனிமேல் மகிமை உண்டாகும். கர்த்தருடைய பிள்ளைகள் கனப்படுத்தப் படுவார்கள். சாத்தானைப் பின்பற்றிய வர்களோ தண்டிக்கப்படுவார்கள்.

பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் வெளி 14:13

வெளி 14:13. பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று.

மூன்று தூதர்களும் ஒவ்வொருவராக வானத்திலிருந்து வந்தபின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்த முண்டாகிறது. அப்போஸ்தலர் யோவான் அந்தச் சத்தத்தைக் கேட்கிறார். இது மனுஷருடைய சத்தமல்ல. இது மனுஷருடைய வார்த்தையுமல்ல. இந்தச் சத்தம் சத்தியமானவரிடமிருந்து உண்டாயிற்று. பரலோகத்திலிருந்து உண்டான சத்தம் சத்தியமான வார்த்தையாயிருப்பதினால், இந்த வார்த்தையைப் பாதுகாக்கவேண்டும், பராமரிக்கவேண்டும், இதற்காக இந்த வார்த்தைகளை எழுதவேண்டும்.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் எழுதப்பட்ட வார்த்தையை மறுபடியும் மறுபடியும் வாசிப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும். தங்களுக்கு துன்பங்களும், வேதனைகளும், பாடுகளும், உபத்திரவங்களும் வரும்போதெல்லாம் பரிசுத்தவான்கள், கர்த்தருடைய எழுதப்பட்ட வார்த்தையை வாசித்து ஆறுதலடைவார்கள். கர்த்தருடைய எழுத்துக்கள் ஆறுதலுக்கும் ஆசீர்வாதத்திற்கும் ஆதாரமாயிருக்கும்.

பரலோகத்திலிருந்து உண்டான சத்தம், "கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்று எழுது" என்று சொல்லிற்று. கர்த்தருடைய பிள்ளைகள் எப்போதுமே பாக்கியவான் கள்தான். அவர்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றிருக்கிறவர்கள். கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்கிறவர்கள் மரிக்கும்போதும், மரித்தபின்பும் பாக்கியவான் களாயிருப்பார்கள். கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள், தங்கள் சரீரத்தில் மரிக்கும்போது, அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள். அவர்கள் மரித்த பின்பு அவர்களுடைய கிரியைகள் அவர்களோடு கூடப்போகும்.

கர்த்தருக்குள் மரித்தவர்கள் எப்படியெல்லாம் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதை பரலோகத்திலிருந்து உண்டான சத்தம் தெளிவாகச் சொல்லிற்று. அவர்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். அவர்கள் இந்தப் பூமிக்குரிய பிரயாசங்களை விட்டொழிந்திருப்பார்கள். அவர்கள் இந்தப் பூமியிலே செய்த எல்லா நற்கிரியைகளும் அவர்களோடு கூடப்போகும். அவர்களுடைய கிரியைகளுக்குத்தக்கதாக பரலோகத்திலே அவர்களுக்கு வெகுமதி கொடுக்கப்படும். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் கர்த்தருக்குள் ஜீவித்தார்கள் என்பதற்கும், கர்த்தருக்குள் மரித்தார்கள் என்பதற்கும் அவர்களுடைய கிரியைகள் சாட்சியாயிருக்கும். இந்தச் சத்தியத்தை, "ஆவியானவரும் ஆம் என்று திருவுளம்பற்றுகிறார்".

மனுஷகுமாரனுக்கொப்பானவர் வெளி 14:14

வெளி 14:14. பின்பு நான் பார்த்தபோது, இதோ, வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின்மேல் மனுஷகுமாரனுக்கொப்பானவராய்த் தமது சிரசின்மேல்பொற் கிரீடத்தையும் தமது கையிலே கருக்குள்ள அரிவாளையுமுடைய ஒருவர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டேன்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே அறுவடையின் தேவனாகயிருக்கிறார். யோவான் இயேசுகிறிஸ்துவைத் தரிசித்தபோது, அவரை மனுஷகுமாரனுக் கொப்பானவராய்க் கண்டார். மெய்யாகவே அவர் மனுஷகுமாரன்தான். அவரே கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. அவர் இப்போது சிங்காசனத்தில் உட்கார்ந்திருப்பதற்குப் பதிலாக வெண்மையான மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறார்.

மேகத்தில் எப்போதுமே இரண்டு பகுதியிருக்கும். ஒரு பகுதி பிரகாசமுள்ள வெளிச்சமாயிருக்கும். மற்றொரு பகுதி காரிருளாகயிருக்கும். வெண்மையான மேகத்தின் பிரகாசமான பகுதி கர்த்தருடைய பரிசுத்தவான்கள் கூடுகிற சபையின் பக்கமாகத் திரும்பியிருக்கிறது. மேகத்தினுடைய காரிருளான பகுதியோ துன்மார்க்கருடைய கூட்டத்தின்மீது திரும்பி யிருக்கிறது.

வெண்மையான மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிற மனுஷகுமாரனாகிய இயேசுகிறிஸ்து, சர்வவல்லமையுள்ளவர். அவருடைய சிரசின்மேல் ஒரு பொற்கிரீடம் இருக்கிறது. இந்தக் கிரீடம் கிறிஸ்துவானவருடைய சர்வ அதிகாரத்திற்கு அடையாளமாயிருக்கிறது. அவர் மெய்யாகவே சர்வவல்லமை யுள்ளவர். அவர் சர்வஅதிகாரமுள்ளவர். அவரே ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறவர்.

மனுஷகுமாரனுடைய கையிலே கருக்குள்ள ஒரு அரிவாள் இருக்கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அறுவடையின் தேவனாகவும் இருக்கிறார். கர்த்தர் அறுவடைக்கு ஆயத்தமாயி ருக்கிறார். அறுவடை என்பது துன்மார்க்கர் அறுக்கப்படுவதற்கும், நீதிமான்கள் கூட்டிச்சேர்க்கப்படுவதற்கும் அடையாளம். துன்மார்க்கர்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும்போது அவர்களுக்கு நீதியான தண்டனை கிடைக்கிறது.

பயிர் அறுவடை, வெளி 14 : 15,16

வெளி 14:15. அப்பொழுது வேறொரு தூதன் தேவாலயத்திலிருந்து புறப்பட்டு, மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறவரை நோக்கி: பூமியின் பயிர் முதிர்ந்தது, அறுக்கிறதற்குக் காலம் வந்தது, ஆகையால் உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்.

வெளி 14:16. அப்பொழுது மேகத்தின்மேல் உட்கார்ந்தவர் தமது அரிவாளைப் பூமியின்மேல் நீட்டினார், பூமியின் விளைவு அறுப்புண்டது.

மனுஷகுமாரன் வெண்மையான மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறார். அப்போது தேவாலயத்திலிருந்து ஒரு தூதன் புறப்பட்டு வந்து, மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிற மனுஷகுமாரனிடத்தில் பேசுகிறார். "பூமியின் பயிர் முதிர்ந்தது. அறுக்கிறதற்குக் காலம் வந்தது. ஆகையால் உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துவிடும்" என்று மனுஷகுமாரனிடத்தில் மிகுந்த சத்தமிட்டு சொல்லுகிறான். அறுவடை செய்யும்போது அரிவாளை கதிர்களின்மீது நீட்டும் போது. பூமியின் விளைவு அறுக்கப்படும்.

தேவதூதன், "பூமியின் பயிர் முதிர்ந்தது, அறுக்கிறதற்கு காலம் வந்தது" என்று சொல்லுகிறான். இந்தப் பூமியில் மனுஷருடைய பாவம் நிரம்பியிருக்கிறது. இவர்களுடைய துன்மார்க்கம் முதிர்ந்திருக்கிறது. இவர்களை அழிப்பதற்கு இனியும் காலதாமதம் பண்ணக்கூடாது. மனுஷகுமாரனுடைய கையிலே கருக்குள்ள அரிவாள் இருக்கிறது. அவர் தம்முடைய அரிவாளை நீட்டி, பூமியிலே துன்மார்க்கமாய்ப் பாவம் செய்கிறவர்களை அறுத்துவிடவேண்டும். இந்தப் பூமியின் விளைவு அறுக்கப்படவேண்டும். பாவிகளும் துன்மார்க்கரும் அறுப்புண்டு போகவேண்டும். அவர்களை அறுக்கிறதற்கான காலம் வந்துவிட்டது.

தேவாலயத்திலிருந்து புறப்பட்டு தன்னிடத்தில் சொன்ன தூதனுடைய வார்த்தையை மனுஷகுமாரன் கேட்கிறார். மனுஷகுமாரன் மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறார். அங்கு உட்கார்ந்திருக்கிற பிரகாரமாகவே தமது அரிவாளை பூமியின்மேல் நீட்டுகிறார். அப்போது பூமியின் விளைவு அறுப்புண்டது. பூமியிலுள்ள பாவிகளும், துன்மார்க்கரும் அறுப்புண்டு போனார்கள். அவர்கள் அழிந்துபோனார்கள்.

திராட்சப்பழங்களின் அறுவடை
வெளி 14 : 17-20

வெளி 14:17. பின்பு வேறொரு தூதனும் கருக்குள்ள அரிவாளைப் பிடித்துக்கொண்டு பரலோகத்திலுள்ள தேவாலயத்திலிருந்து புறப்பட்டுவந்தான்.

வெளி 14:18. அக்கினியின்மேல் அதிகாரமுள்ளவேறொரு தூதனும் பலிபீடத்திலிருந்து புறப்பட்டுவந்து, கருக்குள்ள அரிவாளைப் பிடித்திருக்கிறவனை நோக்கி: பூமியின் திராட்சப்பழங்கள் பழுத்திருக்கிறது, கருக்குள்ள உமது அரிவாளை நீட்டி, அதின் குலைகளை அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தத்தோடே சொன்னான்.

வெளி 14:19. அப்பொழுது அந்தத் தூதன் தன் அரிவாளைப் பூமியின்மேலே நீட்டி, பூமியின் திராட்சப்பழங்களை அறுத்து, தேவனுடைய கோபாக்கினையென்னும் பெரிய ஆலையிலே போட்டான்.

வெளி 14:20. நகரத்திற்குப் புறம்பேயுள்ள அந்த ஆலையிலே அது மிதிக்கப்பட்டது; அந்த ஆலையிலிருந்து ஆயிரத்தறுநூறு ஸ்தாதி தூரத்திற்கு இரத்தம் புறப்பட்டுக் குதிரைகளின் கடிவாளங்கள்மட்டும் பெருகிவந்தது.

அப்போஸ்தலர் யோவான் பூமியின் விளைவு அறுப்புண்டு போவதை காண்கிறார். மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிற மனுஷகுமாரனே தமது கையிலுள்ள கருக்குள்ள அரிவாளை பூமியின்மேல் நீட்டி, பூமியின் விளைவை அறுக்கிறார். இதைத் தொடர்ந்து யோவான் மேலும் ஒரு தரிசனத்தைக் காண்கிறார். இது திராட்சப்பழங்களின் அறுவடை.

பூமியின் விளைவு அறுப்புண்ட பின்பு வேறொரு தூதன் பரலோகத்திலுள்ள தேவாலயத்திலிருந்து புறப்பட்டு வருகிறான். அவன் தன்னுடைய கையில் அரிவாளைப் பிடித்துக்கொண்டிருக்கிறான். இதன் பின்பு வேறொரு தூதனும் பலிபீடத்திலிருந்து புறப்பட்டு வருகிறான். இவனுக்கு அக்கினியின்மேல் அதிகாரமிருக்கிறது. இரண்டு தூதர்கள் புறப்பட்டு வருவதை யோவான் காண்கிறார்.

பலிபீடத்திலிருந்து புறப்பட்டு வந்த தூதன், கருக்குள்ள அரிவாளைப் பிடித்திருக்கிற தூதனை நோக்கி, "பூமியின் திராட்சப்பழங்கள் பழுத்திருக்கிறது. கருக்குள்ள உமது அரிவாளை நீட்டி, அதின் குலைகளை அறுத்துவிடும்" என்று மிகுந்த சத்தத்தோடே சொல்லுகிறான். திராட்சப்பழ அறுவடையில் இரண்டு பகுதிகள் உள்ளது. அவையாவன : 1. திராட்சப்பழக்குலைகளை அறுத்து அவற்றை ஒன்று சேர்ப்பது. 2. அறுத்த திராட்சப்பழங்களை ஆலையிலேபோடுவது. அந்தப் பழங்களை ஆலையிலே மிதித்து ரசமாக்குவது.

கருக்குள்ள அரிவாளை பிடித்திருக்கிற தூதன், தன் அரிவாளை பூமியின்மேலே நீட்டுகிறான். பூமியின் திராட்சப்பழங்களை அறுக்கிறான். அறுத்த பழங்களை பெரிய ஆலையிலே போடுகிறான். இது தேவனுடைய கோபாக்கினை என்னும் பெரிய ஆலையாகும். இந்த ஆலை நகரத்திற்குப் புறம்பே உள்ளது. இந்த ஆலையில் அறுக்கப்பட்ட திராட்சப்பழங்கள் மிதிக்கப்படுகிறது. அந்த ஆலையிலிருந்து ஆயிரத்தறுநூறு ஸ்தாதி தூரத்திற்கு இரத்தம் புறப்பட்டு குதிரைகளின் கடிவாளங்கள் மட்டும் பெருகிவருகிறது.

BELLWETHER INTERNATIONAL

வெளிப்படுத்தின விசேஷம் - விரிவுரை
REVELATION - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

இந்தத் தரிசனத்திற்கு வேதபண்டிதர்கள் இவ்வாறு வியாக்கியானம் சொல்லுகிறார்கள். பாபிலோனுக்கு விரோதமாக மற்ற தேசத்து சேனைகள் வந்து, பாபிலோனை முற்றிகையிடுகிறார்கள். பாபிலோன் தேசத்தாரை அழித்துப்போடுகிறார்கள். யுத்தத்தில் ஏராளமான பாபிலோனியர்கள் கொல்லப்படுகிறார்கள். அவர்களுடைய இரத்தம் ஆறுபோல புறப்பட்டு வருகிறது.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு பாபிலோனுக்கு விரோதமாக வந்தது. பாபிலோன் ஜனங்களுடைய இரத்தம் நகரத்திற்குப் புறம்பேயிருந்து, ஆயிரத்தறுநூறு ஸ்தாதி தூரத்திற்கு புறப்பட்டு வருகிறது. அது குதிரைகளின் கடிவாளங்கள் மட்டும் பெருகிவருகிறது. துன்மார்க்கருக்கு அழிவு நிச்சயம் வரும். தேவனுடைய நீதியான தீர்ப்பு துன்மார்க்கர்மீது வரும்போது அவர்கள் அழிந்துபோவார்கள்.

15 அதிகாரம்

அப்போஸ்தலர் யோவான் வானத்திலே ஏழு வாதைகளையுடைய ஏழுதூதரைக் காண்கிறார் (வெளி 15:1-4). நான்கு ஜீவன்களில் ஒன்று தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த பொற்கலசங்கள் ஏழையும் அந்த ஏழுதூதர்களுக்குக் கொடுக்கிறது (வெளி 15:5-8).

ஏழுவாதைகளையுடைய ஏழுதூதர் வெளி 15 : 1-4

வெளி 15:1. பின்பு, வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான வேறொரு அடையாளமாகிய கடைசியான ஏழு வாதைகளையுடைய ஏழு தூதரைக் கண்டேன், அவைகளால் தேவனுடைய கோபம் முடிகிறது.

வெளி 15:2. அன்றியும், அக்கினிகலந்த கண்ணாடிக் கடல்போன்ற ஒரு கடலையும், மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு அந்தக் கண்ணாடிக் கடலருகே நிற்கிறதையும் கண்டேன்.

வெளி 15:3. அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக் குட்டியானவருடைய பாட்டையும் பாடி: சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்.

வெளி 15:4. கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள்; உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின என்றார்கள்.

அப்போஸ்தலர் யோவான் வானத்திலே ஏழுவாதைகளையுடைய ஏழுதூதரைக் காண்கிறார். இது பெரிதும் ஆச்சரியமுமான அடையாளமாயிருக்கிறது. இந்த ஏழுதூதர்களால் தேவனுடைய கோபம் முடிகிறது. ஏழுதூதர்களுக்கும் தேவனுடைய கோபகலசங்கள் கொடுக்கப்படுகிறது. இவர்களுக்கு இந்த கோபகலசங்களை பூமியின்மேல் ஊற்றக்கூடிய கட்டளையும் கொடுக்கப்படுகிறது.

கர்த்தராகிய தேவன் அந்திக்கிறிஸ்துவை அழிக்கிறார். பூமியின்மேல் தேவனுடைய ஏழுகோபகலசங்களும் ஊற்றப்படும்போது அந்திக்கிறிஸ்து முற்றிலுமாக அழிக்கப்படுவான். ஏழுதூதர்களுக்கும் தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த பொற்கலசங்கள் கொடுக்கப்படுவதை கர்த்தருடைய பரிசுத்தவான்கள் சாட்சியாகப் பார்க்கிறார்கள்.

அப்போஸ்தலர் யோவான் வானத்திலே தெரிகிற இன்னும் சில காரியங்களையும் காண்கிறார். அங்கு அக்கினி கலந்த கண்ணாடிக்கடல்போன்ற ஒரு கடல் இருக்கிறது. அந்தக் கண்ணாடிக் கடலருகே கர்த்தருடைய பரிசுத்தவான்கள் தேவசுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு நிற்கிறார்கள். இவர்கள் மிருகத்திற்கும், அதன் சொரூபத்திற்கும், அதின் முத்திரைக்கும், அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள்.

கண்ணாடிக் கடலருகே நிற்கிற கர்த்தருடைய பரிசுத்தவான்கள் மோசேயின் பாட்டைப் பாடுகிறார்கள். மோசே தேவனுடைய ஊழியக்காரன். பரிசுத்தவான்கள் மோசேயின் பாட்டைப் பாடும்போது ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடுகிறார்கள். கர்த்தரையும் அவருடைய கிரியைகளையும் துதித்துப் பாடுகிறார்கள். கர்த்தருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள். கர்த்தர் பரிசுத்தவான்களின் ராஜா. கர்த்தருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்.

பூமியிலுள்ள குடிகளெல்லோரும் கர்த்தருக்குப் பயப்படவேண்டும். அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும். தேவனாகிய கர்த்தர் மாத்திரமே பரிசுத்தராயிருக்கிறார். எல்லா ஜாதிகளும் கர்த்தருக்கு முன்பாக வந்து தொழுதுகொள்ளவேண்டும். கர்த்தருடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயிருக்கிறது. கண்ணாடிக் கடலருகே நிற்கிற பரிசுத்தவான்கள் கர்த்தரைத் துதித்துப் பாடுகிறார்கள். பயபக்தியோடு பாடுகிறார்கள்.

சாட்சியின் கூடாரமாகிய ஆலயம்

வெளி 15 : 5-8

வெளி 15:5. இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது;

வெளி 15:6. அந்த ஆலயத்திலிருந்து ஏழு வாதைகளையுடைய அவ்வேழு தூதர்களும் சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரந்தரித்து, மார்பருகே பொற்கச்சைகளைக் கட்டிக்கொண்டு புறப்பட்டார்கள்.

வெளி 15:7. அப்பொழுது அந்த நன்கு ஜீவன்களில் ஒன்று, சதாகாலங்களிலும் உயிரோடிக்கிற தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த பொற்கலசங்கள் ஏழையும் அந்த ஏழு தூதர்களுக்குங் கொடுத்தது.

வெளி 15:8. அப்பொழுது, தேவனுடைய மகிமையினாலும் அவருடைய வல்லமையினாலும் உண்டான புகையினாலே தேவாலயம் நிறைந்தது; ஏழு தூதர்களுடைய ஏழு வாதைகளும் முடியும்வரைக்கும் ஒருவரும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதிருந்தது.

அப்போஸ்தலர் யோவான் வானத்திலே ஏழுவாதைகளையுடைய ஏழுதூதரைக் காண்கிறார். அங்கு அக்கினி கலந்த கண்ணாடிக் கடல் போன்ற ஒரு கடலையும் காண்கிறார். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் அந்தக் கண்ணாடிக் கடலருகே நின்று கர்த்தரைத் துதித்துப் பாடுவதை கேட்கிறார். இவைகளுக்குப் பின்பு, பரலோகத்திலே சாட்சியும் கூடாரமுமாகிய ஆலயம் திறக்கப்படுகிறது.

இது தேவனுடைய மகாபரிசுத்த ஸ்தலமாகும். ஆசரிப்புக்கூடாரத்திலும், தேவாலயத்திலும் மகாபரிசுத்த ஸ்தலமே கர்த்தருடைய வாசஸ்தலம். இங்கு தேவனுடைய கிருபாசனமும், உடன்படிக்கை பெட்டியும் இருக்கிறது. தேவனுடைய வார்த்தையும், அவருடைய உடன்படிக்கைகளும் நிச்சயமாகவே நிறைவேறும். அவருடைய வாக்குத் தத்தங்களும், தீர்க்கதரிசனங்களும் ஏற்ற காலங்களில் நிறைவேறும்.

தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கள் இப்போது கிரியை நடப்பிக்க ஆயத்தமாயிருக்கிறது. தேவன் தம்முடைய நியாயத்தீர்ப்பைக் கொடுப்பதற்கு முன்பாக, தம்முடைய வார்த்தைகளினாலும், தீர்க்கதரிசன வசனங்களினாலும் மனுஷரை எச்சரித்துச் சொல்லுகிறார். எச்சரிப்புக்குப் பின்பே நியாயத்தீர்ப்பு கொடுக்கப்படுகிறது. தேவனுடைய நியாயத்தீர்ப்பு பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய ஆலயத்திலிருந்து வெளிப்படுகிறது.

சாட்சியின் கூடாரமாகிய ஆலயத்திலிருந்து ஏழுதூதர்களும் புறப்படுகிறார்கள். இவர்களிடத்தில் ஏழுவாதைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் பழைய ஏற்பாட்டுக்காலத்து பிரதான ஆசாரியர்களைப்போல வஸ்திரம் தரித்திருக்கிறார்கள். பிரதான ஆசாரியர்கள் தேவனுடைய மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து, தேவனிடத்தில் வேண்டுதல்களையும் விண்ணப்பங்களையும் ஏறெடுப்பார்கள். அங்கே தேவனிடமிருந்து பதிலைப் பெற்றுக்கொண்டு, மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு வெளியே வந்து, தேவனுடைய வார்த்தையை ஜனங்களுக்கு அறிவிப்பார்கள்.

ஏழுதூதர்களும் பிரதான ஆசாரியர்களைப்போல ஆலயத்திலிருந்து வெளியே புறப்பட்டு வருகிறார்கள். அவர்கள் ஏழுபேரும் சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்திருக்கிறார்கள். தங்கள் மார்பருகே பொற்கச்சைகளை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உள்ளும் புறமுமாக பரிசுத்தமாயிருக்கிறார்கள். பரிசுத்த வான்களுக்குரிய சுத்தவஸ்திரம் தரித்திருக்கிறார்கள்.

பரலோகத்திலே, தேவனுடைய சிங்காசனத்திற்கு அருகே நான்கு ஜீவன்கள் இருக்கிறது. இந்த நான்கு ஜீவன்களில் ஒன்று, ஏழுபொற் கலசங்களையும், அந்த ஏழுதூதர்களுக்கும் கொடுக்கிறது. அந்தப் பொற்கலசங்களில் தேவனுடைய கோபாக்கினை நிறைந்திருக்கிறது. தேவன் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவர். தேவனுடைய சத்துருக்களுக்கு விரோதமாக ஏழுதூதர்களும் யுத்தம் பண்ணப்போகிறார்கள். இவர்களுக்கு பட்டயமோ, வேறு யுத்த ஆயுதமோ கொடுக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த ஏழுபொற்கலசங்கள் கொடுக்கப்படுகிறது. இந்தப் பொற்கலசங்களை இவர்கள் தேவனுடைய சத்துருக்களுக்கு விரோதமாகப் பயன்படுத்தவேண்டும்.

ஏழுதூதர்களும் ஏழுபொற் கலசங்களைப் பெற்றுக்கொண்டபோது தேவாலயம் புகையினால் நிரம்புகிறது. இந்தப் புகை தேவனுடைய மகிமையினாலும் அவருடைய வல்லமையினாலும் உண்டாயிற்று. இந்தப் புகையினாலே தேவாலயம் நிரம்பியிருக்கிறது. தேவனுடைய ஆலயத்தில் அவருடைய பிரசன்னமும், வல்லமையும், மகிமையும் நிரம்பியிருக்கிறது. இதனால் ஒருவரும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்க முடியவில்லை.

சத்துருவை சங்காரம்பண்ண வேண்டுமென்பது தேவனுடைய சித்தம். இதற்காகவே தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த ஏழுபொற்கலசங்களும் ஏழுதூதர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் தங்கள் கலசத்திலுள்ளதை பூமியின்மேல் ஊற்றவேண்டும். இதனால் அங்கு வாதை உண்டாகும். ஏழுதூதர்களும் ஏழுகலசங்களை ஊற்றும்போது ஏழுவாதைகள் உண்டாகும். இந்த வாதைகள் முடியும் வரைக்கும், தேவாலயத்திற்குள் ஒருவராலும் பிரவேசிக்க முடியவில்லை.

தேவன் தாமே இப்போது சபைக்கும், முழுஉலகத்திற்கும் தம்முடைய நீதியின் சத்தியத்தைப் பிரசங்கம்பண்ணுகிறார். தம்முடைய பயங்கரமான கிரியைகளை நீதியினால் வெளிப்படுத்துகிறார். தேவனுடைய கோபாக்கினை ஊற்றப்படும்போது தேவாலயத்திற்குள் பிரவேசிப்பதற்கு ஒருவருக்கும் அனுமதி கொடுக்கப்படவில்லை. ஏழுவாதைகளும் முடிந்த பின்பு தேவாலயத்திற்குள் கர்த்தருடைய பரிசுத்தவான்கள் மறுபடியும் பிரவேசிக்கலாம். கர்த்தர் தாமே ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்கு பூட்டுகிறவர். அவரே ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்கு திறக்கிறவர்.

16 அதிகாரம்

தேவனுடைய கோபகலசங்களை பூமியின்மேல் ஊற்றுமாறு ஏழுதூதர்களுக்கும் கட்டளை கொடுக்கப்படுகிறது (வெளி 16:1). முதலாம் கலசம் (வெளி 16:2). இரண்டாம் கலசம் (வெளி 16:3). மூன்றாம் கலசம் (வெளி 16:4-7). நான்காம் கலசம் (வெளி 16:8,9). ஐந்தாம் கலசம் (வெளி 16:10,11). ஆறாம் கலசம் (வெளி 16:12-16). ஏழாம் கலசம் (வெளி 16:17-21).

தேவாலயத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தம் வெளி 16:1

வெளி 16:1. அப்பொழுது தேவாலயத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தம் அந்த ஏழு தூதருடனே: நீங்கள் போய் தேவனுடைய கோபகலசங்களைப் பூமியின் மேல் ஊற்றுங்கள் என்று சொல்லக்கேட்டேன்.

தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த ஏழுகலசங்களும் பூமியின்மேல் ஊற்றப்படுவதற்கு ஆயத்தமாயிருக்கிறது. இந்தக் கலசங்களை பூமியில் ஊற்றுவதற்கு ஏழுதூதர்களும் ஆயத்தமாயிருக்கிறார்கள். ஆனாலும் தேவனுடைய அனுமதியில்லாமல் ஒன்றும் நடைபெறவில்லை. தேவனுடைய உத்தரவு தேவாலயத்திலிருந்து வரவேண்டும்.

ஏழுதூதர்களும், ஏழுகலசங்களை பெற்றிருக்கிறார்கள். அப்பொழுது தேவாலயத்திலிருந்து ஒரு பெருஞ்சத்தம் உண்டாயிற்று. "நீங்கள் போய் தேவனுடைய கோபகலசங்களை பூமியின்மேல் ஊற்றுங்கள்" என்று அந்தப் பெருஞ்சத்தம் ஏழுதூதர்களுடனே சொல்லிற்று. கர்த்தருடைய உத்தரவு வந்தவுடன் ஏழுதூதர்களும் அந்த உத்தரவுக்குக் கீழ்ப்படிகிறார்கள். கர்த்தர் உத்தரவு கொடுக்கும்போது, "நீங்கள் போய்" என்று தம்முடைய உத்தரவை ஆரம்பிக்கிறார். கர்த்தருடைய வார்த்தை ஆரம்பமானவுடன், தேவனுடைய வாதையும் ஆரம்பமாயிற்று.

தேவனுடைய கோபாக்கினை நிறைந்த ஏழுகலசங்களும் பூமியிலே ஊற்றப்பட்டபோது, பூமியில் வாதைகள் உண்டாயிற்று. எகிப்து தேசத்திலே மோசேயின் காலத்தில் இதுபோல வாதைகள் உண்டாயிற்று. இந்த வாதைகளும், எகிப்து தேசத்திலுண்டான வாதைகளும் ஓரளவு ஒத்திருக்கிறது. மனுஷருடைய பாவங்கள் ஒத்திருக்கும்போது, அவர்கள்மீது வருகிற வாதைகளும் ஒத்திருக்கும்.

ஏழு எக்காளங்கள் ஊதப்பட்டபோது அந்திக்கிறிஸ்து எழும்பினான். இப்போது ஏழுகசலகங்கள் பூமியின்மேல் ஊற்றப்படும்போது, பூமியில் வாதைகள் உண்டாயிற்று. அந்திக்கிறிஸ்து கொஞ்சம் கொஞ்சமாக விழுகிறான். அவன் ஒரே நேரத்தில் கீழே விழுந்துவிடுவதில்லை. அவன் சடுதியிலே கீழே தள்ளப்பட்டு விடுவதுமில்லை. அந்திக்கிறிஸ்துவின் தோல்வி கொஞ்சம் கொஞ்சமாக வருகிறது. முடிவில் அவன் மொத்தமாகத் தோல்வியடைகிறான்.

ரோமப்பேரரசு ஒரே நாளில் கட்டியெழுப்பப்படவில்லை. அந்தப் பேரரசு ஒரே நாளில் அழிந்துபோகவும் செய்யாது. இது ஒரு பழமொழி. இது போலவே அந்திக்கிறிஸ்துவின் ஆளுகையும் ஒரே நாளில் அழிந்துபோகாது. ஏனெனில் அந்திக்கிறிஸ்துவின் ராஜ்யம் இந்தப் பூமியிலே கொஞ்சம் கொஞ்சமாக ஸ்தாபிக்கப்பட்டது. அது கொஞ்சம் கொஞ்சமாக ஸ்தாபிக்கப்பட்டதுபோலவே, அது கொஞ்சம் கொஞ்சமாக அழிந்துபோகும்.

அந்திக்கிறிஸ்துவின் ஆளுகை முழுஉலகத்திலும் பரவியிருக்கிறது. அவனுடைய வழிகள் எல்லா தேசங்களிலும் சிதறியிருக்கிறது. அவனுடைய துர்உபதேசத்தை பின்பற்றுகிற ஜனங்கள் எல்லா ஜாதியாரிலும் இருக்கிறார்கள். இவையெல்லாம் அழிக்கப்படவேண்டும். ஜனங்களுடைய துன்மார்க்கம் மொத்தமாக நிர்மூலமாக்கப்படவேண்டும். அந்திக் கிறிஸ்துவின் கள்ளஉபதேசங்களெல்லாம் ஒழிந்துபோக வேண்டும். அந்திக் கிறிஸ்துவின் அழிவு தேவாலயத்திலிருந்து உண்டான கட்டளையினால் ஆரம்பமாயிற்று.

முதலாம் கலசம்
வெளி 16:2

வெளி 16:2. முதலாம் தூதன் போய், தன் கலசத்திலுள்ளதைப் பூமியின்மேல் ஊற்றினான்; உடனே மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களும் அதின் சொரூபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனுஷர்களுக்குப் பொல்லாத கொடிய புண்ணுண்டாயிற்று.

முதலாம் தூதன் கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம், போய், தன் கலசத்திலுள்ளதை பூமியின்மேல் ஊற்றுகிறான். பூமியிலுள்ள எல்லா ஜனங்கள்மேலும் ஊற்றுகிறான். பூமியிலே மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களும், அதின் சொரூபத்தை வணங்குகிறவர்களும் ஏராளமானோர் இருக்கிறார்கள். இவர்களெல்லோருக்கும் உடனே பொல்லாத கொடிய புண் உண்டாயிற்று.

இவர்கள் தங்கள் பாவத்தினால் தங்களுக்கு முத்திரையைத் தரித்துக்கொள்கிறார்கள். தேவனோ தம்முடைய நியாயத்தீர்ப்பினால் இவர்கள்மீது வாதையின் முத்திரையைத் தரிக்கிறார். மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களுக்கு பொல்லாத கொடிய புண்ணின் முத்திரை உண்டாயிற்று. இது தேவனுடைய நியாயத்தீர்ப்பு. அவர் நீதியாய் நியாயந்தீர்க்கிறவர்.

இரண்டாம் கலசம்
வெளி 16:3

வெளி 16:3. இரண்டாம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சமுத்திரத்திலே ஊற்றினான்; உடனே அது செத்தவனுடைய இரத்தம் போலாயிற்று; சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் மாண்டுபோயின.

இரண்டாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை சமுத்திரத்திலே ஊற்றுகிறான். உடனே சமுத்திரத்திலுள்ள தண்ணீரெல்லாம் இரத்தம் போலாயிற்று. அதுவும் செத்தவனுடைய இரத்தம் போலாயிற்று. இதனால் சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் மாண்டுபோயிற்று. கள்ளப்போதகர்களின் உபதேசத்தில் உண்மையுமில்லை. சத்தியமுமில்லை. அது மாய்மாலத்தினால் நிரம்பியிருக்கிறது.

அது மாத்திரமல்ல, கள்ளப்போதகர்களின் உபதேசம் செத்த உபதேசம். செத்த உபதேசத்தில் உயிர் இருக்காது. ஜனங்களுக்கு இது தெரியாமல் செத்த உபதேசத்தை இதுவரையிலும் பின்பற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு கள்ளப்போதகர்களின் உபதேசம் செத்துப்போன உபதேசம் என்பதை தெளிவு படுத்துவதற்காக, சமுத்திரத்தின் மேல் இரண்டாம் தூதன் தன் கலசத்தை ஊற்றினபோது, சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் செத்துப்போயிற்று.

மூன்றாம் கலசம்
வெளி 16:4

வெளி 16:4. மூன்றாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆறுகளிலும், நீரூற்றுகளிலும் ஊற்றினான்; உடனே அவைகள் இரத்தமாயின.

மூன்றாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஊற்றுகிறான். அதை ஆறுகளிலும் நீரூற்றுகளிலும் ஊற்றுகிறான். உடனே ஆறுகளும் நீரூற்றுகளும் இரத்தமாயிற்று. இரண்டாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை சமுத்திரத்திலே ஊற்றியபோது, அது செத்தவனுடைய இரத்தம்போலாயிற்று. அதுபோலவே இப்போது ஆறுகளும் நீரூற்றுகளும் இரத்தமாயிற்று. இந்த இரத்தம் செத்தவனுடைய இரத்த போலாயிற்றா அல்லது உயிரோடிருக்கிறவர்களின் இரத்தம் போலாயிற்றா என்பதை வேதபண்டிதர்கள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

தண்ணீர்களின் தூதன் வெளி 16 : 5,6

வெளி 16:5. அப்பொழுது தண்ணீர்களின் தூதன்: இருக்கிறவரும் இருந்தவரும் பரிசுத்தருமாகிய தேவரீர் இப்படி நியாயந்தீர்க்க நீதியுள்ளவராயிருக்கிறீர்.

வெளி 16:6. அவர்கள் பரிசுத்தவான்களுடைய இரத்தத்தையும் தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையும் சிந்தினபடியினால், இரத்தத்தையே அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர்; அதற்குப் பாத்திரராயிருக்கிறார்கள் என்று சொல்லக்கேட்டேன்.

மூன்றாம் வாதை முடிந்த பின்பு தண்ணீர்களின் தூதன் கர்த்தரைத் துதித்துப் பாடுகிறான். ஆறுகளிலும் நீரூற்றுகளிலும் தன் கலசத்திலுள்ளதை ஊற்றினவன்தான் தண்ணீர்களின் தூதனா அல்லது இவன் வேறொரு தூதனா என்பது பற்றி வேதபண்டிதர்கள் வெவ்வேறு வியாக்கியானம் சொல்லுகிறார்கள். சமுத்திரத்தை செத்தவனுடைய இரத்தம் போலாக்குவதற்கும், ஆறுகளையும் நீரூற்றுகளையும் இரத்தமாக்குவதற்கும் கர்த்தர் தண்ணீர்களின் தூதனைப் பயன்படுத்துகிறார். இவனுக்கு தேவனுடைய நீதியும் தெரியும். ஜனங்களுடைய துன்மார்க்கமும் தெரியும்.

தண்ணீர்களின் தூதன் கர்த்தரைத் துதித்துப் பாடுகிறான். அவர் இருக்கிறவரும், இருந்தவரும், பரிசுத்தருமாகிய தேவனாயிருக்கிறார். இப்படி நியாயந்தீர்க்க அவர் நீதியுள்ளவராகவும் இருக்கிறார்.

துன்மார்க்கர்கள் இந்தப் பூமியிலே பரிசுத்தவான்களுடைய இரத்தத்தையும், தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையும் சிந்தினார்கள். அவர்களைக் கொன்றுபோட்டார்கள். தாங்கள் சிந்திய இரத்தத்திற்குத் தண்டனையாக கர்த்தர் அவர்களுக்கு இரத்தத்தையே குடிக்கக் கொடுக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளின் இரத்தத்தைச் சிந்திய துன்மார்க்கர், இரத்தத்தைக் குடிப்பதற்கு பாத்திரவான்களாயிருக் கிறார்கள். நம்முடைய தாகத்தைத் தீர்ப்பதற்கு கர்த்தர் ஜீவத்தண்ணீரைக் கொடுக்கிறார். துன்மார்க்கருக்கோ இரத்தத்தைக் குடிக்கக் கொடுக்கிறார்.

பலிபீடத்திலிருந்து வேறொருவன் வெளி 16:7

வெளி 16:7. பலிபீடத்திலிருந்து வேறொருவன்: ஆம், சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள் என்று சொல்லக்கேட்டேன்.

தண்ணீர்களின் தூதன் கர்த்தரைத் துதித்துப் பாடுகிறான். அவர் நீதியுள்ளவரென்று சொல்லி அவரைப் போற்றிப் புகழுகிறான். துன்மார்க்கர் தண்டனையை அனுபவிக்க பாத்திரராயிருக்கிறார்கள் என்றும் சொல்லுகிறான். அப்போது பலிபீடத்திலிருந்து வேறொருவன், தண்ணீர்களின் தூதன் சொல்லுவதை அங்கீகரிக்கிறான். தண்ணீர்களின் தூதன் கர்த்தரைத் துதித்துப் பாடும்போது சொன்ன வார்த்தைகளை, பலிபீடத்திலிருந்த வேறொருவன், "ஆம்" என்று அங்கீகரிக்கிறான்.

மேலும், இவனும் கர்த்தரைத் துதிக்கிறான். கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, அவரை சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் என்று துதித்துப் பாடுகிறான். கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகளென்று அங்கீகரிக்கிறான்.

இரண்டுபேருடைய சாட்சிகளினால் சத்தியம் உறுதிபண்ணப்படுகிறது. இவ்விரண்டு பேரும் வெவ்வேறு வார்த்தைகளைப் பயன்படுத்தினாலும், ஒரே சத்தியத்தையே உறுதிபண்ணுகிறார்கள். மெய்யாகவே கர்த்தர் இருக்கிறவரும், இருந்தவரும், பரிசுத்தருமாயிருக்கிறார். அவர் நீதியுள்ளவராயிருக்கிறார். அவர் சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தராயிருக்கிறார். அவர் சத்தியமாயும் நீதியாயும் நியாயத்தீர்ப்பு செய்கிறவராயிருக்கிறார்.

நான்காம் கலசம்
வெளி 16:8,9

வெளி 16:8. நான்காம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சூரியன்மேல் ஊற்றினான்; தீயினால் மனுஷரைத் தகிக்கும்படி அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது.

வெளி 16:9. அப்பொழுது மனுஷர்கள் மிகுந்த உஷ்ணத்தினாலே தகிக்கப்பட்டு, இந்த வாதைகளைச் செய்ய அதிகாரமுள்ள தேவனுடைய நாமத்தைத் தூஷித்தார்களேயல்லாமல், அவரை மகிமைப்படுத்த மனந்திரும்பவில்லை.

நான்காம் தூதன் தன் கலசத்திலுள்ளதை சூரியன்மேல் ஊற்றுகிறான். சூரியன் ஜனங்களுக்கு வெயிலையும் உஷ்ணத்தையும் கொடுத்து இதுவரையிலும் நன்மை செய்து வந்தது. இப்போது சூரியன் விக்கிரகாரதனைக்காரருக்கு விரோதமாக எழும்பியிருக்கிறது. இதுவரையிலும் வெயிலையும், இதமான உஷ்ணத்தையும் கொடுத்த சூரியன், இப்போது தீயைக் கொடுக்கிறது.

இதமான உஷ்ணத்தைக் கொடுத்து மனுஷரை ஆசீர்வதிப்பதற்குப் பதிலாக, இப்போது சூரியன் தீயினால் மனுஷரைத் தகிக்கிறது. நான்காம் கலசம் சூரியன் மேல் ஊற்றப்பட்டபோது அதற்கு இந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வாதை வரும்போது, நாம் அமர்ந்திருந்து கர்த்தரை நோக்கிப் பார்க்க வேண்டும். பாவமான காரியங்களை விட்டு விலகி கர்த்தரைப் பற்றிக்கொள்ள வேண்டும். விக்கிரகாராதனைக்காரருக்கு சூரியன் மூலமாய் வாதை வந்திருக்கிறது. அவர்கள் சூரியனையும் ஒரு தெய்வமாக வணங்குகிறார்கள். ஆனால் அந்தச் சூரியனோ அவர்களை ஆசீர்வதிப்பதற்குப் பதிலாக தீயினால் தகித்து அவர்களை வாதிக்கிறது.

மனுஷர்கள் சூரியனிலிருந்து உண்டாகிற உஷ்ணத்தினால் தகிக்கப் படுகிறார்கள். தேவனாகிய கர்த்தரே இந்த வாதைகளைச்செய்ய அதிகார முள்ளவர். விக்கிரகாராதனைக்காரர் இதைப் புரிந்துகொண்டு, தங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும். கர்த்தரைப் பற்றிக்கொள்ள வேண்டும்.

கர்த்தரே சர்வவல்லமையும், சர்வ அதிகாரமுமுள்ளவர் என்று அங்கீகரித்து அவரை மகிமைப்படுத்த வேண்டும். ஆனால் அவர்களோ மெய்யான தேவனை மகிமைப்படுத்தவில்லை. தங்கள் பாவங்களிலிருந்து அவர்கள் மனந்திரும்பவில்லை. தேவனை மகிமைப்படுத்துவதற்குப் பதிலாக அவருடைய நாமத்தைத் தூஷிக்கிறார்கள். தங்களுடைய இருதயத்தை அழிவுக்கு நேராக கடினப்படுத்துகிறார்கள்.

ஐந்தாம் கலசம்
வெளி 16:10,11

வெளி 16:10. ஐந்தாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை மிருகத்தினுடைய சிங்காசனத்தின்மேல் ஊற்றினான்; அப்பொழுது அதின் ராஜ்யம் இருளடைந்தது; அவர்கள் வருத்தத்தினாலே தங்கள் நாவுகளைக் கடித்துகொண்டு,

வெளி 16:11. தங்கள் வருத்தங்களாலும், தங்கள் புண்களாலும், பரலோகத்தின் தேவனைத் தூஷித்தார்களேயல்லாமல், தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்பவில்லை.

ஐந்தாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை மிருகத்தினுடைய சிங்காசத்தின்மேல் ஊற்றுகிறான். இந்தச் சிங்காசனம் ரோமப்பேரரசையோ அல்லது ரோமாபுரி நகரத்தையோ குறிக்கலாமென்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். மிருகத்தினுடைய சிங்காசனத்தின்மேல், ஐந்தாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஊற்றியபோது, மிருகத்தினுடைய ராஜ்யம் இருளடைகிறது. தேசமுழுவதும் அந்தகாரத்திற்குள் வருகிறது.

வெளிச்சம் ஞானத்திற்கு அடையாளம். இருள் மதியீனத்திற்கு அடையாளம். இருளிலிருக்கிறவர்கள் குழப்பத்திலிருப்பார்கள். தாங்கள் போகுமிடம் இன்னதென்பது அவர்களுக்குத் தெரியாது. வெளிச்சத்தில் சந்தோஷம் இருக்கும். இருளில் துக்கமிருக்கும். ராஜ்யம் இருளடைந்ததினால் ராஜ்யத்திலுள்ளவர்கள் வேதப்படுகிறார்கள். வருத்தத்தோடு அவர்களுடைய சரீரத்தில் புண்களும் உண்டாயிற்று. புண்களினால் அதிக வேதனையும் வருத்தமும் உண்டாயிற்று.

நமக்கு வாதைகளும், வேதனைகளும், வருத்தங்களும், வியாதிகளும் வரும்போது, கர்த்தருடைய சமுகத்தில் அமர்ந்திருந்து அவரை நோக்கிப் பார்க்கவேண்டும். நம்முடைய பாவங்களை விட்டு மனந்திரும்பவேண்டும். நம்மைச் சுத்திகரிக்க கர்த்தரை அனுமதிக்கவேண்டும். நாம் கர்த்தரை விட்டு விலகிப்போயிருப்போமென்றால், அவரிடத்தில் திரும்பி வரவேண்டும்.

விக்கிரகாராதனைக் காரருக்கு, இருளும், வருத்தங்களும், புண்களும் உண்டாயிற்று. ஆனாலும் இவர்கள் தங்களுடைய துன்மார்க்கமான கிரியைகளை விட்டு மனந்திரும்பவில்லை. பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்த வில்லை. கர்த்தரை மகிமைப் படுத்துவதற்குப் பதிலாக, அவரைத் தூஷிக்கிறார்கள்.

துன்மார்க்கருக்குள் தெளிந்த சிந்தனையில்லை. அவர்களுக்குள் குழப்பமுண்டாயிற்று. நன்மை தீமை இன்னதென்று அவர்களால் பகுத்தறிய முடியவில்லை. தீமையைப் பின்பற்றுகிறார்கள். வருத்தத்தின் கனிகளைப் புசிக்கிறார்கள். அவர்களுக்கு சந்தோஷமுமில்லை. சமாதானமுமில்லை.

ஆறாம் கலசம்
வெளி 16 : 12-14

வெளி 16:12. ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐபிராத் என்னும் பெரிய நதியின் மேல் ஊற்றினான்; அப்பொழுது சூரியன் உதிக்குந் திசையிலிருந்துவரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி அந்த நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று.

வெளி 16:13. அப்பொழுது, வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டுவரக் கண்டேன்.

வெளி 16:14. அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது.

ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐபிராத் என்னும் பெரிய நதியின்மேல் ஊற்றுகிறான். ஐபிராத் என்பது மெய்யாகவே பிரத்தியட்சமான ஐபிராத் நதிதான் என்று சிலர் சொல்லுகிறார்கள். வேறு சிலரோ இது தைபர் நதி என்று சொல்லுகிறார்கள். ஐபிராத் நதியின்மேல், ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஊற்றியபோது, அந்த நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று.

தண்ணீர் வற்றிப்போனதினால், தண்ணீர்போன பாதையானது இப்போது ஒரு வழியைப்போலிருக்கிறது. சூரியன் உதிக்கும் திசையான கிழக்கு திசையிலிருந்து ராஜாக்கள் இந்த வழியாக வரலாம். இந்த வழி அந்த ராஜாக்களுக்கு ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது.

வலுசர்ப்பம் கர்த்தருக்கு விரோதமாகவும் அவருடைய பரிசுத்தவான்களுக்கு விரோதமாகவும் மறுபடியும் யுத்தம்பண்ண ஆயத்தமாகிறது. இதுவே வலுசர்ப்பத்தின் கடைசி யுத்தம். ஆகையினால் கர்த்தரோடு மூர்க்கமாக யுத்தம்பண்ணவேண்டுமென்று சதிசெய்து செயல்படுகிறது. கர்த்தரோடு யுத்தம்பண்ணுவதற்கு, தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்தஆவிகள் வருகிறது. இவை, இந்த யுத்தத்தில் வலுசர்ப்பத்தின் ஆயுதங்களாகப் பயன்படுத்தப்படுகிறது.

தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகளும் வலுசர்ப்பத்தின் வாயிலும், மிருகத்தின் வாயிலும், கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து புறப்பட்டு வருகிறது. கள்ளத்தீர்க்கதரிசி என்பது மற்றொரு மிருகத்தை குறிக்கிற வார்த்தையாக இருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள் (வெளி 13:11)

மூன்று அசுத்த ஆவிகளும் பிசாசுகளின் ஆவிகள். இவை மாய்மாலமான அற்புதங்களைச் செய்யும். தாங்கள் செய்கிற அற்புதங்களினால் ராஜாக்களையும் ஜனங்களையும் வஞ்சிக்கும். தங்களுக்கு அதிக வல்லமையிருப்பதுபோல மாய்மாலம் பண்ணும். பிசாசுகளுக்கு உண்மையில் வல்லமை எதுவுமில்லை. தங்களிடத்தில் வல்லமையிருப்பதுபோல அவை மாய்மாலம்பண்ணுகிறது.

சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் ஒரு யுத்தம் நடக்கப்போகிறது. அந்த யுத்தத்தில் வலுசர்ப்பமும் அவனுடைய பிசாசுக் கூட்டமும் கர்த்தரோடு யுத்தம்பண்ணும். தேவனோடு யுத்தம்பண்ணுவதற்கு வலுசர்ப்பத்திற்கு ராஜாக்கள் தேவை. இதற்காக மூன்று அசுத்த ஆவிகளும் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களை யுத்தத்திற்கு கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப்போகிறது. பிசாசுகளின் ஆவிகள் அவர்கள் மத்தியிலே அற்புதங்களைச் செய்து ராஜாக்களை வஞ்சிக்கும். வஞ்சிக்கப்பட்டவர்கள் வலுசர்ப்பத்தோடு சேர்ந்துகொண்டு, கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள்.

இந்த யுத்தமே வலுசர்ப்பத்திற்கு கடைசி யுத்தம். ஆகையினால் தன்னால் முடிந்த வரையிலும் மூர்க்கமாக யுத்தம்பண்ணி, கர்த்தரை ஜெயித்துவிடவேண்டும் என்று வலுசர்ப்பம் சதிபண்ணுகிறது. பூமியின் ராஜாக்களைத் தன்பக்கமாக கூட்டிச் சேர்க்கிறது. சாத்தான் எவ்வளவுதான் முயற்சிபண்ணினாலும், கர்த்தரே ஜெயமுள்ளவர். ஜெயம் கர்த்தருக்கு மாத்திரமே உரியது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே ஜெயகிறிஸ்துவாகயிருக்கிறார்.

பாக்கியவான்
வெளி 16:15

வெளி 16:15. இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்.

பிசாசுகளின் ஆவிகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களை தங்கள் பக்கமாக கூட்டிச்சேர்க்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் எச்சரிப்பாயிருக்க வேண்டும் என்று கர்த்தர் நமக்கு எச்சரிப்பின் வார்த்தையைச் சொல்லுகிறார். நாம் விழித்திருக்கிறவர்களாய் காணப்படவேண்டும். நம்முடைய நீதியின் வஸ்திரங்களையும், இரட்சிப்பின் வஸ்திரங்களையும் காத்துக்கொள்ள வேண்டும். கர்த்தர் திருடனைப்போல, நினையாத வேளையிலே வருவதாகச் சொல்லுகிறார்.

நீதியின் வஸ்திரங்களையும், இரட்சிப்பின் வஸ்திரங்களையும் காத்துக் கொள்ளதவர்கள் நிர்வாணமாயிருப்பார்கள். நிர்வாணமாய் நடப்பார்கள். தங்களுடைய மானத்தைப் பிறருக்குக் காண்பிப்பார்கள். கர்த்தர் இப்படிப்பட்ட நிர்வாணத்தை அருவருக்கிறார். பிசாசுகளின் ஆவிகள் தங்கள் வஸ்திரங்களைக் காத்துக் கொள்ளாதவர்களை வஞ்சித்து, தங்கள் பக்கமாகச் சேர்த்துக்கொள்ளும். கர்த்தருடைய வருகையும் சமீபமாயிருக்கிறது. ஆகையினால் நாம் நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக் கொண்டிருக்க வேண்டும். நம்முடைய வஸ்திரங்களைக் காத்துக்கொள்ள வேண்டும். தங்கள் வஸ்திரங்களைக் காத்துக் கொள்கிறவர்கள் பாக்கியவான்களாயிருப்பார்கள்.

அர்மகெதோன்
வெளி 16:16

வெளி 16:16. அப்பொழுது எபிரெயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான்.

சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே யுத்தம் நடைபெறும். இந்த இடம் மெகித்தோ பர்வதமாகயிருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். பிசாசுகளின் ஆவிகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களை அர்மகெதோன் என்னப்பட்ட இடத்தில் கூட்டிச் சேர்க்கிறார்கள். அர்மகெதோனில் கர்த்தருக்கும் வலுசர்ப்பத்திற்கும் யுத்தம் நடைபெறும். கர்த்தருடைய பிள்ளைகள் கர்த்தரோடு சேர்ந்து வலுசர்ப்பத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள்.

யுத்தம் கர்த்தருடையது. கர்த்தரே யுத்தம்பண்ணுகிறவர். யுத்தம் நடைபெற்றால்தான் ஜெயமுண்டாகும். கர்த்தருடைய பிள்ளைகள் யுத்தத்தைப் பார்த்து பயப்படக்கூடாது. நம்முடைய தேவன் ஜெயங்கொடுக்கிற தேவன். கர்த்தருடைய ஊழியத்தில் நாம் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். கர்த்தருடைய யுத்தத்திலும், நாம் கர்த்தரோடு சேர்ந்து, சாத்தானுக்கு விரோதமாக, விசுவாசத்தோடும் பயமில்லாமலும் யுத்தம்பண்ண வேண்டும்.

அர்மகெதோன் என்னப்பட்ட இடத்தில் நடைபெறுகிற யுத்தத்தைப்பற்றி வெளி 19-ஆவது அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. "பின்பு, மிருகமும் பூமியின் ராஜாக்களும் அவர்களுடைய சேனைகளும், குதிரையின்மேல் ஏறியிருக்கிறவரோடும் அவருடைய சேனையோடும் யுத்தம்பண்ணும்படிக்குக் கூடிவரக்கண்டேன். அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது; மிருகத்தின்முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம்போக்கின கள்ளத் தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான்; இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள்" (வெளி 19:19,20).

ஏழாம் கலசம்
வெளி 16 : 17-21

வெளி 16:17. ஏழாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆகாயத்தில் ஊற்றினான்; அப்பொழுது பரலோகத்தின் ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து: ஆயிற்று என்று சொல்லிய பெருஞ்சத்தம் பிறந்தது.

வெளி 16:18. சத்தங்களும் இடிமுழக்கங்களும் மின்னல்களும் உண்டாயின; பூமி மிகவும் அதிர்ந்தது, பூமியின்மேல் மனுஷர்கள் உண்டான நாள்முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சியுண்டானதில்லை.

வெளி 16:19. அப்பொழுது மகா நகரம் மூன்று பங்காகப் பிரிக்கப்பட்டது, புறஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன. மகா பாபிலோனுக்கு தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்கு முன்பாக நினைப்பூட்டப்பட்டது.

வெளி 16:20. தீவுகள் யாவும் அகன்றுபோயின; பர்வதங்கள் காணப்படாமற்போயின.

வெளி 16:21. தாலந்து நிறையான பெரிய கல்மழையும் வானத்திலிருந்து மனுஷர்மேல் விழுந்தது; அந்தக் கல்மழையினால் உண்டான வாதையினிமித்தம் மனுஷர்கள் தேவனைத் தூஷித்தார்கள்; அந்த வாதை மகா கொடியதாயிருந்தது.

ஏழாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆகாயத்தில் ஊற்றுகிறான். ஏழாம் வாதையே கடைசி வாதை. இதோடு தேவனுடைய உக்கிரமான வாதை முடிவுபெறுகிறது. ஏழாம் வாதை ஆகாயத்தில் ஆரம்பமாயிற்று. ஆகாயத்திலே அந்தகாரப்பிரபுக்களும், பிசாசுகளின் அந்தகார சக்திகளும் இருக்கிறது. பிசாசினுடைய ராஜ்யத்தின்மீது ஏழாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஊற்றுகிறான். சாத்தானால் இந்த வாதையைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

அப்பொழுது பரலோகத்தின் ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து ஒரு பெருஞ்சத்தம் பிறக்கிறது. அந்தச் சத்தம், "ஆயிற்று" என்று சொல்லுகிறது. கர்த்தருடைய கிரியைக்கு வானத்திலே ஸ்தோத்திரபலி ஏறெடுக்கப்படுகிறது. கர்த்தர் தாம் ஆரம்பித்த கிரியையை இப்போது நிறைவுபெறச் செய்கிறார்.

அப்போது வானத்திலே சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும் உண்டாயிற்று. பூமி மிகவும் அதிர்ந்தது. இதற்கு முன்பு இப்படிப்பட்ட பெரிய பூமியதிர்ச்சி உண்டானதில்லை. பூமியதிர்ச்சியோடு சேர்ந்து இடிமுழக்கமும் மின்னல்களும் உண்டாயிற்று.

பூமியிலே அதிர்ச்சி உண்டாகும்போது கர்த்தர் துன்மார்க்கமான மகாபாபிலோனை நினைத்துப் பார்க்கிறார். மகாபாபிலோனுக்கு, தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக நினைப்பூட்டப்படுகிறது. கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக மகாபாபிலோனுக்கு தம்முடைய கோபாக்கினையின் பாத்திரத்தைக் குடிக்கக் கொடுக்கிறார். தேவனுடைய கோபாக்கினை சாதாரண கோபாக்கினையாயிராமல், உக்கிரமான கோபாக்கினையாயிருக்கிறது.

BELLWETHER INTERNATIONAL

வெளிப்படுத்தின விசேஷம் - விரிவுரை
REVELATION - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

தேவனுடைய கோபாக்கினை மகாபாபிலோன்மேல் வரும்போது, தீவுகள் யாவும் அகன்றுபோயிற்று. பர்வதங்கள் காணப்படாமற் போயிற்று. தீவுகளும் மலைகளும் இயற்கையில் பாதுகாப்புள்ளவை. கர்த்தருடைய கோபாக்கினைக்கு முன்பாக இயற்கையான பாதுகாப்புக்களெல்லாம் நிலைநிற்க முடியவில்லை. அசைக்கமுடியாத பர்வதங்கள் காணப்படாமற்போயிற்று. நிலைத்து நிற்கக்கூடிய தீவுகள் அகன்றுபோயிற்று. தேவனுடைய கோபாக்கினை உக்கிரமான கோபாக்கினையாகயிருப் பதினால், தீவுகளாலும் மலைகளாலும் தேவனுடைய கோபாக்கினையைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தவிக்கிறது.

மகாபாபிலோனிலே துன்மார்க்கர் நிரம்பியிருக்கிறார்கள். இவர்கள் வலுசர்ப்பத்தின் பிள்ளைகள். இவர்கள் அந்திக்கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள். மகாபாபிலோன் நகரம் மூன்று பங்காகப் பிரிக்கப்படுகிறது. புறஜாதிகளுடைய பட்டணங்கள் விழுகிறது. இந்தப் பட்டணங்களில் கள்ளப்போதகர்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும், அந்திக் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களும், மிருகத்தின் சொரூபத்தை வணங்குகிறவர்களும், மிருகத்தின் முத்திரையைத் தரித்திருக்கிறவர்களும் இருக்கிறார்கள்.

இந்த மனுஷர்மேல் பெரிய கல்மழை வானத்திலிருந்து விழுகிறது. ஒவ்வொரு கல்லும் தாலந்து நிறையான கனமான கல்லாகயிருக்கிறது. வானத்திலிருந்து மனுஷர்மேல் கல்மழை விழுகிறது. துன்மார்க்கருக்கு நியாயத்தீர்ப்பு உண்டாயிற்று. தேவனுடைய கோபாக்கினை அவர்கள்மேல் வருகிறது. இந்த வாதை மகா கொடிதாயிருக்கிறது.

இதையெல்லாம் பார்த்து, மகாபாபிலோன் ஜனங்கள் மனந்திரும்பவேண்டும். தங்கள் பாவங்களைவிட்டு விலகிவரவேண்டும். கர்த்தரைப் பின்பற்றவேண்டும். கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும். ஆனால் அவர்களோ, கல்மழையினால் உண்டான வாதையினிமித்தம் தேவனைத் தூஷிக்கிறார்கள். துணிகரமாகப் பாவம் செய்கிறார்கள். கர்த்தரைத் தூஷிக்கிறவர்களுக்கு நீதியான தண்டனை கிடைத்திருக்கிறது.

17 அதிகாரம்

அந்திக்கிறிஸ்து இந்த அதிகாரத்திலே மகாவேசியாக விவரிக்கப்படுகிறான். ஏழுதூதர்களில் ஒருவன் அப்போஸ்தலர் யோவானை அழைத்துக்கொண்டுபோய், மகாவேசியைக் காண்பிக்கிறார் (வெளி 17:1,2). மகாவேசியின் வஸ்திரங்களும் அலங்காரமும், தோற்றமும் (வெளி 17:3-6). ஸ்திரீயினுடைய ரகசியம் (வெளி 17:7-12). அழிவு முன்னறிவிக்கப்படுகிறது (வெளி 17:13-17).

திரளான தண்ணீர்கள் மேல் உட்கார்ந்திருக்கிற மகாவேசி வெளி 17 : 1-6

வெளி 17:1. ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் வந்து என்னோடே பேசி: நீ வா, திரளான தண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருக்கிற மகா வேசியோடே பூமியின் ராஜாக்கள் வேசித்தனம் பண்ணினார்களே, அவளுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமியின் குடிகளும் வெறிகொண்டிருந்தார்களே.

வெளி 17:2. அவளுக்கு வருகிற ஆக்கினையை உனக்குக் காண்பிப்பேன் என்று சொல்லி;

வெளி 17:3. ஆவிக்குள் என்னை வனாந்தரத்திற்குக் கொண்டுபோனான். அப்பொழுது ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையும் உடையதும் தூஷணமான நாமங்களால் நிறைந்ததுமான சிவப்புநிறமுள்ள மிருகத்தின்மேல் ஒரு ஸ்திரீ ஏறியிருக்கக் கண்டேன்.

வெளி 17:4. அந்த ஸ்திரீ இரத்தாம்பரமும் சிவப்பான ஆடையுந்தரித்து, பொன்னினாலும் இரத்தினங் களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டு, தன் வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்த பொற்பாத்திரத்தைத் தன்கையிலே பிடித்திருந்தாள்.

வெளி 17:5. மேலும் இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது.

வெளி 17:6. அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறி கொண்டிருக்கிறதைக் கண்டேன்; அவளைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன்.

அப்போஸ்தலர் யோவான் புதிய தரிசனம் காண்கிறார். ஏழுதூதர்கள் ஏழு கலசங்களை உடையவர்களாயிருந்தார்கள். அவர்கள் பூமியின்மீதும், சமுத்திரத்தின்மீதும், தண்ணீரின்மீதும் சூரியன் மேலும், மிருகத்தினுடைய சிங்காசனத்தின்மேலும் தேவனுடைய வாதைகளால் நிறைந்த கலசத்தை ஊற்றினார்கள். ஏழு கலசங்களையுடைய அந்த ஏழுதூதர்களில் ஒருவன் யோவானோடு பேசுகிறார். தன்னோடு வருமாறு யோவானை அழைக்கிறார். யோவானுக்கு ஒரு தரிசனத்தைக் காண்பிப்பதாகச் சொல்லுகிறார்.

மகாவேசி திரளான தண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருக்கிறாள். இவளோடே பூமியின் ராஜாக்கள் வேசித்தனம் பண்ணினார்கள். அவளுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமியின் குடிகள் வெறி கொண்டிருந்தார்கள். மகாவேசியாகிய அந்த ஸ்திரீக்கு ஆக்கினை வரும். அவளுக்கு வருகிற ஆக்கினையை யோவானுக்குக் காண்பிப்பதாக ஏழுதூதர்களில் ஒருவன் சொல்லுகிறான். இதற்காக அந்தத் தூதன் யோவானை ஆவிக்குள் வனாந்தரத்திற்குக் கொண்டுபோகிறான்.

அந்தத் தூதன் யோவானுக்கு ஒரு மிருகத்தையும், அந்த மிருகத்தின்மேல் ஏறியிருக்கிற ஒரு ஸ்திரீயையும் காண்பிக்கிறான். அந்த மிருகத்திற்கு ஏழுதலைகளும் பத்துக்கொம்புகளும் இருக்கிறது. அந்த மிருகம் தூஷணமான நாமங்களால் நிறைந்திருக்கிறது. அது சிவப்பு நிறமுள்ள மிருகம். இந்த மிருகமே ஸ்திரீயின் வாசஸ்தலம். இதுவே அவளுடைய சிங்காசனம். இந்த மிருகம் ரோமப்பேரரசைக் குறிப்பதாக வேதபண்டிதர்கள் அர்த்தம் சொல்லுகிறார்கள். ஏழுதலைகள் என்பது, ஏழுமலைகள்மீது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ரோமாபுரி நகரத்தைக் குறிக்கிறது என்பது இவர்களுடைய வியாக்கியானம். யோவான் அந்த மிருகத்தையும், அந்த மிருகத்தின்மேல் ஏறியிருக்கிற ஸ்திரீயையும் காண்கிறார்.

ஸ்திரீயினுடைய வஸ்திரங்களையும், ஆபரணங்களையும், அலங்காரங்களையும் யோவான் காண்கிறார். அந்த ஸ்திரீ இரத்தாம்பரமும் சிவப்புமான ஆடையைத் தரித்திருக்கிறாள். அவள் பொன்னினாலும், இரத்தினங்களினாலும், முத்துக்களினாலும் தன்னைச் சிங்காரித்திருக்கிறாள். அவள் தன்னுடைய கையிலே ஒரு பொற்பாத்திரத்தைப் பிடித்திருக்கிறாள். அந்தப் பாத்திரத்தில் அவளுடைய வேசித்தனமாகிய அருவருப்புக்களும் அசுத்தங்களும் நிரம்பியிருக்கிறது.

இந்த ஸ்திரீயின் நாமம் அவளுடைய நெற்றியில் எழுதப்பட்டிருக்கிறது. "மகாபாபிலோன்" என்பது அந்த ஸ்திரீயின் நாமம். இவள் ஒரு வேசி. இவள் வேசி மாத்திரமல்ல, இவள் வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புக்களுக்கும் தாயாகயிருக்கிறாள். இந்த ஸ்திரீயின் நெற்றியிலே, "இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புக்களுக்கும் தாய்" என்னும் நாமம் எழுதியிருக்கிறது.

இந்த ஸ்திரீ இரத்த வெறிகொண்டவளாயிருக்கிறாள். இரத்தமே இவளுக்குப் போஜனம். இரத்தத்தைப் பானம்பண்ணுகிறாள். பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசு கிறிஸ்துவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் இவள் வெறி கொண்டிருக்கிறாள். பரிசுத்தவான்களுடைய இரத்தத்தை வெறியோடு பானம்பண்ணி, அவள் தன்னைத்தானே கெடுத்துப்போட்டாள். இந்த ஸ்திரீயைக்கண்டு அப்போஸ்தலர் யோவான் மிகவும் ஆச்சரியப்படுகிறார்.

ஸ்திரீயினுடைய இரகசியம் வெளி 17 : 7-13

வெளி 17:7. அப்பொழுது, தூதனானவன் என்னை நோக்கி: ஏன் ஆச்சரியப்படுகிறாய்? இந்த ஸ்திரீயினுடைய இரகசியத்தையும், ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையுமுடையதாய் இவளைச் சுமக்கிற மிருகத்தினுடைய இரகசியத்தையும் உனக்குச் சொல்லுகிறேன்.

வெளி 17:8. நீ கண்ட மிருகம் முன்னே இருந்தது, இப்பொழுது இல்லை; அது பாதாளத்திலிருந்து ஏறிவந்து, நாசமடையப் போகிறது. உலகத்தோற்றமுதல் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள், இருந்ததும், இராமற்போனதும், இனி இருப்பதுமாயிருக்கிற மிருகத்தைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள்.

வெளி 17:9. ஞானமுள்ள மனம் இதிலே விளங்கும். அந்த ஏழு தலைகளும் அந்த ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற ஏழு மலைகளாம்.

வெளி 17:10. அவைகள் ஏழு ராஜாக்களாம்; இவர்களில் ஐந்துபேர் விழுந்தார்கள், ஒருவன் இருக்கிறான், மற்றவன் இன்னும் வரவில்லை; வரும்போது அவன் கொஞ்சக் காலம் தரித்திருக்கவேண்டும்.

வெளி 17:11. இருந்ததும் இராததுமாகிய மிருகமே எட்டாவதானவனும், அவ்வேழிலிருந்து தோன்றுகிறவனும், நாசமடையப் போகிறவனுமாயிருக்கிறான்.

வெளி 17:12. நீ கண்ட பத்துக் கொம்புகளும் பத்து ராஜாக்களாம்; இவர்கள் இன்னும் ராஜ்யம் பெறவில்லை; இவர்கள் மிருகத்துடனேகூட ஒருமணி நேரமளவும் ராஜாக்கள்போல அதிகாரம் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

வெளி 17:13. இவர்கள் ஒரே யோசனையுள்ளவர்கள்; இவர்கள் தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள்.

ஸ்திரீயைப்பார்த்து யோவான் ஆச்சரியப்படுகிறார். அவர் ஆச்சரியப்படுவதை தூதனானவனும் பார்க்கிறான். அவன் யோவானை நோக்கி, "ஏன் ஆச்சரியப்படுகிறாய்" என்று கேட்கிறான். ஸ்திரீயினுடைய இரகசியத்தையும், அவள் ஏறியிருக்கிற மிருகத்தினுடைய இரகசியத்தையும் தேவதூதன் யோவானுக்கு சொல்லப்போவதாகச் சொல்லுகிறான். ஸ்திரீ மிருகத்தின்மேல் ஏறியிருக்கிறாள். அந்த மிருகத்திற்கு ஏழுதலைகளும் பத்துக்கொம்புகளும் இருக்கிறது. அந்த மிருகம் ஸ்திரீயை சுமக்கிறது. தூதனானவன் யோவானுக்கு ஸ்திரீயினுடைய இரகசியத்தையும், மிருகத்தினுடைய இரகசியத்தையும் சொல்லுகிறான்.

யோவான் பார்த்த மிருகம் முன்னேயிருந்தது. இப்பொழுது இல்லை. அந்த மிருகம் விக்கிரகாராதனையின் வாசஸ்தலமாயிருந்தது. கர்த்தருடைய பரிசுத்தவான்களை உபத்திரவப்படுத்துகிற ஸ்தலமாயிருந்தது. அந்த ஸ்திரீ ஏறியிருந்த மிருகம் இப்போது இல்லை. ஆனாலும் அந்த மிருகம் முன்னேயிருந்தது. மெய்யாகவே இந்த ஸ்தலம் விக்கிரகாராதனை நிரம்பிய இடமாகவே இருந்தது. இங்கு கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கும், இயேசுகிறிஸ்துவினுடைய சாட்சிகளுக்கும் மிகுந்த உபத்திரவமுண்டாயிற்று.

அந்த மிருகம் பாதாளத்திலிருந்து ஏறி வந்து நாசமடையப்போகிறது. பாதாளத்திலிருந்து ஏறி வந்ததுபோலவே, அது பாதாளத்திற்குத் தள்ளப்படும். அது மறுபடியும் அழிந்துபோவதற்கு பாதாளத்திற்குள் இறங்கும். பாதாளத்திலிருந்து ஏறி வந்த மிருகம், மறுபடியும் பாதாளத்திற்கே இறங்கிப்போகும். அது பாதாளத்திலே நாசமடையப்போகிறது.

இந்த மிருகம் ஏற்கெனவே இருந்தது. பின்பு அது இராமற்போயிற்று. இனி அந்த மிருகம் இருக்கும். இதைப்பார்த்து உலகத்தோற்றமுதல் ஜீவப்புஸ்தகத்திலே பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் ஆச்சரியப்படுவார்கள். கர்த்தருடைய ஞானத்தைப் பெற்றிருக்கிறவர்கள் மிருகத்தைப்பற்றிய இரகசியத்தை விளங்கிக்கொள்வார்கள்.

அந்த மிருகத்திற்கு ஏழுதலைகள் இருக்கிறது. வேதபண்டிதர்கள் ஏழுதலைகளை இரண்டுவிதமாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள். ஏழுதலைகள் என்பது ஏழுமலைகளைக் குறிக்கும் என்று சிலர் சொல்லுகிறார்கள். ரோமாபுரி நகரம் ஏழுமலைகளின்மீது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. வேத பண்டிதர்களில் வேறு சிலர், ஏழுதலைகள் என்பது ஏழுராஜாக்களையும் குறிக்கும் என்று சொல்லுகிறார்கள். மிருகத்தினுடைய ஏழுதலைகளும் ஏழுமலைகளாகும். இந்த ஏழுமலைகள்மீது ஸ்திரீ உட்கார்ந்திருக்கிறாள்.

மிருகத்தின் ஏழுதலைகளும் ஏழுராஜாக்களாவார்கள். இவை ஏழுவிதமான ராஜ்யங்களைக் குறிக்கிறது. ஏழுராஜாக்களில் ஐந்துபேர் விழுந்துவிட்டார்கள். ஒரு ராஜா மாத்திரம் இன்னும் இருக்கிறான். மற்றொரு ராஜா இன்னும் வரவில்லை. காலம் நிறைவேறும்போது அவன் கொஞ்சக்காலம் ராஜாவாக ஆட்சிபுரிவான்.

மிருகத்திற்கு பத்துக்கொம்புகள் இருக்கிறது. இவர்கள் பத்து ராஜாக்களாவார்கள். இவர்கள் இன்னும் ராஜ்யம் பெறவில்லை. ஆனாலும் இவர்கள் ராஜாக்கள்போல அதிகாரம் பெற்றுக்கொள்கிறார்கள். இந்த அதிகாரம் நித்திய அதிகாரமல்ல. இவர்கள் மிருகத்துடனேகூட ஒரு மணி நேரமளவும் ராஜாக்கள்போல அதிகாரமுள்ளவர்களாயிருப்பார்கள்.

ஸ்திரீ மிருகத்தின்மேல் ஏறியிருக்கிறாள். அந்த மிருகத்திற்கு ஏழுதலைகளும் பத்துக்கொம்புகளும் இருக்கிறது. இந்த மிருகம் முன்பு இருந்தது. பின்பு இராமற்போனது. இனி இருக்கும். இந்த மிருகமே எட்டாவதானவன். அந்த ஏழிலிருந்து தோன்றுகிறவன். இவனே நாசமடையப்போகிறவன்.

மிருகத்தினுடைய பத்துக் கொம்புகளும் பத்து ராஜாக்களாகயிருக்கிறார்கள். இவர்கள் ஒரே யோசனையுள்ளவர்கள். இவர்கள் தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள்.

ஆட்டுக்குட்டியானவர்
வெளி 17:14

வெளி 17:14. இவர்கள் ஆட்டுக் குட்டியானவருடனே யுத்தம் பண்ணுவார்கள்; ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிற படியால் அவர்களை ஜெயிப்பார்; அவரோடு கூட இருக்கிறவர்கள் அழைக்கப் பட்டவர்களும் தெரிந்துகொள்ளப் பட்டவர்களும் உண்மையுள்ளவர் களுமாயிருக்கிறார்கள் என்றான்.

மிருகம் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம்பண்ணிற்று. மிருகத்தோடு பத்து ராஜாக்கள் சேர்ந்து ஆட்டுக் குட்டியானவரோடு யுத்தம்பண்ணுகிறார்கள். ஆட்டுக்குட்டியானவரோடு அவருடைய பரிசுத்தவான்கள் இருக்கிறார்கள். அவர்கள் அழைக்கப்பட்டவர்களும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், உண்மை யுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். இவர்கள் ஆட்டுக்குட்டியானவரோடு சேர்ந்து மிருகத்திற்கு விரோதமாகவும், அவனுடைய பத்து ராஜாக்களுக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணுவார்கள்.

இயற்கையினுடைய பிரமாணத்தின்படி ஆட்டுக்குட்டியால் வலுசர்ப்பத்திற்கு விரோதமாக எதிர்த்து நிற்கமுடியாது. ஆனால் நம்முடைய ஆட்டுக் குட்டியானவராகிய இயேசுகிறிஸ்துவோ, கர்த்தாதி கர்த்தரும், ராஜாதி ராஜாவுமாயிருக்கிறார். ஆகையினால் ஆட்டுக்குட்டியானவர் மிருகத்தையும் அவனுடைய ராஜாக்களையும் ஜெயிப்பார். ஆட்டுக்குட்டியானவருக்கு விரோதமாக எத்தனை சத்துருக்கள் எழும்பி வந்தாலும் கர்த்தர் அவர்களை ஜெயிப்பார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கர்த்தாதி கர்த்தராகவும், ராஜாதி ராஜாவாகவும் இருக்கிறார். ஆகையினால் ஆட்டுக்குட்டியானவராகிய கர்த்தருக்கு ஜெயம் நிச்சயம். அவரே ஜெயகிறிஸ்து.

இயேசுகிறிஸ்து கர்த்தாதி கர்த்தரும், ராஜாதி ராஜாவாகவும் இருக்கிறார். ஆகையினால் பூமியிலுள்ள சகல அதிகாரங்களும், பூமியின் கீழுள்ள சகல அதிகாரங்களும் இயேசுகிறிஸ்துவின் ஆளுகைக்குட்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவே சர்வ அதிகாரமும், சர்வ வல்லமையும், சர்வஆளுகையுமுள்ளவர்.

கர்த்தரோடு கூடயிருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்கள். இவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். இவர்கள் உண்மையுள்ளவர்கள். இவர்களுக்கு இயேசுகிறிஸ்துவே ராஜாவாகயிருக்கிறார். கிறிஸ்துவின் சேனை அவருடைய பரிசுத்தவான்களின் கூட்டம். கிறிஸ்துவே யுத்தத்தை நடத்துகிறவர். யுத்தம் கர்த்தருடையது. கர்த்தருடைய பரிசுத்தவான்கள் கிறிஸ்துவோடு சேர்ந்து, சத்துருவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். யுத்தத்தில் கர்த்தர் ஜெயிக்கிறார். கர்த்தரோடு சேர்ந்து அவருடைய பரிசுத்தவான்களும் ஜெயிக்கிறார்கள்.

தேவனுடைய வார்த்தைகள் வெளி 17 : 15-18

வெளி 17:15. பின்னும் அவன் என்னை நோக்கி: அந்த வேசி உட்கார்ந்திருக்கிற தண்ணீர்களைக் கண்டாயே; அவைகள் ஜனங்களும் கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரருமாம்.

வெளி 17:16. நீ மிருகத்தின்மேல் கண்ட பத்துக் கொம்புகளானவர்கள் அந்த வேசியைப் பகைத்து, அவளைப் பாழும் நிர்வாணமுமாக்கி, அவளுடைய மாம்சத்தைப் பட்சித்து, அவளை நெருப்பினால் சுட்டெரித்துப் போடுவார்கள்.

வெளி 17:17. தேவன் தம்முடைய வார்த்தைகள் நிறைவேறுமளவும், அவர்கள் தமது யோசனையை நிறைவேற்றுகிறதற்கும், ஒரே யோசனையுள்ள வர்களாயிருந்து, தங்கள் ராஜ்யத்தை மிருகத்திற்குக் கொடுக்கிறதற்கும் அவர்களுடைய இருதயங்களை ஏவினார்.

வெளி 17:18. நீ கண்ட ஸ்திரீயானவள் பூமியின் ராஜாக்கள்மேல் ராஜ்யபாரம்பண்ணுகிற மகா நகரமேயாம் என்றான்.

மகாவேசி திரளான தண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருக்கிறாள். அந்தத் திரளான தண்ணீர் என்பது ஜனங்களும், கூட்டங்களும், ஜாதிகளும், பாஷைக்காரருமாகும். மிருகத்திற்கும் வேசிக்கும் ஏராளமான ஜனங்கள் கீழ்ப்படிந்திருக்கிறார்கள். வேசியும் மிருகமும் இவர்களை வஞ்சித்திருக்கிறது. வஞ்சிக்கப்பட்டவர்கள் வேசியையும் மிருகத்தையும் பின்பற்றிக்கொள்கிறார்கள். இவர்களோடு சேர்ந்து கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள்.

மிருகத்திற்கு ஏழுதலைகளும் பத்துக்கொம்புகளும் இருக்கிறது. பத்துக்கொம்புகள் பத்து ராஜாக்களாவார்கள். இவர்கள் ஒரே யோசனையுள்ளவர்கள். தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் அவர்கள் மிருகத்திற்குக் கொடுப்பார்கள். வேசியோடு சேர்ந்து கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள். இவர்களெல்லோரும் ஒரே யோசனையுள்ளவர்கள்.

கர்த்தர் இவர்களுடைய யோசனையை தாறுமாறாக்குகிறார். துன்மார்க்கர் மத்தியிலே ஒற்றுமை இருக்காது. ஒற்றுமை நீங்கிப்போனவுடன், பத்துக்கொம்புகளாகிய பத்து ராஜாக்கள் வேசியைப் பகைக்கிறார்கள். அவளை பாழும் நிர்வாணமுமாக்குகிறார்கள். அவளுடைய மாம்சத்தைப் பட்சித்துப்போடுகிறார்கள். அவளை நெருப்பினால் சுட்டெரித்துப்போடுகிறார்கள்.

கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே பத்து ராஜாக்களும் ஒரே யோசனையுள்ளவர் களாயிருந்தார்கள். கர்த்தரே அவர்களுடைய இருதயங்களை ஏவினார். அதன் பிரகாரமாக அவர்கள் தங்கள் ராஜ்யத்தை மிருகத்திற்குக் கொடுத்தார்கள். தேவனுடைய யோசனையை நிறைவேற்றுவதற்கே பத்து ராஜாக்களும் ஒரே யோசனையுள்ளவர் களாயிருந்தார்கள். தேவனுடைய வார்த்தைகள் நிறைவேறும். கர்த்தர் தம்முடைய யோசனையை நிறைவேற்றுவார். கர்த்தர் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு பத்து ராஜாக்களையும் தம்முடைய விருப்பத்தின் பிரகாரமாய் பயன்படுத்துகிறார்.

மிருகத்தின்மேல் ஏறியிருக்கிற ஸ்திரீயானவள் பூமியின் ராஜாக்கள்மேல் ராஜ்யபாரம்பண்ணுகிற மகா நகரமாகும். ரோமாபுரி பட்டணமே இந்த மகா நகரமென்று வேதபண்டிதர்கள் அர்த்தம் சொல்லுகிறார்கள். தேவன் தம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றுகிறார். அவர் தம்முடைய யோசனைகளை நிறைவேற்றுகிறார். தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாக, அவருடைய தெய்வீக சிந்தையிலுள்ள ஒவ்வொரு காரியமும் நிறைவேறுகிறது.

18 அதிகாரம்

மகா பாபிலோன் விழுந்தது என்று ஒரு தூதன் பலத்த சத்தமிட்டு அறிவிக்கிறான் (வெளி 18:1,2). மகா பாபிலோன் விழுந்ததற்கு காரணம் (வெளி 18:3). கர்த்தருடைய ஜனங்கள் பாபிலோனை விட்டு வெளியே வரவேண்டும் என்னும் எச்சரிப்பு (வெளி 18:4,5). மகா பாபிலோனை அழிப்பதற்கு தேவனுடைய ஜனங்களும் உதவிபுரியவேண்டும் (வெளி 18:6-8). மகா பாபிலோனால் ஆதாயம் பெற்றவர்கள், அவள் அழிந்ததற்காக அழுது புலம்புகிறார்கள் (வெளி 18:9-19). மகா பாபிலோன் அழிந்ததற்காக கர்த்தருடைய பிள்ளைகள் மகிழ்ந்து களிகூருகிறார்கள் (வெளி 18:20-24).

வானத்திலிருந்து இறங்கி வந்த வேறொரு தூதன் வெளி 18:1

வெளி 18:1. இவைகளுக்குப்பின்பு, வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய், வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன்; அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று.

வானத்திலிருந்து வேறொரு தூதன் இறங்கி வருகிறான். இவன் மிகுந்த அதிகாரமுடையவனாயிருக்கிறான். இவனுக்குள் வெளிச்சம் இருக்கிறது. இவனுடைய மகிமையினால் பூமியும் பிரகாசமாயிற்று. சத்தியத்தை இவனுக்கு பகுத்தறியத் தெரிகிறது. நடைபெறப்போகிற பெரிய சம்பவங்களை இவன் பகுத்தறிந்து உலகத்திற்கு அறிவிக்கிறான். மகா பாபிலோன் ஏற்கெனவே விழுந்தது. அது விழுந்த செய்தியை இந்தத் தூதன் உலகத்திற்கு அறிவிக்கிறான்.

பாபிலோன் விழுந்தது வெளி 18:2

வெளி 18:2. அவன் பலத்த சத்தமிட்டு: மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும் அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று.

பாபிலோன் ஏற்கெனவே விழுந்துவிட்டது. அது விழுந்தபோன செய்தியை இந்தத் தூதன் உலகத்திற்கு அறிவிக்கிறான். ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் பாபிலோன் விழும் என்று முன்னறிவித்து சொல்லப்பட்டிருக்கிறது. "இதோ, ஒரு ஜோடு குதிரை பூண்ட இரதத்தின்மேல் ஏறியிருக்கிற ஒரு மனுஷன் வருகிறான்; பாபிலோன் விழுந்தது, விழுந்தது; அதின் விக்கிரக தேவர்களையெல்லாம் தரையோடே மோதி உடைத்தார் என்று பிரதியுத்தரம் சொல்லுகிறான்" (ஏசா 21:9).

வானத்திலிருந்து இறங்கி வந்த தூதன், "மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது!" என்று இரண்டு தடவை சொல்லுகிறான். பாபிலோன் விழுந்ததை உறுதிபண்ணுகிறான். இந்தச் செய்தியை தூதன் பலத்த சத்தமிட்டு சொல்லுகிறான். இந்த வார்த்தை ஏசாயா 21:9-ஆவது வசனத்திலிருந்து எடுத்து மேற்கோளாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பாபிலோனுடைய பாவத்தினிமித்தமாய் அவளுக்கு தண்டனை வந்தது. இந்தத் தண்டனையே அவளுடைய அழிவுக்குக் காரணமாயிற்று. பாபிலோன் பேய்களுடைய குடியிருப்பு ஆயிற்று. மகா பாபிலோன் சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல் வீடாயிற்று. இது அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவிதபறவைகளுடைய கூடுமாயிற்று. பாபிலோனிலே எங்கும் பரிசுத்தம் காணப்படவில்லை. பரிசுத்த ஆவியானவர் அங்கு அசைவாடவில்லை. அசுத்த ஆவிகள்தான் அங்கு நிரம்பியிருக்கிறது. அசுத்தமும் அருவருப்பும் அங்கு நிரம்பியிருக்கிறது. பாபிலோன் விழுந்ததினால் இப்போது பேய்களும், அசுத்த ஆவிகளும் அங்கு தாராளமாய்க் குடியிருக்கின்றன.

பாபிலோனின் வேசித்தனம்
வெளி 18:3

வெளி 18:3. அவளுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை எல்லா ஜாதிகளும் குடித்தார்கள்; பூமியின் ராஜாக்கள் அவளோடே வேசித்தனம்பண்ணினார்கள்; பூமியின் வர்த்தகர் அவளுடைய செல்வச்செருக்கின் மிகுதியினால் ஐசுவரியவான்களானார்கள் என்று விளம்பினான்.

பாபிலோனிலே மெய்யான தேவன் ஆராதிக்கப்படவில்லை. அவர்கள் கர்த்தரை புறக்கணித்துவிட்டார்கள். அந்தப் பாவத்தோடு பாபிலோனிலே விக்கிரங்களைக் கொண்டு வந்து ஸ்தாபித்திருக்கிறார்கள். இங்கு ஆவிக்குரிய வேசித்தனம் அதிகமாய்க் காணப்படுகிறது. எல்லா ஜனங்களும் பாபிலோனுக்கு வந்து விக்கிரகாராதனையில் பங்குபெறுகிறார்கள். பாபிலோனிலே ஆவிக்குரிய வேசித்தனத்தின் உக்கிரமான மது எல்லோருக்கும் பரிமாறப்படுகிறது. இந்த மதுவை எல்லா ஜாதிகளும் வந்து குடிக்கிறார்கள்.

பூமியின் ராஜாக்கள் கர்த்தரை ஆராதிக்காமல், பாபிலோனுக்கு வந்து விக்கிரங்களை ஆராதிக்கிறார்கள். இவர்கள் மகா பாபிலோனோடே ஆவிக்குரிய வேசித்தனம்பண்ணினார்கள். பூமியின் வர்த்தகர்களுக்கு பாபிலோனில் மிகுந்திருந்த விக்கிரகாராதனையினால் மிகுதியான ஐசுவரியம் கிடைத்தது. விக்கிரகாராதனையின் செல்வச் செருக்கின் மிகுதியினால் பூமியின் வர்த்தகர் ஐசுவரியவான்களானார்கள்.

பாபிலோனின் துன்மார்க்கத்தையும், ஆவிக்குரிய வேசித்தனத்தையும் வானத்திலிருந்து இறங்கி வந்த தூதன் பலத்த சத்தமிட்டு சொல்லுகிறான். பாபிலோனின் பாவமே அவளுடைய அழிவுக்குக் காரணம். பாபிலோனுடைய விக்கிரகாராதனையினால் ஐசுவரியவான்களானவர்கள் அவள் மீது பிரியமாயிருக்கிறார்கள். விக்கிரகாராதனையில் விரும்பி பங்குபெறுகிறார்கள். கர்த்தரை மறந்துவிட்டு விக்கிரகங்களை வணங்குகிறார்கள்.

வானத்திலிருந்து உண்டான வேறொரு சத்தம்
வெளி 18:4-8

வெளி 18:4. பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்.

வெளி 18:5. அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, அவளுடைய அநியாயங்களை தேவன் நினைவுகூர்ந்தார்.

வெளி 18:6. அவள் உங்களுக்குப் பலனளித்ததுபோல நீங்களும் அவளுக்குப் பலனளியுங்கள்; அவளுடைய கிரியைகளுக்குத்தக்கதாக அவளுக்கு இரட்டிப்பாகக் கொடுத்துத் தீருங்கள்; அவள் உங்களுக்குக் கலந்துகொடுத்த பாத்திரத்திலே இரட்டிப்பாக அவளுக்குக் கலந்துகொடுங்கள்.

வெளி 18:7. அவள் தன்னை மகிமைப்படுத்தி, செல்வச்செருக்காய் வாழ்ந்ததெவ்வளவோ அவ்வளவாய் வாதையையும் துக்கத்தையும் அவளுக்குக் கொடுங்கள். நான் ராஜஸ்திரீயாய் வீற்றிருக்கிறேன்; நான் கைம்பெண்ணல்ல, நான் துக்கத்தைக் காண்பதில்லையென்று அவள் தன் இருதயத்திலே எண்ணினாள்.

வெளி 18:8. ஆகையால் அவளுக்கு வரும் வாதைகளாகிய சாவும் துக்கமும் பஞ்சமும் ஒரே நாளிலே வரும்; அவள் அக்கினியினாலே சுட்டெரிக்கப்படுவாள்; அவளுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் தேவனாகிய கர்த்தர் வல்லமையுள்ளவர்.

வானத்திலிருந்து இறங்கி வந்த தூதன் "மகா பாபிலோன் விழுந்தது, விழுந்தது" என்று பலத்த சத்தமிட்டு சொல்லுகிறான். பாபிலோன் விழுந்ததற்கான காரணத்தையும் அறிவிக்கிறான். அதைத் தொடர்ந்து வானத்திலிருந்து வேறொரு சத்தம் உண்டாயிற்று. கர்த்தருடைய ஜனங்கள் பாபிலோனுக்குள் இருக்கக்கூடாது. கர்த்தருடைய பிள்ளைகளுக்கு மகா பாபிலோனிலே பங்குமில்லை, பாத்தியமுமில்லை. கர்த்தருடைய ஜனங்கள் பாபிலோனை விட்டு வெளியே வந்துவிடவேண்டும்.

கர்த்தருடைய ஜனங்கள் பாபிலோனுடைய பாவங்களுக்கு உடன்படக்கூடாது. பாபிலோனுக்கு நேரிடும் வாதைகளில் அகப்பட்டுக்கொள்ளக் கூடாது. கர்த்தருடைய ஜனங்கள் பாதுகாப்பாயிருக்கவேண்டுமென்றால், அவர்கள் பாபிலோனை விட்டு வெளியே வந்துவிடவேண்டும் என்று வானத்திலிருந்து உண்டான வேறொரு சத்தம் ஜனங்களை எச்சரிக்கிறது.

தேவனிடத்திலிருந்து கிருபையையும் இரக்கத்தையும் எதிர்பார்க்கிறவர்கள், பாபிலோனைவிட்டு வெளியே வந்தால் மாத்திரம் போதாது. பாபிலோனை அழிப்பதற்கு கர்த்தருடையஜனங்களும் உதவிசெய்யவேண்டும். அவளை அழிப்பதற்குத் துணை போகவேண்டும். கர்த்தருடைய ஜனங்கள் பாபிலோனிலும் இருக்கிறார்கள். துன்மார்க்கருக்கு பங்காளிகளாகயிருக்கிறவர்கள், அவர்களுக்கு வரும் ஆக்கினையிலும் பங்காளிகளாகயிருப்பார்கள். ஆகையினால் தேவனுடைய ஜனங்கள் காலதாமதம்பண்ணாமல், பாபிலோனுடைய பாவங்களைவிட்டு வெளியே வந்துவிடவேண்டும்.

பாபிலோனுடைய பாவம் வானபரியந்தம் எட்டிற்று. அவளுடைய பாவங்களை தேவன் நினைவுகூர்ந்தார். அதனால் பாபிலோன்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பும், கோபாக்கினையும் வந்திருக்கிறது. நாம் செய்த பாவங்களை அறிக்கையிட்டு, மனந்திருந்தி கர்த்தருடைய சமுகத்தில் வரும்போது, அவர் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார். நம்மை இரட்சிக்கிறார். இரட்சிக்கப்பட்ட கர்த்தருடைய பிள்ளைகள் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி, ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேறிச் செல்லவேண்டும். கர்த்தர் அனுமதிப்பதை மாத்திரம் நாம் செய்யவேண்டும். கர்த்தர் தடை பண்ணுவதில் நாம் பங்குபெறக்கூடாது.

மகா பாபிலோன் கர்த்தருடைய ஜனங்களை வேதனைப்படுத்திற்று. கர்த்தருடைய பரிசுத்தவான்களை உபத்திரவப்படுத்திற்று. பாபிலோன் தங்களுக்குப் பலனளித்ததுபோல, கர்த்தருடைய ஜனங்களும் அவளுக்குப் பலனளிக்கவேண்டுமென்று வானத்திலிருந்து உண்டான சத்தம் சொல்லிற்று. மேலும் "அவளுடைய கிரியைகளுக்குத்தக்கதாக அவளுக்கு இரட்டிப்பாக கொடுத்துத் தீருங்கள்; அவள் உங்களுக்கு கலந்து கொடுத்த பாத்திரத்திலே இரட்டிப்பாக அவளுக்குக் கலந்துகொடுங்கள்" என்றும் வானத்திலிருந்து உண்டான சத்தம் சொல்லிற்று.

கர்த்தர் பாவிகளைத் தண்டிக்கிறார். பாவிகளுடைய பாவங்களின் அளவுக்குத் தகுந்த பிரகாரம் கர்த்தருடைய தண்டனையின் அளவும் இருக்கும். பாபிலோன் தன்னை மகிமைப்படுத்தினாள். செல்வச் செழிப்பாய் வளர்ந்தாள். அந்த அளவுக்கு அவளுக்கு வாதையும் துக்கமும் கொடுக்கப்படும்.

பாபிலோன் தன்னைப்பற்றி மிகவும் பெருமையாய்ப் பேசினாள். தன்னுடைய இருதயத்திலே பெருமைப்பட்டாள். "நான் ராஜஸ்திரீயாய் வீற்றிருக்கிறேன்; நான் கைம்பெண்ணல்ல, நான் துக்கத்தைக் காண்பதில்லை" என்று பாபிலோன் தன் இருதயத்திலே எண்ணினாள். அகந்தையான எண்ணம் அவளுடைய இருதயத்தில் நிரம்பியிருந்தது. அவளுடைய இருதயத்தின் அகந்தைக்குத் தக்கதாய் அவளுக்கு வாதையும் துக்கமும் கொடுக்கப்படும்.

பாபிலோனுக்கு எல்லாவித வாதைகளும் ஒரே நேரத்தில் வருகிறது. திடீரென்று வருகிறது. பாபிலோன் அதிர்ச்சியடையத்தக்கதாய் எல்லா பேரழிவுகளும் ஒரே நேரத்தில் சடுதியாய் வருகிறது. பாபிலோனுக்கு மூன்றுவிதமான வாதைகள் வருகிறது. அவையாவன : 1. சாவு 2. துக்கம் 3. பஞ்சம். இம்மூன்றும் ஒரே நாளில் பாபிலோனுக்கு வரும். பாபிலோன் அக்கினியினாலே சுட்டெரிக்கப்படுவாள். கர்த்தர் பாபிலோனுக்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கிறார். தேவனாகிய கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். கர்த்தருடைய ஆக்கினைத் தீர்ப்புக்கு பாபிலோனால் தப்பிக்க முடியாது.

பாபிலோனுக்காக அழுது புலம்புகிறவர்கள் வெளி 18 : 9,10

வெளி 18:9. அவளுடனே வேசித்தனஞ்செய்து செல்வச் செருக்காய் வாழ்ந்த பூமியின் ராஜாக்களும் அவள் வேகிறதினால் உண்டான புகையைக் காணும்போது அவளுக்காக அழுது புலம்பி,

வெளி 18:10. அவளுக்கு உண்டான வாதையினால் பயந்து, தூரத்திலே நின்று: ஐயையோ! பாபிலோன், மகா நகரமே! பலமான பட்டணமே! ஒரே நாழிகையில் உனக்கு ஆக்கினை வந்ததே! என்பார்கள்.

பாபிலோன் அக்கினியினாலே சுட்டெரிக்கப்படுவாள். அவள் அக்கினியில் வேகிறததினால் புகை உண்டாகும். பூமியின் ராஜாக்களும், விக்கிரகாராதனைக்காரரும் பாபிலோனுடைய பாவங்களுக்கு பங்காளிகளாயிருந்தார்கள். அவர்கள் பாபிலோனோடே ஆவிக்குரிய வேசித்தனம் செய்து செல்வச் செருக்காய் வாழ்ந்தார்கள். இப்போது பாபிலோன் அக்கியினால் சுட்டெரிக்கப்படுவதை அவர்கள் பார்க்கிறார்கள்.

பாபிலோன் அக்கினியில் வேகிறதினால் உண்டான புகையை பாபிலோனுடைய பாவசிநேகிதர்கள் காண்கிறார்கள். அவளுக்காக அழுது புலம்புகிறார்கள். இவர்கள் பூமியின் ராஜாக்கள். இவர்கள் பாபிலோனோடே வேசித்தனம் செய்து செல்வச் செருக்காய் வாழ்ந்தவர்கள். பாபிலோனுடைய செல்வச் செருக்கின் மிகுதியினால் பூமியின் வர்த்தகர் ஐசுவரியவான்களானார்கள். இவர்கள் பாபிலோன் அக்கினியில் வேகிறதினால் உண்டான புகையைக் கண்டு அவளுக்காக அலது புலம்புகிறார்கள். பூமியின் வர்த்தகரோடு சேர்ந்து, பூமியின் ராஜாக்களும் பாபிலோனுக்காக அழுது புலம்புகிறார்கள்.

பாபிலோனுக்கு வாதையுண்டாயிற்று. அவளுக்கு உண்டான வாதையினால் பூமியின் வர்த்தகரும், பூமியின் ராஜாக்களும் பயந்து தூரத்திலே நிற்கிறார்கள். பாபிலோன் விழும்போது, அவளுடைய சிநேகிதர்கள்கூட அருகில் வருவதற்குப் பயப்படுகிறார்கள். தூரத்திலேயே நின்று அவளுக்காக அழுது புலம்புகிறார்கள். பாபிலோனுடைய பாவத்திலும், ஆதாயத்திலும், சந்தோஷத்திலும், ஆவிக்குரிய வேசித்தனத்திலும் இவர்கள் பங்காளிகளாகயிருந்தவர்கள். ஆனால் பாபிலோனுக்கு வாதை உண்டானபோதோ, அந்த வாதையிலே இவர்கள் பங்காளிகளாகயிருக்க விரும்பவில்லை. பயந்துபோய் தூரத்திலே நிற்கிறார்கள்.

பூமியின் வர்த்தகரும், பூமியின் ராஜாக்களும் பாபிலோனோடே வேசித்தனம் செய்து செல்வச் செருக்காய் வாழ்ந்தவர்கள். அவள் அக்கினியினாலே சுட்டெரிக்கப்படுவதையும், அவள் அக்கினியிலே வேகிதறதினால் உண்டான புகையையும், அவளுக்கு உண்டான வாதையையும் கண்டு இவர்கள் பயப்படுகிறார்கள். பயத்தினால் அலறுகிறார்கள். "ஐயையோ! பாபிலோன், மகா நகரமே! பலமான பட்டணமே! ஒரே நாழிகையில் உனக்கு ஆக்கினை வந்ததே!" என்று பயந்து, அழுது புலம்புகிறார்கள். பாபிலோனுடைய பெருமையிலும் சந்தோஷத்திலும் பங்காளிகளாகயிருந்தவர்கள், அவளுக்கு வாதை வந்தபோது, அந்த வாதையில் பங்குபெறாமல் தூரத்தில் விலகி நிற்கிறார்கள்.

வர்த்தக நஷ்டம்
வெளி 18:11-19

வெளி 18:11. பூமியின் வர்த்தகர்களும் தங்கள் தங்கள் சரக்குகளாகிய பொன்னையும், வெள்ளியையும், இரத்தினங்களையும், முத்துக்களையும், சல்லாவையும், இரத்தாம்பரத்தையும், பட்டாடைகளையும், சிவப்பாடைகளையும்,

வெளி 18:12. சகலவித வாசனைக் கட்டைகளையும், தந்தத்தினால் செய்திருக்கிற சகலவித வஸ்துக்களையும், விலையுயர்ந்த மரத்தினாலும் வெண்கலத்தினாலும் இரும்பினாலும் வெள்ளைக் கல்லினாலும் செய்திருக்கிற சகலவித வஸ்துக்களையும்,

வெளி 18:13. இலவங்கப் பட்டையையும், தூபவர்க்கங்களையும், தைலங்களையும், சாம்பிராணியையும், திராட்சரசத்தையும், எண்ணெயையும், மெல்லிய மாவையும், கோதுமையையும், மாடுகளையும், ஆடுகளையும், குதிரைகளையும், இரதங்களையும், அடிமைகளையும், மனுஷருடைய ஆத்துமாக்களையும் இனிக் கொள்வாரில்லாதபடியால், அவளுக்காக அழுது புலம்புவார்கள்.

வெளி 18:14. உன் ஆத்துமா இச்சித்த பழவர்க்கங்கள் உன்னைவிட்டு நீங்கிப் போயின; கொழுமையானவைகளும் சம்பிரமமானவைகளும் உன்னைவிட்டு நீங்கிப்போயின; நீ அவைகளை இனிக் காண்பதில்லை.

வெளி 18:15. இப்படிப்பட்டவைகளைக் கொண்டு வர்த்தகம்பண்ணி, அவளால் ஐசுவரியவான்களானவர்கள் அவளுக்கு உண்டான வாதையினால் பயந்து, தூரத்திலே நின்று;

வெளி 18:16. ஐயையோ! சல்லாவும் இரத்தாம்பரமும் சிவப்பாடையும் தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டிருந்த மகா நகரமே! ஒரு நாழிகையிலே இவ்வளவு ஐசுவரியமும் அழிந்துபோயிற்றே! என்று சொல்லி, அழுது துக்கிப்பார்கள்.

வெளி 18:17. மாலுமிகள் யாவரும், கப்பல்களில் யாத்திரை பண்ணுகிறவர்கள் யாவரும், கப்பலாட்களும், சமுத்திரத்திலே தொழில்செய்கிற யாவரும் தூரத்திலே நின்று,

வெளி 18:18. அவள் வேகிறதினால் உண்டான புகையைப் பார்த்து: இந்த மகா நகரத்திற்கொப்பான நகரம் உண்டோ என்று சத்தமிட்டு,

வெளி 18:19. தங்கள் தலைகள்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டு: ஐயையோ, மகா நகரமே! சமுத்திரத்திலே கப்பல்களையுடைய அனைவரும் இவளுடைய உச்சிதமான சம்பூரணத்தினால் ஐசுவரியவான்களானார்களே! ஒரு நாழிகையிலே இவள் பாழாய்ப்போனாளே! என்று அழுது துக்கித்து ஓலமிடுவார்கள்.

பாபிலோன் அக்கினியினால் சுட்டெரிக்கப்படுவதினால் பூமியின் வர்த்தகருக்கு பெருநஷ்டமுண்டாயிற்று. வர்த்தகரிடத்திலுள்ள வியாபாரப் பொருட்களை இனி கொள்வார் யாருமில்லை. அதற்காக அவர்கள் அழுது புலம்புகிறார்கள். தங்களுடைய பாவத்தினிமித்தமாய் வர்த்தகர்கள் அழுது புலம்பவில்லை. அவர்களுக்கு வந்திருக்கிற நஷ்டத்தினிமித்தமாகவும், தண்டனையினிமித்தமாகவும் அவர்கள் அழுது புலம்புகிறார்கள்.

அந்திக்கிறிஸ்து இப்பிரபஞ்சத்திற்குரியவன். அந்திக்கிறிஸ்துவின் ஆவி உலகப்பிரகாரமான ஆவி. அவனுடைய துக்கங்களும், கவலைகளும் உலகப்பிரகாரமான துக்கங்களாகவும், இப்பிரபஞ்சத்தின் கவலைகளாகவுமே இருக்கும். பாபிலோன் மகா நகரத்தினுடைய ஐசுவரியங்களும், வியாபாரப் பொருட்களும் அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டு நஷ்டமாயிற்று. பூமியின் வர்த்தகர்கள் பாபிலோனுடைய பாவத்தினிமித்தம் அழுது புலம்பாமல், தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற வியாபார நஷ்டத்தினிமித்தமாய் அழுது புலம்புகிறார்கள்.

பாபிலோனுக்கு சாவும், துக்கமும், பஞ்சமும் ஒரே நாளில் வந்தது. பூமியின் வர்த்தகருக்கு ஒரே நாளில் நஷ்டமுண்டாயிற்று. பூமியின் வர்த்தகர்களிடத்தில் என்னென்ன சரக்குகளெல்லாம் இருந்தன என்று இங்கு வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன : 1. பொன் 2. வெள்ளி 3. இரத்தினங்கள் 4. முத்துக்கள் 5. சல்லா 6. இரத்தாம்பரம் 7. பட்டாடைகள் 8. சிவப்பாடைகள் 9. சகலவித வாசனைக் கட்டைகள் 10. தந்தத்தினால் செய்திருக்கிற சகலவித வஸ்துக்கள் 11. விலையுயர்ந்த மரத்தினாலும் வெண்கலத்தினாலும், இரும்பினாலும், வெள்ளைக்கல்லினாலும் செய்திருக்கிற சகல வித வஸ்துக்கள் 12. இலவங்கப்பட்டை 13. தூபவர்க்கங்கள் 14. தைலங்கள் 15. சாம்பிராணி 16. திராட்சரசம் 17. எண்ணெய் 18. மெல்லிய மாவு 19. கோதுமை 20. மாடுகள் 21. ஆடுகள் 22. குதிரைகள் 23. இரதங்கள் 24. அடிமைகள் 25. மனுஷருடைய ஆத்துமாக்கள்.

பூமியின் வர்த்தகர்கள் பாபிலோன் தேசத்திலே மனுஷருடைய ஆத்துமாக்களையும் வியாபாரப் பொருட்களாக்கியிருக்கிறார்கள். இவையெல்லாவற்றையும் இனி கொள்வாரில்லாதபடியால், பூமியின் வர்த்தகர்கள் பாபிலோனுக்காக அழுது புலம்புவார்கள்.

பாபிலோனுக்கு ஏற்பட்டிருக்கிற நஷ்டம் நித்திய நஷ்டம். அந்த நஷ்டத்திலிருந்து மறுபடியும் மீண்டு வருவதற்கு வாய்ப்பில்லை. பாபிலோனுடைய ஆத்துமா இச்சித்த பழவர்க்கங்கள் அவளை விட்டு நீங்கிப்போயின. கொழுமையானவைகளும், சம்பிரமமானவைகளும் பாபிலோனை விட்டு நீங்கிப்போயின. பாபிலோன் இனிமேல் அவைகளைக் காண்பதில்லை. பூரண நஷ்டமுண்டாயிற்று. பேரிழப்பு உண்டாயிற்று.

கர்த்தருடைய சபைக்கு சோதனைகள் வரலாம். உபத்திரவங்கள் வரலாம். சபை ஒருவேளை சிறிது காலம் விழுந்து விடலாம். கர்த்தருடைய சபை விழுந்தாலும் அது மறுபடியும் எழும்பும். கர்த்தர் விழுந்த சபையை தூக்கி நிறுத்துவார். விழுந்த ஆத்துமாக்களை மறுபடியும் எழும்பி நிற்கச்செய்வார். தள்ளாடுகிற முழங்கால்களை பெலப்படுத்துவார். ஆனால் பாபிலோனோ நித்தியமாய் விழுந்துவிட்டது. அவளுக்கு நித்திய இழப்பும், நித்திய அழிவும் உண்டாயிற்று. மறுபடியும் எழும்ப முடியாதபடி பாபிலோன் விழுந்து விட்டது.

பாபிலோனுக்காக துக்கிக்கிறவர்கள் அவளுடைய ஆத்துமாவுக்காக துக்கிக்கவில்லை. உலகப்பிரகாரமான நஷ்டத்திற்காக அழுது புலம்புகிறார்கள். இது பக்திவிருத்திக்கேதுவான துக்கமல்ல. இது லௌகீக கவலைகளினால் ஏற்பட்டிருக்கிற துக்கம். தேவனுக்கேற்ற துக்கம் பக்திவிருத்தியை உண்டாக்கும். லௌகீக கவலைகளோ துக்கத்தை அதிகரிக்கச் செய்யும்.

பூமியின் வர்த்தகர்கள் பாபிலோனிலே வியாபாரப் பொருட்களைக் கொண்டு வர்த்தகம்பண்ணினார்கள். அவளோடு செய்த வர்த்தகத்தினால் அவர்கள் ஐசுவரியவான்களானார்கள். இப்போதோ பாபிலோனுக்கு வாதை உண்டாயிற்று. அவளுக்கு உண்டான வாதையைப் பார்த்து, பயந்து தூரத்திலே நின்று, அழுது துக்கிக்கிறார்கள்.

பூமியின் வர்த்தகர்கள் பாபிலோனுக்கு உண்டான வாதையினால் துக்கிக்கும்போது, "ஐயையோ! சல்லாவும் இரத்தாம்பரமும் சிவப்பாடையும் தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டிருந்த மகா நகரமே! ஒரு நாழிகையிலே இவ்வளவு ஐசுவரியமும் அழிந்துபோயிற்றே!" என்று சொல்லி அழுது புலம்பி துக்கிப்பார்கள்.

பூமியின் வர்த்தகர்களைப்போலவே, மாலுமிகளும், கப்பல்களில் யாத்திரைபண்ணுகிறவர்களும், கப்பலாட்களும், சமுத்திரத்திலே தொழில் செய்கிறவர்களும் பாபிலோனுக்கு உண்டான வாதையினால் பயப்படுவார்கள். பாபிலோன் அக்கினியில் சுட்டெரிக்கப்படுகிறது. அது அக்கினியினால் வேகிறதினால் உண்டான புகையை இவர்கள் பார்ப்பார்கள். பூமியின் ராஜாக்களும், பூமியின் வர்த்தகர்களையும்போல, பாபிலோனுக்கு அருகில் வராமல், தூரத்திலேயே நிற்பார்கள்.

இந்த மகா நகரத்திற்கொப்பான நகரம் உண்டோ என்று சத்தமிட்டு, தங்கள் தலைகள்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டு: ஐயையோ, மகா நகரமே! சமுத்திரத்திலே கப்பல்களையுடைய அனைவரும் இவளுடைய உச்சிதமான சம்பூரணத்தினால் ஐசுவரியவான்களானார்களே! ஒரு நாழிகையிலே இவள் பாழாய்ப்போனாளே! என்று அழுது துக்கித்து ஓலமிடுவார்கள்.

பரலோகமே! களிகூருங்கள்
வெளி 18:20-24

வெளி 18:20. பரலோகமே! பரிசுத்தவான்களாகிய அப்போஸ்தலர்களே! தீர்க்கதரிசிகளே! அவளைக்குறித்துக் களிகூருங்கள். உங்கள் நிமித்தம் தேவன் அவளை நியாயந்தீர்த்தாரே! என்று தூதன் சொன்னான்.

வெளி 18:21. அப்பொழுது, பலமுள்ள தூதனொருவன் பெரிய ஏந்திரக்கல்லையொத்த ஒரு கல்லை எடுத்துச் சமுத்திரத்திலே எறிந்து: இப்படியே பாபிலோன் மகா நகரம் வேகமாய்த் தள்ளுண்டு, இனி ஒருபோதும் காணப்படாமற்போகும்.

வெளி 18:22. சுரமண்டலக்காரரும், கீதவாத்தியக்காரரும், நாகசுரக்காரரும், எக்காளக்காரருமானவர்களுடைய சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை; எந்தத் தொழிலாளியும் இனி உன்னிடத்தில் காணப்படுவதுமில்லை; ஏந்திரசத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை.

வெளி 18:23. விளக்குவெளிச்சம் இனி உன்னிடத்தில் பிரகாசிப்பதுமில்லை; மணவாளனும் மணவாட்டியுமானவர்களுடைய சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை. உன் வர்த்தகர் பூமியில் பெரியோர்களாயிருந்தார்களே; உன் சூனியத்தால் எல்லா ஜாதிகளும் மோசம்போனார்களே.

வெளி 18:24. தீர்க்கதரிசிகளுடைய இரத்தமும் பரிசுத்தவான்களுடைய இரத்தமும் பூமியில் கொல்லப்பட்ட அனைவருடைய இரத்தமும் அவளிடத்தில் காணப்பட்டது என்று விளம்பினான்.

பாபிலோனில் அழிவு உண்டானதினால் பூமியிலும் பரலோகத்திலும் மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. பாபிலோன் அழிந்தது கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு நற்செய்தியாயிற்று. பாபிலோன் அழிந்ததினால் பூமியின் வர்த்தகரும், பூமியின் ராஜாக்களும் அழுது துக்கிக்கிறார்கள். இந்த வேளையில் கர்த்தருடைய தூதன், "பரலோகமே! பரிசுத்தவான்களாகிய அப்போஸ்தலர்களே! தீர்க்கதரிசிகளே! அவளைக்குறித்துக் களிகூருங்கள்" என்று சொல்லுகிறான்.

பாபிலோன் அழிந்ததினால் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு சந்தோஷமுண்டாயிற்று. இந்தச் சந்தோஷத்தில் பரலோகம், பூமி, தேவதூதர்கள், பரிசுத்தவான்கள், அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் எல்லோரும் பங்குபெறவேண்டும். இவர்கள் நிமித்தமாகவே தேவன் பாபிலோனை நீதியாய் நியாயந்தீர்த்திருக்கிறார்.

பாபிலோனுடைய வேசித்தனத்திலே கர்த்தருடைய பரிசுத்தவான்கள் பங்குபெறவில்லை. அவளுடைய துன்மார்க்கமான சந்தோஷத்தில் அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் பங்குமில்லை. பாத்தியமுமில்லை. பாபிலோன் அழிந்ததினால் இவர்களுக்கு ஒரு இழப்புமில்லை. தேவன் தம்முடைய பரிசுத்தவான்கள் நிமித்தமாகவே பாபிலோனை நீதியாய் நியாயந்தீர்த்திருக்கிறார். தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பார்த்து அவருடைய பரிசுத்தவான்கள் களிகூரவேண்டும்.

பாபிலோனுக்கு ஏற்பட்டிருப்பது நித்திய அழிவு. இந்த அழிவிலிருந்து பாபிலோனால் மறுபடியும் மீண்டு வரமுடியாது. மகா பாபிலோன் வேகமாய்த் தள்ளுண்டு போயிற்று. அது இனி ஒருபோதும் காணப்படாமற்போகும். ஒரு பெரிய எந்திரக்கல்லை சமுத்திரத்திலே எறிந்தால், அந்தக்கல் சமுத்திரத்தில் முங்கிப்போகும். அந்தக்கல் மறுபடியும் தண்ணீரில் மிதந்து வெளியே வராது. பாபிலோனுக்கு இப்படிப்பட்ட நித்திய அழிவு உண்டாயிருக்கிறது. இதைத் தெளிவுபடுத்துவதற்காக, பலமுள்ள ஒரு தூதன், பெரிய எந்திரக்கல்லை ஒத்த ஒரு கல்லை எடுத்து சமுத்திரத்திலே எறிகிறான். பின்பு அவன், "இப்படியே பாபிலோன் மகா நகரம் வேகமாய்த் தள்ளுண்டு, இனி ஒருபோதும் காணப்படாமற்போகும்" என்று சொல்லுகிறான்.

பாபிலோன் அக்கினியினால் சுட்டெரிக்கப்படுகிறது. இனிமேல் அது மனுஷர் வசிப்பதற்கு உகந்த வாசஸ்தலமாயிருக்காது. அங்கு ஒரு தொழிலும் நடக்காது. மனுஷருக்கு அங்கு சந்தோஷம் இருக்காது. அங்கு விளக்கு வெளிச்சம் இனிமேல் பிரகாசிக்காது. பாபிலோனுக்கோ எல்லா முடிந்துபோயிற்று. பாபிலோனுடைய அவல நிலைமையை பலமுள்ள தூதன் இவ்வாறு விவரித்துச் சொல்லுகிறான்.

"சுரமண்டலக்காரரும், கீதவாத்தியக்காரரும், நாகசுரக்காரரும், எக்காளக்காரருமானவர்களுடைய சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை; எந்தத் தொழிலாளியும் இனி உன்னிடத்தில் காணப்படுவதுமில்லை; ஏந்திரசத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை. விளக்குவெளிச்சம் இனி உன்னிடத்தில் பிரகாசிப்பதுமில்லை; மணவாளனும் மணவாட்டியுமானவர்களுடைய சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை. உன் வர்த்தகர் பூமியில் பெரியோர்களாயிருந்தார்களே; உன் சூனியத்தால் எல்லா ஜாதிகளும் மோசம்போனார்களே" (வெளி 18:22,23). பாபிலோனில் வெளிச்சத்திற்குப் பதிலாக இனிமேல் இருள் இருக்கும். சந்தோஷத்திற்குப் பதிலாக அங்கே துக்கமிருக்கும்.

பாபிலோன் தன்னுடைய துன்மார்க்கத்திற்கு ஏற்ற பலனைப் பெற்றிருக்கிறது. பாபிலோன் நீதியாய் நியாயந்தீர்க்கப்பட்டிருக்கிறது. தீர்க்கதரிசிகளுடைய இரத்தமும், பரிசுத்தவான்களுடைய இரத்தமும், பூமியில் கொல்லப்பட்ட அனைவருடைய இரத்தமும் பாபிலோனிடத்தில் காணப்படுகிறது. துணிகரமாய்ப் பாவம் செய்தவர்கள் பேரழிவுக்கு பாத்திரவான்களாயிருப்பார்கள்.

19 அதிகாரம்

பாபிலோன் மகா நகரம் விழுந்ததற்காக பரலோகத்திலே தேவதூதர்களும், கர்த்தருடைய பரிசுத்தவான்களும் கர்த்தரைத் துதித்துப் பாடுகிறார்கள் (வெளி 19:1-4). இயேசுகிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் கலியாணம் அறிவிக்கப்படுகிறது (வெளி 19:5-10). சபையின் தலையாகிய இயேசுகிறிஸ்து வெள்ளைக் குதிரையின்மேல் ஏறிவந்து, நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார் (வெளி 19:10-21).

அல்லேலூயா
வெளி 19 : 1-4

வெளி 19:1. இவைகளுக்குப்பின்பு, பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன். அவர்கள்: அல்லேலூயா இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது; அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள்.

வெளி 19:2. தன் வேசித்தனத்தினால் பூமியைக் கெடுத்த மகா வேசிக்கு அவர் நியாயத்தீர்ப்புக்கொடுத்து, தம்முடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழிவாங்கினாரே என்றார்கள்.

வெளி 19:3. மறுபடியும் அவர்கள்: அல்லேலூயா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். அவளுடைய புகை என்றென்றைக்கும் எழும்புகிறது என்றார்கள்.

வெளி 19:4. இருபத்துநான்கு மூப்பர்களும், நான்கு ஜீவன்களும் வணக்கமாய் விழுந்து: ஆமென், அல்லேலூயா, என்று சொல்லி, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் தேவனைத் தொழுதுகொண்டார்கள்.

பாபிலோன் விழுந்தது. மறுபடியும் எழுந்திருக்க முடியாதபடி, அது கீழே விழுந்து விட்டது. அது அக்கினியினால் சுட்டெரிக்கப்படுகிறது. பாபிலோன் விழுந்தபோது பரலோகத்திலே மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம், பாபிலோன் விழுந்ததினிமித்தமாய் ஆரவாரம் செய்கிறார்கள். அவர்கள், "அல்லேலூயா இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது; அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள்" என்று சொல்லி ஆர்ப்பரிக்கிறார்கள்.

கர்த்தரைத் துதிக்கிறவர்கள். "அல்லேலூயா" என்று சொல்லி துதிக்க ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் துதித்து முடிக்கும்போதும், "அல்லேலூயா" என்று சொல்லி துதியை முடிக்கிறார்கள்.

பரிசுத்தவான்களின் ஜெபங்கள் இப்போது துதிகளாக மாறிற்று. கர்த்தருக்கு "ஓசன்னா" என்று சொன்னவர்கள், இப்போது அவருக்கு "அல்லேலூயா" என்று சொல்லி அவரைத் துதிக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தை சத்தியமானது. அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள். கர்த்தருடைய சத்தியமான வார்த்தையினிமித்தம் பரலோகத்திலே திரளான ஜனக்கூட்டம் அவரைத் துதித்துப் பாடுகிறார்கள்.

மகாவேசியாகிய பாபிலோன் தன் வேசித்தனத்தினால் பூமியை கெடுத்தாள். கர்த்தர் பாபிலோனுக்கு நியாயத்தீர்ப்பு கொடுத்தார். தம்முடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக பாபிலோனிடத்தில் பழிவாங்கினார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியும் சத்தியமுமானது. அவருடைய நீதியான தீர்ப்பின் பிரகாரம் பாபிலோன் அக்கினியினால் அழிக்கப்பட்டிருக்கிறது. பழிவாங்குதல் கர்த்தருக்குரியது. பாபிலோன் கர்த்தருடைய ஊழியக்காரரின் இரத்தத்தைச் சிந்திற்று. கர்த்தரோ தம்முடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக பாபிலோனிடத்தில் பழிவாங்கினார்.

பரலோகத்தில் கர்த்தருடைய பரிசுத்தவான்கள் திரள்கூட்டமாயிருக்கிறார்கள். அவர்கள் "அல்லேலூயா" என்று சொல்லி கர்த்தரை ஆரவாரத்தோடு துதிக்கிறார்கள். இப்போது அவர்கள் மறுபடியும், "அல்லேலூயா" என்று சொல்லி ஆர்ப்பரிக்கிறார்கள். கர்த்தர் பாபிலோனை அக்கினியினால் சுட்டெரிக்கிறார். பாபிலோன் அக்கினியிலே வேகும்போது, அதன் புகை எழும்புகிறது. அந்தப் புகை என்றென்றைக்கும் எழும்புகிற புகையாகயிருக்கும். அந்தப் புகை பாபிலோன் அக்கினியிலே வேகிறதினால் உண்டாயிற்று. அது பாபிலோன் அழிந்துபோனதினால் உண்டாகிற புகை.

கர்த்தர் நமக்கு ஏற்கெனவே செய்திருக்கிற நன்மைகளுக்காக அவரை நாம் நன்றியோடு துதிக்கவேண்டும். அவர் நமக்கு இன்னும் அநேக நன்மைகளைச் செய்யப்போகிறார். அவர் இனிமேல் செய்யப்போகிற நன்மைகளுக்காகவும் நாம் அவரைத் துதிக்கவேண்டும். கர்த்தரைத் துதிக்கும்போது, அவருடைய கிருபை நமக்குக் கிடைக்கும். நம்முடைய சத்துருக்களை கர்த்தர் பழிவாங்குவார். நம்முடைய பொதுவான விரோதிக்கு எதிராக கர்த்தருடைய கோபாக்கினை எழும்பும்.

பரலோகத்திலுள்ள பரிசுத்தவான்கள் கர்த்தரைத் துதிக்கும்போது, அவர்களோடு சேர்ந்து இருபத்து நான்கு மூப்பர்களும் நான்கு ஜீவன்களும் கர்த்தரைத் துதிக்கிறார்கள். இவர்கள் கர்த்தருடைய சிங்காசனத்திற்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் தேவனைத் தொழுதுகொள்கிறார்கள். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் கர்த்தரைத் துதித்ததுபோலவே, இவர்களும், "ஆமென், அல்லேலூயா" என்று சொல்லி தேவனைத் தொழுதுகொள்கிறார்கள். பரிசுத்தவான்களின் துதி ஜெயகீதமாகயிருக்கிறது. பரலோகத்திலே மகா ஆர்ப்பரிப்பு உண்டாயிற்று. அங்கு திரளான பரிசுத்தவான்கள் இடுகிற ஆரவாரத்தின் சத்தம் கேட்கப்படுகிறது.

ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம்
வெளி 19 : 5-9

வெளி 19:5. மேலும், நமது தேவனுடைய ஊழியக்காரரே, அவருக்குப் பயப்படுகிற சிறியோரும் பெரியோருமானவர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள் என்று ஒரு சத்தம் சிங்காசனத்திலிருந்து பிறந்தது.

வெளி 19:6. அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம்போலவும், பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும், ஒரு சத்தமுண்டாகி: அல்லேலூயா, சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார்.

வெளி 19:7. நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக்கேட்டேன்.

வெளி 19:8. சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே.

வெளி 19:9. பின்னும், அவன் என்னை நோக்கி: ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான். மேலும், இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள் என்று என்னுடனே சொன்னான்.

கர்த்தரை துதித்துப் பாடுகிற துதியின் கீதத்திற்குப் பின்பு, கலியாண கீதம் ஆரம்பமாயிற்று. சிங்காசனத்திலிருந்து ஒரு சத்தம் பிறக்கிறது. அந்தச் சத்தம், "நமது தேவனுடைய ஊழியக்காரரே, அவருக்குப் பயப்படுகிற சிறியோரும் பெரியோருமானவர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள்" என்று சொல்லிற்று. சிங்கானத்திலிருந்து பிறந்த சத்தத்தைக் கேட்டவுடன், தேவனுடைய ஊழியக்காரரும், அவருக்குப் பயப்படுகிற சிறியோரும் பெரியோரும் கர்த்தரைத் துதிக்கிறார்கள்.

கர்த்தரைத் துதிக்கிறவர்களின் எண்ணிக்கை அநேகமாயிருக்கிறது. அவர்கள் திரளான ஜனங்கள். அவர்களுடைய துதியின் சத்தம் மிகப்பெரிய ஆரவாரமாயிருக்கிறது. அந்தச் சத்தத்தை விவரிப்பதற்கு ஒரு சில காரியங்கள் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன : 1. அந்தச் சத்தம் திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம்போல இருக்கிறது. 2. துதியின் சத்தம் பெருவெள்ள இரைச்சல் போலயிருக்கிறது. 3. துதியின் கீதம் பலத்த இடிமுழக்கம் போலயிருக்கிறது.

தேவனுடைய ஊழியக்காரரும், அவருக்குப் பயப்படுகிற சிறியோரும் பெரியோரும் கர்த்தரைத் துதிக்கிறார்கள். அப்போது அவர்கள், "அல்லேலூயா, சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார். நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம்" (வெளி 19:6,7) என்று மகா சத்தமாய் கர்த்தரை ஆர்ப்பரிக்கிறார்கள்.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் தேவனைத் துதிக்கும்போது ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணத்தைப் பற்றியும் சொல்லுகிறார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சபையின் மணவாளனாகயிருக்கிறார். கர்த்தருடைய பரிசுத்தமான சபை அவருடைய மணவாட்டியாகயிருக்கிறது. பரிசுத்த வான்கள் இந்த பரிசுத்தமான கலியாணத்தைப்பற்றிச் சொல்லும்போது, "ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள்" (வெளி 19:7) என்று சொல்லி ஆர்ப்பரிக்கிறார்கள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை தன்னை ஆயத்தம்பண்ணுகிறாள். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணத்திற்காக மணவாட்டி தன்னை ஆயத்தம் செய்கிறாள். மணவாட்டிக்கு சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் கொடுக்கப்படுகிறது. இது மணவாட்டியின் வஸ்திரம். இந்த வஸ்திரத்தை மணவாட்டி தன்னுடைய கலியாணத்தில் தரித்துக்கொள்ளவேண்டும். இந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தமானவருடைய நீதியாகும்.

வேசிகள் அளவுக்கு அதிகமாக தங்களை அலங்காரம் செய்வார்கள். ஆனால் கர்த்தருடைய மணவாட்டியோ சுத்தமும், பிரகாசமுமான மெல்லிய வஸ்திரத்தைத் தரித்துக்கொள்கிறாள். மிகவும் கண்ணியமான வஸ்திரம் மணவாட்டிக்கு அளிக்கப்படுகிறது. மெல்லிய வஸ்திரம் கிறிஸ்துவின் நீதியைக் குறிக்கிற வார்த்தை. மணவாட்டி கிறிஸ்துவின் நீதியை தன்மீது அலங்காரமாகத் தரித்துக்கொள்கிறாள்.

மணவாட்டி தன்னுடைய வஸ்திரத்தை கிரயம் செலுத்தி வாங்கவில்லை. இதற்கு செலுத்தக்கூடிய கிரயமும் மணவாட்டியிடம் இல்லை. மணவாளனாகிய இயேசுகிறிஸ்துவே, தம்முடைய மணவாட்டிக்கு சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரத்தை இலவச அன்பளிப்பாகக் கொடுக்கிறார். கர்த்தர் இலவசமாய்க் கொடுக்கிற இந்த மெல்லிய வஸ்திரத்தை மணவாட்டி தரித்துக்கொள்ளவேண்டும் (வெளி 19:8).

ஆட்டுக் குட்டியானவருடைய கலியாண விருந்து ஆரம்பமாகிறது. இந்த விருந்திற்கு அழைக்கப்பட்டவர்களெல்லோரும் பாக்கியவான்கள். கலியாண விருந்தில் பூரண சந்தோஷமும், பூரண திருப்தியும் நிரம்பியிருக்கும். கலியாண விருந்தில் ஒரு குறையும் இராது. சுவிசேஷத்தின் வாக்குத்தத்தங்களெல்லாம் ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தில் பரிபூரணமாய் பரிமாறப்படும். ஆகையினால் ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்திற்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்களாயிருக்கிறார்கள். இந்தச் சத்தியத்தை எழுதுமாறு தேவதூதன் யோவானிடம் சொல்லுகிறான்.

கலியாண விருந்தில் சுவிசேஷத்தின் வாக்குத்தத்தங்களெல்லாம் பரிமாறப்படுகிறது. சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிற வாக்குத்தத்தங்கள் தேவனுடைய சத்தியமான வசனங்கள். கர்த்தருடைய வார்த்தைகள் நிச்சயமாகவே நிறைவேறும். அவருடைய வாக்குத்தத்தங்களெல்லாம் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு பரிபூரணமாய் சித்திக்கும் (வெளி 19:9).

தேவனைத் தொழுதுகொள் வெளி 19:10

வெளி 19:10. அப்பொழுது அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தேன். அவன் என்னை நோக்கி: இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் இயேசுவைக்குறித்துச் சாட்சியிட்ட உன் சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள். இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது என்றான்.

அப்போஸ்தலர் யோவான் ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணத்தைத் தரிசிக்கிறார். அவருடைய கலியாண விருந்தை தரிக்கிறார். விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களைத் தரிசிக்கிறார். அழைக்கப்பட்டவர்களுக்கு பரிமாறப்படுகிற பரிபூரணமான ஆசீர்வாதங்களையும் தரிசிக்கிறார். இவையெல்லாவற்றையும் தரிசிக்கும்போது யோவானுடைய இருதயத்தில் மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. யோவான் தன்னை மறந்து, தேவதூதனுடைய பாதத்தில் விழுகிறார்.

ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்தின் மகிமையையும், நேர்த்தியையும், பரிபூரணத்தையும் பார்த்து யோவான் சந்தோஷப்படுகிறார். இவையெல்லாவற்றையும் தனக்குக் காண்பித்த தேவதூதனை வணங்கும்படி, யோவான் அவனுடைய பாதத்தில் விழுகிறார். யோவான் தன்னை வணங்குவதை தேவதூதன் அங்கீகரிக்கவில்லை. தூதன் யோவானிடம் "இப்படி செய்யாதபடிக்குப் பார்" என்று சொல்லுகிறான்.

தன்னுடைய உண்மையான ஸ்தானத்தை தேவதூதன் யோவானுக்கு எடுத்துச் சொல்லுகிறான். தானும் தேவனுடைய ஊழியக்காரன்தான் என்றும், தான் தேவனில்லை என்றும் தேவதூதன் யோவானுக்குத் தெளிவுபடுத்துகிறான். யோவானைப்போல, இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சிசொன்ன மற்ற அப்போஸ்தலரைப்போல, தானும் ஒரு ஊழியக்காரன்தான் என்பதையும் தேவதூதன் யோவானுக்குத் தெளிவுபடுத்துகிறான். இதைத் தொடர்ந்து தேவதூதன் யோவானிடம், "தேவனைத் தொழுதுகொள்" என்றும் சொல்லுகிறான்.

யோவான் கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலர்களில் ஒருவர். அவரிடத்தில் தீர்க்கதரிசனத்தின் ஆவியிருக்கிறது. இயேசுகிறிஸ்துவைக் குறித்து இவர் சாட்சியாக அறிவிக்கிறார். இவரைப்போலவே மற்ற அப்போஸ்தலர்களும் இயேசுகிறிஸ்துவைப்பற்றி சாட்சியாய் அறிவிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சி சாதாரண வார்த்தைகளல்ல. அது தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவைப் பற்றி சாட்சிசொல்லுகிறவர்கள் எல்லோரும் கர்த்தருடைய ஊழியக்காரர்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவுக்குள் சகோதரர்களாகயிருக்கிறார்கள். கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் ஒருவரையொருவர் தொழுதுகொள்ளக்கூடாது. தேவனை மாத்திரமே தொழுதுகொள்ளவேண்டும். தேவன் மாத்திரமே நம்முடைய துதிகளுக்கும், ஸ்தோத்திரங்களுக்கும், ஆராதனைகளுக்கும் பாத்திரராயிருக்கிறார்.

தேவனுடைய வார்த்தை வெளி 19 : 11-13

வெளி 19:11. பின்பு, பரலோகம் திறந்திருக்கக்கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார்.

வெளி 19:12. அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப்போலிருந்தன, அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன; அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது.

வெளி 19:13. இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே.

ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணத்தைத் தரிசித்தபின்பு யோவான் பரலோகம் திறந்திருக்கிறதைக் காண்கிறார். கிறிஸ்துவானவரே சபைக்கு தலையாகயிருக்கிறவர். கர்த்தர் உண்மையும் சத்தியமுமுள்ளவர். அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறவர்.

திறந்திருக்கிற பரலோகத்திலே, யோவான் ஒரு வெள்ளைக் குதிரையையும் காண்கிறார். அந்தக் குதிரையின்மேல் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஏறி அமர்ந்திருக்கிறார். பரலோகமே கிறிஸ்துவின் வாசஸ்தலம். கர்த்தரானவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிற தேவன். அவர் வெள்ளைக் குதிரையின்மேல் ஏறியிருந்து யுத்தம்பண்ணுகிறவர். அவர் உண்மையும் சத்தியமுமுள்ளவர். தேவனுடைய கிரியைகளெல்லாவற்றிலும் அவருடைய உண்மையும் சத்தியமும் வெளிப்படுகிறது.

தம்முடைய சத்துருக்கள் எல்லோருடைய பலத்தையும், பலவீனத்தையும் கர்த்தருடைய கண்கள் ஊடுருவிப் பார்க்கக்கூடியது. கர்த்தருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப் போலிருக்கிறது. அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருக்கிறது. கர்த்தர் சர்வ அதிகாரமும் சர்வ ஆளுகையுமுள்ளவர். அவருடைய ஆளுகைக்கு முடிவில்லை. அவர் நித்திய ஆளுகையுள்ளவர். ஆகையினால் அவருக்கு அநேக கிரீடங்கள் இருக்கிறது.

இயேசுகிறிஸ்து இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவினுடைய நாமம், "தேவனுடைய வார்த்தை" என்பதாகும். இந்த நாமம் அவருக்கேயன்றி வேறொருவருக்கும் தெரியாது. இந்த நாமத்தின் அர்த்தம் கர்த்தருக்கு மாத்திரமே பூரணமாய்த் தெரியும். இயேசுகிறிஸ்துவினுடைய பரிபூரணமான சுபாவங்களை எந்த சிருஷ்டியினாலும் முழுவதுமாய்த் தெரிந்துகொள்ள முடியாது. கர்த்தர் தாமே தம்மைப்பற்றி நமக்கு வெளிப்படுத்தவேண்டும். தேவனுடைய வெளிப்பாடு இல்லாமல் அவரைப்பற்றி அறிந்துகொள்வதற்கு நமக்கு வேறு ஒரு வழியுமில்லை.

பரலோகத்திலுள்ள சேனைகள் வெளி 19 : 14-16

வெளி 19:14. பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந் தரித்தவர்களாய், வெள்ளை குதிரைகளின்மேல் ஏறி, அவருக்குப் பின் சென்றார்கள்.

வெளி 19:15. புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது; இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார்; அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்.

வெளி 19:16. ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின்மேலும் அவருடைய தொடையின் மேலும் எழுதப்பட்டிருந்தது.

கர்த்தருடைய சேனைகளைப்பற்றிய விவரம் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரம் தரித்திருக்கிறார்கள். சேனைகளின் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருக்கிறார். கிறிஸ்துவானவர் வெள்ளைக் குதிரையிலே ஏறியிருக்கிறார். பரலோகத்திலுள்ள சேனைகளும் வெள்ளைக்குதிரைகளின் மேல் ஏறியிருக்கிறார்கள். இவர்களெல்லோரும் இயேசுகிறிஸ்துவுக்குப் பின்செல்கிறார்கள்.

இயேசுகிறிஸ்துவினுடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது. இந்தப் பட்டயம் புறஜாதிகளை வெட்டுகிறது. கர்த்தராகிய கிறிஸ்துவானவர் இருப்புக்கோலால் அவர்களை அரசாளுகிறார். சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிர கோபமாகிய மதுவுள்ள ஆலையை, கிறிஸ்துவானவர் மிதிக்கிறார்.

இயேசுகிறிஸ்துவினுடைய வஸ்திரத்தின்மேலும், அவருடைய தொடையின்மேலும், அவருடைய நாமம் எழுதப்பட்டிருக்கிறது. "ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா" என்பதே அவருடைய நாமம். இயேசுகிறிஸ்துவினுடைய நாமம், "தேவனுடைய வார்த்தை" என்று ஏற்கெனவே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது (வெளி 19:13). இப்போது கிறிஸ்துவானவருடைய புதிய நாமமாகிய, "ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா" என்னும் நாமமும் வெளிப்படுத்தப்படுகிறது (வெளி 19:16).

சூரியனில் நிற்கிற தூதன் வெளி 19 : 17,18

வெளி 19:17. பின்பு ஒரு தூதன் சூரியனில் நிற்கக்கண்டேன்; அவன் வானத்தின் மத்தியில் பறக்கிற சகல பறவைகளையும் பார்த்து:

வெளி 19:18. நீங்கள் ராஜாக்களின் மாம்சத்தையும், சேனைத்தலைவர்களின் மாம்சத்தையும், பலவான்களின் மாம்சத்தையும், குதிரைகளின் மாம்சத்தையும், அவைகளின்மேல் ஏறியிருக்கிறவர்களின் மாம்சத்தையும், சுயாதீனர் அடிமைகள், சிறியோர், பெரியோர், இவர்களெல்லாருடைய மாம்சத்தையும் பட்சிக்கும்படிக்கு, மகா தேவன் கொடுக்கும் விருந்துக்குக் கூடி வாருங்கள் என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான்.

ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவாகவுமாயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெள்ளைக் குதிரையின்மேல் ஏறி யுத்தம்பண்ண புறப்பட்டுப்போகிறார். பரலோகத்திலுள்ள சேனைகளும் வெள்ளைக் குதிரைகளின்மேல் ஏறி அவருக்குப் பின்செல்கிறார்கள். யுத்தத்தில் இரத்தசேதாரமுண்டாகும். சத்துருக்கள் செத்துப்போவார்கள். அவர்களுடைய மாம்சங்கள் பூமியிலே சிதறிக்கிடக்கும். இதை அறிவிப்பதற்காக ஒரு தூதன் சூரியனில் நிற்கிறான். அவன் வானத்தின் மத்தியிலே பறக்கிற சகல பறவைகளையும் பார்த்து மிகுந்த சத்தத்தோடே கூப்பிடுகிறான். பூமியில் சிதறிக்கிடக்கிற சத்துருக்களுடைய மாம்சத்தைப் புசிப்பதற்கு கூடிவருமாறு, சகல பறவைகளையும் அழைக்கிறான்.

ராஜாக்களும் சேனைத்தலைவர்களும் பலவான்களும் யுத்தகளத்திலே செத்து விழுவார்கள். அவர்களுடைய மாம்சங்கள் பூமியிலே சிதறிக்கிடக்கும். குதிரைகளும், அவைகள் மேல் ஏறியிருக்கிறவர்களும் செத்துப்போவார்கள். அவர்களுடைய மாம்சங்களும் யுத்தம் நடைபெறுகிற பூமியிலே சிதறிக்கிடக்கும். சுயாதீனர், அடிமைகள், சிறியோர், பெரியோர் ஆகியோர் எல்லோரும் செத்துப்போவார்கள். இவர்களுடைய மாம்சங்களும் கீழே விழுந்து கிடக்கும்.

இவர்களெல்லோரும் ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாகிய இயேசுகிறிஸ்துவுக்கும் அவருடைய பரலோகத்திலுள்ள சேனைகளுக்கும் விரோதமாய் யுத்தம்பண்ணியவர்கள். கர்த்தருக்கு விரோதமாக யுத்தம் பண்ணுகிறவர்கள் சங்காரமாவார்கள். அவர்கள் செத்து மடிந்துபோவார்கள். அவர்களுடைய மாம்சங்களெல்லாம் தரையிலே விழுந்து கிடக்கும்.

கர்த்தர் தம்முடைய சத்துருக்களின் மாம்சத்தை வானத்தின் மத்தியிலே பறக்கிற சகல பறவைகளுக்கும் விருந்தாகக் கொடுக்கிறார். இந்த விருந்து மகாதேவன் கொடுக்கும் விருந்து. சத்துருக்களின் மாம்சம் இந்த விருந்தில் பரிமாறப்படுகிறது. வானத்தின் மத்தியிலே பறக்கிற சகல பறவைகளும் கூடிவந்து, மகா தேவன் கொடுக்கிற விருந்தைப் புசிக்கலாம். சூரியனில் நிற்கிற தூதன், பறவைகளை மிகுந்த சத்தத்தோடே விருந்து புசிக்க வருமாறு கூப்பிடுகிறான்.

மிருகம் பிடிக்கப்பட்டது
வெளி 19 : 19-21

வெளி 19:19. பின்பு, மிருகமும் பூமியின் ராஜாக்களும் அவர்களுடைய சேனைகளும், குதிரையின்மேல் ஏறியிருக்கிறவரோடும் அவருடைய சேனையோடும் யுத்தம் பண்ணும்படிக்குக் கூடிவரக்கண்டேன்.

வெளி 19:20. அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது; மிருகத்தின்முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம் போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான்; இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டாகள்.

வெளி 19:21. மற்றவர்கள் குதிரையின்மேல் ஏறினவருடைய வாயிலிருந்து புறப்படுகிற பட்டயத்தால் கொல்லப்பட்டார்கள்; அவர்களுடைய மாம்சத்தினால் பறவைகள் யாவும் திருப்தியடைந்தன.

யுத்தத்திற்கு எல்லோரும் கூடிவருகிறார்கள். இந்த யுத்தம் அர்மகெதோன் என்னுமிடத்தில் நடைபெறுவதாக வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இது மெகித்தோ மலையாகயிருக்கலாம் என்றும் சிலர் அர்த்தம் சொல்லுகிறார்கள். யுத்தம் நடைபெறுகிற இந்த இடத்திற்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெள்ளைக் குதிரையின்மேல் ஏறி வருகிறார். பரலோகத்திலுள்ள சேனைகளும் வெள்ளைக் குதிரைகளின்மேல் ஏறி கர்த்தருக்கு பின்வருகிறார்கள்.

யுத்தம் நடைபெறுகிற அந்த இடத்திற்கு மிருகமும், பூமியின் ராஜாக்களும், அவர்களுடைய சேனைகளும் கூடிவருகிறார்கள். இவர்களெல்லோரும் குதிரையின்மேல் ஏறியிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடும், கர்த்தருடைய சேனையோடும் யுத்தம்பண்ணும்படிக்கு கூடிவருகிறார்கள்.

இந்த யுத்தத்தில் மிருகம் பிடிக்கப்படுகிறது. சத்துரு தோற்றுப் போகிறான். கர்த்தருக்கு விரோதமாக பூமியின் அந்தகார வல்லமைகளும், பாதாளத்தின் வல்லமைகளும் ஒன்று சேர்ந்து வருகிறார்கள். ஆனால் இவர்கள் கர்த்தருக்கு முன்பாகத் தோற்றுப்போகிறார்கள். மிருகம் பிடிக்கப்படுகிறது.

மிருகத்தோடு சேர்ந்து கள்ளத்தீர்க்கதரிசியும் பிடிக்கப்படுகிறான். இவன் மிருகத்திற்கு முன்பாக அற்புதங்களைச் செய்து ஜனங்களை வஞ்சித்து மோசம்போக்கினவன். இவன் செய்த அற்புதங்களினால் ஜனங்கள் மிருகத்தின் முத்திரையைத் தரித்துக்கொண்டார்கள். சொரூபத்தை வணங்கினார்கள். கள்ளத்தீர்க்கதரிசி ஏராளமான ஜனங்களை வஞ்சித்து அவர்களை மோசம்போக்கினான். இப்போது யுத்தத்திலே, மிருகம் பிடிக்கப்பட்டதோடு, ஜனங்களை மோசம்போக்கின கள்ளத்தீர்க்கதரிசியும் பிடிக்கப்படுகிறான். கள்ளத்தீர்க்கதரிசி என்பவன் வேறொரு மிருகம் (வெளி 13:11-17). கர்த்தர் மிருகத்தையும் கள்ளத்தீர்க்கதரிசியையும் பிடித்து, இருவரையும் கந்தகம் எரிகிற அக்கினிக் கடலிலே உயிரோடு தள்ளிவிடுகிறார் (வெளி 19:20).

கர்த்தரோடும் அவருடைய சேனையோடும் யுத்தம்பண்ணும்படிக்கு மிருகத்தோடும், கள்ளத்தீர்க்கதரிசியோடும் சேர்ந்து பூமியின் ராஜாக்களும் அவர்களுடைய சேனைகளும் கூடிவந்தார்கள். கர்த்தர் அவர்களையும் கொன்றுபோடுகிறார். கர்த்தருடைய வாயிலிருந்து புறஜாதிகளை வெட்டும்படிக்கு கூர்மையான பட்டயம் புறப்படுகிறது (வெளி 19:15).

கர்த்தர் வெள்ளைக்குதிரையின்மேல் ஏறியிருக்கிறார். அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது. அந்தப் பட்டயத்தினால் கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணின பூமியின் ராஜாக்களும் அவர்களுடைய சேனைகளும் கொல்லப்படுகிறார்கள்.

செத்துப்போனவர்களுடைய மாம்சத்தினால் பறவைகள் யாவும் திருப்தியடைகின்றன. கர்த்தருடைய சத்துருக்களுக்கு யுத்தக்களத்தில் நீதியாய் தண்டனை கொடுக்கப்படுகிறது. மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடு தள்ளப்படுகிறார்கள்.

20 அதிகாரம்

சாத்தான் ஆயிரம் வருஷமளவும் கட்டப்பட்டு பாதாளத்திலே தள்ளப்படுகிறான் (வெளி 20:1-3). கர்த்தருடைய பரிசுத்தவான்கள் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாளுகிறார்கள் (வெளி 20:4-6). ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகிறான். சாத்தானால் சபையில் பிரச்சனை உண்டாயிற்று. கோகையும் மாகோகையும் சாத்தான் தன்னோடே யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்கிறான் (வெளி 20:7-10). கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு (வெளி 20:11-15).

சாத்தான் கட்டப்படுகிறான் வெளி 20 : 1-3

வெளி 20:1. ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரியசங்கிலியையும் தன்கையிலே பிடித்துக் கொண்டு வானத்திலிருந்திறங்கி வரக்கண்டேன்.

வெளி 20:2. பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காத படிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான்.

வெளி 20:3. அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாக வேண்டும்.

வானத்திலிருந்து ஒரு தூதன் இறங்கி வருகிறான். அவன் தன்னுடைய கையிலே பாதாளத்தின் திறவுகோலையும், பெரிய சங்கிலியையும் பிடித்துக் கொண்டிருக்கிறான். வலுசர்ப்பத்தைப் பிடித்து கட்டி வைக்கிற அதிகாரம் இந்தத் தூதனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வலுசர்ப்பம் பழைய பாம்பு. இவன் பிசாசு என்றும், சாத்தான் என்றும் சொல்லப்படுகிறான். கிறிஸ்துவானவர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக ஒவ்வொரு கிரியையையும் நடப்பிக்கிறார். அவர் சர்வஅதிகாரமுள்ளவர். அவருடைய அதிகாரம் ஒருபோதும் குறைந்துபோவதில்லை. சாத்தானுடைய அதிகாரத்தை முறியடிப்பதற்கு இயேசுகிறிஸ்துவிடம் போதுமான வல்லமையுள்ளது. தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு கிறிஸ்துவானவரிடம் போதுமான எண்ணிக்கையில் தூதர்களும் இருக்கிறார்கள்.

வானத்திலிருந்து இறங்கி வந்த தூதன் வலுசர்ப்பத்தைப் பிடிக்கிறான். அதை ஆயிரம் வருஷமளவும் கட்டி வைக்கிறான். தூதனுடைய கட்டிலிருந்து வலுசர்ப்பத்தினால் தப்பிக்க முடியவில்லை. அது ஒரு பழைய பாம்பு. அந்தப் பாம்பின் வல்லமை வலுசர்ப்பத்தை விடுவிப்பதற்குப் போதுமானதாயில்லை.

தூதன் வலுசர்ப்பத்தைப் பிடித்து, பாதாளத்திலே தள்ளி அடைத்துப்போடுகிறான். ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும் வலுசர்ப்பத்தினால் ஜனங்களை மோசம் போக்க முடியவில்லை. தூதன் வலுசர்ப்பத்தை பாதாளத்தில் தள்ளி, பாதாளத்தின் கதவை அடைத்து, அந்தப் பாதாளத்தின்மேல் முத்திரை போடுகிறான். வலுசர்ப்பம் ஆயிரம் வருஷமளவும் பாதாளத்திலே கட்டப்பட்டிருக்கிறது. இந்த ஆயிரம் வருஷ காலம் வரையிலும் சாத்தான் கட்டப்பட்டவனாகவே இருப்பான்.

பாதாளத்திலிருந்து சாத்தானால் தப்பிக்கவும் முடியாது. வானத்திலிருந்து இறங்கி வந்த தூதன் பெரிய சங்கிலியினால் வலுசர்ப்பத்தைப் பிடித்து கட்டி வைத்திருக்கிறான். தன்னிடத்திலுள்ள திறவுகோலினால் பாதாளத்தைத் திறந்து, வலுசர்ப்பத்தை அதில் தள்ளி, பாதாளத்தின் கதவை அடைத்துப்போடுகிறான். அந்தக் கதவின்மேல் முத்திரையையும் போடுகிறான்.

வலுசர்ப்பம் பாதாளத்திலே நித்தியகாலமாய் அடைக்கப்பட்டிருக்காது. நித்திய காலமாய் அது சங்கிலிகளினால் கட்டப்பட்டும் இருக்காது. ஆயிரம்வருஷம் நிறைவேறும் வரைக்கும் வலுசர்ப்பம் பாதாளத்திலே கட்டப்பட்டிருக்கும். அதன்பின்பு வலுசர்ப்பம் விடுதலையாகும். வலுசர்ப்பத்திற்கு நித்திய விடுதலையும் இல்லை. அது கொஞ்சக்காலம் மாத்திரமே விடுதலையாகும்.

கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள் வெளி 20 : 4-6

வெளி 20:4. அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்.

வெளி 20:5. மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல்.

வெளி 20:6. முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்.

சாத்தானென்று சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பம் பாதாளத்திலே ஆயிரம் வருஷம் அடைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆயிர வருஷகாலத்தில் கர்த்தருடைய பரிசுத்தவான்கள் கிறிஸ்துவுடனேகூட அரசாளுகிறார்கள். இவர்கள் சிங்காசனங்களின் மேல் உட்கார்ந்திருக்கிறார்கள். இவர்களுக்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கும்படி அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாளுகிறவர்கள் கர்த்தருடைய பரிசுத்தவான்கள். இவர்கள் இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும், தேவனுடைய வசனத்தினிமித்தமும், சிரச்சேதம்பண்ணப்பட்டவர்கள். இவர்கள் கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரித்தவர்கள். இவர்கள் மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காதவர்கள். இவர்கள் தங்கள் நெற்றியிலும், தங்கள் கையிலும் மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளாதவர்கள். கிறிஸ்துவுக்குள் மரித்துப்போன இவர்கள் உயிர்த்து, கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாளுகிறார்கள்.

கிறிஸ்துவோடுகூட பாடுகளை அனுபவிக்கிறவர்கள் அவரோடுகூட ஆளுகையும் செய்கிறார்கள். இவர்கள் மரித்தார்கள். ஆனாலும் உயிர்த்தெழுந்திருக்கிறார்கள். இவர்களுடைய உயிர்த்தெழுதல் முதலாம் உயிர்த்தெழுதல் என்று அழைக்கப்படுகிறது (வெளி 20:5).

கர்த்தருடைய பரிசுத்தவான்களைத் தவிர, உலகப்பிரகாரமான ஜனங்கள் ஏராளமானோரும் மரணமடைந்திருக்கிறார்கள். மரணமடைந்த அவர்கள், அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை.

கிறிஸ்துவுக்காக பாடுகளை அநுபவித்தவர்களும், கிறிஸ்துவுக்காக உண்மையாய் ஊழியம் செய்தவர்களும் மாத்திரமே முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறுகிறார்கள். இவர்களுக்கு மாத்திரமே இந்த மேன்மையான சிலாக்கியம் கிடைத்திருக்கிறது.

முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்கள் பாக்கியவான்களாகவும், பரிசுத்தவான்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள். பரிசுத்தவான்களெல்லோருமே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் தான். இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை. ஆவிக்குரிய உயிர்த்தெழுதலைப் பெற்றிருக்கிறவர்கள் இரண்டாம் மரணத்தின் வல்லமையிலிருந்து இரட்சிக்கப் படுகிறார்கள்.

முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெற்ற கர்த்தருடைய பரிசுத்தவான்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்கிறார்கள். கர்த்தரை துதித்து, போற்றி, புகழுகிறார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திர பலிகளை ஏறெடுக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாளுகிறார்கள்.

ஆயிரம் வருஷம் முடியும்போது வெளி 20 : 7-10

வெளி 20:7. அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி,

வெளி 20:8. பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம்போக்கும்படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளும் படிக்கும் புறப்படுவான்; அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும்.

வெளி 20:9. அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொண்டார்கள்; அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது.

வெளி 20:10. மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்.

பழைய பாம்பாகிய வலுசர்ப்பம் பாதாளத்திலே தள்ளி அடைக்கப் பட்டிருக்கிறான். சங்கிலிகளினால் கட்டப்பட்டிருக்கிறான். அவன் பாதாளத்திலே ஆயிரம் வருஷம் அடைக்கப்பட்டவனாகயிருப்பான். அந்த ஆயிரவருஷக்காலத்திலே, கர்த்தருடைய பரிசுத்தவான்கள் கிறிஸ்துவுடனேகூட அரசாளுகிறார்கள். அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகிறான். சாத்தானுடைய அதிகாரம் இன்னும் முற்றிலுமாக அழிக்கப்படவில்லை.

சாத்தான் விடுதலையானவுடன் தன்னுடைய சுபாவத்தின் பிரகாரம் ஜனங்களை மோசம்போக்குகிறான். பூமியின் நான்கு திசைகளிலும் கோகு, மாகோகு ஆகிய ஜாதிகள் இருக்கிறார்கள். சாத்தான் அவர்களை மோசம் போக்கிறான். தேவனுக்கு விரோதமாகவும், அவருடைய பரிசுத்தவான்களுக்கு விரோதமாகவும் சாத்தான் யுத்தம்பண்ணுகிறான். இந்த யுத்தத்தில் கோகையும் மாகோகையும் மோசம்போக்கி, அவர்களை தன்னோடே சேர்த்துக்கொள்கிறான். சாத்தான் அவர்களையும் கூட்டிக்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படுகிறான். இது சாத்தானுக்கு கடைசி யுத்தம். ஆகையினால் மிகவும் மூர்க்கமாக யுத்தம்பண்ணுகிறான். சாத்தானோடு சேர்ந்து கொண்ட ஜாதிகளுடைய எண்ணிக்கையின் தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கிறது.

கோகு, மாகோகு ஆகியோரைப்பற்றி எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. "கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: மனுபுத்திரனே, மேசேக் தூபால் ஜாதிகளின் தலைமையான அதிபதியாகிய மாகோகு தேசத்தானான கோகுக்கு எதிராக நீ உன் முகத்தைத் திருப்பி, அவனுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்து, சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், மேசேக் தூபால் ஜாதிகளின் அதிபதியாகிய கோகே, இதோ, நான் உனக்கு விரோதமாக வருவேன். நான் உன்னைத் திருப்பி, உன் வாயில் துறடுகளைப் போட்டு, உன்னையும் உன்னுடைய எல்லாச் சேனையையும், குதிரைகளையும், சர்வாயுதந்தரித்த குதிரைவீரர்களையும், பரிசையும் கேடகமுமுடைய திரளான கூட்டத்தையும் புறப்படப்பண்ணுவேன்; அவர்கள் எல்லாரும் பட்டயங்களைப் பிடித்திருப்பார்கள்" (எசே 38:1-4).

சாத்தானுடைய கூட்டத்தார் பூமியெங்கும் பரம்பி பரிசுத்தவான்களுடைய பாளயத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொள்கிறார்கள். அப்போது தேவன் வானத்திலிருந்து அக்கினியை அவர்கள்மீது இறக்குகிறார். அந்த அக்கினி சாத்தானுடைய கூட்டத்தாரை பட்சித்துப்போடுகிறது. அவர்களுக்கு அழிவு உண்டாயிற்று. பிசாசு அவர்களை மோசம்போக்கினான். அவர்கள் பிசாசின் தந்திரத்தில் சிக்கிக்கொண்டார்கள். சாத்தானால் மோசம்போக்கப்பட்டவர்கள் இப்போது அக்கினியினால் அழிந்துபோகிறார்கள்.

அவர்களை மோசம்போக்கின பிசாசானவன் அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்படுகிறான். இந்தக் கடலில் ஏற்கெனவே மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களோடு இப்போது சாத்தானும் தள்ளப்பட்டிருக்கிறான். இந்த மூன்றுபேரும், அக்கினியும் கந்தகமுமான கடலிலே, இரவும் பகலும், சதாகாலங்களிலும் வாதிக்கப்படுகிறார்கள். அக்கினியும் கந்தகமுமான கடல் நரகம் என்று அழைக்கப்படுகிறது. இதுவே சாத்தானுடைய வாசஸ்தலம். இங்கு அவன் நித்திய காலமாய் வாதிக்கப்படுகிறான்.

நியாயத்தீர்ப்பு
வெளி 20 : 11-15

வெளி 20:11. பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்; அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்றுபோயின; அவைகளுக்கு இடங்காணப்படவில்லை.

வெளி 20:12. மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்குமுன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின் படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்.

வெளி 20:13. சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள்.

வெளி 20:14. அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்.

வெளி 20:15. ஜீவபுஸ்தகத்திலே எழுதப் பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்.

சாத்தானுடைய ராஜ்யம் முற்றிலுமாக அழிந்துபோயிற்று. சாத்தான் அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்படுகிறான். இதைத் தொடர்ந்து தேவனுடைய நியாயத்தீர்ப்பு நாள் வருகிறது. இது கர்த்தருடைய மகா5நாளின் நியாயத்தீர்ப்பு. தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக எல்லோரும் நிற்கவேண்டும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பெரிய வெள்ளை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறார். இந்த சிங்காசனம் மகிமை நிறைந்ததாயிருக்கிறது. இது பூரண நீதியுள்ள சிங்காசனம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நியாயாபதியாயிருக்கிறார். அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்றுபோயின. அவைகளுக்கு இடம் காணப்படவில்லை.

இந்த உலகத்திலுள்ள எல்லோரையுமே மோசமானவர்களென்று ஒட்டுமொத்தமாக தீர்மானம் பண்ணிவிட முடியாது. மனுஷருக்குள் நல்லவர்களும் இருக்கிறார்கள். அதுபோலவே எல்லோரும் நல்லவர்களென்றும் முடிவு பண்ணிவிட முடியாது. மனுஷருக்குள் தீயோரும் இருக்கிறார்கள். எல்லா மனுஷரும் கிரியை நடப்பிக்கிறார்கள். மனுஷருடைய கிரியைகளில் பல நல்லவையாகவும், பல தீயவையாகவும் இருக்கிறது. தேவனுடைய நியாயத்தீர்ப்பு நாளின்போது ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்பு அடைவார்கள்.

மரித்தோராகிய சிறியோரும் பெரியோரும் தேவனுக்கு முன்பாக நிற்பார்கள். அப்பொழுது புஸ்தங்கள் திறக்கப்படும். ஜீவப்புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்படும். அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்பு அடைவார்கள். இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக மரித்தோரும் நியாயத்தீர்ப்பு அடைவார்கள். கிறிஸ்துவானவருடைய இரண்டாம் வருகையின் போது உயிரோடிருக்கிறவர்களாக காணப்பட்டவர்களும் நியாயத்தீர்ப்பு அடைவார்கள்.

கர்த்தருக்கு முன்பாக புஸ்தங்கள் திறக்கப்படுகிறது. இந்தப் புஸ்தகம் தேவனுடைய சர்வஞானத்தின் புஸ்தகம். இது பாவிகளுடைய மனச்சாட்சியின் புஸ்தகம். கர்த்தர் மனுஷருடைய எல்லா நினைவுகளையும், எல்லா கிரியைகளையும் அறிந்து வைத்திருக்கிறார். கர்த்தருக்கு மறைவானது ஒன்றுமில்லை.

புஸ்தகங்கள் திறக்கப்பட்டபோது, ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்படுகிறது. இது வேதவாக்கியத்தின் புஸ்தகம். இது பரலோகத்தின் பிரமாணம். இது ஜீவனை ஆளுகை செய்கிற பிரமாணம். மனுஷர்கள் நற்கிரியைகளையும் செய்திருக்கலாம், துர்க்கிரியைகளையும் செய்திருக்கலாம். மனுஷருடைய கிரியைகளுக்குத்தக்கதாக கர்த்தர் அவர்களுக்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கிறார்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின்போது மரித்தோர் எல்லோரும் தேவனுக்கு முன்பாக நிற்கவேண்டும். அப்போது சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவிக்கும். மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவிக்கும். யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்பு அடைவார்கள். மரணத்தோடு உடன்படிக்கை செய்தவர்களுக்கும், பாதாளத்தோடு உடன்படிக்கை செய்தவர்களுக்கும் நியாயத்தீர்ப்பு உண்டு.

தேவன் நியாயத்தீர்ப்பு செய்யும்போது இரண்டு காரியங்கள் நடைபெறும் ஜீவபுஸ்தகத்தில் நம்முடைய பெயர் எழுதப்பட்டிருந்தால், தேவன் நம்மை நீதிமானாகத்தீர்த்து, தண்டனையிலிருந்து நம்மை விடுவிப்பார். நம்முடைய பெயர் ஜீவப்புஸ்தகத்தில் எழுதப்படவில்லையென்றால், அவர் நம்மை அக்கினி கடலிலே தள்ளிவிடுவார்.

மரணமும் பாதாளமும் அக்கினி கடலிலே தள்ளப்படும். இது இரண்டாம் மரணம். ஜீவபுஸ்தகத்தில் பெயரெழுதப்படாதவர்கள் இரண்டாம் மரணத்தில் பங்குபெறுவார்கள். இவர்கள் அக்கினி கடலிலே தள்ளப்படுவார்கள்.

மிருகமும், கள்ளத்தீர்க்கதரிசியும், வலுசர்ப்பமும் ஏற்கெனவே அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டிருக்கிறது. அவர்கள் அங்கு இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுகிறார்கள். ஜீவபுஸ்தகத்திலே பெயரெழுதப்படாதவர்கள் சாத்தானோடு உடன்படிக்கை செய்துகொண்டவர்கள். சாத்தானுக்குக் கொடுக்கப்படும் தண்டனையே இவர்களுக்கும் கொடுக்கப்படும். மிருகமும், கள்ளத்தீர்க்கதரிசியும், சாத்தானும் தள்ளப்பட்ட அக்கினி கடலிலே இவர்களும் தள்ளப்படுவார்கள். அங்கு இவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்.

21 அதிகாரம்

அப்போஸ்தலர் யோவான் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைக் காண்கிறார் (வெளி 21:1-9). புதிய எருசலேமைப்பற்றிய விவரம் (வெளி 21:10-27).

புதிய எருசலேம்
வெளி 21 : 1,2

வெளி 21:1. பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று.

வெளி 21:2. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கிவரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது.

அப்போஸ்தலர் யோவான் தன்னுடைய தரிசனத்திலே புதிய வானத்தையும் புதிய பூமியையும் காண்கிறார். பெரிய வெள்ளை சிங்காசனத்தையும், அதின்மேல் வீற்றிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும், யோவான் ஏற்கெனவே தன்னுடைய தரிசனத்தில் கண்டார். அப்போது கர்த்தருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்றுபோயிற்று. அவைகளுக்கு அங்கு இடம் காணப்படவில்லை (வெளி 20:11). முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயிற்று. சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. புதிய வானமும் புதிய பூமியும் வருவதற்காக, முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயிற்று.

அப்போஸ்தலர் யோவான் புதிய பூமியிலே பரிசுத்தமான நகரத்தைக் காண்கிறார். இது புதிய எருசலேம். இந்த நகரம் தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வருகிறது. இந்தப் புதிய எருசலேம் என்பது தேவனுடைய சபையைக் குறிக்கிற வார்த்தை. கர்த்தருடைய சபை இப்போது புதிதாகவும் பரிபூரணமாகவும் இருக்கிறது. சபையானது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவே சபையின் மணவாளர். சபையே கிறிஸ்துவின் மணவாட்டி. புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரமே கிறிஸ்துவின் சபை.

மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம்
வெளி 21 : 3,4

வெளி 21:3. மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள்; தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.

வெளி 21:4. அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை; துக்கமுமில்லை; அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது.

தேவனுடைய ஆசீர்வாதமான பிரசன்னம் அவருடைய பரிசுத்தவான்களிடத்திலே வாசமாயிருக்கிறது. தேவனுடைய பிரசன்னம் அவருடைய சபையிலிருப்பது சபையின் மகிமை. தேவனுடைய பிரசன்னமே சபைக்கு மேன்மை. பரலோகத்திலே தேவனுடைய பிரசன்னம் அவருடைய பரிசுத்தவான்களோடிருக்கிறது. தேவபிரசன்னம் பரலோகத்திலிருப்பதால், அவருடைய பிரசன்னம் பூமியிலே இருக்காது என்று சொல்லக்கூடாது. தேவனுடைய பிரசன்னம் பரலோகத்திலுமிருக்கிறது, அதே வேளையில் அவருடைய பிரசன்னம் பூமியிலும் இருக்கிறது. அவர் சர்வவியாபகமுள்ள தேவன்.

அப்போஸ்தலர் யோவான் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தரிசிக்கிறார். அப்போது பரலோகத்திலிருந்து ஒரு பெருஞ்சத்தமுண்டாயிற்று. "இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்" என்று அந்தப் பெருஞ்சத்தம் சொல்லிற்று.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் அவருடைய ஜனங்களாயிருக்கிறார்கள். தேவன்தாமே அவர்களோடு கூடயிருந்து, அவர்களுடைய தேவனாயிருக்கிறார். கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு மிகப்பெரிய சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. அவர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது. அவர்களிடத்திலே தேவன் வாசமாயிருக்கிறார். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் ஒரு புதிய நிலைக்கு ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தேவன் தம்முடைய பரிசுத்தவான்களோடு கூடயிருக்கிறார். இனி கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளின் கண்ணீர் யாவையும் துடைக்கிறார். தேவன் தாமே தம்முடைய கிருபை நிறைந்த கரத்தினால் தம்முடைய பிள்ளைகளின் கண்ணீர் யாவையும் துடைக்கிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு தேவனாகவும், பரலோகப் பிதாவாகவும் இருக்கிறார். அவர் கிருபை மிகுந்தவர். அன்புள்ளவர். மனதுருக்கமுள்ளவர். தம்முடைய கிருபை நிறைந்த கரத்தினால், தேவன் நம்முடைய கண்ணீர் யாவையும் துடைக்கிறார்.

தேவன் தம்முடைய பிள்ளைகளோடு இருக்கும்போது, அவர்களுடைய கண்களில் கண்ணீர் இருக்கலாம். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் பல பாடுகளையும், வேதனைகளையும், துன்பங்களையும், உபத்திரவங்களையும் அநுபவித்திருக்கிறார்கள். இதினிமித்தமாய் அவர்களுக்கு துக்கமும், அலறுதலும், வருத்தமும், கண்ணீரும், மரணமும் உண்டாயிருக்கலாம். கர்த்தரோ தம்முடைய கிருபையினால் அவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைக்கிறார். தேவன் வந்து அவர்களுடைய கண்ணீரைத் துடைக்கும் வரையிலும், அவர்களுக்குக் கண்ணீர் இருக்கும். தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுடைய கண்ணீர் யாவையும் துடைத்த பின்பு, அவர்களுக்கு இனிமேல் கண்ணீர் இருக்காது. இனிமேல் அவர்களுக்கு துக்கமும், அலறுதலும், வருத்தமும் இருக்காது.

கர்த்தருடைய பரிசுத்தவான்களின் வருத்தத்திற்கும், துக்கத்திற்கும் காரணமாகயிருக்கிற எல்லா காரியங்களும் அவர்களை விட்டு நீங்கிப்போகும். தேவன் தாமே அவர்களோடு கூடயிருக்கிறார். கர்த்தர் அவர்களுடைய தேவனாயிருக்கிறார். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளோடிருக்கும் போது, அவர்களுக்கு கண்ணீரோ, மரணமோ, துக்கமோ, அலறுதலோ, வருத்தமோ இருக்காது. இவையெல்லாம் முந்தின வருத்தங்கள். இவையெல்லாம் பழைய துக்கங்கள். முந்தினவைகளெல்லாம் ஒழிந்துபோகும்.

அல்பாவும் ஓமெகாவும் வெளி 21 : 5,6

வெளி 21:5. சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார்.

வெளி 21:6. அன்றியும், அவர் என்னை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீருற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்.

தேவன் சத்தியமானவர். அவருடைய வார்த்தையும் சத்தியமானது. கர்த்தருடைய வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறார். அவர் தம்முடைய வார்த்தைகளைக் குறித்து சாட்சி கொடுக்கிறார். கர்த்தருடைய சாட்சி மெய்யானது. சிங்காசனத்தில் வீற்றிருக்கிற கர்த்தரானவர், “நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்” என்று சொல்லுகிறார். பின்னும் அவர், “இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள்” என்று சொல்லி, யோவானிடம் “இவைகளை எழுது” என்று கட்டளையிடுகிறார்.

கர்த்தருடைய வசனங்களை நாம் நம்முடைய இருதயத்தில் பதிய வைத்திருக்கவேண்டும். நம்முடைய மனது தேவவசனங்களை ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும். நம்முடைய அன்றாட ஜீவியத்தில் கர்த்தருடைய வசனங்கள் நம்மோடு பேசவேண்டும். நமக்குத் துன்பங்கள் வரும்போது கர்த்தருடைய வசனங்கள் நமக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லவேண்டும். கர்த்தருடைய பாதையைவிட்டு விலகிப்போகும்போது, அவருடைய வசனங்கள் நம்மை எச்சரித்து திருத்தவேண்டும். கர்த்தருடைய வசனங்கள் எழுதப்பட்ட வசனங்களாகயிருக்கும்போது, அவற்றை நாம் எப்போது வேண்டுமானாலும் வாசித்து, அதை நம்முடைய ஞாபகத்தில் புதுப்பித்துக்கொள்ளலாம்.

கர்த்தருடைய வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள். சிங்காசனத்தில் வீற்றிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, யோவானை நோக்கி, “ஆயிற்று” என்று சொல்லுகிறார். தேவனுடைய வார்த்தைகள் ஏற்கெனவே நிறைவேறிற்று. அவருடைய வாக்குத்தத்தங்கள் ஏற்கெனவே நிறைவேற்றி முடிக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் நம்முடைய ஜீவியத்தில் நிறைவேறிற்று என்று நாம் விசுவாசிக்கவேண்டும். தேவனானவர், “நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்” என்று சொல்லுகிறார். இந்த வாக்கியத்தைச் சொல்லிவிட்டு, இது “ஆயிற்று” என்றும் சொல்லுகிறார். அவர் சகலத்தையும் புதிதாக்கிவிட்டார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறார். இது அவருடைய குணாதிசயத்தை வெளிப்படுத்துகிற நாமம். இந்த நாமம் கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. எல்லா காரியங்களுக்கும் தேவனே ஆதியும் அந்தமுமாயிருக்கிறார். எல்லா காரியங்களையும் தேவனே ஆரம்பிக்கிறார். தாம் ஆரம்பித்த எல்லாவற்றையும் தேவனே முடித்து வைக்கிறார். ஒவ்வொரு காரியத்தின் முடிவிலும் தேவனுடைய மகிமையும், சந்தோஷமும் வெளிப்படும். தேவனுடைய சித்தமும் திட்டமும் நிறைவேறும். தேவன் தம்முடைய திட்டத்திலிருந்து ஒருபோதும் விலகிச்செல்வதில்லை.

மனுஷர் பல காரியங்களை ஆரம்பிப்பார்கள். ஆனால் அவற்றை முடிப்பதற்கு திராணியில்லாமல் போய்விடுவார்கள். மனுஷர் பல காரியங்களை திட்டமிடுவார்கள். ஆனால் அவற்றை நிறைவேற்றுவதற்கு பெலனில்லாமல் போய்விடுவார்கள். ஆனால் கர்த்தரோ சர்வவல்லமையுள்ள தேவனாகயிருக்கிறார். அவரே ஆதியும் அந்தமுமாயிருக்கிறார். அவரே அல்பாவும் ஓமெகாவுமாக இருக்கிறார். அவர் தாம் சொன்னதைச் செய்கிறார். தாம் செய்வதை மாத்திரமே சொல்லுகிறார். அவரால் கூடாத காரியம் ஒன்றுமேயில்லை. தேவனுடைய ஆலோசனைகள் நிலைத்து நிற்கும்.

தேவனுடைய நன்மை ஒருபோதும் மாறுவதில்லை. தேவன் தம்முடைய ஜனத்தின்மீது வைத்திருக்கிற அன்பும் ஒருபோதும் மாற்றமடைவதில்லை. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுடைய உள்ளத்திலே பரிசுத்தமான வாஞ்சைகளை சிருஷ்டிக்கிறார். அவர்களிடத்தில் மாம்ச சிந்தைகள் இருக்குமென்றால், அவை நிறைவேறாதபடி தடுத்து நிறுத்துகிறார். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே நமக்கு ஒவ்வொரு காரியமும் நடைபெறும். கர்த்தருடைய உதவியும், ஒத்தாசையும் இல்லையென்றால் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது.

கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணுகிறவர். தாம் பண்ணுகிற வாக்குத்தத்தங்களை அவர் உண்மையாய் நிறைவேற்றுகிறவர். சிங்காசனத்தில் வீற்றிருக்கிற கர்த்தரானவர், "தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்" என்று வாக்குப்பண்ணுகிறார். இது கர்த்தருடைய வார்த்தை. கர்த்தருடைய வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள். அவர் சகலகத்தையும் புதிதாக்குகிறவர். அவர் ஆதியும் அந்தமுமாயிருக்கிறவர். தம்முடைய வார்த்தையை நிறைவேற்றுகிறவர்.

ஜீவத் தண்ணீரூற்றில் தாகமாயிருக்கிறவனுக்கு இலவசமாய்க் கொடுப்பேன் என்று வாக்குப்பண்ணினவர், நிச்சயமாகவே கொடுப்பார். தாகமாகயிருக்கிறவர்களெல்லோரும் கர்த்தரிடத்தில் வந்து ஜீவத்தண்ணீரைப் பெற்றுக்கொள்ளலாம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே ஜீவத்தண்ணீருக்கு ஊற்றாகயிருக்கிறவர். இந்த ஜீவத்தண்ணீருக்கு மனுஷரால் கிரயம் செலுத்த முடியாது. நமக்கு அதற்குரிய கிரயத்தைச் செலுத்துவதற்குத் திராணியுமில்லை. கர்த்தர் நம்முடைய நிலமை அறிந்து, ஜீவத்தண்ணீரூற்றில் நமக்கு இலவசமாகக் கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார்.

ஜெயங்கொள்ளுகிறவன்
வெளி 21 : 7,8

வெளி 21:7. ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்.

வெளி 21:8. பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலை பாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு மேன்மையான ஆசீர்வாதங்களை வாக்குப்பண்ணுகிறார். தம்முடைய ஆசீர்வாதங்களை இலவசமாகவும் தாராளமாகவும் கொடுக்கிறார். தாகமாயிருக்கிறவர்களுக்கு ஜீவத் தண்ணீருற்றில் இலவசமாய்க் கொடுக்கிறார். நிறைவாகக் கொடுக்கிறார். ஜீவத்தண்ணீரை பானம்பண்ணுகிறவர்கள் ஜெயங்கொள்ளுகிறவர்கள்.

"ஜெயங் கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்" என்று சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற கிறிஸ்துவானவர் வாக்குப்பண்ணுகிறார். இது கர்த்தருடைய பிள்ளைகளுக்கு கிடைத்திருக்கிற மாறாத வாக்குத்தத்தம். இதுவே நமக்கு மேன்மையான ஆசீர்வாதம். இந்த ஆசீர்வாதத்தில் பாவிகளுக்கும் துன்மார்க்கருக்கும் பங்குமில்லை. பாத்தியமுமில்லை. பாவம் செய்கிறவர்கள் அழிந்துபோவார்கள்.

துன்மார்க்கர் இரண்டாம் மரணத்தில் பங்குபெறுவார்கள். அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே அவர்கள் பங்கடைவார்கள். யாரெல்லாம் இந்தக் கூட்டத்திலே சேர்ந்திருப்பார்கள் என்று தேவனானவர் வெளிப்படுத்துகிறார். அவர்களுடைய விவரம் வருமாறு : 1. பயப்படுகிறவர்கள் 2. அவிசுவாசிகள் 3. அருவருப்பானவர்கள் 4. கொலைபாதகர் 5. விபச்சாரக்காரர் 6. சூனியக்காரர் 7. விக்கிரகாராதனைக்காரர் 8. பொய்யர். இவர்கள் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்.

இயேசுகிறிஸ்துவைப் பின்பற்ற விரும்புகிறவர், கிறிஸ்துவின் சிலுவையை சுமந்துகொண்டு, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லவேண்டும். பயப்படுகிறவர்களோ கிறிஸ்துவின் சிலுவையை சுமக்கமாட்டார்கள். சிலுவை சுமப்பதற்குப் பயப்படுவார்கள். இவர்கள் கர்த்தருடைய அடிச்சுவடுகளை துணிந்து பின்பற்றமாட்டார்கள். தங்களுக்கு பிரச்சனைகள், துன்பங்கள், உபத்திரவங்கள், வேதனைகள், சோதனைகள் வரும்போது பயந்துபோய் கிறிஸ்துவை விட்டு விலகிப்போய் விடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவை மறுதலித்து, எல்லா பாவங்களையும் துணிகரமாய்ச் செய்வார்கள். இவர்கள் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்.

துன்மார்க்கர்கள் கர்த்தரைப் பின்பற்றமாட்டார்கள். கர்த்தருக்காக பாடுகளை அநுபவிக்க முன்வரமாட்டார்கள். சொகுசாக வாழவேண்டுமென்று விரும்புவார்கள். இப்படிப்பட்டவர்கள் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள். பாவிகளுக்கும் துன்மார்க்கருக்கும் முதலாம் மரணத்தைத் தொடர்ந்து இரண்டாம் மரணமும் வரும். முதலாம் மரணம் சரீரப்பிரகாரமாக வருகிற இயற்கையான மரணம். இதைத் தொடர்ந்து இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே மரணம் வரும். இந்த மரணத்திலும் பாவிகள் பங்கடையவேண்டும். முதலாம் மரணத்தைவிட இரண்டாம் மரணம் மிகவும் பயங்கரமானதாகயிருக்கும். இரண்டாம் மரணம் நித்தியமானது. இரண்டாம் மரணத்தில் உண்டாகிற வேதனையும் நித்தியமானது.

ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டி. வெளி 21 : 9-11

வெளி 21:9. பின்பு, கடைசியான ஏழு வாதைகளால் நிறைந்த ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் என்னிடத்தில் வந்து: நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன் என்று சொல்லி,

வெளி 21:10. பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின்மேல் என்னை ஆவியில் கொண்டுபோய், தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தை விட்டுத் தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிறதை எனக்குக் காண்பித்தான்.

வெளி 21:11. அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப் போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப் போலவும் இருந்தது.

கர்த்தர் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு, அவர் சர்வவல்லமையுள்ளவராக இருக்கிறார். தம்முடைய எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு கர்த்தர் ஏராளமான தூதர்களைப் பயன்படுத்துகிறார். கர்த்தருடைய பரிசுத்த தூதர்கள் கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவருடைய சித்தத்தை நிறைவேற்றுகிறார்கள். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் ஏழுதூதர்கள், ஏழுகலசங்களைப் பிடித்திருந்தார்கள். இந்தக் கலசங்களில் தேவனுடைய கடைசியான ஏழுவாதைகள் நிறைந்திருந்தது. அந்த ஏழுதூதர்களில் ஒருவன், இப்போது கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாய் யோவானிடத்தில் வருகிறான்.

அந்தத் தூதன் யோவானிடம், "நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய, மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன்" என்று சொல்லுகிறான். இதைச் சொல்லிவிட்டு அந்தத் தூதன் யோவானை பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின்மேல் ஆவியில் கொண்டுபோகிறான். பரலோகத்தை தரிசிக்க விரும்புகிறவர்கள் அதற்கு அருகாமையில் சென்று தரிசிக்கவேண்டும். நம்முடைய மனக்கண்கள் சுத்தமுள்ளதாகவும் பிரகாசமானதாகவும் இருக்கவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் பர்வதத்தைப்போல வளர்ந்து உயர்ந்திருக்கவேண்டும். தரிசனத்தின் பர்வதத்தில்தான் தேவனுடைய தரிசனங்களைத் தெளிவாய்க் காணமுடியும்.

எருசலேமாகிய பரிசுத்த நகரம் தேவனுடைய மகிமையை அடைந்திருக்கிறது. அந்த நகரம் பரலோகத்தைவிட்டு தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிறது. தேவனுடைய சபை மகிமையில் பூரணப்பட்டிருக்கிறது. ஜெயமுள்ள சபையாகயிருக்கிறது. பரிசுத்த நகரம் பரலோகத்தைவிட்டு தேவனிடத்திலிருந்து இறங்கி வருவதை யோவான் காண்கிறார்.

பரிசுத்த நகரத்தின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப்போலவும், பளிங்கின் ஒளியுள்ள வச்சிரக்கல்லைப்போலவும் இருக்கிறது. பரிசுத்த நகரத்திற்கு வெளிப்புறமும் இருக்கிறது. உட்புறமும் இருக்கிறது. வெளிப்புறத்திலே உயரமான மதிலும், பன்னிரண்டு வாசல்களும் இருக்கிறது. பரிசுத்த நகரத்திற்கு உள்ளே தேவனுடைய மகிமை பிரகாசமாகயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின் வெளிச்சத்தில் நடக்கிறார்கள்.

மதிலும் வாசல்களும் வெளி 21 : 12-14

வெளி 21:12. அதற்குப் பெரிதும் உயரமுமான மதிலும், கிழக்கே மூன்று வாசல்கள், வடக்கே மூன்று வாசல்கள், தெற்கே மூன்று வாசல்கள், மேற்கே மூன்று வாசல்கள் ஆகப் பன்னிரண்டு வாசல்களும் இருந்தன.

வெளி 21:13. வாசல்களின் அருகே பன்னிரண்டு தூதர்களிருந்தார்கள்; அந்த வாசல்களின்மேல் இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னிரண்டு கோத்திரத்தாருடைய நாமங்களும் எழுதப்பட்டிருந்தன.

வெளி 21:14. நகரத்தின் மதிலுக்குப் பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களிருந்தன; அவைகள்மேல் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலரின் பன்னிரண்டு நாமங்களும் பதிந்திருந்தன.

தேவனுடைய மகிமையடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தைவிட்டு தேவனிடத்திலிருந்து இறங்கி வருகிறது. அந்த நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கு பன்னிரண்டு வாசல்கள் உள்ளது. பரிசுத்தவான்களெல்லோருமே தேவனுடைய பரிசுத்த நரகத்திற்குள் பிரவேசிக்கலாம். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டிருக்கிற எல்லோருக்கும் பரிசுத்த நகரத்திற்குள் பிரவேசிக்கிற சிலாக்கியம் உண்டு.

மகிமையடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரத்திற்கு மொத்தம் பன்னிரண்டு வாசல்கள் இருக்கிறது. இந்தப் பன்னிரண்டு வாசல்களும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரைக் குறிப்பதாக வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். பரிசுத்த நகரத்தின் கிழக்கே மூன்று வாசல்களும், வடக்கே மூன்று வாசல்களும் தெற்கே மூன்று வாசல்களும், மேற்கே மூன்று வாசல்களும் இருக்கிறது.

கர்த்தருடைய பரிசுத்தவான்களெல்லோருமே அவருக்கு மெய்யான இஸ்ரவேலராயிருக்கிறார்கள். தேவனுடைய புதிய எருசலேமுக்குள் மெய்யான இஸ்ரவேலர் எல்லோருமே பிரவேசிக்கலாம். பரிசுத்த நகரத்திற்கு பெரிதும் உயரமுமான ஒரு மதில் இருக்கிறது. இந்த மதிலில் பன்னிரண்டு வாசல்கள் இருக்கிறது.

பன்னிரண்டு வாசல்களின் அருகே பன்னிரண்டு தூதர்கள் இருக்கிறார்கள். ஆவிக்குரிய இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரும் புதிய எருசலேமுக்குள் பிரவேசிப்பதற்கு சிலாக்கியம் பெற்றவர்கள். இவர்களை பரிசுத்த நகரத்திற்குள் வரவேற்பதற்காக, பன்னிரண்டு தூதர்களும் பன்னிரண்டு வாசல்களின் அருகே இருக்கிறார்கள்.

பன்னிரண்டு வாசல்களின்மேல் இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னிரண்டு கோத்திரத்தாருடைய நாமங்கள் எழுதப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு ஜீவவிருட்சத்தில் பங்குள்ளது. புதிய எருசலேமுக்குள் வாசல் வழியாய் பிரவேசிக்கிற உரிமையும் சிலாக்கியமும் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து நம்முடைய பிரதான மேய்ப்பர். அவர் தம்முடைய தொழுவத்திற்குள் வாசல் வழியாய் பிரவேசிக்கிறார். நாம் கர்த்தருடைய தொழுவத்திலுள்ள ஆடுகள். அவருடைய பரிசுத்தமான பிள்ளைகள். அவருடைய பரிசுத்த நகரத்திற்குள்ளே நமக்கு வாசல் வழியாய் பிரவேசிக்கிற சிலாக்கியம் கிடைத்திருக்கிறது.

பரிசுத்த நகரத்தைச் சுற்றிலும் பெரிதும் உயரமுமான மதில் இருக்கிறது. அந்த மதிலில் பன்னிரண்டு வாசல்கள் இருக்கிறது. இந்த வாசல்கள் பூமியின் நான்கு திசைகளிலும் இருக்கிறது. புதிய எருசலேம் சதுரமான அளவுள்ளது. நான்கு திசைகளிலும் மதிலின் நீளம் ஒன்றுபோலவே இருக்கும். மதிலின் நான்கு சுவர்களும் பூமியின் நான்கு திசைகளைக் குறிக்கிறது. ஒவ்வொரு திசையிலும் மூன்று வாசல்கள் உள்ளன. பூமியின் ஒவ்வொரு திசையிலிருந்தும் கர்த்தருடைய பரிசுத்தவான்கள், பரிசுத்த நகரத்திற்குள்ளே தடையில்லாமல் பிரவேசிக்கலாம்.

புதிய எருசலேமின் மதிலுக்கு பன்னிரண்டு அஸ்திபார கற்கள் இருக்கிறது. நகரத்து மதிலின் அஸ்திபாரங்கள் சகலவித இரத்தினங்களினாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தன; முதலாம் அஸ்திபாரம் வச்சிரக்கல், இரண்டாவது இந்திரநீலம், மூன்றாவது சந்திரகாந்தம், நான்காவது மரகதம். ஐந்தாவது கோமேதகம், ஆறாவது பதுமராகம், ஏழாவது சுவர்ணரத்தினம், எட்டாவது படிகப்பச்சை, ஒன்பதாவது புஷ்பராகம், பத்தாவது வைடூரியம், பதினோராவது சுநீரம், பன்னிரண்டாவது சுகந்தி இவைகளே. அதின் மதில் வச்சிரக்கல்லால் கட்டப்பட்டிருந்தது; நகரம் தெளிந்த பளிங்குக்கு ஒப்பான சுத்தப்பொன்னாயிருந்தது (வெளி 21:18-20).

பன்னிரண்டு வாசல்களும், பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன; ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது. நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்குபோலச் சுத்தப்பொன்னாயிருந்தது (வெளி 21:21).

மதில்களின் அளவு
வெளி 21 : 15-20

வெளி 21:15. என்னுடனே பேசினவன், நகரத்தையும் அதின் வாசல்களையும் அதின் மதிலையும் அளக்கிறதற்கு ஒரு பொற்கோலைப் பிடித்திருந்தான்.

வெளி 21:16. அந்த நகரம் சதுரமாயிருந்தது, அதின் அகலமும் நீளமும் சமமாயிருந்தது. அவன் அந்தக் கோலினால் நகரத்தை அளந்தான்; அது பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது; அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருந்தது.

வெளி 21:17. அவன் அதின் மதிலை அளந்தபோது, அது தூதனுடைய அளவாகிய மனுஷ அளவின்படியே நூற்றுநாற்பத்துநான்கு முழமாயிருந்தது.

வெளி 21:18. அதின் மதில் வச்சிரக்கல்லால் கட்டப்பட்டிருந்தது; நகரம் தெளிந்த பளிங்குக்கு ஒப்பான சுத்தப்பொன்னாயிருந்தது.

வெளி 21:19. நகரத்து மதிலின் அஸ்திபாரங்கள் சகலவித இரத்தினங்களினாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தன; முதலாம் அஸ்திபாரம் வச்சிரக்கல், இரண்டாவது இந்திரநீலம், மூன்றாவது சந்திரகாந்தம், நான்காவது மரகதம்.

வெளி 21:20. ஐந்தாவது கோமேதகம், ஆறாவது பதுமராகம், ஏழாவது சுவர்ணரத்தினம், எட்டாவது படிகப்பச்சை, ஒன்பதாவது புஷ்பராகம், பத்தாவது வைடூரியம், பதினோராவது சுநீரம், பன்னிரண்டாவது சுகந்தி இவைகளே.

ஏழுதூதர்களில் ஒருவன் யோவானுக்கு பரிசுத்த நகரத்தைக் காண்பிக்கிறான். தூதன் தன்னுடைய கையிலே ஒரு பொற்கோலைப் பிடித்திருக்கிறான். பரிசுத்த நகரத்தையும் அதன் வாசல்களையும் அதின் மதில்களையும் அவன் இந்தப் பொற்கோலினால் அளப்பான்.

புதிய எருசலேம் நகரம் சதுரமாயிருக்கிறது. நான்கு பக்கத்து அளவுகளும் ஒன்றுபோலிருக்கிறது. புதிய எருசலேம் பரிபூரணமானது. பரிசுத்தமானது. புதிய எருசலேமின் அகலமும் நீளமும் சமமாயிருக்கிறது. தூதன் தன்னுடைய கையில் பிடித்திருக்கிற பொற்கோலினால் பரிசுத்த நகரத்தை அளக்கிறான். அது பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருக்கிறது. அதின் நீளமும் அகலமும், உயரமும் சமமாயிருக்கிறது.

தேவனுடைய பிள்ளைகள் எல்லோரும் பரிசுத்த நகரத்தில் வந்து வாசம்பண்ணலாம். எல்லோருக்கும் போதுமான ஸ்தலம் இங்கு இருக்கிறது. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு இங்கு வாசஸ்தலங்களை ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு, நம்முடைய பிதாவின் வீட்டிலே அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அந்த வாசஸ்தலங்களெல்லாம் பரிசுத்த நகரமாகிய புதிய எருசலேமிலே இருக்கிறது.

பரிசுத்த நகரத்தின் மதிலை தூதன் அளந்து பார்க்கிறான். அது தூதனுடைய அளவாகிய மனுஷ அளவின்படியே நூற்றுநாற்பத்து நான்கு முழமாயிருக்கிறது. நகரத்து மதில்களின் அஸ்திபாரங்கள் சகலவித இரத்தினங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது.

புதிய எருசலேமுக்கு பன்னிரண்டு அஸ்திபாரங்கள் உள்ளன. இந்த அஸ்திபாரங்கள் இயேசுகிறிஸ்துவினுடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களைக் குறிப்பதாக வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு அஸ்திபாரமும் ஒவ்வொரு விதமான கல்லினால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு : 1. வச்சிரக்கல், 2. இந்திரநீலம், 3. சந்திரகாந்தம், 4. மரகதம். 5. கோமேதகம், 6. பதுமராகம், 7. சுவர்ணரத்தினம், 8. படிகப்பச்சை, 9. புஷ்பராகம், 10. வைடூரியம், 11. சுநீரம், 12. சுகந்தி. பரிசுத்த நகரத்து மதில்களின் அஸ்திபாரங்கள் இந்த பன்னிரண்டு விதமான இரத்தினங்களினால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது.

பன்னிரண்டு வாசல்கள்
வெளி 21:21

வெளி 21:21. பன்னிரண்டு வாசல்களும், பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன; ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது. நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்குபோலச் சுத்தப்பொன்னாயிருந்தது.

புதிய எருசலேமுக்கு பெரிதும் உயரமுமான மதில் இருக்கிறது. அந்த மதிலில் பன்னிரண்டு வாசல்களும் இருக்கிறது. கிழக்கே மூன்று வாசல்கள், வடக்கே மூன்று வாசல்கள், தெற்கே மூன்று வாசல்கள், மேற்கே மூன்று வாசல்கள் ஆக பன்னிரண்டு வாசல்கள் இருக்கிறது. அந்த வாசல்களின் மேல் இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னிரண்டு கோத்திரத்தாருடைய நாமங்களும் எழுதப்பட்டிருக்கிறது. இந்த வாசல்களின் அருகே பன்னிரண்டு தூதர்கள் இருக்கிறார்கள். பன்னிரண்டு வாசல்களும், பன்னிரண்டு முத்துக்களாயிருக்கிறது;

ஒவ்வொரு வாசலுக்கும் ஒரு முத்து இருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே விலையேறப்பெற்ற முத்தாகயிருக்கிறார். அவரே நம்முடைய வாசலாகவும் வழியாகவும் இருக்கிறார். தேவனிடத்தில் சேருவதற்கு கிறிஸ்துவானவரே வழி. கிறிஸ்து அல்லாமல் பிதாவினிடத்தில் சேருவதற்கு நமக்கு வேறு வழி எதுவும் நியமிக்கப்படவில்லை. பரலோகத்தின் மகிமையை விவரிப்பதற்கு, பூமியில் அதற்கு ஒப்பான ஸ்தலம் எதுவுமில்லை. ஆகையினால் பரலோகத்தின் மேன்மையும் மகிமையும் பரலோகத்திற்கே உரிய வார்த்தைகளினால் விவரிக்கப்பட்டிருக்கிறது.

புதிய எருசலேமுக்குள்ளே வெளி 21 : 22-27

வெளி 21:22. அதிலே தேவலாயத்தை நான் காணவில்லை; சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம்.

வெளி 21:23. நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு.

வெளி 21:24. இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள்; பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள்.

வெளி 21:25. அங்கே இராக்காலம் இல்லாதபடியால், அதின் வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதே இல்லை.

வெளி 21:26. உலகத்தாருடைய மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள்.

வெளி 21:27. தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்.

புதிய எருசலேமுக்கு உள்ளேயிருக்கிற பகுதிகளை யோவான் தரிசிக்கிறார். நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்குபோல சுத்தமாயிருக்கிறது. பரலோகத்திலிருக்கிற பரிசுத்தவான்கள் பொன்வீதிகளில் நடக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய நித்திய மகிமையில் பிரவேசித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நித்திய இளைப்பாறுதல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் இளைப்பாறுதலில் பங்குபெற்றாலும் சும்மாயிருக்கவில்லை. கர்த்தருடைய பரிசுத்தவான்கள் ஆட்டுக்குட்டியானவருடைய வெளிச்சத்தில் நடக்கிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகள் வெண் வஸ்திரங்களைத் தரித்திருக்கிறார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவோடுகூட நடக்கிறார்கள். அவர்கள் இயேசு கிறிஸ்துவோடும், ஒருவரோடொருவரும் சம்பாஷணை செய்துகொள்கிறார்கள்.

அப்போஸ்தலர் யோவான் புதிய எருசலேமுக்குள் பார்க்கிறார். அங்கே தேவாலயம் இல்லை. சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவருமே புதிய எருசலேமுக்கு ஆலயமாயிருக்கிறார்கள். அங்கு கட்டப்பட்ட, பிரத்தியட்சமான தேவாலயம் காணப்படவில்லை.

பரிசுத்த நகரத்திலே சூரியனும் சந்திரனும் இல்லை. நகரத்திற்கு வெளிச்சம் கொடுக்க சந்திரனும் சூரியனும் தேவைப்படவில்லை. தேவனுடைய மகிமையே புதிய எருசலேமை பிரகாசிப்பிக்கிறது. ஆட்டுக்குட்டியானவரே புதிய எருசலேமுக்கு விளக்காக இருக்கிறார். பூமியிலிருக்கிற நமக்கு வெளிச்சம் கொடுக்க சந்திரனும் சூரியனும் தேவை. பரலோகம் பூமியைப்போலிருக்காது. அங்கு கர்த்தரே எல்லாவற்றிற்கும் எல்லாமுமாக இருக்கிறவர். இரட்சிக்கப்படுகிற ஜனங்கள், புதிய எருசலேமிலே, கிறிஸ்துவினுடைய வெளிச்சத்திலே நடப்பார்கள். ஆட்டுக்குட்டியானவரே புதிய எருசலேமுக்கு விளக்காகயிருக்கிறவர். தேவனுடைய மகிமையும் புதிய எருசலேமை பிரகாசிக்கச் செய்கிறது.

புதிய எருசலேமிலே ஏராளமான பரிசுத்தவான்கள் இருக்கிறார்கள். இவர்கள் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு இரட்சிக்கப்பட்டவர்கள். பூமியிலே ஆட்டுக் குட்டியானவருடைய இரத்தத்தினால் முத்திரையிடப்பட்டவர்கள், பரலோகத்திலே இரட்சிக்கப்படுகிற ஜனங்களாயிருக்கிறார்கள்.

இந்தப்பூமியிலே பல்வேறுவிதமான அந்தஸ்துக்களையுடைய மனுஷர்கள் பரலோகத்தில் பிரவேசிப்பார்கள். இங்கு ராஜாக்களாக இருந்தவர்களும், பிரபுக்களாகவும், ஐசுவரியவான்களாகவும் இருந்தவர்களும் பரலோகத்திலே பிரவேசிப்பார்கள். சாதாரண ஜனங்களும், தரித்திரரும் பரலோகத்தில் பிரவேசிப்பார்கள்.

பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு நாம் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தத்தினால் கழுவப்பட்டிருக்கவேண்டும். நம்முடைய பூமிக்குரிய அந்தஸ்து எப்படியிருந்தாலும், இரட்சிக்கப்பட்டவர்கள் பரலோகத்தில் பிரவேசிப்பார்கள். பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் புதிய எருசலேமுக்குள் கொண்டுவருவார்கள்.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் புதிய எருசலேமுக்குள் எப்போது வேண்டுமானாலும் பிரவேசிக்கலாம். புதிய எருசலேமின் வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதேயில்லை. புதிய எருசலேமில் இராக்காலமுமில்லை. கர்த்தருடைய இரத்தத்தினால் கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கு புதிய எருசலேமின் வாசல்கள் எப்போதும் திறந்தேயிருக்கும்.

புதிய எருசலேமிலே வருகிற கர்த்தருடைய பரிசுத்தவான்கள், உலகத்தாருடைய மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள். இந்தப் பூமியிலே எது மகிமையாகயிருந்ததோ, எது கனமுள்ளதாகயிருந்ததோ அது பரலோகத்திலும் இருக்கும். அது பூமியிலே இருந்ததைவிட பரலோகத்திலே இன்னும் அதிக மகிமை நிறைந்ததாகவும், அதிக கனமுள்ளதாகவும் இருக்கும். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் இவையெல்லாவற்றையும் புதிய எருசலேமிலே பரிபூரணமாய் அநுபவிப்பார்கள்.

புதிய எருசலேமில் தீட்டுள்ளதும் அருவருப்பும் இருக்காது. புதிய எருசலேம் சுத்தமான நகரம். அங்கு அசுத்தத்திற்கு இடமேயில்லை. மாசற்றவர்களும், கறை திரையில்லாதவர்களும், பரிசுத்தமானவர்களும் மாத்திரமே புதிய எருசலேமில் பிரவேசிப்பார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், இந்தப் பூமியில் ஜீவிக்கிற வரையிலும் நமக்கு பிசாசோடு போராட்டம் உண்டு. சாத்தானின் சோதனைகள் நமக்கு வரும். கர்த்தருடைய கிருபைகளும் நமக்குக் கிடைக்கும். அதே வேளையில் மாம்சத்தின் இச்சைகளும் நமக்குள்ளே கிரியை செய்யும். பூமியிலே நம்முடைய பரிசுத்தத்தில் பரிபூரண நிலமையை அடையமுடியாது. நாம் கர்த்தருடைய பரிசுத்த நகரத்திற்குப் போகும்போதோ, ஆட்டுக்குட்டியானவர் நம்மை தம்முடைய இரத்தத்தினால் மறுபடியும் கழுவி நம்மை சுத்திகரிப்பார். அங்கு நமக்கு பரிபூரணமான பரிசுத்தமுண்டாயிருக்கும். பிதாவினுடைய சமுகத்திற்கு முன்பாக கிறிஸ்துவானவர் நம்மை கறையில்லாதவர்களாக நிறுத்துவார்.

தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் புதிய எருசலேமில் பிரவேசிப்பதில்லை. புதிய எருசலேமில் இருக்கிறவர்களெல்லோருமே கர்த்தருடைய பரிசுத்தவான்கள். இவர்களிடத்தில் பரிபூரமாண பரிசுத்தம் காணப்படுகிறது. புதிய எருசலேமிலிருக்கிறவர்களிடத்தில் தீட்டோ, அருவருப்போ, பொய்யோ காணப்படாது.

பொய்யை நடப்பிக்கிறவர்களுக்கு புதிய எருசலேமிலே பங்கில்லை. அருவருப்பானவைகளைச் செய்கிறவர்கள் பரிசுத்த நகரத்திற்குள்ளே பிரவேசிக்க முடியாது. கர்த்தருடைய பரிசுத்தவான்களின் பெயர்கள் மாத்திரமே ஆட்டுக் குட்டியானவரின் ஜீவப்புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கும். இந்தப் புஸ்தகத்தில் பெயரெழுதப்பட்டவர்கள் மாத்திரமே புதிய எருசலேமிலே பிரவேசிப்பார்கள். புதிய எருசலேம் பரிபூரணமான பரிசுத்த நகரமாயிருக்கிறது. புதிய எருசலேமிலே வாசம்பண்ணுகிறவர்களும் பரிபூரணமான பரிசுத்தமுள்ளவர்களாயிருப்பார்கள்.

22 அதிகாரம்

சபையின் பரலோக மகிமை இன்னும் தெளிவுபடுத்தப்படுகிறது (வெளி 22:1-5). யோவானுடைய தரிசனம் உண்மையானது. கர்த்தருடைய வசனங்கள் உண்மையும் சத்தியமுமானவைகள் (வெளி 22:6-19). முடிவுரை (வெளி 22:20,21).

ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி
வெளி 22:1

வெளி 22:1. பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவதண்ணீருள்ள சுத்தமான நதிதேவனும் ஆட்டுக் குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான்.

கர்த்தருடைய தூதன் யோவானுக்கு பரலோகத்திலுள்ள காரியங்களை ஒவ்வொன்றாகக் காண்பிக்கிறான். யோவானுக்கு பரலோகத்தின் தரிசனம் கொடுக்கப்படுகிறது. பரலோகம் ஒரு நகரத்திலிருக்கிறது. ஒரு நகரமே பரலோகமாயிருக்கிறது.

ஆதியிலே தேவன் ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டித்தார். ஏதேன் தோட்டத்தையும் சிருஷ்டித்தார். ஆதியிலே ஏதேன் தோட்டம் கர்த்தருடைய பரலோகம் போலவே இருந்தது. அந்தப் பரலோகத்தில் ஆதாமும் ஏவாளுமாகிய இரண்டுபேர் மாத்திரமே இருந்தார்கள். அவர்கள் மாத்திரமே ஏதேன் தோட்டத்தின் அழகை ரசித்தார்கள்.

இரண்டாவது பரலோகமோ ஏதேன் தோட்டத்தைவிட மகிமை நிரம்பியிருக்கிறது. இது பரிசுத்த நகரமாயிருக்கிறது. ஏதேனிலே இரண்டுபேர் மாத்திரமே இருந்தார்கள். பரலோகத்திலே கர்த்தருடைய பரிசுத்தவான்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள். ராஜாக்கள் இருக்கிறார்கள். சகல தேசத்தார் இருக்கிறார்கள். சகல ஜாதியாரும் இருக்கிறார்கள். இவர்களெல்லோருமே புதிய எருசலேமிலே சந்தோஷமாயிருக்கிறார்கள்.

பரலோகத்திலே ஒரு நதியிருக்கிறது. இந்த நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறது. நம்முடைய கிருபை, ஆறுதல், மகிமை ஆகிய எல்லாவற்றிற்கும் கர்த்தராகிய தேவனே ஊற்றாகவும், ஊற்றின் கண்ணாகவும் இருக்கிறார். தேவனிடமிருந்தே நமக்கு கிருபைகளும், ஆசீர்வாதங்களும் புறப்பட்டு வருகிறது. நம்முடைய ஆசீர்வாதங்களெல்லாம், ஆட்டுக்குட்டியானவர் மூலமாய், தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வருகிறது.

பரலோகத்திலே புறப்பட்டு வருகிற நதியின் தண்ணீர் பளிங்கைப்போல தெளிவானதாயிருக்கிறது. இது தெளிவான ஜீவத்தண்ணீர். பரலோகத்தில் புறப்பட்டு வருகிற நதி சுத்தமான நதி. பூமியிலுள்ள நதிகளோ அசுத்தமானவை. பூமிக்குரிய சந்தோஷங்களும், சமாதானங்களும் சுத்தமானவையல்ல. பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் பளிங்கைப்போல தெளிவாகயிருக்காது. பூமிக்குரிய ஆசீர்வாதங்களில் உலகப்பிரகாரமான காரியங்களும் கலந்து அதை அசுத்தப்படுத்தும்.

ஆனால் தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிற நதியோ சுத்தமான நதியாகயிருக்கிறது. இந்த நதியின் தண்ணீர் பளிங்கைப்போல தெளிவான ஜீவத்தண்ணீராயிருக்கிறது.

ஜீவவிருட்சம்
வெளி 22:2

வெளி 22:2. நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்.

புதிய எருசலேமிலே ஜீவவிருட்சம் இருக்கிறது. ஏதேன் தோட்டத்திலும் ஜீவவிருட்சம் இருந்தது. "தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார்" (ஆதி 2:9).

ஏதேன் தோட்டத்திலிருந்து ஜீவவிருட்சத்தைவிட, புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்திலிருக்கிற ஜீவவிருட்சம் மிகவும் அழகானது. அதிக மேன்மையானது. இந்த ஜீவவிருட்சம் புதிய எருசலேமின் நகரவீதியின் மத்தியிலும் நதியின் இருகரையிலும் இருக்கிறது. தேவனுடைய சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிற சுத்தமான நதி ஜீவவிருட்சத்திற்கு தண்ணீர் பாய்ச்சுகிறது.

ஜீவவிருட்சம் பன்னிரண்டு விதமான கனிகளைத் தருகிறது. இந்த விருட்சம் மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும். ஜீவவிருட்சத்தில் எப்போதுமே கனியிருக்கும். ஜீவவிருட்சத்தின் கனி பரிபூரணமானது. ஜீவவிருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைவதற்கு ஏதுவானவைகள். பரலோகத்திலே தேவனுடைய பிரசன்னமே, கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கும் சந்தோஷமும் ஆரோக்கியமுமாயிருக்கிறது.

சாபமிராது
வெளி 22:3

வெளி 22:3. இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும்.

பரலோகத்திலே தீட்டுள்ளதும், அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் பிரவேசிப்பதில்லை. அங்கு பாவம் இருக்காது. அசுத்தம் இருக்காது. துன்மார்க்கம் இருக்காது. பரலோகத்திலே பரிசுத்தவான்களுக்கு பூரண விடுதலை உண்டாயிருக்கும். தேவனுடைய பரிசுத்த நகரம் பரிபூரணமான ஆசீர்வாதத்தினால் நிரம்பியிருக்கிறது. அதில் ஒரு சாபமும் இருக்காது. அங்கு வலுசர்ப்பம் இல்லை.

ஏதேன் தோட்டத்திலே சர்ப்பம் இருந்தது. அது ஆதாமையும் ஏவாளையும் வஞ்சித்தது. பரலோகத்திலே கர்த்தருடைய பரிசுத்தவான்களை வஞ்சிப்பதற்கு சாத்தான் இல்லை. சர்ப்பமும் அங்கு இல்லை. அங்கு எந்த சாபமும் இல்லை. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனமே பரலோகத்திலிருக்கிறது. கர்த்தருடைய சிங்காசனம் இருக்குமிடத்தில் சாபத்திற்கோ, சாத்தானுக்கோ இடமில்லை. சாத்தானுக்கு பரலோகத்திலே ஒரு வேலையும் இல்லை. தீட்டுள்ளதையும் அருவருப்பையும், பொய்யையும் நடப்பிக்கிற சாத்தான் பரலோகத்தில் பிரவேசிக்கமாட்டான்.

சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்
வெளி 22 : 4,5

வெளி 22:4. அவருடைய ஊழியக்காரர் அவரைச்சேவித்து, அவருடைய சமுகத்தைத்தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்.

வெளி 22:5. அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்.

பரலோகத்திலே தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் இருக்கும். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் அங்கு இருக்கிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவரைச் சேவித்து, அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு, கர்த்தரை முகமுகமாய்த் தரிசிக்கிற சிலாக்கியம் கிடைக்கும். இது பரலோகத்திலே கிடைக்கும்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை தமக்குச் சொந்தமாக்கிக் கொள்வார். கர்த்தருடைய நாமம் அவருடைய பரிசுத்தவான்களின் நெற்றிகளில் இருக்கும். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள். பரிசுத்தவான்களுக்கு பரிபூரணமான ஞானமும் சந்தோஷமும் இருக்கும். அவர்களுக்கு சதாகாலங்களிலும் ஆளுகை செய்யத் தெரிந்திருக்கும். அவர்கள் சந்தோஷமாய் ஆளுகை செய்வார்கள்.

பரலோகத்திலே இராக்காலம் இருக்காது. தேவனுடைய மகிமை பரலோகத்தைப் பிரகாசிப்பிக்கச் செய்யும். பரலோகத்திலே உலகப்பிரகாரமான விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்குத் தேவையில்லை. ஆட்டுக்குட்டியானவரே பரலோகத்திற்கு விளக்காகயிருப்பார். தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் கர்த்தருடைய வெளிச்சத்தில் சந்தோஷமாய் நடப்பார்கள். இந்தச் சந்தோஷம் நித்திய சந்தோஷம். இந்த சந்தோஷம் அவர்களுக்கு ஒருபோதும் குறைவதில்லை. சந்தோஷம் அவர்களைவிட்டு நீக்கப்படுவதுமில்லை. அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்.

இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்கள் வெளி 22 : 6,7

வெளி 22:6. பின்பு, அவர் என்னை நோக்கி: இந்த வசனங்கள் உண்மையும் சத்தியமுமானவைகள். சீக்கிரமாய்ச் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, பரிசுத்த தீர்க்கதரிசிகளின் கர்த்தராகிய தேவனானவர் தம்முடைய தூதனை அனுப்பினார்.

வெளி 22:7. இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக் கொள்ளுகிறவன் பாக்கியவான் என்றார்.

வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தில் இதுவரையிலும் சொல்லப்பட்டிருக்கிற சத்தியங்களெல்லாம் இங்கு மறுபடியும் சுருக்கமாகச் சொல்லப்படுகிறது. தேவன் இந்தப் புஸ்தகத்திலுள்ள வசனங்கள் உண்மையும் சத்தியமுமானவைகள் என்று சாட்சியாகச் சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தைக்கு அவரே சாட்சியாகயிருக்கிறார். தேவனுடைய நாமம் அவருடைய வசனத்திற்கு சாட்சியாகயிருக்கிறது. தேவனுடைய சுபாவம் அவருடைய வார்த்தைகளை உறுதிபண்ணுகிறது.

இந்த உலகத்தில் சில காரியங்கள் சீக்கிரமாய்ச் சம்பவிக்கப்போகிறது. இவற்றை தம்முடைய ஊழியக்காரருக்கு காண்பிக்கவேண்டும் என்று தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார். கர்த்தர் பரிசுத்த தீர்க்கதரிசிகளின் தேவனாயிருக்கிறார். கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பி, சீக்கிரமாய் சம்பவிக்கவேண்டியவைகளை, தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கிறார்.

கர்த்தர் காண்பிக்கிற சம்பவங்கள் சீக்கிரமாய் சம்பவிக்கும். கர்த்தர் சொன்ன சம்பவங்கள் நிறைவேறும்போது, அவருடைய வசனங்கள் உண்மையும் சத்தியமுமானவை என்பது உறுதியாகும். சீக்கிரமாய் சம்பவிக்கவேண்டியவைகள் மெய்யாகவே சீக்கிரமாகச் சம்பவிக்கும். இதில் எந்தவிதமான காலதாமதமும் இருக்காது.

கர்த்தர் மறுபடியும் இந்தப் பூமிக்கு வருவதாகச் சொல்லுகிறார். அவருடைய வருகையில் தாமதம் இருக்காது. "இதோ சீக்கிரமாய் வருகிறேன்" என்று கர்த்தர் தாமே சொல்லுகிறார். இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றும் கர்த்தர் அறிவிக்கிறார்.

தேவனைத் தொழுதுகொள் வெளி 22:8,9

வெளி 22:8. யோவானாகிய நானே இவைகளைக்கண்டும் கேட்டும் இருந்தேன்; நான் கேட்டுக் கண்டபோது, இவைகளை எனக்குக் காண்பித்த தூதனை வணங்கும்படி அவன் பாதத்தில் விழுந்தேன்.

வெளி 22:9. அதற்கு அவன்: நீ இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் உன் சகோதரரோடும் தீர்க்கதரிசிகளோடும், இந்தப் புஸ்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்களோடுங் கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள் என்றான்.

யோவானுக்கு பரலோகத்தின் தரிசனம் கிடைத்திருக்கிறது. கர்த்தருடைய தூதனானவர் அப்போஸ்தலர் யோவானை தரிசனம் காண்க வழிநடத்துகிறார். யோவான் கண்ட தரிசனங்களுக்கு தூதன் வியாக்கியானம் சொல்லுகிறான். யோவான் ஆவிக்குள்ளானார். தூதன் அவரை பரலோகத்திற்கு அழைத்துச் சென்று, அங்குள்ள இரகசியங்களையெல்லாம் அவருக்கு விரிவாக எடுத்துச் சொல்லுகிறார்.

அப்போஸ்தலராகிய யோவான் பரலோகத்தின் தரிசனங்களைக் காண்கிறார். பரலோகத்திலுண்டான சத்தங்களையும் கேட்கிறார். கர்த்தருடைய தூதனானவர் பரலோகத்தின் இரகசியங்களை யோவானுக்குக் காண்பிக்கிறார். அவற்றை கண்டபோது, இவைகளைத் தனக்குக் காண்பித்த தூதனை வணங்கும்படி யோவான் அவனுடைய பாதத்தில் விழுகிறார். யோவான் தன்னை வணங்குவதைத் தூதன் அங்கீகரிக்கவில்லை.

தூதன் யோவானிடம் "நீ இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் உன் சகோதரரோடும் தீர்க்கதரிசிகளோடும், இந்தப் புஸ்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்களோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள்" (வெளி 22:9) என்று சொல்லிவிடுகிறான்.

முத்திரை போடவேண்டாம் வெளி 22:10

வெளி 22:10. பின்னும், அவர் என்னை நோக்கி: இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களை முத்திரை போடவேண்டாம்; காலம் சமீபமாயிருக்கிறது.

தூதன் யோவானிடம், இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களை முத்திரைபோடவேண்டாம் என்றும் சொல்லுகிறான்.

வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிற வார்த்தைகளை யோவான் புஸ்தகத்திலே எழுதியிருக்கிறார். இந்தப் புஸ்தகம் முத்திரையிடப்படவில்லை. கர்த்தருடைய பிள்ளைகளெல்லோரும் இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கலாம். எந்த தீர்க்கதரிசனமும் மறைவாகயில்லை. இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களை கைக்கொள்கிறவர்கள் பாக்கியவான்களாயிருப்பார்கள்.

சீக்கிரமாய் வருகிறேன் வெளி 22:11-13

வெளி 22:11. அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.

வெளி 22:12. இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.

வெளி 22:13. நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்.

கர்த்தருடைய பிள்ளைகள் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டும். அவர்கள் அநியாயக்காரரையும், அக்கிரமக்காரரையும் நோக்கிப் பார்த்து, தங்களுடைய பரிசுத்தத்தில் குறைந்துபோய்விடக் கூடாது. அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.

மகாநாளின் நியாயத்தீர்ப்பின்போது கிறிஸ்துவானவர் சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து நீதியாய் நியாயம் விசாரிப்பார். நியாயத்தீர்ப்பு நாள் சீக்கிரம் வரப்போகிறது. கர்த்தர் நியாயந்தீர்க்க சீக்கிரமாய் வரப்போகிறார். மனுஷருடைய கிரியைகளின்படி நியாயந்தீர்ப்பார். அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு கர்த்தர் அளிக்கும் பலன் கர்த்தரோடே கூடவருகிறது (வெளி 22:11,12).

கிறிஸ்துவானவரே எல்லாவற்றிற்கும் எல்லாமுமாகயிருக்கிறார். அவரே ஆரம்பிக்கிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிறார். தம்முடைய பிள்ளைகளின் விசுவாசத்திற்கும், பரிசுத்தத்திற்கும் ஏற்ற பலனை கிறிஸ்து கொடுப்பார். நம்முடைய கிரியைகளின்படி கர்த்தர் நமக்கு பலனளிப்பார். அவர் வரும்போது அவர் நமக்கு அளிக்கப்போகிற பலன் அவரோடுகூட வரும்.

கிறிஸ்துவானவரே அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறார் (வெளி 22:13).

பாக்கியவான்கள் வெளி 22:14

வெளி 22:14. ஜீவவிருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்.

கிறிஸ்துவானவர் தம்முடைய வார்த்தையினால் தம்முடைய பரிசுத்தவான்களுக்கு அதிகாரம் கொடுக்கிறார். நாம் ஜீவவிருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாயிருக்கிறோம். இந்த அதிகாரத்தை கிறிஸ்துவானவரே நமக்குக் கொடுத்திருக்கிறார். புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்திற்குள் நாம் பிரவேசிப்பதற்கும், கிறிஸ்துவானவர் நமக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய சமுகத்திலிருந்து மேன்மையான இந்த அதிகாரத்தைப் பெற்றிருக்கிற பரிசுத்தவான்கள், அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். கர்த்தருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள் (வெளி 22:14).

புறம்பே இருப்பார்கள் வெளி 22:15

வெளி 22:15. நாய்களும், சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலை பாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள்.

கர்த்தருடைய பரிசுத்த நகரத்திற்குள் யாரெல்லாம் பிரவேசிக்கமாட்டார்கள் என்பதையும் கிறிஸ்துவானவர் தெளிவு படுத்துகிறார். நாய்களும், சூனியக் காரரும், விபசாரக்காரரும், கொலை பாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்திற்குள் பிரவேசிக்கமாட்டார்கள். இவர்கள் பரிசுத்த நகரத்திற்குப் புறம்பே இருப்பார்கள் (வெளி 22:15).

பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரம் வெளி 22:16

வெளி 22:16. சபைகளில் இவைகளை உங்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்படிக்கு இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன். நான் தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன் என்றார்.

பரலோகத்தின் இரகசியங்களை பூமியிலுள்ள சபைகளில் சாட்சியாக அறிவிக்கவேண்டும் என்று கிறிஸ்துவானவர் சித்தங் கொண்டிருக்கிறார். இதற்காக அவர் தம்முடைய தூதனை பரிசுத்தவான்கள் மத்தியிலே அனுப்பியிருக்கிறார். கிறிஸ்துவானவர் தம்மைப்பற்றிச் சொல்லும்போது, தாம் தாவீதின் வேரும், சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருப்பதாக திருவுளம் பற்றுகிறார். கிறிஸ்துவானவரே எல்லா பிரகாசத்திற்கும் ஆதாரமாயிருக்கிறவர். அவரே தம்முடைய சபைகளுக்கு தீர்க்கதரிசனத்தின் ஆவியைக் கொடுக்கிறவர். பரிபூரணமான நாள் சீக்கிரமாய் வரப்போகிறது என்பதை கர்த்தர் உறுதிபண்ணுகிறார் (வெளி 22:16).

ஜீவத்தண்ணீர் வெளி 22:17

வெளி 22:17. ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தாகமாகயிருக்கிறவர்களெல்லோரையும் தம்மிடத்தில் வருமாறு அழைக்கிறார். விருப்பமுள்ளவர்கள் எல்லோருக்கும் கிறிஸ்துவானவர் ஜீவத்தண்ணீரை இலவசமாகக் கொடுக்கிறார். தாம் இலவசமாய்க் கொடுக்கிற ஜீவத்தண்ணீரை வாங்கிக்கொள்ள கிறிஸ்துவானவர் நம்மை அன்போடு அழைக்கிறார் (வெளி 22:17).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய வார்த்தையை உறுதிபண்ணுகிறார். தேவஆவியானவரும் கிறிஸ்துவின் வார்த்தையை உறுதிபண்ணுகிறார். கிறிஸ்துவின் வார்த்தையை ஆவியானவர் உறுதிபண்ணும்போது, அவருடைய மணவாட்டியாகயிருக்கிற சபையாரும் அவருடைய வார்த்தையை உறுதிபண்ணவேண்டும். "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள். கேட்கிறவனும் வா என்பானாக" (வெளி 22:17) என்று கிறிஸ்துவானவர் தம்முடைய பரிசுத்தவான்களுக்குச் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்கள் வெளி 22:18,19

வெளி 22:18. இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன்மேல் கூட்டுவார்.

வெளி 22:19. ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவ புஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப் பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்.

கர்த்தருடைய வார்த்தைகள் உண்மையும் சத்தியமுமானவை. கர்த்தர் தம்முடைய வசனங்களைப் பாதுக்காக்கிறார். தம்முடைய தீர்க்கதரிசன வசனங்களை உறுதிபண்ணுகிறார். கர்த்தருடைய வார்த்தைகளோடு எதையும் கூட்டுவதற்கோ அல்லது குறைப்பதற்கோ யாருக்கும் அனுமதியில்லை.

இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களோடு எதையும் கூட்டப்படாது. ஒருவன் இவைகளோடு எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார் (வெளி 22:18,19).

கர்த்தராகிய இயேசுவே வாரும் வெளி 22 : 20

வெளி 22:20. இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்.

கிறிஸ்து தம்முடைய சபைக்கு ஏராளமான வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். அவையெல்லாம் சீக்கிரமாய் நிறைவேறும். அவர் மறுபடியும் இந்தப் பூமிக்கு வருவார். தம்முடைய வருகை சீக்கிரமாய் இருக்கும் என்பதை கிறிஸ்துவானவர் உறுதிபண்ணுகிறார். "நான் சீக்கிரமாய் வருகிறேன்" (வெளி 22:20) என்று கிறிஸ்துவானவர் சாட்சியாய் அறிவிக்கிறார்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு பரலோகத்திற்கு பரமேறிப்போனார். அப்போது தம்முடைய பிள்ளைகளோடு கூடயிருக்கும்படியாக பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக வாக்குப்பண்ணினார். அவருடைய வாக்குத்தத்தம் நிறைவேறிற்று. பரிசுத்த ஆவியானவர் கர்த்தருடைய பிள்ளைகள் மத்தியிலே வந்து இறங்கினார்.

கிறிஸ்துவானவர் பரமேறிப்போன போது தாம் மறுபடியும் பூமிக்கு வரப்போவதாகச் சொன்னார். அந்த வார்த்தையும் சீக்கிரம் நிறைவேறும். கர்த்தருடைய வருகைக்காக அவருடைய பரிசுத்தவான்களெல்லாம் காத்துக் கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்துவானவர் "மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்" என்று நமக்குச் சொல்லுகிறார். கர்த்தருடைய வருகை நிச்சயம் நிறைவேறும். அவர் சீக்கிரமாய் வருவார்.

கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தைச் சொல்லும்போது, கர்த்தருடைய பிள்ளைகள் அவருடைய வார்த்தைகளை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தர் சொல்லும் வாக்குத்தத்தத்திற்கு, நாம் "ஆமென்" என்று சொல்லவேண்டும். கிறிஸ்துவானவர், "மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்" என்று சொல்லும்போது, அவருடைய பிள்ளைகளாகிய நாம், "ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்" என்று சொல்லவேண்டும்.

கர்த்தருடைய வருகையை நாம் வாஞ்சையோடு எதிர்பார்க்கவேண்டும். இந்த வாஞ்சையின் ஆவி நமக்குள் இருந்தால்தான் நம்மால் "ஆமென் கர்த்தராகிய இயேசுவே வாரும்" என்று நம்மால் சொல்லமுடியும். ஆதித்திருச்சபையார் இந்த வாக்கியத்தை ஒவ்வொரு நாளும் விசுவாசத்தோடு அறிக்கை செய்தார்கள். அவர்கள் ஒவ்வொரு நாளும் கர்த்தருடைய வருகையை வாஞ்சையாய் எதிர்பார்ப்பார்கள். கடைசிக்காலத்தில் ஜீவிக்கிற நாமும், ஆதித்திருச்சபையின் பரிசுத்தவான்களைப் போலவே, "ஆமென் கர்த்தராகிய இயேசுவே வாரும்" என்று விசுவாசத்தோடும் வாஞ்சையோடும் சொல்லவேண்டும்.

கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற ஆசீர்வாதங்களெல்லாம் தேவனுடைய சமுகத்திலிருந்து நமக்கு வந்திருக்கிறது. கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கும்போது நாம் இந்தப் பூமியிலிருந்து அவருக்கு ஸ்தோத்திரங்களையும் துதிகளையும் ஏறெடுக்கவேண்டும். அவர் நமக்கு வாக்குத்தத்தங்களைச் சொல்லும்போது, அந்த வாக்குத்தத்தங்களை விசுவாசிக்கிறோம் என்று நாம் பூமியிலிருந்து அறிக்கை செய்யவேண்டும்.

கிறிஸ்துவானவர், "மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்" என்று வாக்குப்பண்ணும்போது, அவருடைய பிள்ளைகளாகிய நாமும், "ஆமென் கர்த்தராகிய இயேசுவே வாரும்" என்று சொல்லி அவருடைய வாக்குத்தத்தை விசுவாசத்தோடு அங்கீகரிக்கவேண்டும். அவருடைய வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று நாம் விசுவாசிக்கவேண்டும். நம்முடைய விசுவாசத்தை விசுவாச வார்த்தைகளினால் அறிக்கை செய்யவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் கிருபை வெளி 22:21

வெளி 22:21. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

அப்போஸ்தலர் யோவான் இந்தப் புஸ்தகத்தை வாசிக்கிற அனைவருக்கும் அப்போஸ்தல ஆசீர்வாதம் சொல்லுகிறார். "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்" என்று சொல்லி யோவான் நம்மை ஆசீர்வதிக்கிறார்.

நாம் இந்த உலகத்தில் ஜீவிக்கிற வரையிலும் கிறிஸ்துவின் கிருபை நமக்கு அதிகமாய்த் தேவைப்படுகிறது. நாம் கிறிஸ்துவின் கிருபையை அதிகமாய் வாஞ்சிக்க வேண்டும். எல்லாவற்றையும்விட கிறிஸ்துவின் கிருபையே நமக்கு மிகவும் முக்கியமானது. அதுவே நமக்கு அதிகமாய்த் தேவையானது. கிறிஸ்துவின் கிருபை நமக்கு இருந்தால்தான், பரலோகத்திலே கிறிஸ்துவின் மகிமையிலே நாம் பங்குபெறமுடியும்.

வெளிப்படுத்தின விசேஷம் - விரிவுரை

REVELATION - COMMENTARY

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

அப்போஸ்தலர் யோவான் நம்மை "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக" என்று வாழ்த்தும்போது, நாம் "ஆமென்" என்று சொல்லவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை நம்மோடு கூடயிருக்கவேண்டுமென்று நாமும் ஜெபம்பண்ணவேண்டும்.

கர்த்தருடைய கிருபை நமக்குள் நிரம்பியிருக்கவேண்டும். அவருடைய பரிசுத்த பிரசன்னம் நமக்குள் காணப்படவேண்டும். கர்த்தருடைய கிருபை நமக்குள் பெருகும்போதுதான், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி உண்டாகும். நம்முடைய பரிசுத்தத்தில் முன்னேற்றமுண்டாகும். தேவகிருபை நமக்குள் பெருகும்போது அவருடைய மகிமையும் நமக்குள் பெருகும்.